APRIL 2023

# CURRENT ISSUES

- தற்கால இந்திய வரலாறு
- சமூகப் பிரச்சனைகள்
- இந்திய அரசியலமைப்பு
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- தமிழ் சமூகம்
- புவியியல்
- சுற்றுச்சூழல்
- இந்தியப் பொருளாதாரம்

# TNPSC GROUP-I MAINS


SURESH' IAS ACADEMY

தூத்துக்குடி
162-A, எட்டையபுரம் ரோடு
0461 - 4000970
99445 11344

திருநெல்வேலி
8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை
0462 - 2560123
98942 41422

இராமநாதபுரம்
82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில்
75503 52916
75503 52917

மதுரை
மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல்
0452 - 2383777
98431 10566

சென்னை
4, அண்ணா ஆர்ச் நேர் எதிரில், Skywalk அருகில்.
044 47665919
97555 52003

SURESH' IAS ACADEMY

# April Month Current Affairs 2023

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | **தற்கால இந்திய வரலாறு மற்றும் இந்திய பண்பாடு** | |
| – | இந்திய–அமெரிக்க புள்ளியியலாளர் சி.ஆர்.ராவுக்கு 102 வயதில் சர்வதேச விருது | 07 |
| – | அனைவருக்குமான அம்பேத்கர் | 07 |
| – | ராஜ் சுப்பிரமணியத்துக்கு சிறந்த வெளிநாடு வாழ் இந்தியர் விருது | 08 |
| – | உலக அழகிப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அழகி நந்தினி குப்தா | 09 |
| – | ரமோன் மகசேசே விருது | 09 |
| – | கிரண் நாடாருக்கு செவாலியே விருது | 09 |
| – | 16 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் சர்வதேச ஹாக்கி | 09 |
| 2. | **இந்தியாவிலும் தமிழ்நாட்டிம் உள்ள சமூகப் பிரச்சனைகள்** | |
| – | 100 நாள் வேலைத்திட்டம் | 10 |
| – | ஜல் ஜீவன் மிஷன் | 10 |
| – | போக்சோ | 11 |
| – | சுகாதார உரிமைச் சட்டம் | 11 |
| – | மரண தண்டனைக்கு மாற்று | 14 |
| – | 1952ல் இருந்து அமையவுள்ள 17வது மக்களவையானது குறுகியதாக இருக்கும் | 15 |
| – | வேலைக்கு செல்லும் பெண்களுக்கு குழந்தையை தத்தெடுக்க உரிமை உண்டு | 18 |
| – | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா | 18 |
| – | உயர் கல்வி நிறுவனங்களில் பாலியல் புகார் குழுக்கள் அவசியம் | 19 |
| – | மது விலக்கும் சிக்கல்களும் | 20 |
| – | மக்களைத் தேடி மருத்துவம் | 21 |

- 142.86 கோடியுடன் சீனாவை முந்தியது மக்கள் தொகையில் இந்தியா முதலிடம் ........ 21
- அம்பேத்கரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் ........ 22
- சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு ........ 25
- போர் முனைகளில் பெண் அதிகாரிகள் ........ 26
- கேரளத்தில் மலைவாழ் பழங்குடியின இளைஞர் மதுவின் கும்பல் கொலை ........ 26
- சத்தீஸ்கர் : நக்ஸல் வெடிகுண்டு தாக்குதல் ........ 27
- வெறுப்புணர்வை தூண்டுவோர் மீது உடனடி வழக்குப்பதிவு – சுப்ரீம் கோர்ட் உத்தரவு ........ 28
- மே தினம் ........ 28
- 12 மணி நேர வேலை ........ 30

## 3. இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியாவை பாதிக்கக்கூடிய வகையில் உலகம் முழுவதும் தோன்றுகின்ற அரசியல் போக்கு

- சிபிஐ வைர விழா ........ 31
- தமிழகத்தில் தென்மாநில மண்டல கவுன்சில் கூட்டம் ........ 31
- இரண்டாவது இடம் – நீதிமன்றங்களை அணுகும் வாய்ப்புகளில் தமிழகம்... ........ 32
- நேட்டோவில் இணைந்தது ஃபின்லாந்து ........ 33
- இந்தியா–பூடான் உறவு ........ 34
- அடாவடியின் மறுஉருவம்தான் சீனாவா? ........ 36
- கேரளாவின் மீடியா ஒன் செய்தி சேனல் மீதான தடை ரத்து ........ 36
- இந்தியாவை உளவு பார்க்க இலங்கையில் ரேடார் ........ 36
- விவிபி திட்டம் ........ 37
- நாட்டின் காகித பயன்பாடில்லாத முதல் நீதிமன்றம் ........ 37
- சுகோய் போர் விமானத்தில் பறந்தார் குடியரசுத்தலைவர் ........ 38
- தைவானைச் சுற்றிலும் சீனா போர் ஒத்திகை ........ 38
- ஆம் ஆத்மிக்கு தேசிய கட்சி அங்கீகாரம் ........ 38
- நீதித்துறை : அதிகரிக்கட்டும் பெண்களின் பிரதிநிதித்துவம் ........ 39
- பேரவையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு விதிகள் ........ 39

- அரசை விமர்சிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் ........ 39
- ஒரே பாலின திருமண அங்கீகார வழக்கு ........ 40
- அசைக்கப்படுகிறதா அடிக்கட்டுமானம்? ........ 41
- கிழக்கு லடாக் பிரச்சனை ........ 42
- வங்கதேச அதிபரானார் முகமது சஹாபுதீன் ........ 43
- கேசவானந்த பாரதி வழக்கின் தீர்ப்பு வெளியாகி 50 ஆண்டுகள் ........ 43
- ராணுவ செலவினம் : 4–ஆவது இடத்தில் இந்தியா ........ 43
- தமிழகத்தில் மீண்டும் சட்ட மேலவை ........ 44
- தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் ........ 45
- எல்சிஓ கூட்டம் ........ 45
- இந்தியாவில் சிவில் சமூக அமைப்புகளின் எதிர்காலம் ........ 45
- குடிமைப்பணி ........ 46
- இந்தியா–பிரிட்டன் கூட்டு ராணுவப் பயிற்சி தொடக்கம் ........ 47
- மியான்மர் ........ 48
- ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் ........ 48

## 4. இந்திய வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் அதன் தாக்கம்

- நாசாவின் நிலவு – செவ்வாய் திட்டம் ........ 49
- காசநோய் இல்லாத தேசம் ........ 49
- இணைய வாக்குப்பதிவு ........ 50
- மருந்து விலையில் ஏன் இந்தப் பாரபட்சம் ........ 51
- மருத்துவத்துக்கான உரிமை மசோதா ........ 52
- இணையச் சமத்துவம் ........ 53
- தங்க மங்கையர் ........ 54
- கடலுக்குள் 30,000 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் ........ 54
- அனைவருக்குமான அறிவியல் ........ 55
- 2வது விண்வெளி யுகத்திற்கு மாறுதலுக்கான காத்திருப்பு ........ 55

- உப்பைக் குறைக்கும் கொள்கை ........ 58
- நிலவில் கட்டடம் : சீனா திட்டம் ........ 60
- தற்போதைய ஒழுங்குமுறை அமைப்பானது செயற்கை நுண்ணறிவுக்கு போதுமானதா? ........ 60
- பூமியில் ஒரு செவ்வாய் ........ 62
- புதிய விண்வெளிக் கொள்கை 2023 ........ 64
- தேசிய குவாண்டம் மிஷனுக்கு அமைச்சரவை ஒப்புதல் ........ 65
- செயற்கை நுண்ணறிவு முதலீட்டில் முன்னிலை வகிக்கும் நாடுகள் ........ 66
- ஏ.ஐ. யுக அபாயங்களை எப்படித் தவிர்ப்பது? ........ 66
- அணுசக்தி பொறுப்பு சட்டத்தில் உள்ள தெளிவின்மை ........ 68
- மீண்டும் பயன்படுத்தும் வகையிலான ராக்கெட் ........ 69
- காசநோய்க்கு முற்றுப்புள்ளி... ........ 69

## 5. தமிழ் சமூகம் அதன் பண்பாடு மற்றும் பாரம்பரியம்

- சுந்தரனார் : தமிழ் இலக்கிய வரலாற்றின் தலைமகன் ........ 70
- கீழடி புனை மெய்யாக்க செயலி ........ 71
- தமிழர் மரபைக் காக்கத் தவறலாமா? ........ 71
- கச்சத்தீவுக்கோர் தீர்வு காண்போம் ........ 73

## 6. தமிழ்நாட்டின் முக்கிய அம்சங்களுடன் இந்தியாவின் புவியியல் அமைப்பு

- கடல் அரிப்பு அச்சுறுத்தல் ........ 75
- மானாமதுரை மண்பாண்டப் பொருள்களுக்கு புவிசார் குறியீடு ........ 76
- சொர்க்கத்திற்கான திட்டமிடுங்கள் – கிரேட் நிக்கோபார் திட்டம் ........ 77
- 12 பொருள்களுக்கு புவிசார் குறியீடு ........ 78
- இந்தியாவில் வழக்கமான பருவமழைப் பொழிவு ........ 78
- அத்திக்கடவு – அவிநாசித் திட்டம் ........ 79
- பருவமழை பொய்த்தாலும்... ........ 80
- நாட்டில் முதல்முறையாக நீர்நிலைகள் கணக்கெடுப்பு ........ 82

## 7. சுற்றுச்சூழல், உயிரினப்பன்மை மற்றும் பேரிடர் மேலாண்மை

- பருவநிலை மாற்றம் தொடர்பாக நாடுகள் மீது வழக்கு தொடரலாமா? ........ 85
- பெரியார் பெயரால் பழங்குடிகள் வஞ்சிக்கப்படலாமா? ........ 87

- புலி உறுமுது ........ 88
- டாப் புலிகள் சரணாலயங்கள் ........ 88
- தேவாங்கு பாதுகாப்பு மையம் ........ 89
- நாட்டு மரங்களுடன் 1,000 குறுங்காடுகள் ........ 89
- ஜிம் கார்பெட் ........ 89
- புலிகளின் பெயரால் பந்தாடப்படும் பழங்குடிகள் ........ 90
- பூமியைக் காப்போம் ........ 91
- அச்சுறுத்தும் வெப்ப அலை ........ 92

## 8. இந்தியப் பொருளாதாரம் - தற்போதைய பொருளாதார போக்குகள் மற்றும் இந்தியாவில் உலக பொருளாதாரத்தின் தாக்கம்.

- வெளிநாட்டு வர்த்தக கொள்கை ........ 93
- வெளிநாட்டு வக்கீல்களை இந்தியாவில் அனுமதிப்பது ........ 95
- கடற்பாசி விவசாயம் ........ 95
- நிலக்கரி சுரங்க ஏல ஒப்பந்த நடைமுறை ........ 96
- இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி ........ 97
- கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்கும் "ஒபெக் +" : இந்திய பொருளாதார வளர்ச்சியை பாதிக்குமா? ...... 97
- காலணி உற்பத்தி ஆலை ........ 99
- ஜாம்நகர் முதல் காஞ்சிபுரம் : இந்தியாவின் ஏற்றுமதிக்கான முக்கிய தளங்களை வரைபடமாக்குதல் ........ 99
- இணையவழி பணப் பரிவர்த்தனையில் சென்னை 5 – ஆவது இடம் ........ 101
- சரக்கு கையாளுகை குறியீடு : 38–ஆவது இடத்தில் இந்தியா! ........ 101
- இந்தியாவிற்கு ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதி மேலும் அதிகரிக்கிறது. வர்த்தக பற்றாக்குறை உயருகிறது. 102
- உழவர் சந்தை ........ 105
- இந்தியாவின் முதல் வாட்டர் மெட்ரோ ........ 105
- பேசுபொருளாகும் சிறுதானியங்கள் ........ 106
- சரக்கு கையாள்வதில் இந்திய துறைமுகங்கள் ........ 108
- சபரிமலையில் புதிய விமான நிலையம் ........ 108
- முத்ரா ........ 108

SURESH' IAS ACADEMY

# 01 தற்கால இந்திய வரலாறு மற்றும் இந்திய பண்பாடு

## இந்திய-அமெரிக்க புள்ளியியலாளர் சி.ஆர்.ராவுக்கு 102 வயதில் சர்வதேச விருது

- புள்ளியியல் துறைக்கான நோபல் விருதாகக் கருதப்படும் சர்வதேச புள்ளியியல் விருதானது, 102 வயது இந்திய அமெரிக்கரான சி.ஆர்.ராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- புள்ளியியல் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச புள்ளியியல் விருது வழங்கப்படுகிறது.
- 2017-ம் ஆண்டில் இருந்து அந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.
- 2023-ம் ஆண்டுக்கான விருதானது இந்திய-அமெரிக்க புள்ளியியலாளர் கலியம்புடி ராதா கிருஷ்ணராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனைவருக்குமான அம்பேத்கர்

- தீண்டாமைக்கு எதிரான போர்க்குணம், அயல்நாடு சென்று கடுமையாக உழைத்துப் பெற்ற பட்டங்கள் வியக்க வைக்கும் மேதைமை, உலக வட்டமேசை மாநாடுகளில் சிறப்புமிக்கப் பங்களிப்பு, நாடாளுமன்ற அரசியல் செயல்பாடுகள், உலகின் நெடிய அரசமைப்பைத் தலைமையேற்று உருவாக்குவதில் சீரிய பணி,
- பௌத்த மறுமலர்ச்சிக்கு நல்கிய வரலாற்றுப் பங்களிப்பு எனப் பல்வேறு காரணங்களுக்காக அம்பேத்கர் போற்றப்படுகிறார்.

### தடைநீக்கும் புரட்சி

- மகாராஷ்டிரத்தில் உள்ள மஹாட் குளத்தில் சாதி இந்துக்களுக்கும் இந்துக்கள் அல்லாத மதச் சிறுபான்மையினருக்கும் நீரருந்தும் உரிமை இருந்தது.
- ஆனால் இந்துக்கள் என்று கருதப்பட்ட தலித் மக்களுக்கு மட்டும் அந்த உரிமை மறுக்கப்பட்டிருந்தது.
- 1927-இல் அக்குளத்தில் நீரருந்துவதற்காகத் தம்முடைய முதல் போராட்டத்தை அம்பேத்கர் தொடங்கினார்.
- பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு (1789) சமத்துவத்தை மலரச் செய்த பிரான்ஸ் சுய நிர்ணய அவையுடன் மஹாட் போராட்டத்தை ஒப்பிட்ட அம்பேத்கர், தமது லட்சிய நோக்கத்தைப் பின்வருமாறு அறிவித்தார்.
- நம்முடைய இயக்கம் நமது குறைபாடுகளை மட்டுமே களைவதற்கான இயக்கம் அல்ல; மாறாக, அது ஒரு சமூகப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.
- அந்தச் சமூகப் புரட்சியானது, சமூக உரிமைகளைப் பொறுத்தவரையில் மனிதர்களுக்கு இடையே எந்தப் பாகுபாடும் காட்டாததாக இருக்கும்.
- அத்துடன், வாழ்வின் உச்சபட்ச நிலையை எட்டும் வாய்ப்பை - அனைவருக்கும் சமமாக அளிப்பதன் மூலம் - சாதி உருவாக்கிய செயற்கைத் தடைககளை நீக்கக்கூடிய ஒரு புரட்சியாகவும் அது இருக்கும்.
- நமது இயக்கம் ஒற்றுமைக்கும் ஆற்றலுக்குமான, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கான இயக்கமாகும்.

### நுட்பமான சிக்கல்

- சாதியைத் தங்களுடைய மதம் அங்கீகரித்திருப்பதால், அவர்கள் அவ்வெண்ணத்தைக் கைவிட இன்றுவரை தயாராக இல்லை.
- உலகில் எங்குமே இல்லாத இந்நுட்பமான சிக்கலைத் தீர்ப்பதற்குத்தான் அம்பேத்கர் தம் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டார்.
- அவர் முன்னெடுத்த சமூக, அரசியல், பண்பாட்டுப் போராட்டங்கள் என அனைத்துமே சட்டத்துக்கு உள்பட்ட, ஜனநாயகத்தன்மை கொண்டவையாகவே இருந்தன.

- அறப்போராட்டத்தின் வழி தீர்வு காண்பதில் இறுதிவரை அவர் உறுதியாக இருந்தார்.
- சாதி ஒழிப்பு குறித்த இடையறாத விழிப்புணர்வைத் தம் எழுத்து, உரைகளின் மூலம் தளராமல் ஏற்படுத்தினார்.
- நாட்டு மக்களின் சிந்தனையைப் பண்படுத்தி, அவர்களிடையே சமத்துவத்தை வளர்த்தெடுக்கும் நோக்கத்திலேயே அரசமைப்பையும் அவர் வடிவமைத்தார்.

### சமூக ஆவணம்

- இந்நாட்டு மக்களை நெறிப்படுத்தக்கூடிய ஓர் அரசமைப்பு இல்லாத காலகட்டத்தில் பிறப்பு, இனம், மொழி, மத, சாதி பேதமின்றி ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து, மாபெரும் அரசு ஆவணத்தை அம்பேத்கர் தலைமையேற்று உருவாக்கினார்.
- இந்திய அரசமைப்பின் வரலாற்றை எழுதிய குறிப்பிடத்தகுந்த அமெரிக்க வரலாற்றாசிரியர் கிரான்வில் ஆஸ்டின் இதன் நோக்கம் குறித்து அற்புதமாக விளக்குகிறார்.
- இந்திய அரசமைப்பு முதலும் முதன்மையுமான ஒரு சமூக ஆவணமாகும்.
- இதன் பெரும்பாலான பிரிவுகள், சமூகப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்தை நேரடியாக முன்னெடுக்கும் வகையிலோ அல்லது இப்புரட்சி வெற்றி பெறுவதற்குத் தேவையான சூழலை உருவாக்குவதன் மூலம் – அப்புரட்சிக்கு வித்திடும் வகையிலோ உள்ளன.
- அரசமைப்பைவிட அரசமைப்பு நெறிமுறையைக் (Constitutional morality) கடைப்பிடித்து, அதன்படி நடப்பது அதைவிட மிகவும் முக்கியமானது என்றார் அம்பேத்கர்.
- 'கற்பி' என்கிற அம்பேத்கரின் கோட்பாட்டு முழக்கமும் அதைத்தான் வழிமொழிகிறது.
- ஒரு புறம் அம்பேத்கரின் லட்சிய நோக்கமான சமத்துவ சமூகத்தை உருவாக்க முனையும் அரசமைப்பின் நெறிமுறையைப் பேணாமல், மறுபுறம் அம்பேத்கரை மட்டும் புகழ்ந்து கொண்டிருப்பது மிகப்பெரிய முரண்பாடு ஆகும்.

### சமூகத்தின் பிழை

- அம்பேத்கரின் சமூக ஆய்வுகள் முற்றிலும் வேறுபட்டவையாக இருந்தன.
- தலித் மக்களின் பிரச்சினை இருப்பதாக அவர் கருதவில்லை; மாறாக, மனித சமூகத்தின் ஒரு பிரிவினரை மட்டும் தீண்டத்தகாதவர்களாகப் பார்க்கும் பொதுச் சமூகத்திடமே கோளாறு இருக்கிறது என்பதைக் கண்டுணர்ந்த அம்பேத்கர், பொதுச் சமூகத்தைச் சீர்திருத்தி, தீண்டாமையையும் அதற்குக் காரணமான சாதியையும் ஒழிக்கவே செயல்திட்டங்களை வகுத்தார்.
- பிறப்பின் அடிப்படையில் படிநிலைப்படுத்தப்பட்ட பாகுபாட்டையே வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ள மக்களிடம் அது ஒரு வகையான மனப்பிறழ்வு என்று சுட்டிக்காட்டி, சாதிகளாலான பொதுச் சமூகத்தை ஜனநாயகப்படுத்திய அம்பேத்கரை, தலித் மக்களுக்கான தலைவராக மட்டுமே சித்தரிப்பது எவ்வளவு பிழையானது?

### அண்ணலுக்குச் செய்யும் மாண்பு

- அம்பேத்கர், அரசமைப்பை உருவாக்கும் தலைமைப் பொறுப்பை உறுதியாகப் பற்றிக்கொண்டு, அதன் மூலம் சமூகப் புரட்சிக்கு வித்திட்டார்.
- சாதியை முற்றாக அழித்தொழிப்பதற்கு இதுவரை எவரும் கண்டிராத, சட்டத்துக்கு உள்பட்ட தீர்வைக் கண்டறிந்த அம்பேத்கர், பத்து லட்சம் மக்களுடன் இணைந்து, பௌத்தத்தை ஏற்று, அதை உலகுக்கு நிரூபித்தும் காட்டினார்.

## ராஜ் சுப்பிரமணியத்துக்கு சிறந்த வெளிநாடு வாழ் இந்தியர் விருது

- இந்திய அமெரிக்கரும் ஃபெடெக்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியுமான ராஜ் சுப்ரமணியத்துக்கு (55) சிறந்த வெளிநாடு வாழ் இந்தியர் (பிரவாசி பாரதிய சம்மான்) விருது வழங்கப்பட்டது.
- உலகின் மிகப்பெரிய டெலிவரி நிறுவனங்களில் ஒன்றான ஃபெடெக்ஸ் கார்ப்பரேஷன் தலைவராகவும் தலைமைச் செயல் அதிகாரியாகவும் ராஜ் சுப்பிரமணியம் உள்ளார். அவரது தலைமை அனுபவமும் வர்த்தக ஞானமும் ஃபெடெக்ஸ் நிறுவனத்தின் வெற்றிக்கு மிகப்பெரிய அளவில் பங்களித்துள்ளன.

SURESH' IAS ACADEMY

## உலக அழகிப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அழகி நந்தினி குப்தா

- ராஜஸ்தானைச் சேர்ந்த நந்தினி குப்தா இம்பாலில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஃபெமினா மிஸ் இந்தியா 2023 பட்டத்தை வென்றுள்ளார்.
- இதன்மூலம், அவர் இந்தியா சார்பில் உலக அழகிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.
- நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் போட்டியிடும் ஃபெமினா மிஸ் இந்தியா போட்டியில் பட்டம் வெல்லும் நபர், அந்தாண்டு சர்வதேச அளவில் நடைபெறும் உலக அழகிப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்பார்.

## ரமோன் மகசேசே விருது

- திபெத்திய பௌத்த மதகுரு தலாய் லாமாவுக்கு 1959 ஆம் ஆண்டுக்கான ரமோன் மகசேசே விருது 64 ஆண்டுகளுக்குப் பிறகு நேரில் வழங்கப்பட்டது.
- பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் ரமோன் மகசேசேவின் மக்கள் சேவை, நல்ல நிர்வாகம், நடைமுறைக்கு உகந்த லட்சியவாதம் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில், ராக்ஃபெல்லர் பிரதர்ஸ் நிதி அறக்கட்டளை மற்றும் பிலிப்பின்ஸ் அரசால் ரமோன் மகசேசே விருது தோற்றுவிக்கப்பட்டது.
- 1958-ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.
- ஆசியாவின் நோபல் விருதாக கருதப்படும் ரமோன் மகசேசே விருது, 1959-ஆம் ஆண்டு தலாய் லாமாவுக்கு அறிவிக்கப்பட்டது.
- இந்நிலையில், ஹிமாச்சல பிரதேசத்தின் தர்மசாலா நகரில் உள்ள தலாய் லாமா வீட்டில், அவரிடம் 64 ஆண்டுகளுக்குப் பிறகு விருது ஒப்படைக்கப்பட்டது.

## கிரண் நாடாருக்கு செவாலியே விருது

- கலை ஆர்வலர் கிரண் நாடாருக்கு பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான 'செவாலியே விருது' வழங்கப்பட்டுள்ளது.
- ஹெச்சிஎல் நிறுவனத்தின் தலைவரான சிவநாடாரின் மனைவியான கிரண் நாடார், கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.
- சிவநாடார் அறக்கட்டளையின் உறுப்பினராக மட்டுமின்றி கிரண் நாடார் கலை அருங்காட்சியகத்தின் தலைவராகவும் அவர் திகழ்கிறார்.
- பிரான்ஸ் அரசின் மிக உயரிய விருதான 'செவாலியே' விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 16 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் சர்வதேச ஹாக்கி

- ஆடவருக்கான ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி தொடர் முதல்முறையாக இந்தியாவில் நடைபெற உள்ளது.
- சென்னை எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் நடைபெற உள்ளது.
- சமீபகாலமாக, ஒடிசா மாநிலமே முக்கியமான சர்வதேச ஹாக்கி போட்டிகளை நடத்தும் மையமாக இருந்து வருகிறது.

### இந்தியாவில் முதல்முறை

- சென்னையில் 16 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச ஹாக்கி போட்டி நடைபெற உள்ளது. கடைசியாக இங்கு 2008-ம் ஆண்டு ஆடவருக்கான ஆசிய கோப்பை தொடர் நடைபெற்றது.

# 02 இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள சமூகப் பிரச்சனைகள்

## 100 நாள் வேலைத்திட்டம்

- கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் 2006-ம் ஆண்டு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது.
- 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் என்று அழைக்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்துடன் 100 நாட்களுக்கு உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் வழங்கப்படுகின்றன.
- இந்த வேலைகளுக்கு தினசரி வழங்கப்படும் ஊதியத்தை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையிலிருந்து கூடுதலாக ரூ.7 முதல் ரூ.26 வரையில் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது.
- ஏப்ரல் 1 முதல் இந்த ஊதிய உயர்வு நடைமுறைக்கு வந்துள்ளது.

## ஜல் ஜீவன் மிஷன்

- அனைவருக்கும் குடிநீர் என்பதில் மத்திய அரசும் முனைப்பு காட்டாமல் இல்லை. நரேந்திர மோடி அரசு உயிர் நீர் திட்டம் (ஜல் ஜீவன் மிஷன்) என்கிற திட்டத்தை அறிவித்து இந்தியாவின் கிராமங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் 2024-க்குள் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது என்பதில் முனைப்பு காட்டுகிறது.
- நீர் மேலாண்மை திட்டங்கள், மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் புத்தாக்கம் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் உயிர் நீர் திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதை உறுதிப்படுத்த ஊக்குவிக்கிறது.
- உயிர் நீர் திட்டம் என்பது உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகளும், மத்திய-மாநில அரசுகளும் மட்டுமே செயல்படுத்தும் திட்டமாக இல்லாமல், பரவலான விழிப்புணர்வின் மூலம் சமுதாய பங்களிப்புடன் செயல்படுத்துவது என்பதும்கூட அந்தத் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று.
- உலகளாவிய நிலையில் அதிகமான தண்ணீர் பற்றாக்குறை காணப்படும் 17 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அந்த 17 நாடுகளில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் தவிர ஏனைய 15 நாடுகளும் மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்க பகுதியிலுள்ள பாலை வன நாடுகள் என்பதுதான் வேடிக்கை.
- உலகின் சராசரி மழைப்பொழிவு 1,000 மி.மீ என்றால், இந்தியாவின் மழைப்பொழிவு 1,070 மி.மீ இந்தியா முழுவதும் பல ஜீவநதிகள் பாய்கின்றன.
- ஆனாலும்கூட 700 மாவட்டங்களில் 256 மாவட்டங்கள் மிக அதிகமாக நிலத்தடி நீரை உறிஞ்சி தண்ணீர் தேவையை ஈடுகட்டுகின்றன.
- தலைநகர் தில்லி, நமது சென்னை உள்பட 21 முக்கிய இந்திய நகரங்களில் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நிலத்தடி நீர் வற்றும் அபாயம் காணப்படுகிறது.
- இந்தியாவின் 67% விவசாயத் தேவையையும், 80% கிராமப்புற குடிநீர் தேவையையும் நிலத்தடி நீர்தான் ஈடுகட்டுகிறது.
- பஞ்சாப், ஹரியானா, தமிழ்நாடு மூன்று விவசாயம் சார்ந்த மாநிலங்களும் அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீரை உறிஞ்சுகின்றன.
- விவசாயத் தேவைகளுக்கான நிலத்தடி நீர் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம்தான் வருங்காலத்தில் மிகப் பெரிய தட்டுப்பாடு வராமல் பாதுகாக்க முடியும்.
- நீர்வளம் என்பது மாநிலப் பட்டியலில் இருப்பதால், மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படாத பயிர்களை ஊக்குவிப்பது ஓரளவுக்குத் தீர்வாக இருக்கும்.
- இலவச மின்சாரம் என்பதால் நிலத்தடி நீர் வீணாவதும் தடுக்கப்பட வேண்டும்.

## போக்சோ

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிக்க, அனைத்து மாவட்டங்களிலும், சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.
- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், போக்சோ சட்டத்தின்கீழ் வருகின்றன. அந்த வழக்குகளை ஆறு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்.
- மேல்முறையீடு அடுத்த 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- தமிழகத்தில் 16 மாவட்டங்களில் மட்டும், போக்சோ நீதிமன்றங்கள் உள்ளன.

## சுகாதார உரிமைச் சட்டம்

### தமிழகத்தை விட மேல்

- ராஜஸ்தான் மாநில அரசு கொண்டு வந்திருக்கும் 'சுகாதார உரிமைச் சட்டம்' (Right to Health Act - 2022) பரவலான கவனத்தைப் பெற்றிருக்கிறது.
- சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைக்க, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்துக்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசரச் சிகிச்சைக்கான 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அமல்படுத்தியது.
- அதில் விபத்துதான் முதன்மையான அம்சம். ராஜஸ்தான் அரசு கொண்டுவந்திருக்கும் திட்டம் அதையும் தாண்டியது.

### சட்டத்தின் நோக்கம்

- ராஜஸ்தான் மாநில அரசு, தனியார் மருத்துவமனைகள், அவசரச் சிகிச்சைகளை வழங்க வேண்டும்.
- மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவ மையங்களுக்கு மாற்றும்போது, அவசர ஊர்தி வசதி வழங்க வேண்டும்.
- இவற்றை மறுக்கும் மருத்துவமனைகளுக்கு அபராதம் விதிக்கப்படும்.
- நோய்த்தடுப்பு, சுகாதார மேம்பாடு, குணப்படுத்துதல் மற்றும் வலிநிவாரணச் சிகிச்சை போன்றவற்றை வழங்குவது உள்ளிட்டவை இச்சட்டத்தின் பிற நோக்கங்கள்.
- அவசரச் சிகிச்சைகளை வழங்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தனியார் மருத்துவமனைகளுக்கும் உள்ளன.
- ஆனால் பல அரசு தனியார் மருத்துவமனைகள் அவசரச் சிகிச்சைகளை வழங்க மறுத்துவிடுகின்றன. இதற்குத் தீர்வு காண இச்சட்டம் வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

### அனைவருக்கும் இலவச சிகிச்சையா?

- சுகாதார உரிமை அனைவருக்கும் அவசியம். உலகச் சுகாதார நிறுவனமும் தொடர்ந்து அதை வலியுறுத்தி வருகிறது.
- ராஜஸ்தானின் இந்தப் புதிய சட்டம், சுகாதாரத்துக்கான உரிமையை, மருத்துவச் சிகிச்சைக்கான உரிமையாக மட்டுமே சுருக்கிவிட்டது.
- இந்தச் சட்டத்தின் மூலம் அனைவருக்கும், அனைத்து வகை சிகிச்சைகளும் இலவசமாகக் கிடைத்துவிடாது.
- உலகச் சுகாதார நிறுவனத்தின் வரையறையின் அடிப்படையில், உடல்ரீதியான, உளரீதியான, சமூகரீதியான முழுமையான சுகாதாரத்தை எல்லாம் இச்சட்டம் வழங்கிவிடாது. வெறும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு மட்டுமே உதவும்.
- அரசு மருத்துவமனைகளில், அனைத்துச் சிகிச்சைகளும் முழுமையாக, இலவசமாக வழங்கப்படுவதை இச்சட்டம் உறுதி செய்யவில்லை.
- இலவசம் அல்லது நோயாளிகளின் சக்திக்கு ஏற்பக் கட்டணம் என்கிறது.
- இலவச மருந்துகள், சிகிச்சைகள், பரிசோதனைகளும்கூடக் குறிப்பிட்ட நோய்களுக்கு மட்டுமே கிட்டும்.
- அரசு மருத்துவமனைகள் வணிகமயமாவதை இச்சட்டம் தடுக்காது. மருத்துவக் காப்பீடு, சில சிகிச்சைகளுக்கு இலவசம், பிறவற்றுக்கு சக்திக்கேற்பக் கட்டணம் என்றே சொல்கிறது.
- மருத்துவப் பணியாளர்களின் பணிப்பாதுகாப்பு, நிரந்தரப்பணி, உழைப்புக்கேற்ற ஊதியம், பணி நேரம் போன்ற உரிமைகள் குறித்து இச்சட்டம் மௌனம் காக்கிறது.

## மருத்துவர்களின் கருத்து

- எவையெல்லாம் 'அவசரச் சிகிச்சைகள்' என இச்சட்டத்தில் விளக்கப்படவில்லை.
- செலவுகளுக்கான பணத்தை மருத்துவமனைகளுக்கு அரசு எவ்வாறு அளிக்கும் என்பதும் குறிப்பிடப்படவில்லை.
- உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அதிகாரவர்க்கத்தின் தலையீடுகள் அதிகரிக்கும். நோயாளிகளின் உறவினர்கள், மருத்துவமனைகள் – மருத்துவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கும்.
- ஏற்கெனவே அரசின் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் சிகிச்சைகளுக்கே, கட்டுப்படியான கட்டணத்தை உரிய நேரத்தில் அரசு வழங்கவில்லை.
- அரசு தனது பொறுப்பைத் தனியார் மருத்துவமனைகள் மீது சுமத்துவது சரியல்ல. அரசமைப்பு வழங்கியுள்ள தொழில் செய்யும் உரிமைக்கு எதிரானது எனக் கூறிப் போராட்டம் நடத்தினர்.

## தார்மீக உரிமை இருக்கிறதா?

- அரசிடமிருந்து பல பெரிய தனியார் மருத்துவமனைகள் ஏராளமான சலுகைகளைப் பெறுகின்றன.
- நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு போன்ற சலுகைகளுடன் அரசின் மருத்துவக் காப்பீடு மூலமும் பலன் பெறுகின்றன.
- அவை, மருத்துவத் தொழில் மூலம் ஈட்டும் சொத்துகள் யாவும் மக்களிடமிருந்து வந்தவைதான். இவற்றை எல்லாம் மறந்துவிட்டு, அவசர நேரத்தில் சிகிச்சை வழங்க மறுப்பது சரியா என்பதுதான் கேள்வி.

## என்ன செய்ய வேண்டும்?

- தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகளுக்கான கட்டணத்தை அரசே செலுத்தும் நடைமுறை என்பது, தனியார் துறையையே வலுப்படுத்தும். பொது சுகாதாரத் துறையைப் பலவீனப்படுத்திவிடும்.
- ஆயினும், அரசு மருத்துவக் கட்டமைப்புகள் போதிய அளவு இல்லாத நிலையில், தனியார் மருத்துவமனைகளையும் தற்காலிகமாகப் பயன்படுத்தியே ஆக வேண்டிய சூழ்நிலை உள்ளது.
- எனவே, தனியார் மருத்துவமனைகளும் மருத்துவத் துறையினரும் பாதிக்கப்படாமல், அரசு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அதேவேளை, பொதுச் சுகாதாரத் துறையையும் போர்க் கால அடிப்படையில் வலுப்படுத்த வேண்டும். மருந்துகள், மருத்துவக் கருவிகளை அரசே உற்பத்தி செய்ய வேண்டும்.
- ஒட்டுமொத்த மருத்துவச் செலவில் 55%ஐத் தங்கள் சொந்தப் பணத்திலிருந்துதான் இந்தியர்கள் செலவழிக்கின்றனர்.
- மருத்துவச் செலவின் காரணமாகவே ஒவ்வொரு ஆண்டும் 6 கோடிப் பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்படுகின்றனர்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான அரசு நிதி ஒதுக்கீடு 1.2%தான். அதை 6% ஆக அதிகரிக்க வேண்டும்.
- மருந்துகள், மருத்துவப் பொருள்கள், கருவிகளின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஊதியங்களும் வாங்கும் சக்தியும் குறைந்துகொண்டே வருகின்றன.

## அரசுகளின் கடமை

- தேசிய சுகாதாரக் கொள்கை வரைவு அறிக்கை 2015-இல், சுகாதாரத்தை அடிப்படை உரிமையாக்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டது.
- ஆனால் தேசிய சுகாதாரக் கொள்கை 2017இல் அது இடம்பெறவில்லை.
- 15ஆவது நிதி ஆணையம் அமைத்த குழு, சுகாதாரத்தை அடிப்படை உரிமையாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது. ஆனால், அப்பரிந்துரை கிடப்பில் போடப்பட்டுள்ளது.
- உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில், வாழ்வதற்கான உரிமை – தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமையை உறுதிப்படுத்தும் அரசமைப்புச் சட்டக்கூறு 21-இன் படி, வாழ்வதற்கான உரிமையில், சுகாதாரத்துக்கான உரிமையும் அடங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.
- எனவே, சுகாதாரம் என்பதை மத்திய அரசும் இதர மாநில அரசுகளும் அடிப்படை உரிமையாக்க முன்வர வேண்டும்.

SURESH' IAS ACADEMY

## தற்போது, ராஜஸ்தானில் உடல்நலத்திற்கான உரிமை

- ராஜஸ்தான் மாநிலமானது, உடல்நலத்துறையில் ஒரு மாதிரி மாநிலமாக கிராமங்கள் (ம) குக்கிராமங்களுக்கு சிரஞ்சீவி சுவஸ்திய பீம யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் வரையில் இலவச சிகிச்சை அளித்தல், இலவச மருந்து (ம) ஆய்வு திட்டம், நிரோகி ராஜஸ்தான் அபியான் (ம) கொரானா காலத்தில் சிறப்பான மேலாண்மை செய்ததன் விளைவாக உருவெடுத்துள்ளது.
- தற்போது மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உடல் நலத்திற்கான உரிமையை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்துகிறது.
- இந்த முற்போக்கான சட்டமானது, உடல்நலத்திற்கான உரிமையை இந்திய அரசியலமைப்பின் விதி 47 (ம) விதி 21-ன் கீழ் உத்தரவாதம் அளிக்கிறது.
- உலக உடல்நலத்திற்கான நாளில், நாடு முழுவதிலும் உள்ள மக்களின் உடல் நலத்திற்கான உரிமையானது கிடைக்க எதிர்பார்க்கப்படுகிறது என ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கேகலாட் தெரிவித்தார்.

## நல்ல உடல்நலத்திற்கான செயல்படும் திட்டங்கள்

1. முதலமைச்சர் சிரஞ்சீவி ஸ்வஸ்திய பீம யோஜனா

   ரூ.25 லட்சத்திற்கு இலவச உடல்நல காப்பீடு

   அதனுடன் காப்பீடு ரூ.10 லட்சம் விபத்து காப்பீடு
2. முதலமைச்சர் நிசுல்க் நிரோகி ராஜஸ்தான் யோஜனா

   இலவச மருத்துவம் (அனைத்து அரசு மருத்துவங்களிலும்)
3. ராஜஸ்தான் மாநில உடல்நல திட்டம்

   அனைத்து தனிநபர் (ம) ஓய்வூதியதாரர்களுக்கு பணமில்லா மருத்துவ வசதி

## உடல்நலத்திற்கான மசோதாவின் சிறப்பம்சங்கள்

- உள்நோயாளி பிரிவு, வெளிநோயாளி பிரிவு, ஆலோசனை, மருந்து, சோதனை, போக்குவரத்து நடைமுறை (ம) அவசரகால பராமரிப்பு ஆகியவை அரசு (ம) நியமிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளுதல்.
- அரசாங்கமானது, அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளிகள், பணம் செலுத்த இயலாத சூழலில் அரசாங்கமானது திருப்பி செலுத்தும்.
- காவல்துறையின் அறிக்கை தரப்படாத சூழலில் சிகிச்சையானது வழங்கப்படல்.
- சிகிச்சை தொடர்பான முழு தகவல் பெறுவது உரிமை
- எங்கு மருந்து உரிமை எடுத்துக் கொள்ள வேண்டும், சோதனை மேற்கொள்ள வேண்டும் என்பது உரிமை ஆகும்.
- மருத்துவமனை (ம) மருத்துவர்களிடமிருந்து சிகிச்சை தொடர்பான கருத்தினை பெறுவதற்கான உரிமை
- இச்சட்டத்தில் குறைகள் தீர்க்கும் வழிமுறை உள்ளது.
- தனியார் மருத்துவமனைகளுக்கு சரியான நேரத்தில் தானியங்கி ஒப்புதல் முறையில் நிதி பெறும் ஏற்பாடு உள்ளது.
- அதிகாரிகளின் முடிவுகளுக்கு எதிராக சிவில் நீதிமன்றங்கள் செல்லும் உரிமை
- அனைத்து அரசு (ம) நியமிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளும் இச்சட்டத்தின் கீழ் வரும்.
- கட்ட அடிப்படையிலான முறையில் நியமிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- இச்சட்டத்தின் கீழ் வரும் நியமிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளுக்கு கூடுதலாக வசதிகள் முன்மொழியப்பட்டுள்ளது.

## முடிவுரை

- மருத்துவ துறை சார்ந்த தனிநபர்கள் (ம) மருத்துவர்கள் உடல்நலத்திற்கான உரிமையை திறம்பட செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
- அதனால் அவர்களின் கண்ணியமானது இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கும் ஏற்பாடு உள்ளது.
- இது அனைவரின் கடமையாக உள்ளது.
- ராஜஸ்தான் மருத்துவ சேவை நபர்கள் (ம) மருத்துவ சேவை நிறுவனங்கள் (வன்முறை (ம) சொத்து அழிப்பு தடுப்பு)
- சட்டம் 2008 மூலம் மருத்துவர்கள் பாதுகாப்பு (ம) நிலையான செயல்பாட்டு முறையானது 29 மே, 2022-ல் வெளியிடப்பட்டது.

## உலக சுகாதார அமைப்பு

- 75 ஆண்டுகளுக்கு முன்பு (1948) உலக சுகாதார அமைப்பு நிறுவப்பட்டது இதே நாளில்தான்.
- அதனை நினைவுகூரும் வகையிலேயே ஆண்டுதோறும் ஏப்ரல் 7-ஆம் தேதி உலக சுகாதார தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

## ஆயுஷ்மான் பாரத்

- பிரதமரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை, எளிய மக்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கட்டணமின்றி சிகிச்சையளிக்கப்படுகிறது.
- தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் காப்பீட்டுத் திட்டங்கள் ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| காப்பீட்டு அட்டை பெற்ற குடும்பங்கள் | ரூ.22.45 கோடி |
| காப்பீட்டின் கீழ் சிகிச்சை பெற்றோர் | ரூ.4.55 கோடி |
| காப்பீட்டுத் தொகை மதிப்பு | ரூ.54,988 கோடி |

## மக்கள் மருந்தகம்

- வர்த்தகப் பெயரிலான மருந்துகளின் விலை ஆயிரக்கணக்கில் இருக்கும் நிலையில், சாமானிய மக்களுக்கும் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப்பட்ட திட்டம் இது.
- வர்த்தகப் பெயரிலான மருந்துகளுக்கு மாற்றாக அதன் மூலப்பொருள்களின் பெயரிலான மருந்துகள் 90 சதவீதம் வரை குறைவான விலையில் மக்கள் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கை | 9,304 |
| அமைந்துள்ள மாவட்டங்கள் | 743 |
| மருந்து வகைகள் | 1,759 |
| மக்களின் சேமிப்பு | ரூ.20,000 கோடி (8 ஆண்டுகளில்) |

## மிஷன் இந்திரதனுஷ்

- குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கான இலவச தடுப்பூசி திட்டம் இது.
- காசநோய், கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், கக்குவான், இருமல், ரணஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளுயன்ஸா தொற்று, கல்லீரல் தொற்று, நிமோனியா, வயிற்றுப்போக்கு, தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய், ஜப்பானிய மூளைக்காய்ச்சல், விட்டமின்-ஏ குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்கான 11 வகையான தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.
- 8 ஆண்டுகளில் 4.45 கோடி குழந்தைகள் மற்றும் 1.25 கோடி கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

## முக்கிய சுகாதாரத் திட்டங்கள்

- இ-சஞ்சீவனி - தொலைநிலை மருத்துவ ஆலோசனைத் திட்டம்
- காசநோய் ஒழிப்புத் திட்டம்
- போலியோ ஒழிப்புத் திட்டம்
- கரோனா ஒழிப்பு திட்டம்

# மரண தண்டனைக்கு மாற்று

- மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தூக்கிலிடுவதற்குப் பதிலாக, வலி குறைவான, கண்ணியமான, சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்று முறைகள் குறித்த தரவுகளை வழங்குமாறு மத்திய அரசிடம் உச்சநீதிமன்றம் கேட்டுள்ளது.

## கேள்விக்கு உள்ளாகும் செயல்முறை

- தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது அரசமைப்புக்கு உள்பட்ட என்பதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு, உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

- மரண தண்டனை என்பது அரசமைப்புக் கொள்கை சார்ந்தது என்றும், அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை வழங்கப்படுவதாகவும் அரசு வாதிட்டது.
- மரண தண்டனையை வலியுறுத்தும் அரசமைப்பை இந்த வழக்கு கேள்விக்கு உள்படுத்தவில்லை.
- மரண தண்டனை நிறைவேற்றப்படும் முறை மட்டுமே கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- தூக்கு தண்டனையை ஆதரித்து மத்திய அரசு 2018-இல் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் துப்பாக்கிச் சூடு, விஷ ஊசி மருந்துகளுடன் ஒப்பிடும்போது தூக்கிலிடுவது மனிதாபிமானமற்றதோ, கொடூரமானதோ அல்ல என்று தெரிவித்திருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவில் மரண தண்டனை

- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் சில குற்றங்களுக்கு மரண தண்டனை ஒரு சட்டப்பூர்வத் தண்டனையாகவே இன்றும் உள்ளது.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 354 (5), மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை அவர் இறக்கும்வரை தூக்கில் தொங்கவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- எந்தக் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்பது இந்திய தண்டனைச் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.
- கொலை (பிரிவு 302), கொலையுடன் கொள்ளையடித்தல் பிரிவு (396), கிரிமினல் சதி (பிரிவு 120 பி), இந்திய அரசுக்கு எதிராகப் போரிடுதல் அல்லது அவ்வாறு செய்ய முயற்சித்தல் (பிரிவு 121), கலகத்தை உருவாக்குதல் (பிரிவு 132 உள்ளிட்ட குற்றங்கள் அதில் அடங்கும்.
- குற்றத்தின் தன்மை, தீவிரம் உள்ளிட்ட பிற காரணிகளைக் கருத்தில் கொண்டு மரண தண்டனை வழங்குவதற்கான முடிவை நீதிபதி எடுக்கிறார்.
- இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்படுவது எல்லா தருணங்களிலும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு வழிவகுக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- சில சந்தர்ப்பங்களில் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படலாம் அல்லது அரசமைப்பின் 72ஆவது பிரிவின்கீழ் குடியரசுத் தலைவரால் குற்றவாளிக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படலாம்.


### அகற்றியுள்ள நாடுகள்

- ஆசியாவில் சீனா, இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற நாடுகளில் மரண தண்டனை மிகவும் பரவலாக உள்ளது.
- ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மரண தண்டனை என்பது அரிதானது.
- உலகெங்கிலும் உள்ள 110 நாடுகள் மரண தண்டனையை அகற்றியுள்ளன. சியரா லியோன், பபுவா நியூகினி, ஈக்வடோரியல் கினி ஆகியவை இந்தப் பட்டியலில் மிகச் சமீபத்தில் சேர்ந்துள்ளன.

## 1952ல் இருந்து அமையவுள்ள 17வது மக்களவையானது குறுகியதாக இருக்கும்


- தற்போதைய மக்களவையில் கேள்விகளுக்கு மிகக் குறைந்த நேரமே செலவிடப்படுகிறது.
- 17வது மக்களவையானது, தன்னுடைய இறுதி ஆண்டில் நுழைந்துள்ளது. இதுவரை 230 நாட்கள் அமர்வு நடைபெற்றுள்ளது.
- 5 வருட காலத்தை முழுவதுமாக ஆட்சிசெய்ய இதுவரை உள்ள மக்களவையிலேயே 16வது மக்களவை மிகக் குறைவான நாட்கள் அமர்வு உடையது (331).
- மீதம் ஒரு வருடம் இருக்கிற சூழலில் 17வது மக்களவையானது, சராசரியாக ஒரு வருடத்திற்கு மக்களவை அமர்வு 58 எனில் 331 நாட்களுக்கு மேல் செயல்படாத சூழலை ஏற்படுத்தப்பட உள்ளது.
- இந்த சூழலில் 1952லிருந்து முழு அளவிலான மக்களவையின் மிகக் குறைவான நாட்கள் மட்டுமே அமர்வு உடைய மக்களவையாக 17வது மக்களவை அமையும்.

## விளக்கப்படம் : 1





- தற்போது நடைபெறும் 18வது மக்களவை உட்பட அனைத்து மக்களவையின் அமர்வு நாள்.
- 4th, 6th, 9th, 11th, 12th 5 வருட காலத்திற்கு குறைவான மக்களவை அதனால் அமர்வு குறைவாக உள்ளது.
- குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் நீடித்த அந்த மக்களவைகளில் 17வது மக்களவையானது மிகக் குறுகியதாக அமைக்கப்படும்.
- 5வது மக்களவையானது 6 வருடம் நீடித்தது.
- பல்வேறு தொடர்ச்சியான இடையூறுகள் காரணமாக தற்போது நடைபெற்ற பட்ஜெட் கூட்டத் தொடரானது ஜனவரி 31 2023-ல் தொடங்கி ஏப்ரல் 6, 2023 என மிக குறுகிய காலம் நடைபெற்றது. இந்த கூட்டத்தொடரில் இடைவெளி பிப்ரவரி 14 முதல் மார்ச் 12 வரை இருந்தது.
- அட்டவணைப்படுத்தப்பட்ட (46 மணி நேரம்) நேரத்தில் 33% மட்டுமே மக்களவை நடைபெற்றது.
- மாநிலங்களவை 24% (32 மணி நேரம்) மட்டுமே நடைபெற்றது.
- 15 நாள் இடைவெளிக்கு பின் அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்தில் 5% மக்களவை செயல்பட்டது. மாநிலங்களவை 6% மட்டும் செயல்பட்டது.
- பெரும்பான்மையான நேரம் ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான நடைமுறைக்கு பயன்படுத்தப்பட்டது.

## விளக்கப்படம் : 2





- 2019 முதல் 2023 வரை நடைபெற்ற 11 அமர்வுகளில் மக்களவை செயல்பட்ட நேரம் விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.
- இந்த மக்களவையில் இதுவரை 150 மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது மற்றும் 131 மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. (நிதி மசோதா, ஒதுக்கீடு மசோதா தவிர).
- முதல் அமர்வில் 38 மசோதா அறிமுகம் செய்யப்பட்டது மற்றும் 28 நிறைவேற்றப்பட்டது.
- அப்போது முதல், மசோதா அறிமுகம் செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் எண்ணிக்கையானது குறைந்து கொண்டே காணப்படுகிறது.
- கடந்த 4 தொடர்ச்சியான அமர்வுகளில் 10 மசோதாவிற்கும் குறைவாக அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## விளக்கப்படம் : 3





- 1952-லிருந்து உள்ள 17வது மக்களவை வரை ஒவ்வொரு மக்களவையும் நிறைவேற்றிய மசோதாக்களின் எண்ணிக்கை
- 1952லிருந்து தற்போது வரை உள்ள பட்ஜெட் அமர்வில் 2023-ல் உள்ள பட்ஜெட் அமர்வானது 6வது மிகக் குறுகிய அமர்வாகும்.
- நிதி தொடர்பாக மக்களவை செலவழித்த 18 மணி நேரத்தில் 16 மணி நேரம் பட்ஜெட் பொது விவாதம் செய்யப்பட்டுள்ளது.
- 2022-ல் பட்ஜெட் அமர்வானது நிதி தொடர்பாக சராசரியாக 55 மணி நேரம் விவாதிக்கப்பட்டுள்ளது.

## விளக்கப்படம் : 4





- பட்ஜெட் விவாதத்திற்காக செலவிடப்பட்ட நேரம் (மணியில்)
- குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மட்டுமே கடந்த அளவில் விவாதிக்கப்பட்டுள்ளது.
- 2 அவைகளிலும் கிட்டத்தட்ட 28 மணி நேரம் 150 நபர்களை மொத்தமாக பெற்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது.
- பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்குமான பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தில் கவனத்தை கொண்டு வருதல் போன்ற பல்வேறு சூழலுக்கு ஏற்ப நடைமுறை விதிகளை வழங்குகிறது.
- அதாவது அரைமணிநேர விவாதம், குறுகிய கால விவாதம் மற்றும் ஒத்திவைப்பு தீர்மானம் உடையது.
- 17வது மக்களவையில் 11 குறுகியகால விவாதம் மற்றும் 1 அரைமணி நேர விவாதம் இதுவரை நடைபெற்றுள்ளது. இவை இரண்டும் நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் நடைபெறவில்லை.

## விளக்கப்படம் : 5



- மக்களவையில் நடைபெற்ற விவாதங்களின் எண்ணிக்கை
- தற்போது நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத் தொடரில்தான் குறைந்த அளவிலான நேரம் கேள்விகளுக்கு செலவிடப்பட்டு உள்ளது.
- மக்களவையின் அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்தில் 19% கேள்வி நேரத்திற்கு ஒதுக்கப்படுகிறது. (மக்களவையில் 9%).
- இவற்றில் குறியிடப்பட்ட கேள்விகளுக்கு இரு அவைகளிலும் பதிலளிக்கப்படுகிறது.
- இந்த அமர்வில் எந்த ஒரு தனிநபர் மசோதா அறிமுகம் மற்றும் நிறைவேற்றப்படவில்லை.
- இரு அவையிலும் 1 தனி நபர் தீர்மானத்தை விவாதித்துள்ளனர்.

### விளக்கப்படம் : 6




- கடந்த 11 அமர்வுகளாக மக்களவை அட்டவணைப்படுத்தப்பட்ட கேள்வி நேர தொடர்பானது.

## வேலைக்கு செல்லும் பெண்களுக்கு குழந்தையை தத்தெடுக்க உரிமை உண்டு

- மத்திய பிரதேசத்தின் நர்மதாபுரம் பகுதியை சேர்ந்தவர் ஷப்னம் ஜகான் அன்சாரி (47).
- விவாகரத்து பெற்ற அவர், மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் உள்ள பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.
- மகாராஷ்டிர மாநிலம் ஜல்கோன் பகுதியை சேர்ந்த தனது தங்கை கெய்சர்ஜகானின் 3 வயது மகள் அயத் பாத்திமாவை தத்தெடுக்க, ஷப்னம் ஜகான் முடிவு செய்தார்.
- குழந்தையை தத்தெடுக்க சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடம் அவர் விண்ணப்பித்தார். அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

### மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு

- குழந்தையை தத்தெடுக்க விரும்பும் ஷப்னம் ஜகான் அன்காரி விவாகரத்து பெற்று தனியாக வாழ்கிறார். ஆசிரியையாக பணியாற்றுகிறார்.
- வேலைக்கு செல்லும் பெண்ணால், குழந்தையை முறையாக பராமரிக்க முடியாது என்று கூறி நீதிபதி தீர்ப்பளித்தார்.

### மேல் முறையீடு

- இந்த தீர்ப்பை எதிர்த்து ஷப்னம் ஜகான் அன்சாரி மற்றும் குழந்தையை தத்து கொடுக்க முன்வந்த தம்பதியர் சார்பில் மும்பை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

### தீர்ப்பு

- தனியாக வாழும் பெண்ணால் குழந்தையை வளர்க்க முடியாது.
- வேலைக்கு செல்லும் பெண்ணால் குழந்தையை முறையாகப் பராமரிக்க முடியாது என்று கூறுவது இடைக்கால பழைமைவாத மனநிலையை வெளிப்படுத்துகிறது.
- வேலைக்கு செல்லும் பெண் குழந்தையைத் தத்தெடுக்க உரிமை இருக்கிறது.

## மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா

- கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் மூலம் நெசவாளர் ஒருவர் அறுபது வயதை அடையும் முன்னர் மரணமடைந்து விட்டால், அவரது வாரிசுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

- ஸ்வரோஜ்கார் கடன் அட்டைத் திட்டத்தில் கைவினைஞர்கள், மீனவர்களுக்கு கடன் வழங்கப்படுவது போல நெசவாளர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் வழங்கல், முதிய நெசவாளர் ஓய்வூதியத் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் அளித்து சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை இல்லங்கள் கட்டித்தரும் திட்டம் என கைத்தறி நெசவாளர்களுக்கு பயன் அளிக்கும் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
- பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச சீருடை, பொங்கல் பண்டிகையையொட்டி மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி, சேலை என கைத்தறித் துணிகள் மாநில அரசால் கொள்முதல் செய்யப்படுவது கைத்தறி நெசவாளர்களுக்கு நன்மை பயக்கும் செயலாக அமைந்துள்ளது.
- கைத்தறி நெசவாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இருநூறு அலகு இலவச மின்சாரத்தை முன்னூறு அலகாக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.
- கைத்தறி நெசவாளர்களின் கடனுக்கான வட்டி விகிதத்தை குறைப்பது, கடன்களைத் தள்ளுபடி செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் கடன் சுமையில் தத்தளிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் நிவாரணம் அளிக்கலாம்.

# உயர் கல்வி நிறுவனங்களில் பாலியல் புகார் குழுக்கள் அவசியம்

## உள்ளக புகார் குழு

- நாட்டையே உலுக்கிய நிர்பயா சம்பவத்தைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட வர்மா குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியக் குழு (உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் – பயிலும் மாணவிகளின் மீதான பாலியல் வன்முறையைத் தடைசெய்தல், தடுத்தல், குறைதீர்த்தல்) ஒழுங்குமுறை சட்டம் 2015 உருவாக்கப்பட்டது.
- இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழக மானியக் குழுவின் (யூஜிசி) கீழ் வரும் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் இந்த ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.
- எவையெல்லாம் பாலியல் சீண்டல்கள், புகார் அளிப்பது எப்படி, நடவடிக்கைகள் என்னென்ன என்பன போன்றவை குறித்தும் அதில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- பாலியல் புகார்களைப் பதிவுசெய்யும் வகையில் உள்ளகப் போர் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்பது கட்டாயம்.
- பெண் பணியாளர்களுக்கும் மாணவியருக்கும் இந்தப் புகார் குழு குறித்தும் அதன் நடைமுறைகள் குறித்தும் கல்வி நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும்.
- இது தொடர்பான விழிப்புணர்வுப் பயிலரங்குகளையும் நடத்த வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் எத்தனை புகார்கள் பதிவாயின.
- அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்த ஆண்டறிக்கையை பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.
- ஆனால், அது பெயரளவுக்குக்கூட நடப்பதில்லை என்பதைத்தான் யூஜிசி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரச்சனை

- புகாருக்கு உள்ளாகும் உயர்கல்வி நிறுவனங்களில் பெரும்பாலானவை புகார் சொல்லும் மாணவியரைப் புறக்கணிப்பது, மறைமுகமாக மிரட்டுவது, பாதிக்கப்பட்டவரையே குற்றவாளியாக்குவது என மோசமாக நடந்துகொள்கின்றன.
- இது பாதிக்கப்பட்டவர்களைச் சோர்வுறச் செய்கிறது.
- பாலியல் புகார் குழு குறித்த அறியாமை, புகார்மீது நடவடிக்கையின்மை போன்றவையும் மாணவியருக்குப் பின்னடைவாக அமைகின்றன.
- இவற்றைக் கண்காணிக்க எந்தவொரு அமைப்பும் இல்லாதது இன்னொரு பிரச்சனை.
- இந்தச் சூழலில், உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவியர் – பெண் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யாத கல்வி நிறுவனங்களின் உரிமத்தை ரத்துசெய்வது, குற்றம் நிரூபிக்கப்பட்டோர் பணிப் பறிப்பு உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை யூஜிசி எடுக்க வேண்டும்.
- பெண்களின் உயர் கல்விக் கனவு தடைபடாமல் காக்க அது முக்கியமான அஸ்திரமாக அமையும்.

# மது விலக்கும் சிக்கல்களும்

- காந்தி பிறந்த குஜராத் மாநிலம் தவிர்த்து, சுதந்திர இந்தியாவில் அன்று மதுவிலக்கு நடைமுறையில் இருந்த ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.
- சுதந்திரத்திற்குப் பின்னர் ஏறத்தாழ 24 ஆண்டுகள் வரை அதாவது 1971-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்தது.

## தமிழகத்தில் மதுவிலக்கு

- இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே, அதாவது 1937-ஆம் ஆண்டு முதல் முதலில் மதுவிலக்கு அமலானது.
- 1944-ஆம் ஆண்டு மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, கள்ளுக்கடைகளைத் திறக்கத் திட்டமிட்டது அன்றைய ஆங்கிலேய அரசு. அதை ராஜாஜி கடுமையாக எதிர்த்தார்.
- ஆனால், அந்த எதிர்ப்பையும் மீறி 1944-ம் ஆண்டு மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு, கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டன.
- இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, மீண்டும் மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தது.
- சுதந்திர இந்தியாவில் 1971-ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது.
- தமிழக முதலமைச்சராக இருந்த ராஜாஜியில் தொடங்கி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, காமராஜர், பக்தவத்சலம், அண்ணா வரை எந்த முதலமைச்சரும் மதுவிலக்கை ரத்து செய்ய முன்வரவில்லை.

## அண்ணா கூற்று

- திமுக 1967-ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய போது, மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என அதிகாரிகள் பரிந்துரைத்தனர்.
- மதுவிலக்கை ரத்து செய்தால், 600 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என அதிகாரிகள் அன்று கூறிய யோசனையை நிராகரித்தார் அண்ணா.
- மதுவிற்பனை மூலம் வரும் வருவாய் தொழுநோயாளி கையில் உள்ள வெண்ணெய்யை வாங்குவதற்கு சமம் என்றார்.

## 1971–மதுவிலக்கு ரத்து

- இந்தியாவில் பல மாநிலங்களில் மதுவிலக்கு நடைமுறையில் இல்லாததால், மதுவிலக்கை நடைமுறைப்படுத்தும் மாநிலங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று அறிவித்தது மத்திய அரசு.
- தமிழகத்தில் மதுவிலக்கு நடைமுறையில் உள்ளது. எனவே, எங்களுக்கும் மானியம் தரவேண்டும் என அப்போதைய முதல்வர் கருணாநிதி கேட்டபோது அதற்கு மறுத்துவிட்டது மத்திய அரசு.
- ஏற்கெனவே மதுவிலக்கை நடைமுறைப்படுத்தியுள்ள மாநிலங்களுக்கு மானியம் கிடையாது என்று மத்திய அரசு கூறியது.
- மதுவிலக்கை நடைமுறைப்படுத்தியதற்கு இப்படியொரு தண்டனையா என்று கேள்வி எழுப்பிய கருணாநிதி, 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தமிழ்நாட்டில் மதுவிலக்கை ரத்து செய்து அதற்கான அவசர சட்டம் ஒன்றையும் பிறப்பித்தார்.
- அதன் பின்னர் 1974-ஆம் ஆண்டு மதுவிலக்கு மீண்டும் நடைமுறைக்கு வந்தது.
- 1983-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். முதலமைச்சரானபோது மீண்டும் மதுவிலக்கு ரத்தானது.
- 1987-இல் மீண்டும் மதுவிலக்கு அமலானது, 1990 முதல் 1991 வரை மீண்டும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது.
- 1991-ல் முதல் முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஜெயலலிதா முதலமைச்சராக முதல் கையொப்பமிட்டு மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினார்.

## டாஸ்மாக்

- தனியார் வசம் இருந்த மதுக்கடைகள், அரசு நிறுவமான டாஸ்மாக் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.
- இன்று தேசிய அளவில் அதிக வருவாயை ஈட்டித் தரும் பொதுத்துறை நிறுவனம் டாஸ்மாக்தான்.

## முடிவுரை


- மதுவிலக்கை அமல்படுத்தினால் கள்ளச்சாராயம் பெருகி விடும் என்று கூறுவதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சிலர் கூறுகின்றனர்.
- காரணம், கள்ளச் சாராயம் விற்கப்பட்டால் அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.
- மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டால், இப்போது மது குடிப்பவர்களில் 10 சதவீதம் பேர் வேண்டுமானால் சாராயம் அருந்தலாம்.
- ஆனால், மது குடிப்போரின் எண்ணிக்கை இதனால் கணிசமாக குறைந்து விடும் என்பதை மறுப்பதற்கில்லை.

# மக்களைத் தேடி மருத்துவம்

- 2021 ஆகஸ்ட் 5 அன்று 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் தொடங்கப்பட்டது.
- கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் சாமனப்பள்ளி கிராமத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தது இந்த திட்டம்.
- 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு, வீட்டிலேயே ஆரம்பநிலை சிகிச்சை, சரியான நேரத்தில் மருந்துகள் விநியோகம் போன்றவை இத்திட்டத்தின் மூலம் சாத்தியமாகியிருப்பதை இந்த ஆய்வு வெளிக்கொணர்ந்திருக்கிறது.
- நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், பக்கவாதம் உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள், இயன்முறைப் பயிற்சிகள், மருந்து, மாத்திரை வழங்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு மருத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது.
- மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று மருந்து, மாத்திரைகளை வழங்கி வருகின்றனர்.
- தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் அமல்படுத்தப்பட்டிருக்கும் இத்திட்டம், தொடங்கிய ஒரே ஆண்டில் 83 லட்சம் நோயாளிகளுக்குச் சிகிச்சை கிடைக்க வழிவகை செய்தது.

# 142.86 கோடியுடன் சீனாவை முந்தியது மக்கள் தொகையில் இந்தியா முதலிடம்

- உலக மக்கள் தொகையில் சீனாவை பின்னுக்கு தள்ளி 142.86 கோடி மக்கள் தொகையுடன் இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளதாக ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்தச் சூழலில், இந்தியா தற்போது 142.86 கோடி மக்கள் தொகையுடன் உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக உருவெடுத்திருப்பதாக ஐ.நா.மக்கள் தொகை நிதியத்தின் (யுஎன்எஃப்பிஏ) உலக மக்கள் தொகை அறிக்கை (எஸ்டபிள்யுஓபி) 2023-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 1950-ஆம் அண்டு முதல் உலக மக்கள்தொகை புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், முதல்முறையான உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடம் வகித்துள்ளது.




- இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 142.86 கோடியாகவும், சீனாவின் மக்கள்தொகை 142.57 கோடியாகவும் இருப்பதாக நேற்று ஐ.நா. கூறியுள்ளது.

- சீனாவில் பெண்கள் 82 வயது, ஆண்கள் 76 வயது வரையிலும் வாழ்ந்து வருகின்றனர்.
- இந்தியாவில் ஆண் சராசரியாக 71 வயது வரையிலும், பெண் 74 வயது வரை வாழ்வதாக ஐ.நா. ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.
- கேரளா, பஞ்சாபில் அதிக வயதானவர்களும்
- பீகார், உ.பி.யில் இளைஞர்களும் அதிகளவில் உள்ளனர்.
- ஆனால் நாடு முழுவதும் 25.40 கோடி இளைஞர்கள் (15-24 வயது) இருப்பதால், புதுமையான, புதிய சிந்தனை மற்றும் நிரந்தர தீர்வுகளின் ஆதாரமாக இந்தியா விளங்கும்.

### ஐ.நா. அறிக்கையில் தகவல்

| | | |
|---|---|---|
| இந்தியா | : | 142.86 கோடி |
| சீனா | : | 142.57 கோடி |
| வித்தியாசம் | : | 29 லட்சம் |

- 2023 இறுதியில் உலக மக்கள் தொகை 804.50 கோடியாக இருக்கும்.
- இதில், மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை இந்தியா, சீனாவில் இருக்கும்.
- 2011க்கு பிறகு இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தவில்லை.
- பல்வேறு தரவுகளை கணக்கில் கொண்டு ஐ.நா.மக்கள்தொகை குறித்த கணக்கை தயாரித்துள்ளது.
- இந்திய மக்கள் தொகையில் 25.40 கோடி பேர் 15 முதல் 24 வயதுடைய இளைஞர்கள்

### வயது வாரியாக

- ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ள வயது அடிப்படையிலான இந்திய மக்கள்தொகை சதவீதத்தின் விவரம் வருமாறு :

| வயது | சதவீதம் |
|---|---|
| 0 - 14 | 25% |
| 10 - 19 | 18% |
| 10 - 24 | 26% |
| 15 - 64 | 68% |
| 65க்கு மேல் | 7% |

### 2050க்கு மேல்...

- இந்தியாவின் மக்கள் தொகை 166.8 கோடியாக உயரும். அதன்பிறகு அது படிப்படியாக குறையத் துவங்கும்.
- இந்தியர்களில் ஐந்தில் ஒருவர் மூத்த குடிமக்களாக இருப்பார்கள்.
- சீனாவின் மக்கள் தொகை 131.7 கோடியாக குறைந்துவிடும்.

### இந்தியர்களின் சராசரி ஆயுள்

- ஆண் 71 ஆண்டுகள்
- பெண் 74 ஆண்டுகள்

### குறையும் வளர்ச்சி

- இந்தியாவில் மக்கள் தொகை அதிகரிக்கும் வேகம் தற்போது குறைந்து வருகிறது.
- கடந்த 2011 முதல் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 1.2 சதவீதமாக உள்ளது.
- அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் இந்த வளர்ச்சி 1.7 சதவீதமாக இருந்தது.

## அம்பேத்கரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பும்

- இந்தியச் சமூகத்தின் சீர்திருத்தத்தில் அம்பேத்கரின் நேரடிப் பங்களிப்பு பற்றி எழுதப்பட்ட, பேசப்பட்ட அளவுக்கு அவரது மறைமுகத் தாக்கம் பற்றி எழுத-பேசப்படவில்லை; அவை பதிவு செய்யப்பட வேண்டும்.

- அது அம்பேத்கரை மேலதிகமாகப் புரிந்துகொள்ள உதவுவதோடு, அவர் மீதான எதிர்மறைச் சித்தரிப்புகளிடமிருந்து உண்மைகளை விலக்கிப் பாதுகாப்பதற்கான கருவியாகவும் அமையும்.

## அம்பேத்கரும் கெட்கரும்

- 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பைத் தீவிரப்படுத்திய ஆங்கிலேய அரசு, 20 -ஆம் நூற்றாண்டின் முதல் இரண்டு கணக்கெடுப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தியது.
- பொருளாதாரம், வாழ்விடம் குறித்த செய்திகளைப் பெற்று வகைப்படுத்துவதைவிட சாதி குறித்த தகவல்களைச் சேகரிப்பதில் ஏராளமான சிக்கல்கள் இருந்ததே இந்தக் கவனக் குவிப்புக்குக் காரணம்.
- வெவ்வேறு காலகட்டத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு நியமிக்கப்பட்ட தேசிய ஆணையாளர்களான டபிள்யூ.சி.பிளாடன், ஜே.ஏ.பெயின்ஸ், ஹெச்.ஹெச்.ரிஸ்லி, இ.ஏ.கெயிட். ஜே.டி.மார்ட்டின் ஆகிய அனைவரும் சமூகவியலிலும் மானுடவியலிலும் அறிவு ஜீவிகளாக இருந்தவர்கள்.
- அப்படிப்பட்டவர்களால்கூட இந்தியச் சாதி அமைப்பைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.
- இதே காலத்தில் சாதி அமைப்பு குறித்துச் சரியான புரிதலோடு இருந்த இந்தியர்கள் இருவர் : ஒருவர் எஸ்.வி.கெட்கர்; மற்றொருவர் அம்பேத்கர்.
- கெட்கர் இந்தியாவின் பலமாகக் கருதிய சாதி அமைப்பை அம்பேத்கர் பலவீனம் என்றே கருதினார்.

## அம்பேத்கரின் மறைமுகத் தாக்கம்

- 1911 மக்கள் தொகைக் கணக்கெடுப்புவரை சாதிகள் தொகுதிகளாகக் குறிக்கப்பட்டனவே அன்றி, வகைமைப்படுத்தப்படவில்லை.
- ஐரோப்பிய மானுடவியல் கோட்பாடுகளை அளவுகோலாகக் கொண்டு இந்தியச் சாதி அமைப்பைப் பார்த்ததால் உருவான சிக்கல் அது.
- ஆனால், இந்தச் சிக்கல் அடுத்தடுத்த கணக்கெடுப்பில் முடிந்தவரை சரிசெய்யப்பட்டது.
- குறிப்பாக, 1881 கணக்கெடுப்பில் இருந்த சாதி பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, ஜே.ஏ.பெயின்ஸ் 1891 கணக்கெடுப்பில் சாதியை வகைமைப்படுத்தத் தொடங்கியிருந்தார். ஆனாலும் அதில் தெளிவில்லை.
- 1901 கணக்கெடுப்பில் கொஞ்சம் தெளிவு கூடியிருந்தது. கூடுதலாக நால்வருணம் பற்றிப் பேசத் தொடங்கியிருந்தது.
- இந்தப் போக்கு முதன்முதலாக பிரிட்டிஷ் இந்தியாவில் சாதி குறித்த ஓர்மையை அனைத்துத் தரப்பினரிடமும் உருவாக்கியிருந்தது.
- 1920 வரை சாதி குறித்த விவாதங்கள் ஏராளமாக நடந்தன. இந்தக் காலத்தில்தான் இந்தியா முழுவதும் இருந்து சாதி அடுக்கில் ஒவ்வொரு சாதியினரும் தம் சாதியை வைக்க வேண்டிய இடம் குறித்து அரசுக்குக் கோரிக்கை மனுக்களை எழுதினார்கள்.
- அதற்கு வலு சேர்க்கும் வகையில், பழைய புராணங்களைத் தமக்கேற்றவாறு மாற்றியும் புதிய புராணங்களை இயற்றியும் கோரிக்கை மனுவோடு இணைத்து அனுப்பினர்.
- இந்தப் பின்னணியில், அம்பேத்கரின் சாதி குறித்த ஆய்வைப் பார்க்கும்போது அவரின் தொலைநோக்குப் பார்வையின் தெளிவு புலப்படும்.
- 1916-இல் அவர் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் மானுடவியல் கருத்தரங்கில் வழங்கிய 'இந்தியாவில் சாதிகள்' என்னும் ஆய்வுக்கட்டுரை, சாதியைப் புரிந்துகொள்ளும் விதத்தை விளக்கியது.
- 1901 கணக்கெடுப்பின் ஆணையாளர்களாகப் பணியாற்றிய எச்.ரிஸ்லி, கெயிட் ஆகியோர் தமது அறிக்கையில், 'சாதி என்பது ஒரு பொதுப் பெயர் கொண்ட குடும்பங்களை அல்லது பல குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டத்தின் தொகுப்பு' என்பதாகக் குறிப்பிட்டிருந்தனர்.
- அந்தக் கருத்தை மறுத்த அம்பேத்கர், அது சாதியின் மையத்தை விளக்கவில்லை என்றார்.

## சாதியைக் குறிப்பிடுவதில் குழப்பம்

- 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் 'நால்வருணம்' என்ற சிந்தனை வந்துவிட்ட சூழலில், அன்றைக்கு ரிஸ்லியும் கெயிட்டும் சாதி குறித்த அறிதலுக்கு வந்திருந்தாலும் இந்தியப் பின்புலத்தில் சாதியைப் புரிந்துகொண்டிருக்கவில்லை.
- அதனாலேயே, 'சாதியின் தோற்றம், பரவல் பற்றி எங்களால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை' என்றனர்.
- மக்களின் எண்ணங்களைக் கணக்கில் கொள்ளாத இருவரும் வாழிட அடிப்படையில் நிறம், உடல் தோற்றம் - குறிப்பாக மூக்கின் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை வகைப்படுத்தியிருந்தனர்.

- உதாரணமாக, 1901-க்கு முன்புவரை மேற்கு மலைத்தொடரின் பழங்குடிகள், மத்திய இந்தியப் பழங்குடிகள், கங்கைப் படுகைப் பகுதிப் பழங்குடிகள் தனித்தனி வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்தாலும் அவர்கள் தனித்தனிச் சாதிகளாகக் கருதப்படவில்லை.
- பழங்குடி என்றே பொதுவாகச் சுட்டப்பட்டிருந்தார்கள். இப்படி ஏராளமான மாற்றங்களோடும் குழப்பங்களோடும்தான் 1901 கணக்கெடுப்பு அறிக்கை வெளிவந்தது.

## மாற்றம் ஏற்படுத்திய கட்டுரை

- 1911 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் கெயிட் நால்வருணப் பின்னணியில் சாதியின் விளைவுகளைக் குறித்து மட்டுமே பேசியிருந்தார்.
- 1901 கணக்கெடுப்பில், சாதி வகைப்பாடு குறித்து ரிஸ்லியோடு தானும் இணைந்து கூறியவற்றை அப்படியே வைத்துக்கொண்ட கெயிட், அதோடு சாதியின் உள்பிரிவுகளையும் துணைப் பிரிவுகளையும் அறிக்கைக்குள் கொண்டுவந்தார்.
- அம்பேத்கர் இக்கருத்திலிருந்து முற்றிலுமாக மாறுபட்டார். விளைவுகளை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்வது முழுமையான முடிவுகளை நோக்கி நகர உதவாது என்பது அம்பேத்கரின் அணுகுமுறை.
- முந்தைய அறிஞர்களால் சாதியின் தோற்றம் குறித்துத் தெளிவாகச் சொல்ல இயலாத நிலையில், சாதியின் தோற்றத்தோடு ‘அகமணம்’ நெருங்கிய தொடர்புடையது என ‘இந்தியாவில் சாதிகள்’ கட்டுரையில் அம்பேத்கர் தெரிவித்தார்.
- இந்த ஆய்வு முடிவானது, 1911 கணக்கெடுப்பு வரை வினாநிரலில் ‘திருமணம்’ குறித்துப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த கேள்வியை 1921 கணக்கெடுப்பில் முக்கியமான கேள்வியாக மாற்றி முன்னுக்குக் கொண்டுவந்தது.
- இதில் பிறந்த இடம், வாழும் இடம், மதம், கல்வியறிவு, மொழி, சாதி, இனம், தேசியம் முதலிய தரவுகள் சேகரிக்கப்பட்டன.
- மக்களை உடல் அமைப்பு, நிறம், புராணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துவதை ஏற்க மறுத்த அம்பேத்கர், இந்துக்களுக்குள்ளே வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்களிடையே ஆழ்ந்த பண்பாட்டு ஒருமை உள்ளது.
- பெரிய பண்பாட்டுப் பகுதிகளின் சிறிய தொகுதிகளே சாதிகள்.
- தொடக்கத்தில் ஒரு சாதியே இருந்தது போலச் செய்தல், சாதி விலக்கம் ஆகியவற்றின் மூலம் வர்க்கங்கள் அல்லது வகுப்புகள் சாதிகளாயின என்பதான முடிவுகளை முன்வைத்தார்.
- இந்த முடிவுதான் 1921 கணக்கெடுப்புக்காகத் தயாரிக்கப்பட்ட வினாநிரலில் மாற்றங்களைச் செய்வதற்குக் காரணமாக அமைந்தது.
- 1911ஆம் ஆண்டு அறிக்கை மக்களின் வகைமையைப் பொறுத்தமட்டில் நெஸ்பீல்ட், செனார்ட், சர் டென்ஜில் இப்பெட்ஸன் ஆகியோரின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இறுதிவடிவம் பெற்றது.
- இவற்றிலும் இதற்கு முந்தைய கணக்கெடுப்பிலும் தொழில், பழங்குடியினருடைய அமைப்புகளின் எச்சங்கள், புதிய நம்பிக்கைகளின் தோற்றம், கலப்பினம், குடிபெயர்ந்த இனம், இடம்பெயர்ந்த இனம் என்கிற வகைமைகளில் மக்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தார்கள்.
- “இந்தியாவில் சாதிகள்” கட்டுரையில் மேற்கூறியவர்களின் கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டிய அம்பேத்கர், அதை ‘இந்தியாவின் சாதி அமைப்பைத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவு’ என்றார்.

## அம்பேத்கரின் தாக்கம்

- 1911-ஐப் போலவே மக்களின் வகைமையைப் பற்றிய பல மானுடவியலாளர்களுடைய கோட்பாடுகளின் வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு வெளியான 1921 கணக்கெடுப்பு அறிக்கையில், அம்பேத்கரின் சாதி குறித்த கருத்துக்களைக் கணக்கெடுப்பு ஆணையாளர் நேரடியாக மேற்கோள் காட்டவில்லை.
- அதேபோல, 1911க்கு முன்பு வெளியான எந்தக் கணக்கெடுப்பு அறிக்கையையும் அம்பேத்கர் தனது ‘இந்தியாவில் சாதிகள்’ கட்டுரைக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.
- ஆனால், இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் 1921 கணக்கெடுப்பு அறிக்கையில் அம்பேத்கரின் ஆய்வுகள் தாக்கம் செலுத்தியிருப்பது துலக்கமாகத் தெரிகிறது.
- சாதியை இந்தியப் புரிதலில் அணுக வேண்டும் என்கிற அம்பேத்கரின் கருத்து, ஆங்கிலேயர்களின் பார்வையை மாற்றியதோடு அல்லாமல் 1921-க்குப் பிறகு அவர்களால் அமல்படுத்தப்பட்ட சட்டங்களிலும் பிரதிபலித்திருக்கிறது.
- அம்பேத்கரும் 1916இல் சாதியைப் புரிந்துகொள்ளும் முறைமை குறித்து முன்வைத்த கருத்தை, அரசமைப்பு வரைவுவரை கொண்டுவந்து நிறுத்தினார்.
- விடுதலைக்குப் பிறகு இடஒதுக்கீட்டுக்கு அதுவே முதன்மைக் காரணமாக அமைந்தது.

## சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு

- உத்தர பிரதேச மாநிலத்தின் பிரயாக்ராஜில் ஏப்ரல் 15-ஆம் தேதி காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்த சமாஜவாதி கட்சி முன்னாள் எம்.பி.யும் தாதா அரசியல்வாதியுமான அதிக அகமதும் அவரது சகோதரர் முகமது அஷ்ரஃபும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.
- விசாரணை கைதிகளான அவர்கள் இருவரையும், பத்திரிக்கையாளர் வேடத்திலிருந்த மூன்று இளைஞர்கள் அருகிலிருந்து சுட்டுக் கொன்றுள்ளனர்.
- கொல்லப்பட்ட அதிக் அகமது இளம் வயதிலிருந்தே பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்.
- ஆள்கடத்தல், கொலை, கொள்ளை உள்ளிட்ட மிகக் கடுமையான குற்றங்களுக்காக அவர் மீது நூற்றுக்கு மேற்பட்ட குற்றவியல் வழக்குகள் உள்ளன.
- விசாரணை கைதியாக மருத்துவப் பரிசோதனைக்கு கைவிலங்குடன் அழைத்து வரப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.
- அம்மாநிலத்தை ஆளும் பாஜக, தனது அரசியல் எதிரிகளை காவல்துறையின் உதவியுடன் வேட்டையாடி வருவதாக ஏற்கெனவே புகார்கள் உள்ள நிலையில், பாஜகவை கடுமையாக எதிர்க்கும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டிருப்பதை சாதாரணமாகக் கடந்து போக இயலாது.
- நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தனது 17 வயதிலேயே ரௌடியானவர் அதிக் அகமது. பின்னாளில் தனது சட்டவிரோத செயல்பாடுகளுக்குப் பாதுகாப்பாக அரசியல் களம் புகுந்தார்.
- 1989-இல் இருந்து மூன்று முறை சுயேச்சையாக அலகாபாத் மேற்கு தொகுதியில் எம்எல்ஏவாகத் தேர்வான அதிக் அமகது, 1996-இல் சமாஜவாதி கட்சி எம்எல்ஏ ஆனார்.
- முன்னாள் முதல்வரும் பகுஜன் சமாஜ் கட்சி தலைவருமான மாயாவதியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அவர்தான் காரணம்.
- 1999-இல் அக்கட்சியிலிருந்து விலகி அப்னா தளத்தில் இணைந்து 2002-இல் எம்எல்ஏ ஆனார். மறு ஆண்டே மீண்டும் சமாஜவாதி கட்சியில் சேர்ந்த அதிக் அகமது, 2004-இல் பூல்பூர் மக்களவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- முன்னாள் பிரதமர்கள் ஜவஹர்லால் நேருவும் வி.பி.சிங்கும் வென்ற தொகுதி அது என்பது குறிப்பிடத்தக்கது.
- 2005-இல் அதிக் அகமதின் அரசியல் போட்டியாளரும் பகுஜன் சமாஜ் கட்சி எம்எல்ஏவுமான ராஜு பால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- அலகாபாத் மேற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் அதிக் அகமதின் சகோதரரை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றவர் ராஜுபால்.
- இக்கொலை வழக்கில் 2008-இல் கைதாகி விசாரணை கைதியாக சிறையில் இருந்தவர் அதிக் அகமது.
- ராஜு பால் கொலைவழக்கில் பிரதான சாட்சியான உமேஷ்பாலை 2019-இல் கடத்திய வழக்கில் கைதான அதிக் அகமது அவ்வழக்கில் சிறைத் தண்டனை பெற்றார்.
- அதற்குப் பழிவாங்கும் வகையில் உமேஷ் பாலையும் அவருக்குக் காவலாக இருந்த இரு போலீஸாரையும் அதிக் அகமதின் மகன் ஆசாத் தலைமையிலான குழு கடந்த பிப்ரவரி 24-இல் படுகொலை செய்தது.
- அந்த வழக்கில் தலைமறைவுக் குற்றவாளிகளாகத் தேடப்பட்டுவந்த ஆசாதும் அவரது நண்பரும் ஜான்சியில் கடந்த ஏப்ரல் 13-இல் போலீஸாரின் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- இந்நிகழ்வு நடந்த இரு தினங்களுக்குள்ளாகவே, அதிக் அகமதும் அவரது சகோதரர் அஷ்ரஃபும் கொல்லப்பட்டுள்ளனர்.
- அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையிலிருந்து காவல்துறை நழுவிவிட்டது.
- கொலையாளிகள் மூவரும், தாங்கள் பிரபலமாவதற்காக இந்தக் கொலைகளைச் செய்ததாகக் கூறியிருப்பதை நம்ப முடியவில்லை.
- காவல்துறையினர் கண்ணெதிரிலேயே இருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதை சட்டம் - ஒழுங்கு சந்தி சிரிப்பதாகத்தான் கொள்ள முடியும்.
- உத்தரப் பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் முதல்வரானது முதல் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் தயவுதாட்சண்யமில்லாமல் என்கவுன்ட்டரில் காவல்துறையால் கொல்லப்படுவது வழக்கமாகியிருக்கிறது.
- முலாயம் சிங் ஆட்சியில் அதிக அளவில் தாதாக்கள் உருவானபோதே அடுத்து வந்த மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி ஆட்சியில் இதேபோல என்கவுன்ட்டர் மூலம் சமூக விரோதிகள் கொல்லப்பட்டனர்.
- கடந்த ஆறு ஆண்டுகளில் முதல்வர் ஆதித்யநாத் ஆட்சியில் 185 சமூக விரோதிகள் போலீஸ் என்கவுன்ட்டர்களில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.

- இவை யாவும் சட்டத்துக்கு உள்பட்ட செயல்கள் அல்ல என்ற போதும், மாநிலத்தில் அமைதி மீண்டதால், அரசையும் காவல்துறையையும் மக்கள் பாராட்டும் போக்கு அதிகரித்தது.
- சட்டம் – ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கிடந்த மாநிலமான உத்தரப்பிரதேசம் தற்போதுதான் மீண்டு வருவதாக அவர்கள் கூறுகின்றனர். உத்தரப்பிரதேச மாநில மக்களில் பெரும்பாலோர் இந்தக் கொலைகளை ஆதரிப்பது கவலைக்குரியது.
- இந்தப் பின்னணியில்தான் கடந்த 40 ஆண்டு காலமாக அரசியல் களத்திலும் நிழலுகத்திலும் கோலோச்சி வந்த அதிக் அகமதின் கொலை நிகழ்ந்திருக்கிறது.
- பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் தனக்கு வழங்கப்பட்டதாக போலீஸ் விசாரணையின் போது அவர் தெரிவித்திருக்கிறார்.
- எனவே அவரது கொலையைப் பல கோணங்களில் ஆராய வேண்டியிருக்கிறது.
- ஒருவர் குற்றவாளி என்றபோதும் அவருக்கான சட்ட உரிமைகளை அரசோ, பிறரோ பறிக்கக்கூடாது. அதற்காகவே நீதிமன்றங்கள் உள்ளன.
- எந்தவித விசாரணையும் இல்லாமல் குற்றவாளிகளை தண்டிக்கும் உரிமையை காவல்துறையினரிடம் ஒப்படைப்பது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல.
- அதே நேரத்தில், உத்தரபிரதேசம் மீண்டும் தாதாக்களின் கைகளில் சிக்கிவிடவும் கூடாது.

## போர் முனைகளில் பெண் அதிகாரிகள்

- இந்திய ராணுவத்தில் 108 பெண்களுக்கு கர்னல் பதவி வழங்கப்பட்டு உள்ளது.
- 1992-ம் ஆண்டில் இந்திய ராணுவத்தில் முதல்முதலாக பெண்கள் பணியமர்த்தப்பட்டனர்.
- ஆனால் குறுகிய கால பணி (எஸ்எஸ்சி) என்ற அடிப்படையில் 14 ஆண்டுகள் மட்டுமே பணியாற்ற அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.
- இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.
- இதனை விசாரித்த உச்சநீதிமன்றம், “ராணுவத்தில் பெண்களை நிரந்தர பணியில் நியமிக்க வேண்டும். ஆண், பெண் பாகுபாடு காட்டக்கூடாது” என்று தீர்ப்பளித்தது.
- ஆண், பெண் பாகுபாடு இன்றி தகுதியின் அடிப்படையில் கர்னல் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.
- பிரிகேடியர் உள்ளிட்ட பதவிகளிலும் இதே அணுகுமுறை பின்பற்றப்படும்.

## கேரளத்தில் மலைவாழ் பழங்குடியின இளைஞர் மதுவின் கும்பல் கொலை

### தீர்ப்பு

- கேரள மாநிலம் அட்டப்பாடியில் உள்ள சின்டெக்கி என்கிற மலைவாழ் மக்கள் வாழும் கிராமத்தைச் சேர்ந்தவர் மது என்கிற அப்பாவி ஆதிவாசி இளைஞர்
- 2018 பிப்ரவரி 22-ஆம் தேதி பலர் அடங்கிய கும்பலால் அவர் அடித்துக் கொல்லப்பட்டார்.
- அந்த வழக்கின் தீர்ப்பு, எத்தனையோ தடைகளையும், இடையூறுகளையும் தாண்டி சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.
- மண்ணார்காடு பட்டியலினத்தவர்களுக்கான சிறப்பு நீதிமன்றம், ஐந்தாண்டு விசாரணைக்குப் பிறகு, 16 குற்றவாளிகளில் 14 பேருக்குத் தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

### கும்பல் தாக்குதல்

- இப்படியெல்லாம்கூட மனிதாபிமானமில்லாமல் மக்கள் நடந்து கொள்வார்களா என்று ஆச்சரியப்பட வைக்கிறது. அட்டப்பாடி ‘கும்பல் கொலை’ நிகழ்வு.
- எந்தவித முறையான விசாரணையும் இல்லாமல் ஒருவரைத் தாக்க முற்படும்போது, அவர்கள் தங்களது மனசாட்சிக்கும், பகுத்தறிவுக்கும் விடை கொடுத்து விடுகிறார்கள் என்பதைத்தான், ‘கும்பல் தாக்குதல்கள்’ உணர்த்துகின்றன.

### மது

- அட்டப்பாடி மலைப்பகுதியில் வாழும் மலைவாழ் பழங்குடியினரான மது என்ற அந்த ஏழை இளைஞர், மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் அலைந்து திரிந்து கொண்டிருப்பார்.
- வீட்டிற்கு வராமல் மரத்தடியிலும், மலையில் உள்ள குகைகளிலும், தெருவோரங்களிலும் படுத்திருப்பது வழக்கம்.
- ஒருநாள் அட்டப்பாடியில் ஒரு கடையிலிருந்து பசியின் கொடுமையால், உணவு பதார்த்தங்களைக் கவர்ந்து சென்றுவிட்டதாக அவர்மீது புகார் எழுந்தது.

### கும்பல் தாக்குதல்

- அவரைச் சிலர் துரத்தியபோது, அவர்களுடன் மேலும் பலர் சேர்ந்து கொண்டனர்.
- தன்னைப் பிடிப்பதற்கு ஒரு கும்பல் துரத்திக் கொண்டு வருவதைப் பார்த்து பயந்த மது, மலையிலுள்ள ஒரு குகையில் சென்று பதுங்கிவிட்டார்.
- அவரை அந்தக் கும்பல் அங்கிருந்து நாயை அடிப்பது போல் நையப் புடைத்து, ஊருக்குள் இழுத்து வந்தது. அவரது வேஷ்டியை அவிழித்துக் கைகளைப் பின்புறமாகக் கட்டி, ஆளுக்கு ஆள் தரும அடி கொடுத்தனர்.
- சிலர் கையில் அகப்பட்ட கம்புகளாலும் கம்பிகளாலும் அவரைத் தாக்கினார்கள். அந்த அப்பாவி இளைஞர் வலி பொறுக்க முடியாமல் கதறி அழுவதைத் தங்களது கைப்பேசிகளில் படமெடுத்து ரசித்தனர்.
- சிலர் அதை சமூக ஊடகங்களில் பதிவு செய்து 'லைக்' பெறும் ஆர்வத்தில் இறங்கினர் வேறு சிலர்.
- கடைசியில் ஒரு முச்சந்தியில் குற்றுயிரும் குலையுயிருமாக மதுவை அவர்கள் காவல்துறையினரிடம் ஒப்படைத்தபோது, மது அநேகமாக இறந்திருந்தார் மருத்துவமனையில் உயிரற்ற நிலையில்தான் அவர் சேர்க்கப்பட்டார்.

### விசாரணை

- பிப்ரவரியில் நடந்த மதுவின் கொலைக்கு, மே மாதம்தான் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வீடியோ பதிவு ஆதாரத்தின் அடிப்படையில் 16 பேர் கைது செய்யப்பட்டனர். அந்த வழக்கின் விசாரணை நான்கு ஆண்டுகள் கழித்துத்தான் தொடங்கியது.
- உயர்நீதிமன்றம், தானே முன்வந்து தனது மேற்பார்வையில் மதுவின் கும்பல் கொலை வழக்கை நடத்த முற்பட்ட பிறகுதான் விசாரணை வேகம் எடுத்தது.
- விசாரணை தொடங்கியபோது, ஒருவர்பின் ஒருவராகப் பிறழ் சாட்சிகளானார்கள். அவர்களில் பலர் மதுவின் நெருங்கிய உறவினர்கள்.
- 2022 ஜூன் மாதம் அரசு புதிய வழக்குரைஞரை நியமித்த பிறகு விசாரணை தொடங்கியது. 127 சாட்சிகளில் 24 பேர் பிறழ் சாட்சிகளானார்கள்.
- மது செய்தது தவறாகவே இருந்தாலும், அதைத் தட்டிக் கேட்கவோ, அவருக்கு தண்டனை வழங்கவோ தனியொருவருக்கோ, கும்பலுக்கோ அதிகாரம் இல்லை. அதற்கு காவல்துறையும் நீதிமன்றமும் இருக்கின்றன.
- 'கும்பல் நீதி' என்பது நாகரிக சமுதாயத்துக்கும், சட்டம் – ஒழுங்கை நிலைநாட்டும் ஜனநாயக அமைப்புக்கும் எந்தக் காரணம் கொண்டும் ஏற்புடையதல்ல.
- மலைவாழ் பழங்குடியினர் மீதும், அடித்தட்டு மக்கள் மீதும் மனிதாபிமானமில்லாமல் நடத்தப்படும் தாக்குதல்கள்தான் நாகரிக சமுதாயமா?

## சத்தீஸ்கர் : நக்ஸல் வெடிகுண்டு தாக்குதல்

- சத்தீஸ்கர் மாநிலம் தண்டோவாடா மாவட்டத்தில் நக்ஸலைட்டுகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் போலீஸார் 10 பேரும், அவர்களின் வாகன ஓட்டுநரும் உயிரிழந்தனர்.
- தலைநகர் ராய்பூரிலிருந்து 450 கி.மீ தொலைவில் இந்தப் பகுதி அமைந்துள்ளது. போலீஸ் வாகனத்தின் மீது வெடிகுண்டு வீசி நக்ஸல்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

### இதுவரை நடந்த தாக்குதல்கள்

- 2021 ஏப்ரல் : சுக்மா மாவட்டம் பிஜாபூர் எல்லையில் டெர்ராம் வனப் பகுதியில் நக்ஸல்களுடனான துப்பாக்கிச் சண்டையில் 22 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர்.
- 2018 : சுக்மா மாவட்டத்தில் மார்ச் மாதத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் மத்திய ஆயுத காவல்படை (சிஆர்பிஎஃப்) வீரர்கள் 9 பேர் உயிரிழந்தனர்.
- 2017 : சுக்மா பகுதியில் மாவோயிஸ்டுகள் ஏப்ரல் 24-ம் தேதி நடத்திய தாக்குதலில் 24 சிஆர்பிஎஃப் வீரர்கள் உயிரிழந்தனர்.
- 2014 : சுக்மா மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் மார்ச் 11-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 15 பேர் உயிரிழந்தனர்.
- 2013 : தர்பா கிராமத்தில் மாவோயிஸ்டுகள் மே 25-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் மாநில முன்னாள் அமைச்சர் மகேந்திர கர்மா உள்பட காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் 25 பேர் உயிரிழந்தனர்.
- 2010 : நாராயணபூர் மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் ஜுன் 29-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 26 சி ஆர்பிஎஃப் வீரர்கள் உயிரிழந்தனர்.
- 2009 : பிஜப்பூர் மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் செப்டம்பர் 4-ஆம் தேதி நடத்திய தாக்குதலில் கிராமவாசிகள் 4 பேர் உயிரிழந்தனர்.

## வெறுப்புணர்வை தூண்டுவோர் மீது உடனடி வழக்குப்பதிவு - சுப்ரீம் கோர்ட் உத்தரவு

### வெறுப்புணர்வு பேச்சு

- டில்லி, உத்திரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களில் வெறுப்புணர்வை தூண்டும் விதமான பேச்சுக்கள் அதிகரித்து வருகின்றன.

### வெறுப்புணர்வு பேச்சு தொடர்பான வழக்கு

- வெறுப்புணர்வு பேச்சு தொடர்பாக புகார் அளிக்கப்படவில்லை என்றாலும், அதற்காக காத்திருக்காமல் மாநில அரசுகள் தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய, சம்பந்தப்பட்ட மூன்று மாநிலங்களுக்கு உத்தரவிட்டது.
- இந்நிலையில், இந்த உத்தரவை அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்படி நீட்டிக்கக் கோரி பத்திரிக்கையாளர் ஷாஹீன் அப்துல்லா, உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்தார்.
- மதங்களுக்கு எதிரான வெறுப்புணர்வு பேச்சுக்கள் நாட்டின் மதசார்பற்ற கட்டமைப்பையே சீர்குலைக்கும் தன்மை உடையது.
- இது மிக தீவிர குற்றமாக கருதப்பட வேண்டும். மதநடுநிலை தன்மையை பேணும் நாட்டுக்கு இது மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும்.

### விசாரணை

- வழக்குப் பதிவு செய்ய தாமதிப்பது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும். கடமையை செய்ய தவறும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- வெறுப்புணர்வை தூண்டும் விதமாக பேசுவது யாராக இருந்தாலும், அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பாரபட்சமின்றி வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும்.
- அப்போதுதான் பாரதத்தின் மதசார்பற்ற தன்மை பாதுகாக்கப்படும்.

## மே தினம்

### எட்டு மணி நேர வேலை வரலாறு

- உலக நாடுகள் பலவற்றில் 19ஆம் நூற்றாண்டில், தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை வேலைபார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.
- ஒரு நாளுக்கான வேலை நேரத்தின் அளவு சட்டப்பூர்வமாக வரையறுக்கப்படாவிட்டால், தொழிலாளர் வர்த்தகத்துக்கு முன்னேற்றம் சாத்தியம் இல்லை என்று கார்ல் மார்க்ஸ் கூறியிருந்தார்.

- அமெரிக்காவில் இயங்கிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, 1886 மே 1 அன்று ஒரு நாளுக்கு எட்டு மணி நேரம் வேலை என்பதை உறுதிப்படுத்தும் நாள் என்று அறிவித்து, நாடு முழுவதும் அன்றைய நாளில் பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.
- மே 3 அன்று காவல் துறையினர் துப்பாக்கிச் சூட்டில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- இதை எதிர்த்து மே 4 அன்று சிகாகோவில் உள்ள ஹேமார்க்கெட் சதுக்கத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

## மே 1 வரலாறு

- சோஷலிச அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகளும் இடம்பெற்ற இரண்டாம் அகிலத்தின் முதல் மாநாடு, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 1889 ஜூலையில் நடைபெற்றது.
- அந்த மாநாட்டில் 'ஹேமார்க்கெட் படுகொலை'யைக் கண்டித்ததுடன், அதற்கு வித்திட்ட போராட்டத்தை நினைவுகூறும் விதமாக 1890 மே 1 அன்று எட்டு மணி நேர வேலை என்கிற கோரிக்கைக்காக உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.
- 1891இல் நடந்த இரண்டாம் அகிலத்தின், இரண்டாவது மாநாட்டில், மே முதல் நாளை ஆண்டுதோறும் தொழிலாளர்களுக்கான நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்டது.
- இது 'மே நாள்' என்றும் அழைக்கப்படுகிறது.

## இந்தியாவின் மே தின வரலாறு

- இந்தியாவில் முதன்முதலில் ஏற்று அதுவும் சென்னையில் 01.05.1923 இல் கொண்டாடியவர் சிங்காரவேலர்.
- இந்நாளை இரு கூட்டங்களாக உயர்நீதிமன்றத்தின் எதிரே உள்ள கடற்கரையிலும் திருவல்லிக்கேணிக் கடற்கரையிலும் கொண்டாடினர்.
- ஒரு கூட்டத்துக்குச் சிங்காரவேலரும், மற்றொரு கூட்டத்துக்கு எம்.பி.எஸ்.வேலாயுதமும் தலைமை ஏற்றனர்.
- சுப்பிரமணிய சிவாவும் கிருஷ்ணசாமி சர்மாவும் வேறு சிலரும் உரையாற்றியுள்ளனர்.
- இவ்விழாவில் சிங்காரவேலர், தம்மை ஆசிரியராகக் கொண்டு 'தொழிலாளி' என்ற இதழையும் 'லேபர் அண்டு கிசான் கெஸட்' என்ற ஆங்கில இதழையும் வெளியிட்டுள்ளார்.
- மே நாளை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டுமென்றும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேர வேலையை மட்டுமே தரவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## மே நாள் குறித்து தலைவர்

- சென்னையில் நடந்த மே நாள் நிகழ்வுகள் குறித்து அப்போது பெர்லினிலிருந்த எம்.என்.ராய், தாம் நடத்திய 'The Vanguard of Indian Independence' இதழில் குறிப்பிட்டிருந்தார் : 'இந்தியாவில் முதன்முதலாகப் பாட்டாளி வர்க்கத்தின் நன்னாளான மே நாள் சென்னையில் கொண்டாடப்பட்டது. பழுத்த இந்திய சோஷலிஸ்ட்டான எம்.சிங்காரவேலரின் அழைப்பிற்கிணங்க இரு பொதுக்கூட்டங்கள் நடந்தன. அவற்றில் உலகிலும் இந்தியாவிலும் நடந்திருந்த வர்க்கப் போராட்டத்தை விளக்கினார். இந்தியத் தொழிலாளர்களின் குறிக்கோள் தொழிலாளரின் குடியரசாக இருக்க வேண்டுமென்று விளக்கினார்.' [The Vanguard of Indian Independence, Vol II, page 9, 15.06.1923].

## மும்பையில் மே தினம்

- சென்னையில் கொண்டாடப்பட்ட பின்னரே, எஸ்.வி.காட்டே, எஸ்.ஏ. டாங்கே, நிராம்கர் முயற்சியால் மும்பையில் 01.05.1926 இல் மே நாள் கொண்டாடப்பட்டது.
- அடுத்து அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் [AITUC] ஜார்ஜியாவில் 01.05.1927இல் கொண்டாடியது.

## சிங்காரவேலரின் பணிகள்

- விஞ்ஞானக் கருத்துகளைப் பரப்புவதற்காகவே, சிங்காரவேலர் தமது 75ஆம் வயதில், 'புது உலகம்' என்ற மாத இதழை 01.05.1935இல் தொடங்கினார்.
- எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மே நாளில் கொண்டாடுவதை தம் இறுதிக் காலம்வரை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

- கயையில் 1922 இல் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் சிங்காரவேலர், அனைத்துத் தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து காங்கிரஸ் வாயிலாக விடுதலைக்குப் போராட அவர்கள் உதவ வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தார்.
- சிங்காரவேலரின் மாநாட்டுப் பேருரையால் காங்கிரஸ் இயக்கம் சிங்காரவேலர் உள்ளிட்ட எழுவரைக் கொண்ட தொழிலாளர் நலக்குழு அமைத்தது என்பது வரலாறு.
- இதன் பின்னரே தொழிலாளரைத் திரட்டும் முயற்சி நாட்டில் பரவலாகின.
- தொழிற்சாலைககளில் முதலாளிகளின் பழிவாங்கும் செயல்களை நீக்கவும், தவிர்க்க முடியாத சமயத்தில் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைப் பெறவும் தொழிற்சங்கச் சட்டத்தை உருவாக்க மே நாள் கொண்டாட்டம் உதவியது.
- தமிழகத்தில் பி அண்டு சி மில் போராட்டம், பர்மா செல் போராட்டம், தென்னிந்திய ரயில்வே போராட்டம் ஆகியவற்றை நடத்திய அவர், கல்கத்தாவின் கரக்பூர் போராட்டத்திலும் பங்கேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- பஜனைப் பாடல்களிலும், சமயச் சொற்பொழிவுகளிலும் மூழ்கியிருந்த தொழிலாளர்களுக்குப் போராட்ட உணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்கு மார்க்சியத்தின் வழி வர்த்தக உணர்வை ஏற்படுத்தவும், சாதி ஏற்றத்தாழ்வைப் போக்கவும் வழிகண்டவர்தான் அவர்.

## 12 மணி நேர வேலை

### சட்டம் என்ன? திருத்தம் என்ன?

- தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியிடச் சூழ்நிலைகளையும் (Working conditions), வேலை நேரத்தையும், ஊதியத்துடன் வழங்க வேண்டிய விடுமுறைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக, 'தொழிற்சாலைகள் சட்டம் 1948' இயற்றப்பட்டது.
- குறிப்பாக பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் மற்றும் பணி இடர்களிலிருந்து (Industrial and occupational hazards) பாதுகாப்பது இச்சட்டத்தின் முக்கிய இலக்காகும்.
- இச்சட்டத்தில் தொழிலாளர்களின் வேலை நேரம் (Working hours of adults) என்ற பிரிவில், விதிவிலக்குகள் அளித்தல் (Power to make exempting rules) என்பதை விதியாக ஏற்று, 65ஏ சட்டத் திருத்தத்தை முன்வைத்துள்ளது தமிழ்நாடு அரசு.
- தொழிலாளர்களின் வேலை நேரம், மிகை நேர வேலை, அதற்கான ஊதியம், மிகைநேர வேலையை ஈடுகட்டுவதற்கான விடுமுறை, பணியின்போது விட வேண்டிய ஓய்வுநேரம் ஆகிய வகை இனங்களில் இதுவரை தொழிலாளர்கள் பெற்ற உரிமைகளை முழுமையாக இழப்பதற்கு இச்சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது.

### சட்டத்திருத்தம் யாருக்கானது?

- அந்நிய மூலதனம் தமிழ்நாட்டுக்கு வருவதற்கு ஏதுவாகத் தொழிலாளர் சட்டங்களில் இதுவரை இருந்துவந்த உறுதித் தன்மையை நெகிழ்வுக்கு உள்ளாகியிருக்கிறது.
- சந்தையின் தேவைக்கும் சூழலுக்கும் உகந்த வகையில், எப்போதெல்லாம் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை முதலாளிகளுக்கு ஏற்படுகிறதோ அப்போது எந்தக் கேள்வியும் கேட்காமல் தமது உழைப்பு சக்தியைக் கொடுத்தே தீர வேண்டும் என நிர்ப்பந்திக்கிறது இந்தச் சட்டத்திருத்தம்.

### விதியாகும் விதிவிலக்குகள்

- தொழிற்சாலை திருத்தச் சட்டம் 65ஏ மூலமாக 51, 52, 54, 55, 56, 59 ஷரத்துக்கள் வழி தொழிலாளர்கள் பெற்று வந்த உரிமை, இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் முழுமையாகப் பறிக்கப்பட்டுவிட்டது.
- ஒரு நாளின் மொத்த வேலை 9 மணி நேரம், ஓய்வு நேரத்தைச் சேர்த்து ஒரு நாளின் மொத்த வேலை நேரம் 10:30 மணி நேரம், கூடுதல் நேர வேலை (Overtime work) ஒரு வாரத்தில் 48 மணி நேரம் எனச் சட்டரீதியாகப் பெறப்பட்ட உரிமைகள் பறிக்கப்படுகின்றன.
- எவ்வித வரம்புகளும் இன்றி முதலாளிகள் தங்கள் விருப்பத்துக்கு இணங்க நேர வரையறை வைத்துக் கொள்ளலாம்.

# 03 இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியாவை பாதிக்கக்கூடிய வகையில் உலகம் முழுவதும் தோன்றுகின்ற அரசியல் போக்கு

## சிபிஐ வைர விழா

- 1963, ஏப்ரல் 1-ஆம் தேதி மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் தீர்மானத்தின்படி, மத்தியபுலனாய்வு தீர்மானத்தின்படி, மத்திய புலனாய்வு பணியகம் (சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்) என பெயரிடப்பட்டு நிறுவப்பட்டது.

### 80 ஆண்டுகளாக வளர்ந்த சிபி

- பிரிட்டிஷ் இந்தியாவில் 2-ஆம் உலகப் போர் காலகட்டத்தில் போர் செலவினங்களில் நடைபெறும் ஊழல்களைத் தடுக்க 1941-ஆம் ஆண்டு தில்லி சிறப்பு காவல் ஸ்தாபனம் (எஸ்பிஇ) எனத் தொடங்கப்பட்டது.
- பின்னர், இது 1943-ஆம் ஆண்டு அவசரச் சட்டம் மூலம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மத்திய அரசின் துறைகளில் உள்ள மத்திய அரசின் துறைகளில் நிகழும் ஊழல் தொடர்பான விசாரணைக்கு விரிவுபடுத்தப்பட்டது.
- இந்த அவசரச் சட்டத்திற்கு 1946-ஆம் ஆண்டு தில்லி சிறப்பு காவல் ஸ்தாபனம் சட்டம் முழுவடிவம் கொடுக்கப்பட்டது.
- இப்படி 80 ஆண்டுகளை பூர்த்தி செய்தும், இந்த அமைப்பு லஞ்ச ஊழல் தடுப்பு, குற்றப்பிரிவு, பொருளாதாரக் குற்றத் தடுப்பு என பல்வேறு பிரிவுகளுடன் முழுமையாக 1963-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் மத்திய புலனாய்வு பணியகம் (சிபிஐ) என்கிற பெயரில் செயல்படத் தொடங்கி 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, தற்போது மத்திய பணியாளர், ஓய்வூதியம் மற்றும் பொதுக் குறைகள் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## தமிழகத்தில் தென்மாநில மண்டல கவுன்சில் கூட்டம்

- 1957-ஆம் ஆண்டில் இருந்து தென்மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெற்று வருகிறது.
- ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்தக் கூட்டமானது சில ஆண்டுகள் நடத்தப்படாமல் விடுபட்டிருக்கிறது.
- தமிழகத்தில் 5 முறை நடத்தப்பட்டுள்ளது.
- இந்த கவுன்சிலின் பிரதிநிதிகளாக, கேரளம், ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு, தெலங்கானா, புதுச்சேரி, அந்தமான் நிகோபார் தீவுகள், லட்சத்தீவு ஆகியன இடம்பெற்றுள்ளன.
- கவுன்சிலின் தலைவராக உள்துறை அமைச்சர் அமித் ஷாவும், துணைத் தலைவராக கேரள முதல்வர் பினராயி விஜயனும் உள்ளனர்.

### தலைமைச் செயலர் நிலைக்கூட்டம்

- தென் மண்டல கவுன்சில் கூட்டத்துக்கு முன்பாக, சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச் செயலர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.
- கவுன்சில் கூட்டத்தில் எத்தகைய விஷயங்களை முன்வைப்பது, கடந்த ஆண்டு விவாதிக்கப்பட்ட விஷயங்களில் நிறைவேற்றப்படாத அம்சங்கள் எவை எவை என்பன குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்படும்.
- தலைமைச் செயலர் நிலையிலான கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டபிறகு, தென் மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெறும்.

### ஆறாவது முறை

- ஆறாவது முறையாக தமிழகத்தில் தென்மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெறவுள்ளது.
- 1957-ஆம் ஆண்டில் மெட்ராஸிலும்
- 1958-இல் உதகை
- 1967-இல் உதகை
- 1978-இல் மெட்ராஸ்
- 1992-இல் சென்னை

# இரண்டாவது இடம் - நீதிமன்றங்களை அணுகும் வாய்ப்புகளில் தமிழகம்...

- மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கான குறியீட்டில் தமிழகம் 2-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்திய நீதித்துறை அறிக்கையின்படி, நீதிமன்றங்களை மக்கள் அணுகுவதற்கான வாய்ப்பை சிறப்பாக அளிக்கும் மாநிலங்களில், கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.
- இந்திய நீதி அறிக்கையை (ஐஜேஆர்) டாடா அறக்கட்டளை 2019-ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. 2022-ஆம் ஆண்டுக்கான அறிக்கை வெளியிடப்பட்டது.
- முதல் ஐந்து மாநிலங்களில் தமிழகம் உட்பட, நான்கு தென் மாநிலங்கள் உள்ளன.

## நீதி கிடைக்கச் செய்வதற்கான குறியீடு

### பெரிய மாநிலங்கள் (1 கோடிக்கு அதிக மக்கள் தொகை)

| | | | |
|---|---|---|---|
| 1. | கர்நாடகா | 2. | தமிழகம் |
| 3. | தெலுங்கானா | 4. | குஜராத் |
| 5. | ஆந்திரா | 6. | கேரளா |

### சிறிய மாநிலங்கள் (1 கோடிக்குக் குறைவான மக்கள் தொகை)

| | | | |
|---|---|---|---|
| 1. | சிக்கிம் | 2. | அருணாச்சல பிரதேசம் |
| 3. | திரிபுரா | 4. | மேகாலயா |
| 5. | மிசோரம் | 6. | ஹிமாச்சல் |
| 7. | கோவா | | |

## பெண் காவலர்களின் எண்ணிக்கை 33%யை எட்ட தேவையான ஆண்டுகள்

| பெரிய மாநிலங்கள் | சிறிய மாநிலங்கள் |
|---|---|
| ஆந்திரா 3 | அருணாச்சல பிரதேசம் 29 |
| பிகார் 5 | கோவா 39 |
| குஜராத் 9 | ஹிமாச்சல் 53 |
| தமிழகம் 11 | சிக்கிம் 56 |

## குறியீட்டுக்கான காரணிகள்

| | |
|---|---|
| - காவல்துறை | - சிறை |
| - நீதித்துறை | - சட்ட உதவி |

## எதன் அடிப்படையில்

- ‘டாடா’ அறக்கட்டளை சார்பில், 2019-ல் இருந்து, இந்திய நீதி அறிக்கை வெளியிடும் முயற்சி துவங்கியது. இதன்படி இதன் மூன்றாவது அறிக்கை வெளியிடப்பட்டது.
- 2022-ம் ஆண்டுக்கான இந்த அறிக்கையில், நீதிமன்றங்களை மக்கள் அணுகுவதற்கான வாய்ப்புகள், அங்குள்ள கட்டமைப்பு வசதிகள், காலி பணியிடங்கள், சட்ட உதவி வாய்ப்புகள், காவல்துறை, சிறைகள், மனித உரிமை கமிஷன்கள் செயல்பாடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், சிறந்த மாநிலங்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

## பட்ஜெட் குறைவு

- ஒரு கோடி பேருக்கு மேல் மக்கள்தொகை உள்ள, 18 நடுத்தர மற்றும் பெரிய மாநிலங்கள் பட்டியலில் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.
- அதே நேரத்தில், ஒரு கோடி பேருக்கு குறைவான மக்கள்தொகை உள்ள, ஏழு சிறிய மாநிலங்கள் பட்டியலில், சிக்கிம் முதலிடத்தில் உள்ளது.

### சட்டகமிஷன் 1987

- சட்ட கமிஷனின், 1987-ம் ஆண்டு பரிந்துரையின்படி, 2000ம் ஆண்டில், 10 லட்சம் மக்கள் தொகைக்கு 50 நீதிபதிகள் இருக்க வேண்டும்.
- ஆனால் தற்போது 10 இலட்சம் மக்கள் தொகைக்கு, 19 நீதிபதிகளே உள்ளனர்.
- நீதி நடைமுறை சிறப்பாக இல்லாததற்கு, அதற்காக ஒதுக்கப்படும் பட்ஜெட் மிகவும் குறைவாக இருப்பதே முக்கிய காரணமாகும்.
- புதுடில்லி மற்றும் சண்டிகரை தவிர வேறு எந்த பிரதேசமும், தன் ஆண்டு பட்ஜெட்டில், 1 சதவீதத்துக்கு மேல், நீதித்துறைக்கு ஒதுக்குவதில்லை.

### காலி இடங்கள்

- காலிப் பணியிடங்கள் அதிகம் இருப்பது மற்றொரு முக்கிய பிரச்சனையாகும். காவல் துறை, சிறைத்துறை, சட்ட உதவி மையங்களில் காலியிடங்கள் அதிகமாக உள்ளன.
- 140 கோடி மக்கள் தொகைக்கு, 22 ஆயிரத்து 76 நீதிபதிகளே உள்ளனர்.
- அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில், 22 சதவீதம் காலியாக உள்ளன.
- உயர் நீதிமன்றங்களில், 30 சதவீதம் அளவுக்கு நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன.
- காவல் துறையிலும் காலியிடங்கள் அதிகளவில் உள்ளன.
- சர்வதேச தரத்தின்படி, ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 222 போலீசார் இருக்க வேண்டும். நம் நாட்டில் 152.8 போலீசார்தான் உள்ளனர்.
- காவல் துறையில், கடந்த 10 ஆண்டுகளில் பெண்கள் சேர்க்கப்படுவது இரட்டிப்பாகியுள்ளது. அதே நேரத்தில் ஒட்டுமொத்தமாக, 11.75 சதவீத பெண்களே உள்ளனர்.
- அதிகாரிகள் நிலையில் 8 சதவீதம் பேர் பெண்கள். உயர்நீதிமன்றங்களில் 13 சதவீதம், கீழ் நீதிமன்றங்களில் 35 சதவீதம் அளவே பெண்கள் உள்ளனர்.
- சிறைகளில், 130 சதவீதம் அளவுக்கு கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில், 77 சதவீதம் பேர் விசாரணை கைதிகளாக உள்ளனர்.
- 30 சதவீத சிறைகளில், 150 சதவீதத்துக்கும் அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.
- அதுபோல, 54 சதவீத சிறைகளில், 100 சதவீதம் அளவுக்கு கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

### நியமனங்கள்

- காவல்துறையில், எஸ்.சி., - எஸ்.டி. இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டின்படியான நியமனங்கள் கர்நாடகாவில் மட்டுமே நடந்துள்ளன.
- மற்ற மாநிலங்களில் இந்த இடஒதுக்கீட்டின்படி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

## நேட்டோவில் இணைந்தது ஃபின்லாந்து

- நேட்டோ அமைப்பின் 31-ஆவது உறுப்பு நாடாக ஃபின்லாந்து இணைந்தது.
- நேட்டோ அமைப்பில் ஃபின்லாந்தை முறைப்படி இணைத்துக் கொள்வதற்கான விழா பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸில் நடைபெற்றது.
- தற்போது ஃபின்லாந்தும், விரைவில் ஸ்வீடனும் நேட்டோ அமைப்பின் முழுமையான உறுப்பு நாடுகளாகின்றன.
- உலகின் 2-ஆவது பெரிய வல்லரசாக விளங்கிய சோவியத் யூனியன் மற்ற ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பதைத் தடுப்பதற்காக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இணைந்து 'வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு' (நேட்டோ) என்ற பெயரில் கடந்த 1949-ஆம் ஆண்டு ராணுவக் கூட்டமைப்பை உருவாக்கின.
- அந்த அமைப்பு மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, நேட்டோ உறுப்பு நாடுகளில் எந்தவொரு நாடு தாக்கப்பட்டாலும் மற்ற உறுப்பு நாடுகள் அனைத்தும் இணைந்து எதிர்த் தாக்குதல் நடத்தும்.
- மேலும், ஓர் உறுப்பு நாட்டில் மற்ற நேட்டோ நாடுகள் ராணுவ நிலைகளை அமைக்க முடியும்.
- எந்த சோவியத் யூனியனுக்கு எதிராக நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டதோ, அதே சோவியத் யூனியனில் அங்கம் வகித்த சில நாடுகளையும் அந்த அமைப்பு இணைத்துக் கொண்டு கிழக்கு ஐரோப்பாவில் தன்னை விரிவுபடுத்தி வந்தது.

- உக்ரைன் நேட்டோவிலும் இணைய விருப்பம் தெரிவித்தது. அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷியா கடந்த ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதி படையெடுத்தது.
- இந்த நிலையில், ரஷியாவின் படையெடுப்பிலிருநது தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, ஸ்வீடனும் ஃபின்லாந்தும் நேட்டோவில் இணையவிருப்பதாக கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்தன.
- எனினும், தங்கள் நாட்டின் குர்து இன பிரிவினைவாதிகளுக்கு ஸ்வீடன் ஆதரவு அளித்து வருவதால் அந்த நாட்டை நேட்டோவில் இணைத்துக் கொள்ள அனுமதிக்கப்போவதில்லை என்று துருக்கி கூறி வருகிறது.
- இதன் காரணமாக ஃபின்லாந்து மட்டும் தற்போது நேட்டோவில் இணைந்துள்ளது.
- தற்போது ரஷியாவுக்கும் ஃபின்லாந்துக்கும் இடையே 1,340 கி.மீ. எல்லை உள்ளது.
- நேட்டோவில் ஃபின்லாந்து இணைந்துள்ளதைத் தொடர்ந்து அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கும் ரஷியாவுக்கும் இடையிலான பொது எல்லை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

## இந்தியா-பூடான் உறவு

- இந்த மாதம், பூடான் அரசர் ஜிக்மே கேசர் நாம்க்யெல் வாங்சக், புதுடெல்லிக்கு வருகைபுரிந்ததை ஒட்டி, இந்திய அண்டை நாட்டின் வளர்ச்சி திட்டத்திற்கு ஆதரவு அளிக்க குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஏற்பாடுகளை அறிவித்துள்ளது.
- இருந்தபொழுதிலும், பூடானின் எல்லை நிர்ணயித்துக்கான சீனாவுடனான பேச்சு இந்த சந்திப்பில் பேசப்படாத பகுதியாக உள்ளது.
- பூடான் அரசர், இந்தியாவிற்கு வருகை புரிவதற்கு முன், பூடான் நாட்டின் பிரதமர் லோடே ஷெரிங், ஒரு நேர்காணலில் பூடான், சீனாவுடன் எல்லை நிர்ணய கோட்டில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியா–பூடான் உறவில் எது முன்மாதிரியானது (ம) தனித்துவமானது?

- பூடான் நாடு அண்டை நாடு மட்டுமன்று, சீனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையே தாங்கு பகுதியாக உள்ளது. சுதந்திர கால கட்டத்தில் இருந்தே.
- இந்தியாவிற்கு மட்டுமானதல்ல, பூடான் 17 நூற்றாண்டிலிருந்து சீனாவிற்கு திபெத்தின் தனித்துவமான பகுதியாகும்.

### பூடான் அரசர் டெல்லிக்கு வருகையானது பூடான் பிரதமர் குறிப்பிட்ட சீனாவுடனான எல்லைவாதம் தொடர்பாக திருப்புமுனையாக அமைதல் தொடர்பானதா?

- பாரம்பரியமாக உயர்மட்ட அளவிலான ஒழுங்குமுறை சந்திப்பாக பூடான் அரசரின் வருகை அமைந்துள்ளது.
- தேசிய ஜனநாயக கட்சி ஆட்சி அதிகாரம் பெற்ற பிறகு பிரதமர் (நரேந்தி மோடி) முதன்முதலாக சென்ற நாடு பூடான் என்பது குறிப்பிடத்தக்கது.

### அப்படியிருந்தும் சீனாவுடனான முன்னேற்றம் இந்தியாவிற்கு கவலையாக இருக்குமா?

- 2007-ன் நட்புறவிற்கான ஒப்பந்தமானது இந்தியா மற்றும் பூடான் ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உயர்மட்ட நலன்களை ஆதரிக்க அல்லது வலுப்படுத்த ஆலோசனை நடத்துகின்றனர்.
- வெளியுறவுத்துறை செயலாளர் குறிப்பிட்டுள்ளபடி, பூடான்-சீனா பேச்சுவார்த்தையை இந்தியா வெளிப்படையாக குறிப்பிடவில்லை. இருப்பினும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு என வரும்பொழுது எந்தவொரு சமரசத்திற்கும் இடமளிக்காது இந்தியா.
- பூடானின் வடக்கு பகுதியைப் பொறுத்தவரை எந்தவொரு திருப்புமுனையாகவும் இந்தியா எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் பூடானின் மேற்குப் பகுதியை பொறுத்தவரை வெளியுறவுத்துறை செயலாளர் குறிப்பிட்டுள்ளது போன்று இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு தொடர்பானது. இதில் எந்தவித சமரசத்திற்கும் இடமில்லை.

### டோக்லாம் பகுதியில் இந்தியா மற்றும் சீனா 2017–ல் தங்களுடைய படையை நிறுத்தியபின் எல்லையை விவாதிப்பதில் பூடான் நாடு முனைப்புடன் முன்வந்து விவாதிப்பதில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

- டோக்லாம் பகுதியில் இந்தியா மற்றும் சீனா 2017-ல் தங்களுடைய படையை நிறுத்தியபின் எல்லையை விவாதிப்பதில் பூடான் நாடு முனைப்புடன் முன்வந்து விவாதிப்பதில் மாற்றம் ஏற்படவில்லை.

## இரு நாடுகளுக்கு இடையேயான நம்பிக்கையை வளர்த்தெடுப்பதில் உள்ள முன்னோக்கிய பாதை

- பூடானின் கல்வித்துறையானது இந்தியாவுன் தொப்புள்கொடி உறவைச் சார்ந்துள்ளது.
- 35 வயதிற்கு மேற்பட்ட பூடான் மக்கள் இந்தியாவுடனான பூடான் உறவின் முக்கியத்துவத்தில் மிகவும் தெளிவுடன் உள்ளனர்.
- சமூக ஊடகங்களின் தாக்கம்

## இந்தியா–பூடான் உறவு அப்படியே உள்ளதா?

- இரு நாடுகளுக்கு இடையேயான ஆன்மீக உறவானது நீடித்துக் கொண்டு வருகிறது. அதனுடன் புவியியல் பொருளாதாரமானது இரு நாடுகளின் உறவிற்கு வலு சேர்க்கும் விதமாக உள்ளது.
- பிரச்சனை நீடித்துக்கொண்டுதான் உள்ளது.
- பூடான் மக்களை கவர்வதற்கான சீனா அனைத்து விதமான கருவிகள், முறைகளை கடைப்பிடித்துக் கொண்டுதான் உள்ளது.
- இந்தியா–சீனா உறவானது பளிங்குக்கல் போன்றது. இந்த கூட்டமைப்பை கலைப்பது என்பது கடினமானது. முழு நம்பிக்கை மற்றும் ஆதரவுடன் இரு நாடுகளின் கூட்டமைப்பானது நீடித்திருக்கும்.

## சிலிகுரி கணவாய்

- அக்டோபர் 2021-இல், பூடானும் சீனாவும் எல்லை பிரச்சனைக்குத் தீர்வு காண மூன்றடுக்குத் திட்டம் ஒன்றை ஏற்றுக்கொண்டன.
- பூடானின் வடக்குப் பகுதி, மேற்குப் பகுதி, டோக்லாம் பகுதி ஆகியவைதான் இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பிரச்சனைகள்.
- 2017-இல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே டோக்லாமில் ஏற்பட்ட பதற்றம் குறிப்பிடத்தக்கது.
- அதனால் சீனாவுடனான பேச்சுவார்த்தையில் டோக்லாமை பூடான் விட்டுக்கொடுக்கும் எந்தவித சமரசம் ஏற்படுவதையும் இந்தியா விரும்பாது; ஏற்றுக்கொள்ளாது.
- ஜிப்மோச்சி சிகரம், ஜாம்ஃபெரி பள்ளத்தாக்குப் பகுதிகளில் சட்டவிரோதமாக சாலைகள் அமைப்பதும், ஊடுருவ முற்படுவதுமான சீனாவின் முயற்சிகளை டோக்லாம் பதற்றத்தின்போது இந்தியா தடுத்து நிறுத்தியது.
- ஜாம்ஃபெரி பகுதியில் நுழைவதன் மூலம் இந்தியாவின் சிலிகுரி கணவாய் பகுதியில் நேரடியாக நோட்டமிடவும், தேவைப்பட்டால் ஆக்கிரமிக்கவும் முடியும் என்பது சீனாவின் ரகசிய எண்ணம்.
- சிலிகுரி கணவாய் என்பது இந்தியாவையும் வடகிழக்கு மாநிலங்களையும் இணைக்கும் 20 கி.மீ மட்டுமே நீளமுள்ள 'கோழிக் கழுத்து' என்று அழைக்கப்படும் பகுதி.
- அதை கைப்பற்றுவதன் மூலம் வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவிலிருந்து முற்றிலுமாக துண்டித்து தன்னுடன் இணைத்துக் கொள்ள முடியும் என்பது சீனாவின் நீண்டநாள் கனவு.

## சீனாவின் திட்டம்

- பூடான், இந்தியா, சீனா ஆகிய முத்தரப்பினரும் அமர்ந்து டோக்லாம் முச்சந்தி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.
- கடந்த சில ஆண்டுகளாகவே பூடானுடன் ராஜாங்க உறவை ஏற்படுத்திக் கொள்வதில் முனைப்புக் காட்டுகிறது சீனா. ராணுவ ரீதியாகவும், ராஜாங்க ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் இந்தியாவுடன் நெருக்கமாக இருக்கும் பூடானை தன்வசம் ஈர்ப்பதற்கு பல வளர்ச்சித் திட்டங்களை சீனா அறிவித்திருக்கிறது.

## இந்தியா உதவி

- சீனாவைப் போல பூடானுக்கு பொருளாதார உதவிகளை இந்தியாவால் வாரி வழங்கிவிட முடியாது. ஆனால் பூடானின் ஐந்தாண்டு திட்டங்கள் பெரும்பாலும் இந்தியாவின் உதவியுடன்தான் நடைபெறுகின்றன.
- இப்போதைய 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு இந்தியா ரூ.4,500 கோடி வழங்கியிருக்கிறது.
- பூடானின் நீர்மின் நிலையத் திட்டங்களுக்கும், எரிசக்தி திட்டங்களுக்கும் இந்தியாவின் பங்களிப்பு ஏராளம்.
- அதேபோல, கல்வித் துறையிலும் பூடான் இந்தியாவை நம்பித்தான் இருக்கிறது. பூடானில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் இந்தியர்கள்.

# அடாவடியின் மறுஉருவம்தான் சீனாவா?

## ஸாங்க்னான்

- அருணாச்சலப் பிரதேசத்தின் 90,000 சதுர கி.மீ பரப்பளவைச் சொந்தம் கொண்டாடிவரும் சீனா, அதை 'ஸாங்க்னான்' என அழைக்கிறது.
- திபெத் தன்னாட்சி பிராந்தியத்தின் தெற்குப் பகுதியாக சீனாவின் வரைபடத்திலும் இப்பகுதி குறிக்கப்பட்டிருக்கிறது.
- 'தரப்படுத்தப்பட்ட பெயர்கள்' எனும் பெயரில் இப்படியாக பெயர் சூட்டுதலை ஏற்கெனவே இரண்டு முறை சீனா நிகழ்த்தியிருக்கிறது.
- 2017இல் அருணாச்சலப் பிரதேசத்துக்கு தலாய் லாமா சென்றதால் ஆத்திரமடைந்த சீனா, அங்கு உள்ள ஆறு இடங்களுக்குத் தன்னிச்சையாகப் பெயர் சூட்டியது.
- 2021-இல் அருணாச்சலப் பிரதேசத்தின் 15 இடங்களுக்கான பெயர்ப் பட்டியலை வெளியிட்டது.

## மெக்மகோன் எல்லைக்கோடு

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வரையறுக்கப்பட்ட மெக்மகோன் எல்லைக் கோட்டை ஏற்க சீனா மறுத்து விட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா எப்போதும் சீனாவுடன் இணக்கமான போக்கையே நாடி வந்திருக்கிறது.
- சீனாவோ, ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது, வெளியே நட்பு பாராட்டுவதாகக் காண்பித்துக் கொண்டு முதுகில் குத்துவது, அடுத்தவர் நிலத்துக்கு ஆசைப்பட்டு ஆக்கிரமிப்பது, திருட்டுத்தனமாக நிலத்தை அபகரிப்பது உள்ளிட்ட விவகாரங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.
- இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட்கள் இதுபோன்ற செயல்களைக் கண்டிக்காமல் அமைதி காப்பதும் அவ்வப்போது சீனாவுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருப்பதும் கேலிக்கூத்தான விஷயம்.

# கேரளாவின் மீடியா ஒன் செய்தி சேனல் மீதான தடை ரத்து

- கேரளாவின் மீடியா ஒன் செய்திச் சேனலுக்கு மத்திய அரசு விதித்த தடையை உச்சநீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.
- தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் பொதுமக்களின் உரிமைகளுக்கு தடை போடக்கூடாது என்று மத்திய அரசை நீதிபதிகள் கடுமையாக விமர்சித்தனர்.

## பத்திரிக்கை சுதந்திரம் அவசியம்

- அரசின் கொள்கைகள் மிகவும் செயல்பாடுகள் குறித்து மீடியா ஒன் சேனல் விமர்சித்ததை தேச விரோதம் என்று கருதிவிட முடியாது.
- துடிப்பான ஜனநாயகத்துக்கு பத்திரிகை சுதந்திரம் என்பது மிகவும் அவசியமான ஒன்று.
- தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி மக்களின் உரிமைகளை மறுக்க முடியாது.

## நியாயமான காரணம் இல்லை

- அரசு நடவடிக்கைகளை பத்திரிகைகள் ஆதரிக்க வேண்டும் என்ற ஆளும் அரசின் நிலைப்பாட்டை அனுமதிக்க முடியாது. அரசாங்கத்தை விமர்சித்து மட்டுமே ஒரு தொலைக்காட்சி சேனலின் உரிமத்தை ரத்து செய்வதற்கான காரணமாக இருக்க முடியாது.

## வெளிப்படை தன்மை தேவை

- நீதிமன்ற விசாரணையில் எதிர்தரப்பினருக்கு தகவல்களை வெளியிடுவதில் அரசு மூடிமறைத்து செயல்பட இதனை கருவியாக பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.
- அனைத்து விசாரணை அறிக்கைகளையும் ரகசியம் என்று கூறி புறந்தள்ள முடியாது. ஏனெனில், அவை குடிமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதிக்கின்றன.

# இந்தியாவை உளவு பார்க்க இலங்கையில் ரேடார்

- இலங்கையின் டோண்ட்ரா பே என்ற இடத்தில், 45 ஏக்கர் பரப்பளவில் 'ரேடார்' அமைத்து, கூடங்குளம், கல்பாக்கம் அணு மின்நிலையம் உட்பட இந்திய பெருங்கடல்பகுதியை உளவு பார்க்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

- சீனாவிடம் இருந்து, நம் அண்டை நாடான இலங்கை பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி பெற்றுள்ளது. இதன் காரணமாக, இலங்கை அரசை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள சீனா முயற்சிக்கிறது.
- இதன் வாயிலாக இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதே சீனாவின் திட்டமாக உள்ளது.

### கண்டனம்

- இலங்கையில் உள்ள அம்பன் தோட்டா துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துள்ள சீனா, அங்கு தங்கள் நாட்டின் 'யுவான் வாங் 5' என்ற உளவு கப்பலை ஆறு நாட்களுக்கு நிறுத்தி வைத்தது.
- இலங்கையின் தென்கோடியில் உள்ள மீன்பிடி துறைமுகமான டோண்ட்ரா பே என்ற இடத்தில், 45 ஏக்கர் பரப்பளவில் ரேடார் அமைக்க சீனா திட்டமிட்டு வருவதாகவும், அதற்கான இடத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு தரும்படி இலங்கை அரசிடம் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

### அச்சுறுத்தல்

- நெல்லை மாவட்டம் கூடங்குளம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் உள்ள அணு மின் நிலையங்களை சீனா உளவு பார்க்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- இந்திய பெருங்கடலில் பிரிட்டனுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள டைகோ கார்சியா தீவுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தையும் இந்த ரேடார் உளவு பார்க்கும் திறன் உடையது.

## விவிபி திட்டம்

### சீன எல்லை பிரச்சனை

- சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அருணாச்சல பிரதேசத்தில் 'Vibrant Villages Program' (விவிபி) திட்டத்தை மத்திய அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.
- 1951-ம் ஆண்டில் சீன ராணுவம் திபெத்தை ஆக்கிரமித்தது. அப்போதுமுதல் இந்தியா, சீனா இடையே எல்லைப் பிரச்சினை நீடிக்கிறது.
- சீன அரசு, அருணாச்சல பிரதேசத்தையும் சொந்தம் கொண்டாடி வருகிறது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் பகுதிகளுக்கு சீன அரசு புதிய பெயர்களை சூட்டியது.
- மத்திய அரசு அளித்த விளக்கத்தில், "அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த, பிரிக்க முடியாத பகுதி புதிய பெயர்களை சூட்டும் முயற்சியால் உண்மையை மாற்றிவிட முடியாது" என்று திட்டவட்டமாக தெரிவித்தது.
- இதன்படி அருணாச்சல பிரதேசத்தின் 455 எல்லையோர கிராமங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- தவிர இமாச்சல பிரதேசம், சிக்கிம், உத்தராகண்ட், லடாக் ஆகிய பகுதிகளிலும் விவிபி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- இதற்காக 2022 முதல் 2026-ம் ஆண்டு வரை ரூ.4,800 கோடி செலவிடப்பட உள்ளது.
- சீனாவோடு 14 நாடுகள் எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன.
- இந்த 14 நாடுகளுடனும் சீனாவுக்கு எல்லைப் பிரச்சினை நீடிக்கிறது.
- அதோடு தென்சீனக் கடல் பகுதியையும் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதன் காரணமாக சர்வதேச அரங்கில் சீனாவுக்கு எதிராக இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் ஓரணியில் திரண்டு வருகின்றன.
- அருணாச்சல பிரதேசத்தில் திபெத் புத்த மதத்தினரின் மிக முக்கிய ஆன்மிக தலமான தவாங் புத்த மடாலயம் அமைந்துள்ளது.
- எதிர்காலத்தில் தவாங் புத்த மடாலயத்தில் இருந்து சீனாவுக்கு எதிரான திபெத் புரட்சி வெடிக்கக்கூடும் என்று சீன அரசு அஞ்சுகிறது.
- அதோடு அருணாச்சல் பிரதேசத்தின் தவாங் பகுதி பூடான் எல்லையில் அமைந்திருக்கிறது. அருணாச்சல் பகுதிகளை சொந்தமாக்கினால் பூடானையும் எளிதாக ஆக்கிரமிக்கலாம் என சீனா கருதுகிறது.

## நாட்டின் காகித பயன்பாடில்லாத முதல் நீதிமன்றம்

- நாட்டின் முதல் காகித பயன்பாடில்லாத எண்ம (டிஜிட்டல்) நீதிமன்றமாக வாஷி நீதிமன்றம் திகழ்கிறது என்று மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

- நீதிமன்றங்களின் சுமையைக் குறைக்க இணையவழியில் சட்ட ஆவணங்களைத் தாக்கல் செய்யும் முறை, எண்ம நீதிமன்றம் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டன.
- நீதிமன்றங்களின் ஒட்டுமொத்த பணியும் காகிதப் பயன்பாடு இல்லாததாக மாறினால், தீர்ப்புகள் விரைந்து வழங்கப்படும்.

## சுகோய் போர் விமானத்தில் பறந்தார் குடியரசுத்தலைவர்

- முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் கடந்த 2009-ம் ஆண்டு புனே விமானப்படை தளத்தில் இருந்து சுகோய் விமானத்தில் முதல் முறையாக பறந்தார்.
- அந்த விமானம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3 கி.மீ உயரத்திலும், மணிக்கு சுமார் 800 கி.மீ வேகத்திலும் 25 நிமிடங்கள் பறந்தது.
- இதன் மூலம் போர் விமானத்தில் பறந்த 3வது இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் 2வது பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை திரௌபதி முர்மு பெற்றுள்ளார்.
- முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மற்றும் பிரதீபா பாட்டீல் ஆகியோருக்குப் பிறகு போர் விமானத்தில் பறக்கும் 3-ஆவது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு என்பது குறிப்பிடத்தக்கது.

## தைவானைச் சுற்றிலும் சீனா போர் ஒத்திகை

- தைவான் அதிபர் சாய் இங்-வென்னின் அமெரிக்கப் பயணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்தத் தீவைச் சுற்றிலும் போர் ஒத்திகையை சீனா தொடங்கியது.
- சீன விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் அந்த நாட்டுக்கும், தைவானுக்கும் இடையே தைவான் நீர்ச்சந்தியில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை 42 முறை கடந்து சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சீன உள்நாட்டுப் போருக்குப் பிறகு தைவான் தனி நாடாக செயல்பட்டு வருகிறது. எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஓர் அங்கமாக சீனா கருதி வருகிறது.
- தைவானை தாங்கள் எப்போது வேண்டுமானாலும் இணைத்துக் கொள்ளலாம்; அதற்குத் தேவைப்பட்டால் ராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் தயங்கப் போவதில்லை என்று சீன அதிபர் ஷி-ஜின்பிங் கூறி வருகிறார்.
- சீனாவின் எதிர்ப்பையும் மீறி தைவான் அதிபர் சாய் இங்வென் அமெரிக்காவில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பினார்.

## ஆம் ஆத்மிக்கு தேசிய கட்சி அங்கீகாரம்

- திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசிய கட்சி அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ஆம் ஆத்மி கட்சிக்கு தேசிய கட்சி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

### தேசிய கட்சி

- 4 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலில் 6 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் 3 மாநிலங்களில் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- 4 மாநிலங்களில் பிராந்திய கட்சி அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும்.
- இந்த 3 விதிகளில் குறைந்தபட்சம் ஒரு விதியை பூர்த்தி செய்யும் கட்சிக்கு தேசிய அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
- டெல்லி, பஞ்சாப், கோவா சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஆம் ஆத்மி கட்சி 6 சதவீதத்துக்கும் அதிக வாக்குகளை பெற்றிருந்தது.

### AAP

- குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் அக்கட்சி 13 சதவீத வாக்குகள் பெற்றது. இதைத் தொடர்ந்து ஆம் ஆத்மிக்கு தேசிய கட்சிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- தேர்தல் ஆணைய பட்டியலின்படி தற்போது பாஜக, காங்கிரஸ் மார்க்சிஸ்ட், பகுஜன் சமாஜ், தேசிய மக்கள் கட்சி, ஆம் ஆத்மி தேசிய கட்சிகளாக உள்ளன.

## நீதித்துறை : அதிகரிக்கட்டும் பெண்களின் பிரதிநிதித்துவம்

- இந்திய நீதிமன்றக் கட்டமைப்பின் உயர் அடுக்குகளில் பெண் நீதிபதிகளின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதை 'இந்திய நீதி அறிக்கை 2022' சுட்டிக்காட்டியிருக்கிறது.

### அறிக்கை

- சமூக நீதிக்கான மையம், காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு ஆகிய அமைப்புகளுடன் இணைந்து, நீதி வழங்கலில் இந்திய மாநிலங்களின் செயல்பாட்டை மதிப்பிடும் இந்திய நீதி அறிக்கையை (Indian Justice Report) டாடா அறக்கட்டளை 2019 முதல் ஒவ்வோர் ஆண்டும் வெளியிட்டு வருகிறது.
- 2022 நிலவரப்படி, இந்திய மாநிலங்களில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில், பெண் நீதிபதிகளின் பிரதிநிதித்துவம் 35%; அதே நேரம், உயர் நீதிமன்றங்களில் 13% மட்டுமே என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

### பெண் நீதிபதிகள்

- மாவட்ட நீதிமன்றங்களைப் பொறுத்தவரை நாட்டிலேயே அதிகமாக (70%) கோவாவில் பெண் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர்.
- மேகாலயா, நாகலாந்து இரண்டு மாநிலங்களிலும் 63% பெண் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர்.
- 13 பெண் நீதிபதிகளுடன் நாட்டிலேயே அதிக பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றம் என்னும் பெருமையைச் சென்னை உயர்நீதிமன்றம் தக்கவைத்துள்ளது.
- பிகார், திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் பெண் நீதிபதிகளே இல்லாத நிலை தொடர்கிறது.

## பேரவையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு விதிகள்

### 92(7) :

- குடியரசுத் தலைர் அல்லது ஆளுநரைப் பற்றியோ அல்லது நீதிமன்றம் ஒன்றின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலோ பேசக்கூடாது.
- விவாதத்துக்கு வலுசேர்க்கும் வகையில் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது.

### 287

- பேரவை முன்னுள்ள குறிப்பிட்ட தீர்மானத்தைப் பொருத்தவரை, எந்த விதியையாவது நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை பேரவைத் தலைவரின் ஒப்புதலுடன் உறுப்பினர் எவரேனும் முன்மொழியலாம்.
- கூட்டத்துக்கு வந்திருந்து வாக்களிக்கும் மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பகுதியினரின் ஆதரவுடன் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பெற்றால் பிரச்சனைக்குரியதான அந்த விதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பெற வேண்டும்.
- எனினும் விதி 92(7)-ஐ நிறுத்தி வைப்பதற்கு இந்த விதியை பயன்படுத்தக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசை விமர்சிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

- இந்தப் புதிய விதிகளின்படி, உண்மைத் தன்மையைப் பரிசோதிக்கும் அமைப்பு ஒன்றை மத்திய அரசு உருவாக்கும்.
- அந்த அமைப்பு சமூக ஊடகங்கள், இணைய ஊடகங்கள், காணொளிகளைப் பதிவேற்றும் தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ள மத்திய அரசு தொடர்பான பொய்யான அல்லது போலியான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய உள்ளடக்கங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்கும்படி சமூக ஊடகங்கள் உள்ளிட்ட இடைநிலை நிறுவனங்களுக்குத் தெரிவிக்கும்.
- உள்ளடக்கங்களை இடைநிலை நிறுவனங்கள் நீக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. இடைநிலை நிறுவனங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.
- தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 79-இன்படி, வெளியாட்கள் அல்லது பயனர்களால் பதிவேற்றப்படும் உள்ளடக்கங்களுக்கு எதிராக இடைநிலை நிறுவனங்கள் மீது வழக்குத் தொடர முடியாது என்னும் பாதுகாப்பு ஏற்பாட்டை இடைநிலை நிறுவனங்கள் இழக்கின்றன.

- எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல் இணையச் சுதந்திர அறக்கட்டளை எடிட்டர்ஸ் கில்டு உள்ளிட்ட அமைப்புகள் இந்தத் திருத்த விதிகள் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானவை என்று கூறியுள்ளன.
- அரசு தொடர்பான உள்ளடக்கங்களில் எது போலியானது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசால் உருவாக்கப்படும் அமைப்புக்குக் கொடுக்கப்பட்டிருப்பது கேள்விக்கு உள்ளாகியிருக்கிறது.
- தவறாக, வழிநடத்தும் தகவல் என்னும் பெயரில், அரசு மீதான நியாயமான விமர்சனக் கருத்துக்கள் நீக்கப்படுவதற்கும் இந்த ஏற்பாடு வழிவகுக்கும் என்கிற அச்சத்தைப் புறக்கணித்துவிட முடியாது.
- மத்திய அரசு தொடர்பான பொய்ச் செய்திகளுக்கு மட்டும் இப்படி ஒரு சிறப்பு ஏற்பாடு ஏன் என்கிற கேள்வியும் எழுகிறது.
- அச்சு ஊடகங்கள், கருத்துச் சுதந்திரம் என்கிற பெயரில் எல்லை மீறிவிடாமல் தடுப்பதற்கான எல்லா கட்டுப்பாடுகளும் பல ஆண்டுகளாகவே சட்டத்தில் உள்ளன.
- நன்கு அறியப்பட்ட ஊடக நிறுவனங்கள் நடத்தப்படும் இணையதளங்களும் இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே செயல்பட்டு வருகின்றன.
- ஆனால், சமூக ஊடகங்களிலும், அடையாளம் தெரியாதவர்களால் நடத்தப்படும் இணையதளங்களிலும் எந்த ஒரு தனிநபரும், எப்போது வேண்டுமானாலும், எங்கிருந்து வேண்டுமானாலும், எந்த விதிப் பொறுப்பும் இல்லாமல், எத்தகைய கருத்தையும் தெரிவித்துவிட முடியும் என்னும் சூழல் நிலவுகிறது.
- இது ஒருபுறம் சுதந்திரம் போலவே இருந்தாலும் இன்னொருபுறம் இதில் ஒருவிதமான கட்டற்ற அதிகாரத்தைக் கட்டமைக்கும் தன்மை இருப்பதையும் மறந்துவிட முடியாது.
- ஆகவே, இந்த இரண்டு விதமான சூழல்களையும் கருத்தில் கொண்டு அதற்கேற்பவே மத்தியஅரசின் புதிய இணையக் கட்டுப்பாடுகள் இருக்க முடியும் என்பதையும் மறுக்க முடியாது.
- இந்தப் புதிய தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் பொய்ச் செய்திகளைத் தடுக்கும் முயற்சியில் அரசுமீதான நியாயமான விமர்சனங்களை முடக்கும் தணிக்கை முறையாக மாறிவிடக்கூடாது. அரசை விமர்சிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

## ஒரே பாலின திருமண அங்கீகார வழக்கு

- ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கோரும் மனு மீதான வழக்கில் மத ரீதியிலான திருமணச் சட்டங்கள் குறித்தோ, தனிநபர் சட்டங்கள் குறித்தோ ஆராய விரும்பவில்லை என்றும், சிறப்பு திருமணச் சட்டத்தை மட்டுமே ஆராய இருப்பதாகவும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

### கேள்வி – மத்திய அரசு

- திருமணத்தை அங்கீகரிக்கும் உரிமை நீதிமன்றத்துக்கு உள்ளதா அல்லது சட்டமியற்றும் அரசு அமைப்புக்கு உள்ளதா என்பதற்கு முதலில் தீர்வு காண வேண்டும்.
- ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு உகந்ததா என முதலில் ஆராய வேண்டும்.

### மாநிலங்களின் கருத்தும் முக்கியம்

- நீதிமன்றத்தின் செயல்பாடுகளை நாங்கள் ஒருபோதும் நிர்ணயிக்கவில்லை.
- திருமணத்துக்கான சமூக சட்டத் தொடர்பை ஆராயும் வகையில் இந்த வழக்கு உள்ளது.
- அத்தகைய விவகாரத்தில் முற்றிலும் சட்டமியற்றும் அரசு அமைப்புகளுக்கே உரிமை உள்ளது.
- திருமண விவகாரம் அரசமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் உள்ளது.
- அப்படியிருக்கையில், இந்த விவகாரத்தில் மாநில அரசுகளின் கருத்தையும் கோர வேண்டியுள்ளது.

### சிறப்பு திருமணச் சட்டம் மட்டுமே ஆய்வு

- இந்த விவகாரத்தில் மத ரீதியிலான திருமணச் சட்டங்கள் குறித்தோ, தனிநபர் சட்டங்கள் குறித்தோ ஆராய விரும்பவில்லை என்றும், சிறப்பு திருமணச் சட்டத்தை மட்டுமே ஆராய இருப்பதாகவும் தெரிவித்தனர்.

# அசைக்கப்படுகிறதா அடிக்கட்டுமானம்?

## கேசவானந்த பாரத் வழக்கு

- 1973இல், கேசவானந்த பாரதி வழக்கில், உச்சநீதிமன்றம் அரசமைப்புச் சட்டத்தில் அடிக் கட்டுமானம் என்ற கருத்தாக்கத்தை முன் வைத்தது.
- நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தலாம், ஆனால், அதன் அடித்தளத்தை மாற்ற முடியாது.

## கோலக்நாத் வழக்கு

- 'கோலக்நாத் எதிர் பஞ்சாப் மாநிலம்' என்ற வழக்கில், முதல் முறையாக 11 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு நாடாளுமன்றமானது சட்டத் திருத்தத்தின் மூலம் அடிப்படை உரிமைகளை ரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ முடியாது என்று 1967இல் தீர்ப்பளித்தது.
- கோலக்நாத் தீர்ப்பை ரத்து செய்வதற்காக, அரசமைப்பின் 24 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் 1971இல் நிறைவேற்றியது.

## கேசவானந்த பாரதி

- இந்நிலையில், கேரளத்தில் உள்ள ஒரு மடத்தின் பீடாதிபதியான கேசவானந்த பாரதி
- கேரள மாநில நிலச்சீர்திருத்தச் சட்டம் 1963இன் கீழ், மடத்துக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்தும் மாநில அரசின் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 1970 மார்ச் மாதம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.
- அவரது மனு நிலுவையில் இருந்தபோதே, அரசமைப்பின் 24ஆவது திருத்தம் (பிரிவு 13 மற்றும் 368ஐ திருத்துதல்) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அதைத் தொடர்ந்து 25, 26 மற்றும் 29 ஆவது சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- 29ஆவது திருத்தத்தின் மூலம் கேரள மாநில நிலச்சீர்திருத்தம் தொடர்பான இரண்டு சட்டங்கள் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டன.
- கேசவானந்த பாரதி இந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்தார். வேறு சிலரும்கூட அதேபோல வழக்கு தொடுத்தனர்.
- உச்சநீதிமன்றத்தால் அவை ஒன்றாக விசாரிக்கப்பட்டன. இந்த வழக்கில் முதலில் மனுதாக்கல் செய்ததால் கேசவானந்த பாரதி தலைமை மனுதாரர் ஆனார்.

## 13 நீதிபதிகள் அமர்வு

- இந்தச் சட்டத் திருத்தங்கள் செல்லுமா என்பதைப் பற்றிய வழக்கு, முதலில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்ட அமர்வின் முன் தாக்கல் செய்யப்பட்டது.
- ஆகஸ்ட் 1972இல், ஐந்து நீதிபதிகள் கொண்ட அந்த அமர்வு, அந்த வழக்கை 13 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அனுப்பியது.
- அந்த வழக்கில் முதன்மையான வாதங்களை முன்வைத்த மூத்த வழக்கறிஞர் பல்கிவாலா, "இந்தியாவில் உள்ள நாடாளுமன்றம் உள்ளார்ந்த மற்றும் மறைமுகமான வரம்புகளின் கீழ் இயங்குகிறது."
- 'திருத்தம்' என்பதன் 'நன்கு முடிவுசெய்யப்பட்ட' அர்த்தம், அது அரசமைப்பு அடிப்படைகளை மாற்றுவதையோ அல்லது அழிப்பதையோ உள்ளடக்கவில்லை.
- குறிப்பாக, மக்கள் தங்களுக்குத் தாங்களே அளித்துக்கொண்ட அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களை நாடாளுமன்றத்தால் குறைக்கவோ அழிக்கவோ முடியாது என வாதிட்டார்.
- அந்த வழக்கைச் சுமார் 6 மாதங்களுக்கு, அந்த அமர்வு தொடர்ச்சியாக விசாரித்தது, தலைமை நீதிபதி எஸ்.எம்.சிக்ரி உள்ளிட்ட 13 நீதிபதிகளில் 7 நீதிபதிகளின் ஆதரவுபெற்ற பெரும்பான்மைத் தீர்ப்பு, அரசமைப்புச் சட்டத்தின் அடிக் கட்டுமானம் என்ற கருத்தாக்கத்தை உறுதிப்படுத்தியது.
- அந்தத் தீர்ப்பில், "அரசமைப்பின் ஒவ்வொரு விதியும் இன்றியமையாதது" என்று கற்றறிந்த அட்டர்னி ஜெனரல் கூறினார்.
- இல்லாவிட்டால், அரசமைப்புச் சட்டத்தில் அவை இடம் பெற்றிருக்காது என்றார். அது உண்மைதான்.

- ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு கூறும் ஒரே விதமான மதிப்பைப் பெற்றிருக்கவில்லை.
- அரசமைப்பின் எந்தவொரு அம்சத்தையும் திருத்தம் செய்யலாம்; ஆனால், அதன் அடித்தளம், அடிப்படைக் கட்டுமானத்தில் எந்தவொரு மாற்றமும் செய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கூறியது.

  1. அரசமைப்பின் மேலாதிக்கம்
  2. குடியரசு மற்றும் ஜனநாயக ஆட்சி வடிவம்
  3. அரசமைப்பின் மதச்சார்பற்ற தன்மை
  4. சட்டமியற்றும் அவைகள், நிறைவேற்றுகிற நிர்வாகத் துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு
  5. அரசமைப்பின் கூட்டாட்சித் தன்மை

  ஆகிய ஐந்து அம்சங்களை அரசமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமானத்தின் அங்கங்களாக அந்தத் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் பட்டியலிட்டது. (தீர்ப்பின் பத்தி 316).

- அத்துடன் "தனி நபர்களின் கண்ணியம், சுதந்திரம் ஆகிய அடித்தளத்தின் மீது இந்தக் கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. இதுவே உச்சபட்ச முக்கியத்துவம் கொண்டது. இவற்றை எந்தவொரு சட்டத் திருத்தத்தாலும் அழிக்க முடியாது" (பத்தி 317) எனவும் உச்சநீதிமன்றம் உறுதியாகத் தனது தீர்ப்பில் கூறியது.
- 1973 ஏப்ரல் 24 அன்று வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்புக்குப் பிறகான இந்த 50 ஆண்டுகளில், பல்வேறு தீர்ப்புகளின் வழியாக அடிக் கட்டுமானத்தின் அம்சங்களாக மேலும் சிலவற்றை உச்சநீதிமன்றம் சேர்த்துள்ளது என்றபோதிலும், அடிக்கட்டுமானம் என்ற கருத்தாக்கத்தை அது ஒருபோதும் நிராகரிக்க முனைந்ததில்லை.
- சுமார் 700 பக்கங்கள் கொண்ட அந்தத் தீர்ப்பை விமர்சிக்கிறவர்கள் எல்லாரும் அதை முழுமையாகப் படித்துவிட்டுத்தான் பேசுகிறார்கள் எனக் கருத முடியாது.

### நீதிமன்ற சீராய்வு

- இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர், இந்தியக் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை வகுத்தளித்து, அவற்றை காப்பதற்கான நிரந்தர பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார்.
- அரசமைப்புச் சட்டம் உத்தரவாதப்படுத்தும் உரிமைகளின் பாதுகாவலனாக நீதித்துறையையே அவர் பார்த்தார். அதற்காக உருவாக்கப்பட்டதுதான் நீதிமன்றம் சீராய்வு (Judicial Review) என்னும் ஏற்பாடாகும்.
- கேசவானந்த பாரதி தீர்ப்பு வழங்கப்பட்டு 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய அரசியல் அதே இடத்துக்கு வந்துசேர்ந்திருப்பதுபோல் தெரிகிறது.
- அப்போதுபோலவே இப்போதும் அந்தத் தீர்ப்பு இந்திய ஜனநாயக அமைப்பைப் பாதுகாக்கத் துணை நிற்கும்.

## கிழக்கு லடாக் பிரச்சனை

- கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில், 2020, மே 5-ஆம் தேதி இந்திய, சீன ராணுவத்தினர் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது.
- இப்பேச்சுவார்த்தைகளின் விளைவாக, பாங்காங் ஏரியின் வடக்கு, தெற்கு கரைகள் மற்றும் கோக்ரா பகுதியில் இருந்து 2021-இல் படைகளை இரு நாடுகளும் திரும்பப் பெற்றன.
- கடந்த ஆண்டு கோக்ரா-ஹாட்ஸ்பிரிங்ஸ் பகுதியில் படைகள் விலக்கப்பட்டன. அதேசமயம், டெம்சோக், டெப்சாங் பகுதியில் நிலுவையில் உள்ள பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.
- இருதரப்பு ராணுவ ரீதியிலான 18-ஆவது சுற்றுப்பேச்சு, சீனப்பகுதியில் உள்ள சுஷூல்-மோல்டா எனும் இடத்தில் நடைபெற்றது.

### கிழக்கு லடாக் எல்லைச் சூழல் நிலையாக உள்ளது

- இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட சீன அமைச்சர் லீ ஷாங்ஃபூ, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை தில்லியில் சந்தித்துப் பேசினார்.
- கிழக்கு லடாக்கில் நிலவி வரும் மோதல்போக்கு குறித்து அமைச்சர்கள் இருவரும் விவாதித்தனர்.
- அப்போது ஏற்கெனவே கையொப்பமான ஒப்பந்தங்களை மீறியதன் காரணமாகவே இருதரப்பு நல்லுறவு சீர்குலைந்ததாக சீன அமைச்சரிடம் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

- அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் எல்லைப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.
- இந்தியா-சீனா எல்லை சூழல் பொதுவாக நிலைத்தன்மையுடன் உள்ளது. எல்லை சூழல் குறித்து இரு நாடுகளும் தூதரகம் வாயிலாகவும், ராணுவ ரீதியிலும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன.
- அண்டை நாடுகளாகவும், வளர்ந்து வரும் நாடுகளாகவும் திகழும் இந்தியாவும் சீனாவும் வேறுபாடுகளை விடப் பல்வேறு விவகாரங்களில் ஒற்றுமையையே கொண்டுள்ளன.
- பிராந்திய, சர்வதேச அமைதி, வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இருதரப்பு நல்லுறவை மேம்படுத்த இரு நாடுகளும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- எல்லை விவகாரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என சீனா தெரிவித்து வருகிறது.

## வங்கதேச அதிபரானார் முகமது சஹாபுதீன்

- வங்கதேசத்தின் 22-ஆவது அதிபராக முகமது சஹாபுதீன் (73) பொறுப்பேற்றுக் கொண்டார்.
- அவருக்கு அந்நாட்டு நாடாளுமன்றத் தலைவர் ஷிரின் ஷெர்மின் சௌத்ரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- 1971-ஆம் ஆண்டில் நிகழ்ந்த வங்கதேசத்தின் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெருமை அதிபர் சஹாபுதீனுக்கு உள்ளது.

## கேசவானந்த பாரதி வழக்கின் தீர்ப்பு வெளியாகி 50 ஆண்டுகள்

- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை பாதிக்கும் வகையில் நாடாளுமன்றம் சட்டத்திருத்தத்தை கொண்டுவர இயலாது என்ற வரலாற்று சிறப்புமிக்க கேசவானந்த பாரதி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவையொட்டி, அந்தத் தீர்ப்பு குறித்த அனைத்து வாதங்களையும் சிறப்பு இணைய பக்கத்தில் உச்சநீதிமன்றம் வெளியிட்டது.


### KB case

- 1970-இல் கொண்டு வரப்பட்ட நில சீர்திருத்தச் சட்டத்துக்கு எதிராக கேரளத்தைச் சேர்ந்த கேசவானந்த பாரதி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.
- இந்த வழக்கை 13 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து 1973, ஏப்ரல் 24-ஆம் தேதி தீர்ப்பை வழங்கியது.
- இதில் 7 நீதிபதிகள் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை பாதிக்கும் வகையில் நாடாளுமன்றம் சட்டத் திருத்தத்தை கொண்டுவர இயலாது என பெரும்பான்மை தீர்ப்பாக அளித்தனர்.
- அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது ஜனநாயகம், நீதித்துறை, சுதந்திரம், அதிகார பகிர்ந்தளித்தல், மதச்சார்பற்ற தன்மை போன்றவற்றுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்டது.

## ராணுவ செலவினம் : 4-ஆவது இடத்தில் இந்தியா

- கரோனா தொற்று பரவல், உக்ரைன்-ரஷியா போர் ஆகியவை கடந்த சில ஆண்டுகளாக சர்வதேச பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்துள்ளன.
- இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட சில நாடுகள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.
- சர்வதேச உணவு விநியோக சங்கிலி பெரும் பாதிப்பை எதிர்கொண்டது.
- ராணுவத்துக்கான மொத்த செலவினமானது சர்வதேச மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் 2.2 சதவீதமாக உள்ளது.
- ராணுவத்துக்கு அதிகமாக செலவிடும் நாடுகளில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.
- சீனா 2-ஆவது இடத்தில் உள்ளது.
- 2021-ஆம் ஆண்டில் 3-ஆவது இடத்தில் இருந்த இந்தியாவை கடந்த ஆண்டில் ரஷியா பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- இந்தியா 4-ஆவது இடத்திலும், சவூதி அரேபியா 5-ஆவது இடத்திலும் உள்ளன.
- முதல் 5 இடங்களில் உள்ள நாடுகளின் மொத்த ராணுவ செலவினம், சர்வதேச ராணுவ செலவினத்தில் 63 சதவீதமாக உள்ளது.

### உலக ராணுவ செலவினத்தில் பங்கு (%)




## தமிழகத்தில் மீண்டும் சட்ட மேலவை

### கப் அன்ட் சாசர் போன்றது

- 1986-இல் அப்போதைய முதல்வர் எம்ஜிஆர் கலைத்த மேலவையை, மீண்டும் கொண்டுவருவதற்கு கருணாநிதி 1989, 1996, 2010 என மூன்று முறை முயற்சி செய்தபோதும் அது நடக்கவில்லை.
- மேலவையும் பேரவையும் கப் அன்ட் சாசர் போன்றவை. கப்பில் காபி சூடாக இருந்தால். அதை சாசரில் ஆற்றிச் சூட்டைக் குறைத்துக் கொள்வதைப் போல மேலவை பயன்படுகிறது என அண்ணா குறிப்பிட்டதை மேற்கோள்காட்டி மேலவைக்கான அனுமதியை விரைவில் பெறுவோம் என 2010இல் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் அப்போதைய முதல்வர் கருணாநிதி பேசினார்.

### மேலவை வரலாறு

- தமிழகத்தில் 1909-ஆம் ஆண்டின் சட்ட மேலவை அமைக்கப்பட்டது.
- ஆங்கிலேய ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்க உருவாக்கப்பட்ட இந்தச் சட்ட மேலவையில் ஜமீன்தார்களும் நிலச்சுவான்தார்களும் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர்.
- அதன்பிறகு 127 உறுப்பினர்களைக் கொண்ட பெரிய அவையாக மாறியதும் சட்ட மேலவைக்கு என 1920-இல் தனியாகத் தேர்தலும் நடத்தப்பட்டது.
- காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலைப் புறக்கணித்ததால், நீதிக்கட்சியைச் சேர்ந்த 63 உறுப்பினர்கள் வெற்றி பெற்று பனகல் ராஜா முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார்.
- 1987-இல் மேலவை கலைப்பு
- அண்ணா தலைமையில் 1967-இல் சட்டப்பேரவை (கீழவை) அமைக்கப்பட்டதும், அதிகாரம் முழுவதும் அதற்கு மாற்றப்பட்டதோடு மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 57-ஆகக் குறைக்கப்பட்டது.
- இந்நிலையில் 1986-இல் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆரால் மேலவை திடீரென கலைக்கப்பட்டது.
- மேலவை கலைக்கப்பட்டபோது அதன் தலைவராக ம.பொ.சிவஞானமும், எதிர்க்கட்சித் தலைவராக மு.கருணாநிதியும் இருந்தனர்.
- உத்திர பிரதேசம், பீகார், மகாராஷ்டிரம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா என ஆறு மாநிலங்களில் மட்டுமே சட்ட மேலவை இப்போது உள்ளது.

### மேலவையில் எத்தனை உறுப்பினர்கள்

- மேலவை அமைந்தால் அதன் எண்ணிக்கை 78 பேராக இருக்கக்கூடும்.
- இந்த 78 பேரில் மூன்றில் ஒரு பகுதி உள்ளாட்சி அமைப்புகளிலிருந்தும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மூலமும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- 12-இல் ஒரு பகுதி பட்டதாரிகள், ஆசிரியர்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவகர்கள் எனப் பல்வேறு துறைகளிலிருந்து ஆளுநரால் நியமனம் செய்யப்படுவர்.

## தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்

### அங்கீகாரம்

- மாநில கட்சிகளாக அங்கீகாரம் பெற வேண்டுமெனில், நான்கு நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- சட்டப் பேரவைத் தேர்தலில் மொத்த தொகுதிகளில் 3 சதவீத இடங்களில் வெற்றி பெற வேண்டும்.
- மக்களவைத் தேர்தலில், மாநிலத்தில் உள்ள எம்.பி. தொகுதிகளில் ஒவ்வொரு 25 இடங்களில் ஒரு இடத்திலாவது வெற்றியைப் பதிவு செய்திருக்க வேண்டும்.
- மக்களவை அல்லது சட்டப் பேரவைத் தேர்தலில் 6 சதவீத வாக்குகளுடன், ஒரு மக்களவை அல்லது 2 சட்டப் பேரவைத் தொகுதிகளில் வென்றிருக்க வேண்டும்.
- எந்தத் தொகுதியிலும் வெற்றியைப் பதிவு செய்யாவிட்டால் 8 சதவீத வாக்குகளைப் பெற வேண்டும்.

### தேசிய கட்சி

- தேசிய கட்சிக்கான தகுதியைப் பெற வேண்டுமெனில், மூன்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- மொத்த மக்களவை இடங்களில் 2 சதவீத இடங்களில் குறைந்தபட்சம் 3 வெவ்வேறு மாநிலங்களில் வெற்றி பெற வேண்டும்.
- மக்களவை அல்லது சட்டப் பேரவைத் தேர்தலில் 4 வெவ்வேறு மாநிலங்களில் 6 சதவீத வாக்குகள் பெறுவதுடன் 4 மக்களவைத் தொகுதிகளிலாவது வெற்றி பெற வேண்டும்.
- நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாக இருக்க வேண்டும்.

### சலுகைகள்

- தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற கட்சியாக இருந்தால், தேர்தலின் போது அந்தக் கட்சி மற்றும் அதன் வேட்பாளருக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படும்.
- இந்த நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சி, தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் தேசிய கட்சிக்கான அங்கீகாரத்தை இழந்தன.
- மாநிலத்தில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக காங்கிரஸ், பாஜக, ஆம்ஆத்மி, மார்க்சிஸ்ட், பகுஜன் சமாஜ், திமுக, அதிமுக, இந்திய கம்யூ., தேமுதிக ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளது.

## எஸ்சிஓ கூட்டம்

- ரஷ்யா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பை 2001-ம் ஆண்டு உருவாக்கின.
- அடுத்த சில ஆண்டுகளில், இந்த அமைப்பு பிராந்தியங்களுக்கு இடையேயான வலுவான சர்வதேச அமைப்பாக உருவெடுத்தது.
- இந்த அமைப்பில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் 2017-ம் ஆண்டில் நிரந்தர உறுப்பினர்களாயின.
- இந்த அமைப்பின் கூட்டம், கோவாவில் நடைபெறவுள்ளன.

## இந்தியாவில் சிவில் சமூக அமைப்புகளின் எதிர்காலம்


### சிவில் சமூகம் என்றால் என்ன?

- சிவில் சமூகம் என்பது பரந்த அளவிலான அமைப்புகளின் வரிசையைக் கொண்டுள்ளது.
- அதாவது சமுதாயக் குழுக்கள், அரசு சாரா நிறுவனங்கள் (NGO), தொழிலாளர் சங்கங்கள், உள்நாட்டுக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், நம்பிக்கை அடிப்படையிலான அமைப்புகள், தொழில்ரீதியான அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் - உலக வங்கி

### சிவில் சமூகத்தின் இயல்பு

- சிவில் சமூகம் சில நேரங்களில் "மூன்றாவது துறை" என அழைக்கப்படுகிறது (அரசாங்கம் மற்றும் வணிகத்திற்கு அடுத்தபடியாக)
- இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத்தை இயற்றக்கூடிய இடத்தில் மற்றும் வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.
- ஆனால், சிவில் சமூகத்தின் இயல்பானது சமூகத்தில் நுணுக்கமான மாற்றங்களை அதிகளவிலும் மற்றும் தொழில்நுட்ப ரீதியான மேம்பாட்டை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

## சிவில் சமூகத்தின் செயல்பாடுகள்




## இந்தியாவில் சிவில் சமூகத்தின் தற்போதைய நிலை

- கடந்த 9 வருடங்களாக சிவில் சமூகமானது கட்டமைப்பு ரீதியாக ஒடுக்கப்பட்டு வருகிறது.
- பெரும்பாலான அரசாங்கங்கள் தங்களின் திட்டங்களை செயல்படுத்துதலில் உள்ள பிரச்சனைகளை களைதல், திட்டங்களை ஏற்படுத்துவதற்கான சட்டமன்ற நடைமுறைக்கு முந்தைய நிலைகளில்கூட சிவில் சமூக நிறுவனத்தின் கருத்துக்களைக் கேட்பதில்லை.

## சிவில் சமூகத்தின் முக்கியத்துவம்

- சிவில் சமூகத்திற்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்தல் என்பது தற்சமயம் செயலற்ற நிலையில் உள்ளது.
- சிவில் சமூகம் கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் பொதுமக்கள் தொடர்பானவற்றில் கருத்துக்களை தெரிவிக்கும் திறனானது குறைந்து காணப்படுகிறது.

## சிவில் சமூகம் ஒடுக்கப்படுவதற்கான காரணம்

- சிவில் சமூகமானது தற்பொழுது போர் மற்றும் வெளிநாட்டு தலையீடு ஆகியவற்றில் புதிய வழியாக செயல்படுவது ஒடுக்கப்படுவதற்கான காரணமாகும்.
- மேலும் சிவில் சமூகங்கள் தங்களுக்கான வழங்கலை பெறுவதில் வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின் மூலம் ஒடுக்கப்பட்டுள்ளது.
- 12A/80-G திரும்பப் பெறுதல் பிற்போக்குத்தனமான வரியை வலியுறுத்துதல் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நலன்புரி மக்களை மக்கள் மீதான அழுத்தம் மூலம் சிவில் சமூகம் ஒடுக்கப்படுகிறது.
- அதற்குக் காரணம் தற்போதுள்ள ஒன்றிய அரசின் மேம்பாடானது மக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதைக் காட்டிலும் பெரிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- அதனால் சிவில் சமூகம் இந்திய மேம்பாட்டிற்கு தேச விரோதமானது என்று இழிவுபடுத்தப்படுகிறது.
- சிவில் சமூகமானது ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. காரணம் சிவில் சமூகமானது அரசியலில் நிகழும் பதட்டங்களுக்கு பாதுகாப்பு வால்வாக அமைகிறது.

## சிவில் சமூகத்தின் வளர்ச்சிக்கு தேவையானவை

- தனியார் தொண்டு நிறுவனங்களும் மற்றும் நிறுவனங்களும் முற்போக்கான சிவில் சமூகங்களுக்கு உயிர்நாடி என்பதை உணரவேண்டும்.
- அதிகாரங்களின் ஆதிக்கத்திற்கு ஆளாகாத 'மென்மையான' பிரச்சனைகளில் செயல்புரியும் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பது எளிதான ஒன்று.
- இந்திய ஜனநாயகத்தின் 5-வது தூணாக கருதப்படும் சிவில் சமூகத்தை மனசாட்சியுள்ள இந்தியர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு அதனை உருவாக்க வேண்டும்.
- இத்தகைய கொள்கை ரீதியான கூட்டணியின் மூலம் மட்டுமே இந்தியாவில் அரசியல் அமைப்பு எண்ணங்களை பாதுகாக்க முடியும்.

# குடிமைப்பணி

- குடிமைப் பணிகள் என்ற பதம் இங்கிலாந்து அரசு சாசனத்தில் இருந்து பிறந்ததாகும்.
- கிழக்கிந்திய கம்பெனியால் உருவாக்கப்பட்ட குடிமைப் பணி மற்றும் ராணுவப் பணி அதிகாரிகள் படிப்படியாக வணிக அதிகாரிகள் நிலையிலிருந்து, நிர்வாக அதிகாரிகளாக மாற்றப்பட்டனர்.

- இந்திய அரசு நிர்வாகத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட குடிமைப் பணிகள் என்ற ஒரு பிரிவும், உடன்படிக்கை செய்யப்படாத குடிமைப் பணிகள் அல்லது துணை நிலைப் பணிகள் என்று ஒரு பிரிவும் உருவாயின.
- 1843-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வலிமையாக இருந்தனர்.
- பெரும்பான்மையான பகுதியை வெற்றி கண்டனர். இன்னும் பஞ்சாப் மாநிலத்தை மட்டுமே வெற்றி காண வேண்டியிருந்தது.

### எல்லென் பரோ

- அப்போதைய இந்தியாவின் கவர்னர் எல்லென் பரோ பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.
- வெளியுறவுத் துறை, உள்துறை, நிதித்துறை என்ற மூன்று புதிய துறைகளை உருவாக்கினர்.

### 310வது பிரிவு

- அகில இந்தியப் பணிகளுக்கான குடிமைப்பணி அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை இந்திய குடியரசுத் தலைவருக்கும், மாநில அளவிலான குடிமைப் பணி அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை மாநில ஆளுநருக்கும் அரசியலமைப்பு சட்டத்தின் 310-வது பிரிவு வழங்குகிறது.
- அவ்வாறு நியமிக்கப்படும் அதிகாரிகள் தேசிய அளவில் குடியரசுத் தலைவரும், மாநில அளவில் ஆளுநரும் விரும்பும் வரையில் அப்பணியில் தொடரலாம்.
- எனவே அவர்களுக்கு பணி காலம் குறித்த பாதுகாப்பு இருக்கிறது.

### 311–வது பிரிவு

- இந்திய குடிமைப்பணி அதிகாரிகளைப் பணிநீக்கம் செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் விதிகள், தகுதிக் குறைப்பு செய்தல் ஆகியவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 311-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

### பிரிவு 312

- இந்திய குடிமைப்பணி அதிகாரிகளைத் தேவையற்ற அரசியல் குறுக்கீடுகள் மற்றும் தொல்லைகளில் இருந்து பாதுகாப்பதை இந்த சட்டப்பிரிவு உறுதி செய்கிறது.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 312-ஆவது பிரிவு, இந்தியாவில் அகில இந்திய சேவைகளை வரையறுக்கிறது.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் ஆகியவை அரசியலமைப்புச் சட்டத்தின்படியான அமைப்புகளாகும்.

### குடிமைப்பணி தேர்வு

- தொடக்கத்தில் இந்திய குடிமைப் பணிக்கு பரிந்துரை அடிப்படையில்தான் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- அதை மாற்றி, தகுதி அடிப்படையில் அதிகாரிகளை நியமிக்கும் நோக்குடன் குடிமைப் பணிகளுக்குப் போட்டித் தேர்வுகள் அறிமுகம் செய்யப்பட்டன.

### ஏப்ரல் 26 (தேசிய குடிமைப்பணி நாள்)

- பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் பிரபு இந்தியாவின் சிவில் சேவையின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.
- 1947-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-இல் தில்லியில் உள்ள மெட்கால்பே இல்லத்தில் இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் நாட்டின் இந்திய பணி அதிகாரிகளின் முதல் பிரிவோடு ஆற்றிய உரையை நினைவுகூர்வதற்காக ஆண்டுதோறும் அந்த நாளில் தேசிய குடிமைப்பணிகள் நாள் கொண்டாடப்படுகிறது.

## இந்தியா-பிரிட்டன் கூட்டு ராணுவப் பயிற்சி தொடக்கம்

- இந்தியா-பிரிட்டன் இடையே அஜய் வாரியர் என்ற பெயரில் இருதரப்பு கூட்டு ராணுவப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 7-ஆவது கூட்டு ராணுவப் பயிற்சி பிரிட்டனில் உள்ள சாலிஸ்பரி சமவெளிப் பகுதியில் தொடங்கியது.

- நேர்மறையான ராணுவ உறவை உருவாக்குதல், ஒருவர் மற்றொருவரின் சிறந்த நடைமுறைகளை கற்றுக் கொள்ளுதல், ஒன்றிணைந்து பணி மற்றும் திறனை மேம்படுத்துதல், இருநாட்டு ராணுவத்தினர் இடையே தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் உள்ளிட்டவை பயிற்சியின் நோக்கமாகும்.

## மியான்மர்

- இராணுவ ஆட்சி நடைபெற்று வரும் மியான்மரில் 40 அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பதன் மூலம் மேலும் ஓர் அநீதி அரங்கேறியுள்ளது.
- விரைவில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தேர்தல் ஆணையம் மேற்கொண்டிருக்கும் இந்த நடவடிக்கை, அந்த நாட்டில் ஜனநாயகம் திரும்புவதற்கான வழிகளை முற்றிலுமாக அடைத்துள்ளது.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைத்து 2021 பிப்ரவரி 1-ஆம் தேதி ஆட்சியை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது ராணுவம்.

### ஆங் சான் சூகி

- மியான்மரில் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ரோஹிங்கயா மக்கள், பெரும்பான்மை மக்களின் வெறுப்புக்கும், ராணுவத்தின் அடக்குமுறைக்கும் ஆளாகி வங்கதேசத்தை நோக்கி புலம்பெயர்ந்தபோது 'மௌனம் காத்தார்' என்று சூகி மீது குற்றச்சாட்டு எழுந்தது.
- ரோஹிங்கயா இன மக்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானபோதிலும், படுகொலை செய்யப்பட்டபோதிலும் அவற்றைத் தடுக்க தவறிவிட்டார் என சர்வதேச அளவில் சூகி மீதான பெயருக்கு களங்கம் ஏற்பட்ட போதும், மியான்மர் மக்களைப் பொருத்தவரை அவர் இன்றுவரை பெரிதும் மதிக்கப்படுபவராகத்தான் இருக்கிறார்.

### கட்சிகள் கலைப்பு

- அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தில் மறுபதிவு செய்து கொள்ள வேண்டுமென கடந்த ஜனவரி 27-ஆம் தேதி ராணுவம் அறிவித்தது.
- அந்த அவகாசம் மார்ச் 28-ஆம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், மறுபதிவு செய்து கொள்ளவில்லை எனக் கூறி ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் உள்பட 40 கட்சிகள் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
- புதிய தேர்தல் சட்டத்தின்படி தேர்தல் ஆணையத்தில் மறுபதிவு செய்யவில்லை எனில் அந்தக் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முடியாது.

## ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம்

- இந்த சட்டத்தின்படி, ஆன்லைன் விளையாட்டு விளையாடுவோருக்கு 3 மாதங்கள் சிறை அல்லது ரூ.5 ஆயிரம் அபராதத்துடன் சிறை தண்டனை விதிக்கப்படும்.
- ஆன்லைன் விளையாட்டுக்கு விளம்பரம் செய்வோருக்கு ஓராண்டு சிறை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.
- இவர்கள் மீண்டும் தவறு செய்தால், 5 ஆண்டு சிறை தண்டனை, ரூ.20 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

# 04 இந்திய வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் அதன் தாக்கம்

## நாசாவின் நிலவு - செவ்வாய் திட்டம்

- நாசாவின் நிலவு முதல் செவ்வாய் வரையிலான பயணத் திட்டத்தின் தலைமை பொறுப்பில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இன்ஜினியர் அமித் ஷத்ரியா நியமிக்கப்பட்டு உள்ளார்.
- நிலவு முதல் செவ்வாய் வரையிலான பயணத் திட்டம், நிலவுக்கான பயணங்களை மேற்கொள்ளவும், செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை தரையிறக்கவும் நாசாவை தயார்படுத்த உதவும்.

## காசநோய் இல்லாத தேசம்

- இந்தியாவில் 2025 ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிப்பதுதான் தேசிய அளவில் நம் குறிக்கோள்.
- அதன்படி, இந்த ஆண்டு மத்திய சுகாதாரத் துறை, 'ஆம்! காசநோயை நம்மால் வெல்ல முடியும்' எனும் கருப்பொருளைக் கையில் எடுத்துள்ளது.
- மார்ச் 24 அன்று வாரணாசியில் நடந்த உலகக் காசநோய் தின விழாவில், காசநோய் ஒழிப்பில் பின்பற்ற வேண்டிய புதிய குறுகிய காலக் காசநோய்த் தடுப்புத் திட்டம், 'TB-Mukt Punchayat initiative' ஆகிய திட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

### இந்தியாவின் இலக்கு

- உலகில் உள்ள காசநோயாளிகளில் 28% பேர் இந்தியாவில் இருக்கின்றனர் என்கிறது, உலகக் காசநோய் அறிக்கை (2022).
- 2020-இல் 18.05 லட்சம் புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டார்கள்.
- 2021-ல் இந்த எண்ணிக்கை 21.3 லட்சம்; 2022இல் 24.2 லட்சம். 2017-ல் வரையறுக்கப்பட்ட தேசியக் காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் இலக்கு என்னவென்றால், நாட்டில் 2025 ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் பேரில் மொத்தம் 65 பேருக்கு மேல் காசநோயாளிகள் இருக்கக்கூடாது; அல்லது 44 பேருக்கு மேல் புதிதாகக் காசநோயாளிகளாக ஆகியிருக்கக்கூடாது என்பதுதான்.
- 3 பேருக்கு மேல் காசநோயால் இறந்திருக்கக்கூடாது; 2021ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, ஒரு லட்சம் பேரில் 210 பேருக்குக் காசநோய் இருக்கிறது.
- எல்லாவற்றுக்கும் மேலாக, காசநோயாளிகள் ஒரு பைசாகூட சொந்தக் காசைச் சிகிச்சைக்குச் செலவழிக்கக் கூடாது என்பதே அரசின் இலக்கு.
- 32% காசநோயாளிகள் தங்கள் சொந்தக் காசில்தான் சிகிச்சை பெறுகின்றனர்.

### புதிய முன்னெடுப்புகள்

- காசநோயாளிகளை ஆரம்பகட்டத்திலேயே கண்டறிந்து, முறையான சிகிச்சை அளித்து, கடைசிவரை அவர்களைக் கண்காணித்து, இந்த நோய் அடுத்தவருக்குப் பரவாமல் தடுக்கும் புதிய உத்திகளைக் கையாள மத்திய சுகாதாரத் துறை வலியுறுத்தியுள்ளது.
- காசநோயாளிகளைக் கண்டறிந்து, சிகிச்சைகள் குறித்த பின்னூட்டம் தருவதற்குச் சிறப்புச் சுகாதார மையங்கள் JEET தனியார் அமைப்புகள், இணையதளம், செயலி (Ni-kshay portal) ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.
- தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்கள் அது பற்றிய தகவலை உடனடியாகச் சுகாதாரத் துறைக்குத் தெரிவிப்பதில்லை.
- இது காசநோயை ஒழிப்பதற்குப் பெரும் தடையாக இருந்தது. எனவே, இந்தியாவில் காசநோய் ஒழிப்புத் திட்டத்தில், காசநோய் உடனே தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு நோயாக 2012-இல் பிரகடனப்படுத்தப்பட்டது.
- மேலும், தனியார் மருத்துவர்கள் கண்டறிந்து தெரிவிக்கும் ஒவ்வொரு புதிய காசநோயாளிக்குச் சிகிச்சை முடிந்த பிறகு மருத்துவருக்கு ரூ.1000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவித்தது. அதன் பிறகு, இந்தக் குறை சீராகி வருகிறது.
- காசநோய் ஒழிப்பில் பொதுச் சமூகத்தினரின் பங்கும் இருக்க வேண்டும் என்பதற்காக, தனியார் சேவைக் கழகங்களையும் ஏற்படுத்தி வருகிறது மத்திய சுகாதாரத் துறை

- 71,460 கழகங்கள் (Ni-kshay Mitras) சுமார் 10 லட்சம் காசநோயாளிகளைத் தத்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைக் கொடுத்து உதவுகின்றன. அரசும் ஒவ்வொரு காசநோயாளிக்கும் உணவுக்காக மாதம் ரூ.500 மானியம் வழங்குகிறது.

## சிகிச்சையில் சிக்கல்கள்

- காசநோய்க்கு மாத்திரைகள் எடுத்துக்கொண்ட இரண்டு மாதங்களில் நோயின் அறிகுறிகள் மறைந்து விடுவதால், நோய் குணமாகி விட்டது எனக் கருதிப் பெரும்பாலான நோயாளிகள் மருந்துகளைப் பாதியிலேயே நிறுத்திவிடுகின்றனர்.
- இந்தப் பொறுப்பின்மையும் அறியாமையும் முக்கியக் காரணங்கள். நோய் வந்தவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவும், படிப்பறிவு இல்லாதவர்களாகவும் இருப்பதால், இதற்கு முழுமையான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற அவசியத்தை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.
- தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ள அவர்களின் வறுமை அனுமதிப்பதில்லை.
- இப்படிப் பாதியில் சிகிச்சையை நிறுத்திவிடும்போது, காசநோய்க் கிருமிகள் அதற்கான முதல்நிலை மருந்துகள் பலன் தராத வகையில் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுவிடுகின்றன.
- இதன் விளைவாக, மருந்துக்குக் கட்டுப்படாத காசநோயாக (Multi Drug Resistance TB) அது உருமாறுகிறது. இதற்கு இரண்டு ஆண்டுகள் சிகிச்சை எடுக்க வேண்டும்.
- 2022 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இந்தியாவில் இந்த நிலைமையில் 63,801 பேர் இருக்கிறார்கள்.

## அரசின் முன்னெடுப்பு

- இந்த நிலைமையைத் தடுக்க முதல்நிலை மருந்துகளுக்குக் கட்டுப்படும் நோயா, கட்டுப்படாத நோயா என்பதைத் தெரிவிக்கும் CBNATT பரிசோதனைக் கருவியை எல்லா மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் அரசு அமைத்துள்ளது.
- இந்திய அளவில் மொத்தம் 4,760 கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காசநோயாளிகளும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- முதல்நிலை மருந்துகளைத் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும் அரசு வழிசெய்துள்ளது.
- முதல்நிலை மருந்துகளுக்குக் கட்டுப்படாத காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதற்கென உள்ள விலை கூடிய பிடாகுயிலின் (Bedaquiline), டிலமாநிட் (Delamanid) மருந்துகளும் அரசு மருத்துவமனைகளில் மட்டுமின்றி, தனியார் மருத்துவமனைகளிலும் இலவசமாகக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## சவாலை எதிர்கொள்ளல்

- இந்தியாவில் 68%பேர் காசநோய் அறிகுறிகளை அலட்சியப்படுத்துகிறார்கள்; 18% பேர் நோயைக் கணிக்கத் தவறுகிறார்கள்; 12% பேர் சுயமருத்துவம் செய்து கொள்கிறார்கள் என்கிறது தேசிய காசநோய் அறிக்கை (2022).
- காசநோய் உறுதியானால், ஆறுமாதங்களுக்கு இடைவிடாமல் மருந்து சாப்பிட வேண்டும். இது 100% குணமாகும் நோய் எனும் புரிதல் வேண்டும்.
- முதியோர், ஊட்டச்சத்துக் குறைந்தவர்கள், புகைபிடிப்போர், மது அருந்துவோர், நீரிழிவு உள்ளவர்கள், ஹெச்.ஐ.வி. தொற்றாளர்கள் ஆகியோர் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும்.
- காசநோயை ஒழிக்க அரசு எடுக்கும் அவ்வளவு முன்னெடுப்புகளுக்கும் நாம் ஒவ்வொருவரும் கை கொடுக்க வேண்டும். அப்போதுதான் 'காசநோய் இல்லாத இந்தியா'வை விரைவில் உருவாக்க முடியும்.

# இணைய வாக்குப்பதிவு

- பால்டிக் கடல் பகுதியில் சுமார் 1500 தீவுகளை உள்ளடக்கிய குடியரசு நாடு எஸ்டோனியா, மிகவும் குறைந்த மக்கள் தொகை (13.3 லட்சம்) கொண்ட நாடுகளில் ஒன்றாகவும், முன்னேறி உயர் வருவாய் பொருளாதாரம் மிக்க வளர்ந்த நாடாகவும் இது உள்ளது.
- மின் ஆளுமை நிர்வாகத்தில் உலகின் முன்னணி நாடாக விளங்கும் எஸ்டோனியாவில், அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுமார் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை இணையம் வாயிலாகப் பதிவு செய்துள்ளனர்.

## இணைய வாக்கு

- உலகின் எந்த மூலையில் இருந்தும் வாக்களிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தங்களின் அடையாள அட்டையையோ, கைப்பேசி அடையாளத்தையோ கொண்டு இணையத்தில் வாக்களிக்கலாம்.

- இரண்டு மின் உறைகளால் பாதுகாக்கப்பட்ட இந்த வாக்கு, தேசிய தேர்தல் ஆணைய சர்வருக்குச் செல்வதற்கு முன்னதாகவே, யார் வாக்களித்தார் என்ற அடையாளம் நீங்கிவிடும்.
- ஒருவர் வாக்களித்த பிறகு மூடப்படும் இந்த தளத்தை பிறகு தேர்தல் ஆணைய குழுவால் மட்டுமே திறக்க இயலும்.
- எஸ்டோனியாவில் கடந்த 2005 முதல் இணைய வாக்குப்பதிவு (ஐ ஓட்டிங்) மூலம் ஐந்து உள்ளூராட்சி தேர்தல்களும், ஐந்து நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இணைய வாக்கை, எண்ணற்ற முறை மாற்றலாம்.
- கடைசியாக செலுத்தப்பட்ட வாக்குகள் எண்ணப்படும். அதோடு, கடைசிநாளில் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்குச்சீட்டு மூலமும் வாக்களிக்கலாம்.
- அப்போது இணைய வாக்கு நீக்கப்படும். இதனால், வாக்காளர் முன்பு ஒருவருக்கு வாக்களித்தாலும், அதை பிறகு மாற்றிவிட முடியும்.
- பாதுகாப்பான க்யூ ஆர் கோட் அடிப்படையிலான கைப்பேசி செயலி வாயிலாக ஒருவர் தன்னுடைய வாக்கு, தேசிய தேர்தல் ஆணைய சர்வருக்கு சரியாக சென்றுள்ளதா என்பதை சரிபார்க்க முடியும்.
- தேர்தல் நாள் முடியும் முன்பு இணைய வாக்குகளை எண்ணமுடியாது. நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது.
- தேர்தல் குழுவின் பல்வேறு உறுப்பினர்களால் எண்ம வாக்குகள் கணித ரீதியாக சரிபார்க்கப்பட்டு எண்ணிக்கை சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- இதுபோன்ற பல பாதுகாப்பு அம்சங்கள் காரணமாக எஸ்டோனியாவின் ஐ-ஓட்டிங் முறை அந்த நாட்டு மக்களின் முழுநம்பிக்கையைப் பெற்றுள்ளது.
- நம் நாட்டில் தேர்தல் ஆணையம் கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து யோசிக்க வேண்டியிருக்கிறது.
- கடந்த 2019 மக்களவைத் தேர்தலை நடத்துவதற்கு பல கட்டங்களாக ரூ.9,000 கோடி செலவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
- வாக்காளர்களின் எண்ணிக்கை உயர உயர, தேர்தல் நடத்தும் செலவுகளும் உயர்ந்து கொண்டே இருக்கும்.
- இதனிடையே, பல்வேறு மாநிலங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. தேர்தல் ஆணையத்தின் இந்த செலவுகள் அனைத்தும் மக்களின் வரிப்பணமே.
- மேலும், சுமார் 94.5 கோடி வாக்காளர்களைக் கொண்ட நம்நாட்டில், விலைஉயர்ந்த பாதுகாப்பான வாக்குப்பதிவு இயந்திரங்களை வாங்குவது முதல், வாக்கு இயந்திரங்களை பாதுகாத்து முடிவுகளை அறிவிப்பது வரை பல பிரச்சனைகளை தேர்தல் ஆணையம் எதிர்கொண்டு வருகிறது.
- ஐ-ஓட்டிங் தொழில்நுட்பத்தையே, அதுபோன்ற புதிய மென்பொருளையோ உருவாக்கி, நாம் பயன்படுத்தினால், புலம் பெயர்ந்தோர், போக்குவரத்து குறைவான பகுதி வாக்காளர்கள், மலைவாழ் மக்கள், வாக்குச் சாவடிக்கு வரமுடியாத முதியவர்கள், நோயாளிகள் எனப் பலரையும் நாம் வாக்களிக்கச் செய்ய முடியும்.
- மேலும், இதனால் கால விரயமும் பொருள் விரயமும் தவிர்க்கப்படுவதோடு, தேர்தல் ஆணையத்தின் இலக்கான நூறு சதவீத வாக்குப்பதிவையும் எட்ட முடியும்.

## மருந்து விலையில் ஏன் இந்தப் பாரபட்சம்

### இறக்குமதி வரி ரத்து

- 'அரிய நோய்களுக்கான தேசியக் கொள்கை'யில் பட்டியலிடப்பட்டிருக்கும் அனைத்து அரிய வகை நோய்களுக்குமான மருந்துகளை இறக்குமதி செய்ய, முழு வரிவிலக்கு அளிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.
- சிறப்பு மருத்துவத்துக்குத் தேவைப்படும் உணவு வகைகளுக்கும் இந்த வரிவிலக்கு பொருந்தும்.
- பல்வேறு புற்றுநோய்களுக்கான சிகிச்சையில் பயன்படுத்தப்படும் பெம்ப்ரோலிஹுமாப் (கீய்ட்ரூடா) மருந்துக்கான அடிப்படைச் சுங்க வரியையும் அரசு ரத்து செய்திருக்கிறது.

### அனுமதி

- வெளிநாடுகளிலிருந்து இந்த மருந்துகளை இறக்குமதி செய்யும் தனிநபர்களுக்குப் பலனளிக்கும் முக்கியமான நடவடிக்கை இது.

- மத்திய அல்லது மாநில சுகாதாரத் துறை இயக்குநர் அல்லது மாவட்ட மருத்துவ அதிகாரி / மாவட்ட பொது அறுவை சிகிச்சை மருத்துவரிடம் சான்றிதழ் பெற்றுக்கொண்டால், இந்த வரிவிலக்கைத் தனிநபர்கள் பெற முடியும்.
- அரியவகை நோய்களுக்கான மருந்துகளும் உணவு வகைகளும் அதிக விலை கொண்டவை. பல லட்ச ரூபாய்க்கு மருந்துகள் விற்பனையாகின்றன.
- இந்தியாவில் இம்மருந்துகள் மிக அரிது என்பதால், பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதுதான் ஒரே வழி. இப்படியான சூழலில், அரசு இத்தகைய நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

### அதிருப்தி

- அரிய வகை நோய்களுக்கான மருந்துகளில் காட்டும் அக்கறையை அத்தியாவசிய மருந்துகளில் அரசு காட்டத் தவறியிருப்பதுதான் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.
- ஏறத்தாழ 900 அத்தியாவசிய மருந்துகளின் விலையை 12% உயர்த்தியிருக்கிறது மத்திய அரசு.
- அரியவகை மருந்துகளுக்கான இறக்குமதி வரிவிலக்கு ஏப்ரல் 1 அன்று அமலுக்குவந்த நிலையில், அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வும் அதே நாளில் அமலுக்கு வந்திருப்பது கூடுதல் நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது.

### விலை அதிகம்

- வலி நிவாரணிகள், ஆன்டிபயாட்டிக்குகள், தொற்றுத் தடுப்பு மருந்துகள், இதய நோய் தொடர்பான மருந்துகள் உள்ளிட்டவற்றின் விலை தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கிறது.
- சாதாரணக் காய்ச்சல் தொடங்கி தொற்றுநோய்கள், உயர் ரத்த அழுத்தம், தோல் நோய்கள் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இனி அதற்கு அதிக விலை கொடுத்து மருந்துகள் வாங்க வேண்டியிருக்கும்.
- அன்றாடத் தேவைகளுக்கான பொருள்களின் விலை உயர்வைச் சிரமத்துடன் எதிர்கொண்டிருக்கும் மக்கள், அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வால் கடும் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர்.
- தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம், கடந்த ஆண்டு அத்தியாவசிய மருந்துகளின் விலையில் 10.7% உயர்த்திக்கொள்ள அனுமதித்திருந்தது; இந்த முறை அது 12% என்பது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

## மருத்துவத்துக்கான உரிமை மசோதா

- மக்களின் ஆதரவைப் பெற அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் அரசு மருத்துவ சேவையை மக்களின் அடிப்படை உரிமையாக்கும் விதத்தில் ஒரு மசோதா கொண்டு வந்தது.
- அந்த ‘மருத்துவத்துக்கான உரிமை’ மசோதாவின்படி, எந்தவிதக் கட்டணமும் செலுத்தாமல் நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளிலும் அவசர சிகிச்சை பெற முடியும்.
- மாநில அரசின் சிரஞ்சீவி மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டிருந்தாலும்கூட, பல தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளுக்கு அவசர சிகிச்சை வழங்குவதில்லை என்கிற புகார் காரணமாக மருத்துவத்துக்கான உரிமை மசோதாவை அறிமுகப்படுத்துவதாகத் தெரிவித்தார் மாநில சுகாதார அமைச்சர் பி.எல்.மீனா.
- இன்னும் சட்டமாகாத அந்த வரைவு மசோதா, தனியார்துறையில் பணிபுரியும் மருத்துவர்களையும், மருத்துவமனை நடத்துபவர்களையும் எதிர்ப்புக் குரல் எழுப்ப வைத்தது.
- இந்திய மருத்துவ சங்கமும் தனியார் மருத்துவமனைகளுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியது.
- அந்த மசோதா, அவசர சிகிச்சை மட்டுமல்லாமல், அனைவருக்கும் இலவச பரிசோதனை, மருந்துகள், மருத்துவ ஆய்வுகள், ஆம்புலன்ஸ் ஊர்தி வசதி, சிகிச்சை ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது.

### 20 உரிமைகள்

- அந்த மசோதாவில் சில குறைபாடுகளும் சட்ட ரீதியிலான ஓட்டைகளும் இருந்தாலும், அதன் மசோதாவின் நோக்கம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.
- நோயாளிகளுக்கான 20 உரிமைகளை அம்மசோதா பட்டியலிடுகிறது.
- அவற்றில் ஒப்புதலுக்கான உரிமை, சிகிச்சை முறை – பரிசோதனைகள் குறித்த விவரங்களுக்கான உரிமை, தங்களது தனிப்பட்ட விவரங்களுக்கான தன்மறைப்புநிலை (பிரைவஸி) உள்ளிட்டவை அடங்கும்.
- அடிப்படையில் அனைவருக்கும் குறைந்த கட்டணத்தில் மருத்துவ சேவை வழங்கும் கடமையை அரசு ஏற்றுக் கொள்கிறது.

SURESH' IAS ACADEMY

## செலவு

- தனியார் மருத்துவமனையைப் பொறுத்தவரை, அவர்கள் வழங்கும் அவசர சிகிச்சை உதவிக்கான கட்டணத்தை ராஜஸ்தான் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று தெளிவாகவே குறிப்பிடுகிறது.
- எந்தக் காரணத்தைக் கொண்டும் மருத்துவமனைகள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மறுப்பதைத் தடுப்பதுதான் மசோதாவின் நோக்கம்.
- அவசர சிகிச்சைக்குப் பிறகு நோயாளிகள் விரும்பினால் அதே மருத்துவமனையில் கட்டணம் செலுத்தித் தொடரவும், இல்லையென்றால் அரசு மருத்துவமனைகளுக்கு மாறிக்கொள்ளவும் வழிவகை செய்கிறது இம்மசோதா.

## அச்சம்

- இந்த மசோதா சட்டமாகுமேயானால் தங்களது தற்போதைய வணிக நடைமுறை பாதிக்கப்படும் என்று தனியார் துறை மருத்துவர்கள் அச்சப்படுகிறார்கள்.
- இதன் மூலம் இலவச சிகிச்சை வழங்கக் கட்டாயப்படுத்தப்படுவோம் என்பதுதான் அவர்களது வாதம். தங்களது அன்றாடச் செயல்பாடுகளில் அரசின் தலையீடு அதிகரிக்கும் என்பதும் அவர்களது அச்சம்.
- தமிழகத்தில் 'இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48' என்கிற திட்டம் 2021-இல் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது.

## தமிழ்நாடு

- தமிழக அரசின் திட்டம் விபத்துகளுக்கு மட்டும்தான் என்றால், ராஜஸ்தானின் மருத்துவத்துக்கான உரிமைத் திட்டம் அனைத்து அவசரகால சிகிச்சைகளுக்குமானது.
- மருத்துவ சிகிச்சையில் வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையே போராடும் கட்டம் மிகவும் முக்கியமானது.
- ஏற்கெனவே அரசியல் சாசனத்தின் 21-ஆவது பிரிவின்படி, எந்தவொரு நோயாளிக்கும் அவசர மருத்துவ சிகிச்சையை மறுக்க முடியாது.
- 1989-இல் உச்சநீதிமன்றம் இதை உறுதிப்படுத்தியிருக்கிறது. அரசியல் சாசனப் பிரிவு 38-உம், 47-உம் கூட ராஜஸ்தான் அரசின் மருத்துவத்துக்கான உரிமை மசோதாவுக்கு வலுசேர்ப்பதாக அமைகின்றன.

## வரவேற்பு

- இந்தியாவின் அரசு மருத்துவமனைகள் முறையாகவும், திறமையுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்படுமானால், இப்படியொரு மசோதாவுக்கான தேவையே எழுந்திருக்காது.
- உலக வங்கியின் கணக்குப்படி, 2019-இல் மருத்துவத்துக்கான செலவு தனிமனித வருமானத்தில் 54%. அப்படியிருக்கும்போது இதுபோன்ற மசோதாக்கள் வரவேற்கப்பட வேண்டுமே தவிர, நிராகரிக்கப்படக்கூடாது.

# இணையச் சமத்துவம்

- தலைமுறைச் சமத்துவம் : பெண்களின் உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல் என்பது 2020இன் குறிக்கோளாக இருந்தது.
- 2021-இல் பெண்களின் தலைமைத்துவம் : கோவிட்-19 உலகில் சமமான எதிர்காலத்தை எட்டுதல்
- 2022-இல் 'நிலையான நாளைக்கான இன்றைய பாலினச் சமத்துவம்'
- 2023-க்கான குறிக்கோள், 'சமத்துவத்தை ஏற்போம்'

## இணையத்தை அணுகாப் பெண்கள்

- இணையத்தை 37% பெண்கள் பயன்படுத்துவதில்லை.
- ஆண்களைவிட 25.9 கோடிப் பெண்கள் குறைவாகவே இணையப் பயன்பாட்டை கொண்டுள்ளார்கள்.
- டிஜிட்டல் மற்றும் ஆன்லைன் துறையில் நிலவும் பாலின இடைவெளி, டிஜிட்டல் துறையில் பாலின வறுமை ஆகியவை களையப்பட வேண்டும்.

## பொருளாதார அதிகாரமின்மை

- டிஜிட்டல் மற்றும் இணையத்தை அணுகுவதற்கும் பயன்படுத்துவதற்கும் அடிப்படைக் கல்வியறிவே போதுமானது. அதேசமயம், தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடுதலான கல்வியறிவும் நுணுக்கமான தகவல் தொழில்நுட்ப அறிவும் தேவைப்படுகின்றன.

- கல்வியறிவில் பாலினச் சமத்துவத்தை எட்டமுடியாத நிலையில், டிஜிட்டல் பாலினச் சமத்துவதை எட்டுவது என்பது சாத்தியமில்லாத ஒன்று. கல்வியறிவு பெறுவதில் ஆண்களை ஒப்பிடப் பெண்கள் பின்தங்கியே இருக்கின்றனர்.
- இணையப் பயன்பாடு என்பது பொருளாதாரம் சார்ந்ததாகவும் உள்ளது. பெரும்பான்மைப் பெண்கள் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டவர்களாக இன்றும் உள்ளார்கள்.
- பொருளாதாரத்தின் மீது உரிமை கொள்ளுதலும் செலவு செய்வதில் அதிகாரம் கொள்ளுதலும் பெண்களுக்கு இன்னும் தொலைவில்தான் உள்ளன.
- இன்னும் 25 ஆண்டு காலத்தில் வேலைவாய்ப்பு என்பது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் இவற்றைச் சார்ந்துதான் அமையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- இதனால் டிஜிட்டல் மற்றும் இணையப் பயன்பாட்டில் நிலவும் பாலின இடைவெளி, சமவேலைவாய்ப்பு என்கிற நிலையில் மிகப்பெரிய இடைவெளியை எதிர்காலத்தில் உருவாக்கும்.

### இணையக் குற்றங்கள்

- இணையப் பரப்பில் மகளிருக்கு எதிராக நிகழும் வன்முறையும் பெண் குழந்தைகளுக்கு எதிரான ஆபத்துகளும் மிக மிக அதிகம்.
- எங்கிருந்து, யாரால் நிகழ்த்தப்படுகின்றன என்பதை எளிதில் அரிய இயலாத நிலையில், இணைய வன்முறையின் வீரியம் பெண்களையும் பெண் குழந்தைகளையும் அப்பரப்பிலிருந்து விலகிச் செல்ல வைத்து விடுகிறது.

### புரிந்துகொள்ளுதலின் அவசியம்

- பெண்-ஆண், ஏழை-பணக்காரர் என்பது போலப் பெண்களின் கீழ்-மேல்தட்டுப் பெண்கள் இருப்பதையும், பெண்ணியம் பெரும்பாலும் மேல்தட்டுப் பெண்களையே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது என்பதையும், அவர்களது பிரச்சினையே கவனத்தில் எடுக்கப்படுகிறது என்பதையும் இந்த மகளிர் தினக் குறிக்கோள்கள் மூலம் உணர முடிகிறது.

## தங்க மங்கையர்

- 65 நாடுகளைச் சேர்ந்த 324 வீராங்கனைகள் 12 எடைப்பிரிவுகளில் பங்கேற்றன.
- நிகாத் ஜரீன், லவ்லினா போராகைன், நிது கங்காஸ், சவீட்டிபோரா ஆகிய நால்வரும் இந்தியாவுக்கு ஈட்டித் தந்திருக்கும் பெருமை சாதாரணமானதல்ல.
- நான்கு தங்கப் பதக்கங்களுடன் உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா முதலிடம் வகித்த அவர்களது சாதனை உதவியிருக்கிறது.
- 2006-இல் இதே போன்ற சாதனையை இந்தியாவைச் சேர்ந்த நான்கு குத்துச்சண்டை வீராங்கனைகள் நிகழ்த்தினார்கள்.
- மேரி கோம், சரிதா தேவி, கே.சி.லேகா, ஆர்.எல்.ஜென்னி ஆகிய நால்வரும் தங்கப்பதக்கங்களை 2006-இல் குவித்ததற்கும், இப்போதைய வெற்றிக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது.
- அப்போது மகளிர் குத்துச்சண்டை போட்டி ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெறவில்லை. 2012-இல் ஒலிம்பிக்கில் மகளிர் குத்துச்சண்டை போட்டி இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, லண்டன் ஒலிம்பிக்கில் மேரி கோமும், டோக்கியோ ஒலிம்பிக்கில் லவ்லினாவும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.
- ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியைச் சேர்ந்த வீராங்கனைகளின் சாதனைகள், 2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதால், இது முக்கியத்துவம் பெறுகிறது.
- இதுவரை ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம்தான் நம்மால் பெற முடிந்திருக்கிறது. பாரீஸ் ஒலிம்பிக்கில் மகளிர் குத்துச்சண்டை அணியினர் தங்கப்பதக்கம் வெல்லக்கூடும் என்கிற எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது.
- தில்லியில் நடந்த உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன் ஷிப் போட்டிகள்.

## கடலுக்குள் 30,000 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள்

### திட்டம்

- ராமேசுவரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையிலான கடல் பகுதிகளில், கடலுக்குள் 30 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகளை அமைக்க மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

- இந்த திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாக (நோடல் போர்ட்) தூத்துக்குடி வஉசி துறைமுகத்தை அமைச்சகம் நியமித்துள்ளது.
- கடலுக்குள் காற்றாலைகளை அமைப்பது தொடர்பாக, டென்மார்க் மற்றும் நார்வே நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் ஏற்கெனவே ஆய்வு செய்து, மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

### 2 ஜிகாவாட் திறன்

- நிலப்பரப்பில் அமைக்கப்படும் காற்றாலைகளில் 2 மெகாவாட் அளவுக்குத்தான் மின்சார உற்பத்தி செய்ய முடியும்.
- ஆனால், கடலுக்குள் அமைக்கப்படும் காற்றாலைகளில் 15 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.
- இந்த காற்றாலைகளின் இறகுகள் மிகவும் பெரிதாக இருக்கும். காற்றாலை உதிரி பாகங்களை தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் இணைத்து, கடலுக்குள் குறிப்பிட்ட தொலைவுக்குக் கொண்டு சென்று அவை நிறுவப்படும்.

## அனைவருக்குமான அறிவியல்

- ரூ.12,600 கோடி திட்டமாக மகாராஷ்டிராவில் ஈர்ப்பு அலை கண்டறிதல் வசதியை அமைக்க மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இரட்டை லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் ஈர்ப்பு அலை கருவிகளைக் கொண்ட கண்காணிப்பகமானது டிடக்டரை கொண்டிருக்கும்.
- அமெரிக்காவில் ஏற்கெனவே இது செயல்பாட்டில் உள்ளது. புவியீர்ப்பு அலைகளை கண்டறிதல் 2016-ல் வானியலில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்க வழிவகுத்தது.
- வானத்தில் உள்ள ஈர்ப்பு அலைகளின் ஆதாரங்களை கண்டறிவதற்கான கூட்டுத்திறனை மேம்படுத்துவதற்காக LIGO இந்தியாவின் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக 3-வது டிடக்டர் அமைப்பானது இந்தியாவில் கட்டமைக்கப்பட உள்ளது.
- அமைச்சரவையானது இரண்டு கூறுகளில் ஒப்புதல் அளித்துள்ளது. முதலாவதாக இந்தியா ஈர்ப்பு இயற்பியல் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் துல்லியமான தொழில்நுட்பங்களை கையாளுதல், அதிநவீன கட்டுப்பாட்டு அமைப்புகளை கையாளுதல் ஆகியவற்றின் உலகளாவிய தளமாக மாற்றுதல்.
- இது பெரிய அறிவியல் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான சூழலை உறுதிப்படுத்துகிறது. இந்த கண்காணிப்பகத்தின் கட்டமைப்பிற்கான நிதியை சரியான நேரத்தில் விடுவிப்பதும், ஒதுக்கப்பட்ட ஆதாரங்களை தாமதமின்றி வழங்குவதும் இங்கு தொடக்கத் தேவையாக உள்ளது.
- இரண்டாவதாக, LIGO இந்தியா திட்டமானது இந்திய சமூகத்தின் அறிவியல் உடனான உறவினை பெரிய அறிவியலில் கிடைத்துள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி புத்திசாலித்தனமாக கணக்கிடுகிறது.
- சமீபத்தில் சலாகேரே அறிவியல் நகரம் மற்றும் இந்தியாவை தளமாகக் கொண்ட நியூட்ரினோ ஆய்வகம் உள்ளிட்ட திட்டங்களுடன் இந்தியா போட்டியுடனான உறவைக் கொண்டுள்ளது.
- இயற்கை வளங்களின் நிலையான பயன்பாடு, கார்பன் இலக்குகள், நியாயமன மாற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் பின்னணியில் நிலபயன்பாட்டு மாற்றத்திற்கான தவிர்க்கமுடியாத தாக்கங்களுடன் கூடிய நிலஉரிமைகள் மீதான உரிமை அதிக நிலபயன்பாடு வேண்டும்.
- எடுத்துக்காட்டு ஹவாயின் 30 மீட்டர் தொலைநோக்கியானது உள்ளூர் மக்கள் புனிதமாக கருதும் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது.
- நிலங்களை இயற்பியல் பயன்பாட்டிற்கு பயன்படுத்து தொடர்பான ஒரு கருத்து நிலவுகிறது. அது என்னவெனில் வரலாற்று ஆராய்ச்சியாளர் லியான்ட்ரா ஸ்வேனர் கருத்துப்படி, அறிவியலானது காலனித்துவத்தின் முகவராக செயல்படுகிறது.
- பொருளாதார வளர்ச்சியடைந்த நாட்டில் தேவையான முன்முயற்சியானது LIGO இந்தியா இத்திட்டத்திற்கு சிந்திக்க வேண்டும்.

## 2வது விண்வெளி யுகத்திற்கு மாறுதலுக்கான காத்திருப்பு

- விண்வெளி காலமானது 1957-ல் ஸ்புட்னிக் -1 செயற்கைக்கோள் மூலம் தொடங்கியது. மற்றும் 1961-ல் உலகின் முதல் விண்வெளி நபரான யூரிககரின்-ஆல் தொடங்கியது.
- நீல் ஆம்ஸ்ட்ராங் 1969-ல் நிலவில் நடந்ததன் மூலம் வரலாறை ஏற்படுத்தினார். முதல் விண்வெளி காலமானது உண்மையானதாக மாறியது.
- தற்பொழுது 2-வது விண்வெளிக் காலத்தில் இக்காலம் தொடங்குவதற்கான குறிப்பிட்ட நாள் எதுவும் இல்லை என்றாலும் இன்றைய விண்வெளி காலத்தில் உள்ள வேறுபாடானது வெளிப்படையாக உள்ளது.

- 1950 மற்றும் 1991 இடைப்பட்ட காலத்தில் பனிப்போர் ஆதிக்கம் செலுத்திய காலகட்டமானது வருடத்திற்கு 60 முதல் 120 விண்வெளி ஏவுதல்கள் நடைபெற்றன.
- இவற்றில் 93 சதவீதமானது அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யாவினால் ஏவப்பட்டவை. 3 தசாப்தங்களுக்கு பிறகு விண்வெளி கலத்தில் இன்னும் பல நபர்கள் ஈடுபாட்டுடன் இருந்துள்ளனர்.
- ஆனால் அவற்றில் பெரும்பான்மையானவை தனியார் நிறுவனங்கள் ஆகும். கடந்த ஆண்டு 180 செயற்கைக் கோள்/விண்வெளி ஏவுதல்கள் நடைபெற்றதில் சுமார் 61-ஆனது எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தினுடையது.
- 2020-ல் சுமார் 90 சதவீதமான உலகளாவிய செயற்கைக் கோள் ஏவுதலில் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

## இந்தியாவின் விண்வெளி பயணத்தின் தொடக்கம்

- 1960-களில் இந்தியா தனது முதல் விண்வெளி பயணத்தை மேற்கொண்டது. முதல் சவுண்டிங் ராக்கெட்டானது அமெரிக்கா வழங்கிய நைக் - அப்பாச்சியானது கேரளாவிலுள்ள தும்பா 1963-ல் ஏவப்பட்டது.
- 1969-ல் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமானது ஏற்படுத்தப்பட்டது. இதன் நீண்ட பயணத்திற்குப் பிறகு 15,000 நபர்களை வேலையமர்த்தியுள்ளது மற்றும் வருடத்திற்கு பட்ஜெட் மதிப்பானது ரூ.12,000 கோடி - ரூ.14,000 கோடி வரை உள்ளது.
- இந்த தசாப்தங்களில் சமூக நோக்கங்கள் மற்றும் நன்மைகளுக்கு முன்னுரிமை அளிக்க முயன்றது.
- இதன் முதல் பெரிய திட்டமானது Satellite Instructional Television Experiment (SITE) ஆகும். இது 1975-1976-ம் ஆண்டில் 5 மில்லியன் மக்களை உள்ளடக்கிய 2400 கிராமங்களில் கல்விக்காக ஒரு அமெரிக்க செயற்கைக்கோளை குத்தகைக்கு எடுத்து செயல்படுத்தியுள்ளது.
- செயற்கைக்கோள் தொழில்நுட்பம் ஒரு புதிய வெகுஜன தொடர்பு கருவியாகும்.
- 1980-களில் இன்சாட் பிரிவிற்கு வழிவகுத்தது. அதைத் தொடர்ந்து ஜிசாட் நாட்டின் தொலைத்தொடர்பு மற்றும் ஒளிபரப்பு உள்கட்டமைப்பிற்கு முதுகெலும்பாக அமைந்தது.
- இதைத் தொடர்ந்து தொலை நுண்ணுணர்வு திறன் மேம்பாடு (Remote sensing capability) ஏற்படுத்தப்பட்டது.
- வானிலை முன்னறிவிப்பு, காடுகளின் வள புவியியல் அமைப்பு, விவசாய விளைச்சல், நிலத்தடி நீர் மற்றும் நீர்நிலைகளை பகுப்பாய்வு செய்தல், மீன்வளம் மற்றும் நகர்ப்புற மேலாண்மை ஆகியவற்றிற்கு விண்வெளி அடிப்படையிலான பயன்பாடு படிப்படியாக விரிவடைந்தது.
- இந்திய தொலை நுண்ணுணர்வு திட்டத்தைத் தொடர்ந்து இந்த திட்டம் ஓசன்சாட் மற்றும் கார்ட்டோசாட் தொகுதிகளாக வளர்ந்தது.
- செயற்கைக்கோள் உதவியுடன் வழிச்செலுத்துதல் துறையானது பின்னர் தோன்றியது.
- இந்திய வான்வெளியில் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தை மேம்படுத்த உலகளாவிய இடஅமைவு அமைப்பை (Global Postitioning System) அதிகரிக்க இஸ்ரோ மற்றும் இந்திய விமானநிலைய ஆணையத்தின் கூட்டுத் திட்டமாக ககன் (GAGAN) உருவாக்கப்பட்டது.
- இது தற்பொழுது (Regional Navigation Satellite) என்ற செயற்கைக்கோள் அமைப்பாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- இதற்கு இணையாக செயற்கைக்கோள் ஏவுதல் திறன்களின் வளர்ச்சி ஏற்பட்டது. 1980-களில் SLV-1 தொடக்கத்துடன் இஸ்ரோவானது பத்தாண்டு காலம் எடுத்துக்கொண்டு PSLV தொகுதிகளின் வளர்ச்சிக்கு முன்பு 50 வெற்றிகரமான ஏவுதல்களை நிகழ்த்தியது.

## விண்வெளி அவசியம்

- இரண்டாம் விண்வெளி யுகத்தின் தோற்றமானது இணையத்தின் மூலம் உருவானது. இந்தியாவில் 1990-களில் தனியார் தொலைக்காட்சி சேனல்கள் தோன்றியதால் கேபிள் டிவியை தொடர்ந்து நேரடியாக வீடுகளில் ஒளிபரப்பும் செயல்முறையை துரிதப்படுத்தத் தொடங்கியது.
- செயற்கைக்கோள் கோபுரங்கள் மற்றும் தரை அடிப்படையிலான சேவைகளுக்கான தேவை அதிகரித்தது.
- இன்று பாதிக்கும் மேற்பட்ட கோபுரங்கள் இந்திய வீடுகளில் வெளிநாட்டு செயற்கைக்கோள் மூலம் இயங்குகிறது.
- கடந்த 15 ஆண்டுகளில் மற்றுமொரு மாற்றத்தை கண்டது. இந்த முறை இந்தியா வளர்ந்த நாடுகளுடன் இணைந்த நிலையில் இயங்குகிறது.

- தொலைப்பேசி அமைப்புகளின் காலகட்டத்தைத் தொடர்ந்து ஸ்மார்ட்போன்களானது உலக அளவில் இந்தியாவை இணைய வறுமை மற்றும் இணைய செழிப்புள்ள சமூகமாக காட்டுகிறது.
- பெருந்தரவு இணையம், OTT, 5G அமைப்பானது செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவைகளின் தேவையை ஒவ்வொரு வருடத்திற்கும் இரண்டு இலக்க முறையில் அதிகரிக்கிறது.
- 2020-ல் உலகளாவிய விண்வெளிப் பொருளாதாரமானது 450 பில்லியன் டாலராக மதிப்பிடப்பட்டது.
- 2025-ல் இது 600 பில்லியன் டாலராக உயரும். இந்திய விண்வெளி பொருளாதாரமானது 2020-ல்.9.6 பில்லியன் டாலராக மதிப்பிடப்பட்டது. 2025-ல் 13 பில்லியன் டாலராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இருப்பினும், பொருந்தக்கூடிய கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைக்கான சுற்றுச்சூழலை உயர்த்துவது தேவையாக கருதப்படுகிறது.
- இந்தியவிண்வெளித்துறையானது 2030-க்குள் 60 பில்லியன் டாலரை விட எளிதாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நேரடியாக 2 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்பை உருவாக்கும்.
- இதற்கு காரணம் முடிவு பயன்பாட்டாளர் வருவாயானது அரசாங்கத்தால் வெறும் 5 மட்டுமே உருவாக்கப்படுகிறது. ஊடகம், பொழுதுபோக்கிற்கான இருப்பானது இந்திய விண்வெளிப் பொருளாதாரத்தில் 20% ஆகும்.
- நுகர்வோர் மற்றும் சில்லறை சேவைகளில் 21 சதவீதத்தை கொண்டுள்ளது. விண்வெளி செயல்பாடுகள், கீழ்நோக்கிய செயல்பாடுகள் அதாவது செயற்கைக்கோள் சேவை அது தொடர்பான நில அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த சேவைகளுக்கு 70% க்கும் மேலாக இந்திய விண்வெளி பொருளாதாரத்தில் வழங்கப்பட்டுள்ளது.
- மேல்நோக்கிய செயல்முறைகளுக்கு அதாவது செயற்கைக்கோள் உற்பத்தி மற்றும் ஏவுதல் சேவைகளுக்கு குறைந்த அளவிலான பங்கு செலவிடப்படுகிறது.
- இதேபோன்ற நடைமுறையானது வளர்ந்த நாடுகளில் காணப்படுகிறது. இந்தியா இந்நிலையை முன்கூட்டியே அடைந்ததற்கான காரணம் டிஜிட்டல் செயலி அடிப்படையிலான சேவைகள்.
- தனியார் துறையின் வளர்ச்சிக்கான பங்கானது எண்ணிக்கை அடிப்படையிலான செயற்கைக்கோள் அதனுடைய முதலீட்டாளர்களை கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் வெளி விண்வெளி நடவடிக்கைகளுக்கான அலுவலகத்தின்படி (United Nations Office for Outer Space Affairs (UNOOSA) 8,261 செயற்கைக்கோள்கள் புவியைச்சுற்றி உள்ளது. அதில் 5,000 ஆனது செயல்பாட்டில் உள்ளது.
- 2010 வரை 60 முதல் 100 செயற்கைக்கோள்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளன. இந்த வேகமானது தற்காலத்தில் அதிகரித்துள்ளது.
- 2020-ஆம் ஆண்டில் 1283 செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டுள்ளன. தற்பொழுது, ஸ்டார்லிங்க் நிறுவனமானது கிட்டத்தட்ட 3500 செயற்கைக்கோள்களை நிறுவி செயல்படுத்துகிறது.
- இதற்கு ஒரு மில்லியன் அளவிற்கு பணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.
- ஸ்டார்லிங்க் மற்றும் ஒன்வெப் (இவற்றில் ஏர்டெல் நிறுவனம் பங்குதாரராக உள்ளது) இணைந்து 40,000 செயற்கைக் கோள்களை நிறுவியுள்ளன.
- உலகம் முழுவதிலுமான குறைந்த தாமதம் கொண்ட இணைய இணைப்புகளை வழங்குவதற்காக ஜேப்பெசாஸ்-ன் அமேசான் நிறுவனமானது குயிப்பர் திட்டத்தை ஏவியது.
- இந்தத் துறையானது எப்படி ஒழுங்குபடுத்துவது என்பது சவாலாக உள்ளது. இருப்பினும் இது விரிவாக்கத்தின் வாய்ப்பினை வழங்குகிறது.

## அணுகுவதற்கான சுற்றுச்சூழலை உருவாக்குதல்

- இந்தியதனியார்துறை இரண்டாம் விண்வெளி யுகத்தின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து வருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு டஜன் விண்வெளி ஸ்டார்ட் அப்களில் இருந்து, இன்று 100க்கும் மேற்பட்டவை உள்ளன.
- முதலீட்டின் வேகம் அதிகரித்து வருகிறது. 2018-ல் $3 மில்லியனில் இருந்து 2019ல் இருமடங்காகி, 2021-ல் $65 மில்லியனைத் தாண்டியது.

- 1990-களில் நாட்டின் பொருளாதாரத்திற்கு தகவல் தொழில்நுட்பத்துறை செய்ததைப் போல இந்தத் துறையானது ஒரு உருமாறும் வளர்ச்சி பெருக்கத்திற்கு தயாராக உள்ளது.
- இன்று இஸ்ரோ ஆண்டுதோறும் 4 முதல் 5 ஏவுகணைகளை நிர்வகிக்கிறது. இது 53 செயல்பாட்டு செயற்கைக் கோள்களை நிர்வகிக்கிறது, 21 தகவல் தொடர்பு, 21 புவிக் கண்காணிப்பு மற்றும் 8 வழிச்செலுத்துதல் அமைப்பு மீதமுள்ளவை அறிவியல் (சீனா 541 செயற்கைக்கோள்களை நிர்வகிக்கிறது) சோதனைக்கான செயற்கைக் கோள்களை நிர்வகிக்கிறது.
- கூடுதலாக இஸ்ரோ சந்திரயான், மங்கள்யான், ககன்யான் திட்டங்களைக் கொண்டுள்ளது.
- இஸ்ரோவானது எப்பொழுதுமே ஒரு திறந்த அமைப்பாக இந்திய தனியார்துறையுடன் இணைந்து செயல்படுகிறது. இருந்தபோதிலும் சில தனியார் துறை நிறுவனங்களுக்கு விண்வெளி தொழில்நுட்பம் தொடர்பான வேலையானது அவர்களுடைய வருவாய் சிறிய அளவில் உள்ளது.
- தொடக்கநிலை நிறுவனங்கள் வேறுபட்டவை. இவர்களுடைய வருவாய் ஆதாரமானது விண்வெளி தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் இஸ்ரோ, அரசாங்கத்தின் தேவையை எதிர்பார்த்துள்ளது.
- இஸ்ரோவானது தற்பொழுது செயல்படுத்துபவராகவும், பயன்பாட்டாளராகவும், சேவை வழங்குபவராகவும், உரிமம் பெற்றவராகவும், விதிகளை உருவாக்குபவராகவும், பாதுகாக்கும் அமைப்பாகவும் உள்ளது.
- இந்தியா முதல் காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு மற்றும் தன்னுடைய வளத்தைக் கொண்டு எந்த முறையில் செயல்பட வேண்டும் என தரமான மனித சக்தியை பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.
- உண்மையாக கூறவேண்டுமெனில் அரசாங்கமானது  இது தொடர்பாக, யோசனையை வழங்குகிறது.
- 2017-ல் முதலாவது விண்ளெி நடவடிக்கைகளுக்கான கொள்கை வரைவானது பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் 2019-ல் காலாவதியானது.
- PSLV மற்றும் SSLV ஏவுதல் சேவைகளை வணிகமயமாக்குவது தொடர்பாக பேச்சுகள் உள்ளது.
- ஆண்ட்ரிக்ஸ்-க்கு பதிலாக நியூ ஸ்பேஸ் இந்தியா கழகமானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்திய தேசிய விண்வெளி தொழில் முன்னேற்ற ஆக்க முயற்சி மற்றும் அங்கீகார மையமானது 2020-ல் (IN-SPACE) ஏற்படுத்தப்பட்டது. இது ஒற்றைச்சாளர அனுமதியினை தனியார் துறைக்கு வழங்கியது.
- இருந்தபோதிலும் இந்த அமைப்பானது உரிமம் வழங்கும் அதிகாரம் பெற்ற அமைப்பா அல்லது ஒழுங்குபடுத்தும் அமைப்பா என்பது தெளிவாக குறிப்பிடப்படவில்லை.
- இந்திய விண்வெளி அசோசியேஷன் ஆனது தொழில்துறை அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.
- தற்போதைய ஆண்டுகளில் கொள்கை அடிப்படையிலான பல தொகுதிகளான தாள்கள் சுற்றிற்கு விடப்பட்டு விவாதிக்கப்படுகிறது - satcom/telecom policy, an earth observation policy and a foreign direct investment policy.
- இவை சில தேவைகளுக்கான சேவை வழங்குகிறது. தற்போது எது தேவையெனில் சட்டம்.
- கொள்கை தாள்களில் இவை குறிப்பிடப்படுவதில்லை. இந்தியா இரண்டாவது விண்வெளி காலகட்டத்தில் நுழைவதற்கான சாளரமானது உள்ளது. இது இழக்கப்படுவதில்லை.

## உப்பைக் குறைக்கும் கொள்கை

- மக்கள் உணவில் சேர்த்துக் கொள்ளும் உப்பின் அளவில் 30%ஐ, 2025ஆம் ஆண்டுக்குள் குறைக்க, உலக நாடுகள் நடவடிக்கை எடுக்கும்படி உலக சுகாதார நிறுவனம் ஓர் உணவுக் கொள்கையை 2013-இல் கொண்டு வந்தது.
- அந்தக் கொள்கையை உலக நாடுகள் எப்படிப் பின்பற்றுகின்றன என்பதைக் கடந்த ஆண்டில் அவதானித்து, அண்மையில் ஓர் அறிக்கையை (Global report on sodium intake reduction) அது வெளியிட்டுள்ளது.
- உலகில் மொத்தம் ஒன்பது நாடுகள் மட்டுமே இந்த உணவுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும், 73% நாடுகள் இதில் ஆர்வம் காட்டவில்லை என்பதால், இதற்கான காலக்கெடுவை 2030 ஆம் ஆண்டுக்குத் தள்ளிப்போட யோசிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மனித உயிர்களைக் காக்க உதவும் இந்த இன்றியமையாத கொள்கையைப் பின்பற்றுவதில் இந்தியாவும் பின்தங்கியுள்ளது என்பது கவலைக்குரியது.

## உப்புக் குறைப்பின் அவசியம்

- உயர் ரத்த அழுத்தம் ஏற்படப் பலதரப்பட்ட காரணங்கள் இருந்தபோதிலும், மிகை உப்புப் பயன்பாடு அனைவருக்குமான பொதுவான காரணமாகக் கருதப்படுகிறது.
- இயல்பான ரத்த அழுத்தம் இருப்பவர்களைவிட, உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் உப்பு விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியது முக்கியம். ஒருவர் ஒரு நாளைக்கு 5 கிராமுக்கும் குறைவாகவே சமையல் உப்பை (சோடியம் குளோரைடு) பயன்படுத்த வேண்டும் என்கிறது உலக சுகாதார நிறுவனம்.
- அப்படியானால், 2 கிராமுக்கும் குறைவாகவே சோடியம் அந்த நபருக்குக் கிடைக்கும்.
- அதன் மூலம், 4 மி.மீ அளவுக்கு ரத்த அழுத்தம் அவருக்குக் குறையும். ஆனால், இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் சராசரியாக ஒரு நாளைக்கு 10 கிராமுக்கும் அதிகமாக உப்பைப் பயன்படுத்துவது நடைமுறை.

## மறந்துபோகும் மறைமுக உப்பு

- உப்புப் பயன்பாடு என்றதும் நமக்குத் தெரிவது வீட்டுச் சமையல் உப்பு மட்டும்தான்.
- அதனால்தான், உயர் ரத்த அழுத்தத்துக்காகச் சிகிச்சைக்குச் செல்லும்போது, உப்பைக் குறைக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னால் வீட்டில் உப்பைக் குறைத்துத்தான் சாப்பிடுகிறோம் என்றே அநேகரும் பதில் சொல்வார்கள்.
- அவர்கள் மறந்து போவது மறைமுக உப்பை. அது என்ன மறைமுக உப்பு? வீட்டில் அல்லாமல் வெளியில் வாங்கிச் சாப்பிடும் சக்கை உணவு வகைகள் (Junk foods) அனைத்திலும் உப்பு அதிகமாக இருக்கிறது.
- ‘ஊடுகொழுப்பு’ (Transfat) உள்ள தின்பண்டங்களில் அதீதமாக உப்பு பயன்படுத்தப்படுகிறது. துரித உணவு வகைகளிலும், பதப்படுத்தப்பட்ட, பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட எல்லா உடனடி உணவுகளிலும் உப்பு கூடுதலாகவே இருக்கிறது. சுவை கூட்டும் ‘அஜினோமோட்டோ’விலும் உப்பு இருக்கிறது.
- ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாடு பாப்கார்ன், சிப்ஸ் போன்றவற்றில் உப்பு இருப்பது பலருக்குத் தெரியும்.
- இனிப்பு உணவு வகைகளிலும் உப்பு இருக்கும் விஷயம் நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?
- ஐஸ்கிரீம், கேக், சாக்லேட், பிஸ்கட், சாஸ், மென்பானங்கள் என இந்தப் பட்டியல் மிகப் பெரியது.
- பானங்களில் சோடாவிலும் சூப்பிலும் மட்டுமல்ல, கோலா பானங்களிலும் இன்ஸ்டன்ட் காபியிலும்கூட உப்பு இருக்கிறது.
- அதனால்தான் உலக சுகாதார நிறுவனம் கவலைப்படுகிறது. உணவில் உப்பைக் குறைத்து ரத்த அழுத்தம் கூடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென அந்நிறுவனம் அறிவுறுத்துகிறது.

## உயர் ரத்த அழுத்தம்

- உயர் ரத்த அழுத்தம் காரணமாக இதயநோய், பக்கவாதம், சிறுநீரக நோய், நீரழிவு, பார்வை பாதிப்பு உள்ளிட்ட பலதரப்பட்ட தொற்றா நோய்கள் வருவதை மருத்துவ உலகம் உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த இடத்தில், உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள எச்சரிக்கையைக் கவனிக்க வேண்டும். இந்தியாவில் உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் 22 கோடிப் பேர்; இவர்களில் 12% பேர் மட்டுமே தங்கள் ரத்த அழுத்த அளவைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்; மற்றவர்கள் கட்டுப்பாடில்லாத ரத்த அழுத்தம் காரணமாக மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு இடமளிப்பவர்களாக இருக்கின்றனர்.
- இன்னொன்று, நாட்டில் 49.2% ஆண்களும், 38.5% பெண்களும் கூடிய விரைவில் உயர் ரத்த அழுத்தம் சாத்தியம் உள்ளவர்களாகவும் (Pre-hypertensive) இருக்கின்றனர் என்று கவலை தெரிவிக்கிறது உலக சுகாதார நிறுவனம்.
- மேலும், உயர் ரத்த அழுத்தம் காரணமாக இந்தியாவில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆண்டுகளில் 31% அதிகரிக்கிறது.
- தினமும் 2.5 கிராம் உப்பைக் குறைத்துக் கொள்வதன் வழியாக 5 மி.மீ ரத்த அழுத்தம் குறையும்.
- அதன் பலனாக, 22% பக்கவாத நோயாளிகளையும் 1% மாரடைப்பு நோயாளிகளையும் குறைத்து விடலாம்.
- அதேநேரம், உப்பைக் குறைக்காவிட்டால் ஒரு மதிப்பீட்டின்படி, இந்தியா 2012-2030ஆம் ஆண்டுக்குள் இதயநோய் தொடர்பான சிகிச்சைகளுக்கு மட்டும் 2 லட்சம் கோடி டாலர்களுக்கும் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும்.
- மேலும், உப்புப் பயன்பாடு குறைப்புக் கொள்கை மூலம் 2030க்குள் உலகம் முழுவதும் ஒரு கோடி மக்களை இறப்பிலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது.

### பிற நாடுகளின் செயல்பாடுகள்

- உலக சுகாதார நிறுவனத்தின் இந்த அறைகூவலின்படி, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளில் சோடியத்தின் அளவை நைஜீரியாவும் சவுதி அரேபியாவும் கட்டுப்படுத்தியுள்ளன.
- சோடியம் மிகுந்த உணவு வகைகளை ஊடகங்களில் விளம்பரம் செய்ய பிரேசில் கட்டுப்பாடு விதித்துள்ளது.
- சிலி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உணவுப்பொருள் தொடர்பான பாக்கெட்டுகளின் வெளிப்புறத்தில் 'சோடியம் குறைந்தது', 'சோடியம் மிகுந்தது' எனத் தனித்தனி வண்ணங்களில் நுகர்வோருக்குத் தெரியும் விதமாகப் பெரிதாக அச்சிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- சீஷெல்ஸ் நாட்டுப் பள்ளிகளில் சோடியம் குறைந்த உணவு வகைகளை வழங்கத் தனித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஹங்கேரியில் சோடியம் மிகுந்த மென்பானங்களுக்கும் நொறுவைகளுக்கும் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது.
- உணவு விடுதிகளில் சோடியம் குறைந்த மாற்று உணவு வகைகளும் கிடைக்க சீனா ஏற்பாடு செய்துள்ளது.

### தேவை நவீனத் திட்டங்கள்

- இந்தியாவில் இந்த உணவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குச் ''சரியாகச் சாப்பிடுவோம் இந்திய இயக்கம்' (Eat right India) திட்டத்தை இந்திய உணவுப் பாதுகாப்பு - தர நிர்ணய ஆணையம் (FSSAI) 2018-இல் கொண்டுவந்தது.
- சேவை அமைப்புகள் மூலம் நுகர்வோருக்குக் கையேடுகளைக் கொடுத்து, அவர்களாகவே சோடியம் குறைந்த உணவைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட வழிகாட்டும் திட்டம் இது.
- அடுத்தது இன்று முதல் சற்றே குறைவாக எனும் பெயரில் பிரபல பாலிவுட் நடிகர் ராஜ்குமார் ராவ் மூலம் காணொலி வாயிலாக நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றது. இந்த இரண்டுமே தோல்வியடைந்த திட்டங்கள்
- ஆகவே, வெளிநாடுகளில் உள்ளதுபோல் மேம்பட்ட திட்டங்களை மத்தியஅரசு கொண்டுவர வேண்டியது காலத்தின் கட்டாயம்.
- முக்கியமாக, மத்திய-மாநில அரசுகளுடன் நுகர்வோர், தொழிலதிபர்கள், ஊட்டச்சத்து வல்லுநர்கள், கல்வியாளர்கள் இணைந்து மாற்றுத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.
- சோடியம் குறைந்த புதிய உப்பைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகளை அரசு ஊக்கப்படுத்த வேண்டும். அப்போதுதான் பள்ளிக் குழந்தைகள் முதல் பெரியோர் வரை, படித்தோர் முதல் பாமரர் வரை அனைவருக்கும் சோடியம் உப்பு குறித்த புரிதல் மேம்படும்.
- அதன் பலனாக, உப்பு தொடர்பான இந்த உணவுக் கொள்கை இந்தியாவிலும் வெற்றி பெறும்.

## நிலவில் கட்டடம் : சீனா திட்டம்

- உலகிலேயே முதன்முதலாக நிலவின் மறுபக்கத்தில் சாங்கி-4 என்ற விண்கலத்தை தரையிறக்கியது.
- அடுத்து, நிலவில் பருத்தி செடியை வளர்த்து அந்நாடு சாதனை செய்தது.
- நிலவில் உள்ள மண்ணை எடுத்து செங்கல் செய்து, அதன் வாயிலாக அங்கு கட்டடம் கட்ட உள்ளனர். இதற்காக 'பிரத்யேக ரோபோ' தயாரிக்கப்பட்டுள்ளது.
- நிலவின் மறுபக்கத்தில் இருந்து மண் மாதிரிகளை எடுத்து வர, 2025-ல் 'சாங்கி-6' விண்கலம் அனுப்பப்படும்.
- நிலவில் கட்டடம் கட்டும் திட்டத்துடன் 2028-ல் ரோபோவுடன் 'சாங்கி-8' விண்கலம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## தற்போதைய ஒழுங்குமுறை அமைப்பானது செயற்கை நுண்ணறிவுக்கு போதுமானதா?

- செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் வரிசைப்படுத்தப்பட்ட வளர்ச்சியானது தனியுரிமை, ஏகபோக உரிமை மற்றும் வேலை இழப்புகள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது.
- அதனால் தனிநபர் மற்றும் அரசாங்கங்களால் AI-ஐ தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுக்க நாடுகள் விதிமுறைகளை வடிவமைக்க முயற்சிக்கின்றனர்.

### AI-க்கு நாம் பயப்பட வேண்டுமா? மற்ற இடையூறு விளைவிக்கும் தொழில்நுட்பங்களிலிருந்து AI வேறுபட்டதா?

- தொழில்நுட்ப மாற்றம் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை மேம்படுத்துகிறது.

- 200 ஆண்டுகளுக்கு முன்னதாகவோ, 5000 ஆண்டுகளுக்கு முன்னதாகவோ உள்ள தொழில்நுட்பமாக இருந்தாலும், தற்போதுள்ள மக்கள் அந்த தொழில்நுட்பத்தால் மேம்பட்ட நிலையில் உள்ளனர்.
- AI என்பது சிறப்பானதோ (அ) வேறுபட்ட ஒன்றோ எதுவும் இல்லை. இது உற்பத்தித் திறனை அதிகரிக்க பயன்படுத்தப்படும் மற்றொரு இயந்திரமாகும்.
- பொதுவாக சமூகத்தில், AI என்பது கொலை செய்யும் ரோபோ என நம்மில் பலர் கருதுகின்றனர். AI தன்னிச்சையாக மாறுவது காரணமாக கூறப்படுகிறது.
- இருப்பினும், முதன்மையான அபாயம் என்பது மற்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டதைப் போன்று அதே மாதிரியான அபாயம் AI-யிலும் காணப்படுகிறது.
- எவ்வாறு அரசியல் அமைப்புகள் அந்தத் தொழில்நுட்பங்களை எவ்வாறு ஒருங்கிணைக்கின்றன என்பதுதான்.
- சில AI-அடிப்படையிலான அமைப்புகள் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன.
- சில காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உதாரணம் : இந்தியாவில் உள்ள விமான நிலையங்கள் சட்ட அமலாக்க முகமைகளில் முகத்தை அடையாளம் காண AI பயன்படுத்தப்படுகிறது.
- எந்தவொரு புதிய தொழில்நுட்பத்தின் சமூக பொருளாதார தாக்கத்தைப் பற்றிய விமர்சன ரீதியான சிந்தனை ஆராய்ச்சி மற்றும் புரிதல் அதிக அளவில் இருக்க வேண்டும்.
- விரிவாக AI-ஐ விவாதித்தால், AGI எனும் ஒரு பயனுள்ள சொற்றொடர் உள்ளது.
- இது செயற்கை பொது நுண்ணறிவைக் குறிக்கிறது. இதை மனித மனதின் தனித்துவத்தையும், திறனையும் வலியுறுத்த மக்கள் பயன்படுத்துகின்றனர்.
- மனித மனதிற்கு பொது அறிவு உண்டு. (ஒரு பிரச்சினையை தீர்த்தலுக்கான அறிவு) இது இயந்திரங்களிடம் இல்லை. அதனால் AI தொடர்பான தளர்வான பேச்சுக்கள் உள்ளன.
- Chat GPT என்பது இணையத்தில் எழுதப்பட்டிருந்த வெறும் மிகப் பெரிய தரவுத் தளமாகும்.
- மனித உணர்வுகள் கொண்டது என தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது.
- AI என்ற வார்த்தையானது சந்தைப்படுத்தலுக்கான விளம்பரம்.

## AI–யிலிருந்து எழும் தனியுரிமை மற்றும் போட்டி அச்சுறுத்தல்களைச் சமாளிக்க தற்போதைய ஒழுங்குமுறை அமைப்பு போதுமானதாக உள்ளது என கருதுகிறீர்களா?

- இந்தியாவில் தொழில்நுட்ப கொள்கை தளத்தில் உள்ள ஒரே ஒரு கேள்வியானது எதிர் சமநிலை தாக்கங்கள்
- மக்களைப் பற்ற அரசாங்கத்திடம் என்ன வகையான தரவு இருக்க வேண்டும்? மக்கள் மீது அரசாங்கத்திற்கு என்ன வகையான கண்காணிப்பு அதிகாரம் இருக்க வேண்டும்?
- அரசாங்கங்கள் ஒரு குறிப்பிட்ட வழியில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படும் புதிய வகையான தீங்குகள் என்ன?
- நவீன கணினி தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் நமது வாழ்வில் தெளிவுத் தன்மை பற்றி ஒரு பெரிய கவலை உள்ளது?
- நம் வாழ்வின் பாதையானது அரசாங்கத்தின் முன் வெளிப்படையாக உள்ளது.
- கொள்கை ரீதியான உரையாடலுக்கு அப்பால், முக அங்கீகாரம் போன்ற குறிப்பிட்ட பயன்பாட்டு தேவைகளுக்கான தனியுரிமை, தீர்ப்புக்கான உரிமையின் கீழ் உச்சநீதிமன்ற தேவைகளானது AI அடிப்படையிலான அமைப்பை பயன்படுத்த சட்டங்கள் தேவை.
- மாநில அரசுகள் (ம) காவல் நிலையங்கள் இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன.
- பல்வேறு சூழல்களில் இதில் தவறுகள் ஏற்பட்டுள்ளது.
- இதனால் தனிமைப்படுத்துதல், துன்புறுத்தல் ஏற்படுத்தலாம். எனவே கட்டுப்பாடு நிலை இருக்க வேண்டும்.
- AI சுற்றி ஐரோப்பாவில் நடக்கும் உரையாடல், இடர் மதிப்பீடு அணுகுமுறை (ஐரோப்பா மற்றும் பிறநாட்டில் AI ஏற்றுக் கொள்ளப்பட்டது).
- Open AI, Microsoft, Face book (META) போன்ற நிறுவனங்கள் போட்டியில் உள்ளன.
- AI-யின் மீதான சீனாவின் சர்வாதிகாரப் பயன்பாட்டிற்கு எதிராக இந்திய AI கையாள்வதை எப்படி பார்க்கிறீர்கள்?
- சீன அரசானது பயர்வாலை ஏற்படுத்தி சீனாவிலுள்ள இணைய பயனர்களின் எண்ணிக்கையை துண்டித்துள்ளது.
- இந்தியாவைப் போன்று அல்லாமல் இந்திய பயனர்களை பல இணையதளங்களில் துண்டித்துள்ளனர்.

- சீனாவில் ஆளும் கட்சியுடன் தொடர்புடையவர்கள். உலகளாவிய தயாரிப்புகளை போல தோற்றமளிக்கும் தயாரிப்புகளை உருவாக்க ஏகபோக அதிகாரங்களை பெறுகிறார்கள்.
- அவர்கள் யோசனைகளை திருடுகிறார்கள். மற்றும் அவை மறுஉருவாக்கம் செய்து சீனாவின் உள்நாட்டு வகையிலான பொருளை உருவாக்குகின்றன.
- இதன் மூலம் யாரோ ஒருவர் பணம் சம்பாதிக்கின்றனர். இந்த விதமான சீன அணுகுமுறையானது பல மில்லியன் டாலர் அளவிலான சந்தை இடைவெளியை ஏற்படுத்துகிறது.
- பொருட்கள் மற்றும் யோசனைகளை நகல் எடுக்கும்போது உண்மையான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை நீங்கள் வளர்க்க முடியாது.
- இதுவரை இந்தியாவில் உலகமயமாக்கல் உலகப் பொருளாதாரத்தின் ஒருங்கிணைப்பு, இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களின் முழுபங்கேற்பு ஆகியவற்றிற்கு அரசியல் ஆதரவு உள்ளது.
- இந்தியாவில் செயல்படும் வெளிநாட்டு நிறுவனங்களை எப்படியாவது அரசாங்கம் நீக்கிவிட வேண்டும் என்று கருதப்படும் பொருளாதார தேசியவாதமானது இங்கு இன்னும் மேலாதிக்கம் செலுத்தவில்லை.
- அதே நேரத்தில் சீன மாதிரியை விரும்பும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் இந்தியாவில் உள்ளனர்.

### ஜோகோ நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீதர் வேம்புவின் AI–ஐ தொடர்பான கருத்துக்கள் அதாவது, தற்பொழுது நடைமுறையில் உள்ள அனைத்து வேலைகளும் முழுமையாக மாற்றிவிடும் மற்றும் மக்கள் வேலை இழக்கும் பொழுது பொருட்களின் தேவையானது குறையும். இதற்குப் பின் உள்ள கருத்து?

- 'உற்பத்தித்திறன்' மட்டும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மனிதர்கள் ஒரு யூனிட் மணி நேரத்திற்கு அதிக உற்பத்தியை செய்யும்பொழுது அது சமூகத்திற்கு நல்லது.
- மேலும் வளத்தை ஏற்படுத்தும்.
- வேலையிழக்கும் மக்கள் மற்ற பகுதிகளில் வேலைவாய்ப்பு பெருகுவதை காண்பார்கள்.
- எலாபட்நாயக்கின் செய்தித்தாள் தலையங்கத்தில் குறிப்பிட்டபடி ஒரு மில்லியன் நிலையங்களில் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு நபர்களை பணியாட்களாக பெற்றுள்ளது.
- எனில், இந்தியாவில் 1 முதல் 2 மில்லியன் மக்கள் STD ISD நிலையத்தில் வேலையில் உள்ளனர்.
- தொலைப்பேசி வந்தபிறகு அதிகளவிலான மக்கள் வேலைவாய்ப்பினை இழந்தனர். இறுதியாக, நாட்டின் உற்பத்தித் திறனானது குறைந்தது.
- தற்போதுள்ள தொழிலாளர் சந்தையானது நாள்தோறும் தொழிலாளர் சந்தைகளில் விலையானது அதிகரிக்கிறது.
- எந்த வேலையை எடுப்பது என மக்கள் தேர்வு செய்வதற்கான வேலையை தொடங்குகின்றனர்.

## பூமியில் ஒரு செவ்வாய்

- புவி வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம் ஆகியவற்றால் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது.
- மற்ற கோள்களில் மனிதர்கள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலை ஆராய்வதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றனர்.
- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா
- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ
- ரஷிய விண்வெளி ஆய்வு நிறுவனமான ராஸ்கோஸ்மாஸ்
- ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஜாக்ஸா,
- சீன விண்வெளி ஆய்வு நிறுவனம்
- ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவை இந்த வகை ஆராய்ச்சிகளில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

- பூமிக்கு அடுத்ததாக உள்ள செவ்வாய் கோளில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- நாசா அண்மையில் பெர்செவரன்ஸ் என்ற செயற்கைக் கோளையும், சீனா 'தியான்வென்-1' என்ற செயற்கைக்கோளையும்
- ஐக்கிய அரபு அமீரகம் 'ஹோப்' என்ற செயற்கைக்கோளையும் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பின.
- இந்தியா கடந்த 2013-ஆம் ஆண்டில் மங்கள்யான் செயற்கைக்கோளை செவ்வாய் கிரகத்துக்கு செலுத்தி, முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையை அடைந்த முதல் நாடு என்ற சிறப்பைப் பெற்றது.

## திட்டத்தின் இலக்கு

- செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்.
- செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வாழத் தொடங்கும்பட்சத்தில், அவர்களின் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிதல்

## நடைமுறை

- செவ்வாய் கிரக சூழலை ஒத்திருக்கும் பகுதியில் 4 தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு ஓராண்டுக்குத் தங்க வைக்கப்படுவர்.
- செவ்வாய் கிரகத்தில் உள்ளது போன்றே அவர்களுக்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.
- அவர்களது உடல்நிலையும், மனநிலையும் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

## வீடுகளில் உள்ள வசதிகள்

- ஓர் அறை
- கழிவறை
- மருத்துவ உதவிக்கான அறை
- சிறிய அளவில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான அறை

## செங்கல் தயாரிக்கும் கருவி

- கட்டடங்களைக் கட்டுவதற்குத் தேவையான செங்கற்களைத் தயாரித்துக் கொள்வதற்கான கருவியும் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

## வானிலை ஆய்வுக் கருவி

- செவ்வாய் கிரகத்தில் நிலவும் வானிலையை அவ்வப்போது ஆய்வு செய்வதற்கான கருவியும் ஆய்வகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## நடைப்பயிற்சி இயந்திரம்

- வீட்டுக்கு வெளியே நடைப்பயிற்சிக்கான இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. அதில் செவ்வாய் கிரகத்தில் நிலவும் ஈர்ப்பு விசை உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.
- தன்னார்வலர்கள் அதில் தினமும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
- எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கும் சூழல் உருவானால், தங்கள் இருப்பிடத்தில் இருந்து சிறிது தூரம் நடந்து சென்று மாதிரிகளை சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.
- கூடுதல் கட்டுமானங்களை உருவாக்க வேண்டி வரும்; வானிலை, கனிமங்கள் குறித்த தரவுகளைச் சேகரிக்க வேண்டிவரும்.
- அதற்காக நடைப்பயிற்சி இயந்திரம் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, தன்னார்வலர்கள் கண்காணிக்கப்படுவர்.

## அவசரகால சூழல்

- செவ்வாய் கிரகத்தில் அவசரகால சூழலை எதிர்கொள்வதற்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.
- நீர் விநியோகம் அவ்வப்போது குறைக்கப்பட்டு, அதற்குத் தன்னார்வலர்கள் எவ்வாறு தீர்வு காண்கின்றனர் என்பது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- அங்குள்ள கருவிகள் பழுது ஏற்படும்போது அந்தச் சூழலை தன்னார்வலர்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## ஏற்பாட்டு இடம்

- அமெரிக்க டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டன் நகரில் உள்ள நாசாவின் செவ்வாய் ஆய்வகத்தில் இந்த திட்டத்துக்கான இடம் அமைக்கப்பட்டுள்ளது.

## முப்பரிமாண தொழில்நுட்பம்

- இந்தத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், கருவிகள் அனைத்தும் முப்பரிமாண அச்சாக்கத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.
- அந்த தொழில்நுட்பமே செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் குடியேற முக்கிய ஆதாரமாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- அதே தொழில்நுட்பத்தைக் கொண்டே திட்டத்துக்கான கட்டடங்களும். கருவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

# புதிய விண்வெளிக் கொள்கை 2023

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL), இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆகிய அமைப்புகளின் பணிகளையும் பொறுப்புகளையும் வரையறுக்கிறது.
- செயற்கைக்கோள்கள், ராக்கெட்கள் ஆகியவற்றை வடிவமைப்பது, தரவு சேகரிப்பு உள்ளிட்ட பணிகளில் தனியார் துறைகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.
- சர்வதேச விண்வெளி பொருளாதாரத்தில் இந்தியாவின் தற்போதைய பங்களிப்பு 2 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. அதை 10 சதவீதமாக உயர்த்த இந்தக் கொள்கை உதவும்.
- மேலும், இந்திய விண்வெளித் துறையில் தனியாரின் பங்களிப்பை அனுமதிப்பது குறித்தும் பேசுகிறது.

## இந்திய விண்வெளி ஆராய்ச்சி

- 1961-இல், அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான இந்திய அரசு விண்வெளி ஆராய்ச்சிக்கும் பயன்பாட்டுக்குமான பொறுப்பை டாக்டர் ஹோமி ஜஹாங்கிர் பாபாவின் தலைமையில் இயங்கிவந்த அணுசக்தித் துறையிடம் ஒப்படைத்தது.
- இதைத் தொடர்ந்து தேசிய விண்வெளித் திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக, டாக்டர் விக்ரம் சாராபாயைத் தலைவராகக் கொண்டு விண்வெளி ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம் 1962-ல் அமைக்கப்பட்டது.
- இந்திய தேசிய அறிவியல் கழகத்தின் ஆலோசனைக் குழுவாக 1969இல் மறுநிர்ணயம் செய்யப்பட்ட நிலையில், அதே ஆண்டில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிறுவப்பட்டது.
- 1972-இல் இந்திய அரசு விண்வெளி ஆணையத்தை அமைத்து, விண்வெளித் துறையையும் நிறுவியது.
- 1972 ஜூன் 1 அன்று இஸ்ரோ விண்வெளித் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டது.
- இத்துறையின் அமைச்சராகப் பிரதமர் செயல்பட்டு வருகிறார். இஸ்ரோவின் தற்போதைய தலைவராக எஸ்.சோமநாத் செயல்பட்டு வருகிறார்.

## விண்வெளித்துறை இன்று

- உலகளாவிய விண்வெளிப் பொருளாதாரத்தின் இன்றைய மதிப்பு சுமார் 360 பில்லியன் அமெரிக்க டாலர் எனும் பிரம்மாண்ட அளவை எட்டியிருக்கிறது.
- விண்வெளி ஆய்வில் முன்னணியில் இருக்கும் நாடாக இந்தியா விளங்கினாலும், விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கு வெறும் 2%தான்.
- விண்வெளி ஆய்வுகளில் ஈடுபடும் முக்கிய நாடுகளில், தனியார் துறையின் பங்கெடுப்பு கடந்த 20 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்திருக்கிறது.
- ஸ்பேஸ்எக்ஸ், புளூஆரிஜின், வெர்ஜின் காலக்டிக் ஏரியன்ஸ்பேஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் புத்தாக்க முயற்சிகள் மூலம் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளன.
- செலவுகளைக் குறைத்து துறையை முன்னகர்த்தியுள்ளன. எனவே, உலக விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கினை அதிகரிக்க, அரசு சாரா நிறுவனங்களின் பங்கெடுப்பை இந்திய விண்வெளித் திட்டத்தில் ஈடுபடுத்த இந்திய அரசு முடிவெடுத்துள்ளது.
- இந்திய விண்வெளித் துறையின் மதிப்பு, 2025இல் 50 பில்லியன் டாலரை எட்டுவதற்கும், 2030க்குள் உலகச் சந்தையில் 9% வரை இந்தியா கைப்பற்றுவதற்குமான சாத்தியங்கள் உள்ளதாக இந்திய விண்வெளித்துறை கருதுகிறது.

SURESH' IAS ACADEMY

## புதிய விண்வெளிக் கொள்கை

- இந்திய விண்வெளித் திட்டத்தின் வளர்ச்சி மற்றும் போட்டித் தன்மையை அதிகரிப்பதில் தனியார் துறை பங்கு வகிக்க ஓர் இடத்தை வழங்குகிறது.
- இந்திய விண்வெளித்துறையில் தனியார் பங்கெடுப்பை அனுமதிப்பதன் மூலம், மேம்பட்ட விண்வெளித் தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, விண்வெளி ஆய்வு மற்றும் பிற வணிக நோக்கமற்ற பணிகள் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்த இப்புதிய கொள்கை இஸ்ரோவை அனுமதிக்கிறது.
- விண்கலம், செயற்கைக்கோள், ஏவுகலன் ஆகியவற்றை உருவாக்குவது, தரவு சேமிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வது என ஆரம்பம் முதல் முடிவு வரையிலான பணிகளில் தனியாரின் பங்களிப்பு ஈடுபடுத்தப்படவுள்ளது.

## இஸ்ரோவின் பணிகள்

- இஸ்ரோ உள்ளிட்ட இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகளின் (NSIL, IN-SPACe) பணிகளையும் பொறுப்புகளையும் தெளிவாக வரையறுத்திருப்பது இப்புதிய கொள்கையின் தெளிவாக வரையறுத்திருப்பது இப்புதிய கொள்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இந்தப் புதிய கொள்கையானது, கல்வியாளர்களையும் ஆய்வுச் சமூகத்தினரையும் உள்ளடக்கிய அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்புடன் ஒட்டுமொத்த இஸ்ரோ பணிகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும், விண்வெளித் துறைக்கான உற்பத்திப் பணிகள் உள்ளிட்ட எந்தச் செயல்பாடுகளிலும் ஈடுபடுவதை விடுத்து புதிய தொழில்நுட்பங்கள், அமைப்புகள், ஆராய்ச்சி ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு இஸ்ரோ தன் ஆற்றலை முழுமையாகக் குவிக்கவிருக்கிறது என இஸ்ரோ தலைவர் சோமநாத் தெரிவித்துள்ளார்.
- அதன்படி, இஸ்ரோ இதுவரை கையாண்டுவந்த உற்பத்திச் செயல்பாடுகள், விண்கலம் ஏவுதல் உள்ளிட்ட பணிகள் இனிமேல் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்.

# தேசிய குவாண்டம் மிஷனுக்கு அமைச்சரவை ஒப்புதல்

- குவாண்டம் தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் அது தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் நோக்கிலும் 'தேசிய குவாண்டம் மிஷன்' (என்க்யூஎம்) திட்டத்துக்கு நேற்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டத்துக்கு ரூ.6,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி 2023 முதல் 2031 வரையில் குவாண்டம் தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளுக்கு செலவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நேற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இத்திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
- இந்நிலையில், வரும் ஆண்டுகளில் இந்தியாவில் குவாண்டம் தொழில்நுட்பம் தொடர்பான செயல்பாடுகள் ஊக்கம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அமெரிக்கா, ஆஸ்திரியா, பின்லாந்து, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் குவாண்டம் தொழில்நுட்பம் தொடர்பாக தனியே திட்டம் உருவாக்கி செயல்பட்டு வந்த நிலையில், தற்போது இந்த பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.
- இது குறித்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில், குவாண்டம் தொழில்நுட்பமானது சுகாதாரம், பாதுகாப்பு, எரிசக்தி, தகவல் பாதுகாப்பு என பல துறைகளில் பெரும் மாற்றங்களை கொண்டுவரும்.
- தேசிய குவாண்டம் மிஷன் இந்தியாவின் குவாண்டம் ஆராய்ச்சி செயல்பாடுகளில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தும்.
- இத்திட்டத்தின் கீழ் குவாண்டம் கம்ப்யூட்டிங், குவாண்டம் கம்யூனிகேஷன், குவாண்டம் சென்சிங் மற்றும் மெட்ராலஜி, குவாண்டம் மெட்டீரியல் மற்றும் டிவைசஸ் ஆகிய நான்கு பிரிவுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இதற்கென இந்தியாவில் உள்ள முக்கிய ஆராய்ச்சி நிறுவனங்களில் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## ஒளிப்பதிவு திருத்த மசோதாவுக்கு...

- நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒளிப்பதிவு சட்டத் திருத்த மசோதாவுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- திரைப்படங்களுக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக பல்வேறு மாற்றங்கள் இதில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- தற்போது யு, ஏ, யுஏ என்ற பிரிவுகளில் தணிக்கைச் சான்று வழங்கப்படுகிறது.

- இனி தணிக்கைச் சான்றிதழை பார்வையாளர்களின் வயது அடிப்படையில் வழங்க இம்மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளது.
- இம்மசோதா குறித்து தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் கூறுகையில், திரைத்துறையினருடன் கலந்தாலோசித்தும் உலக அளவில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறையின் அடிப்படையிலும் இந்த மசோதா உருவாக்கப்பட்டிருக்கிறது.
- இந்த மசோதா திரைத் துறையினரின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.
- இந்த மசோதா குறித்து எவ்வித சர்ச்சையும் எழ வாய்ப்பில்லை. அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## செயற்கை நுண்ணறிவு முதலீட்டில் முன்னிலை வகிக்கும் நாடுகள்

- நாளைய உலகின் அன்றாட செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) முக்கியப் பங்கு வகிக்கப் போகிறது என்பது பெரும்பாலான அறிவியலாளர்களின் கணிப்பு.

| | | |
|---|---|---|
| | அமெரிக்கா | 248.9 |
| | சீனா | 95.11 |
| | இங்கிலாந்து | 18.24 |
| | இஸ்ரேல் | 10.83 |
| | கனடா | 8.83 |
| | இந்தியா | 7.73 |
| | ஜெர்மனி | 6.99 |
| | பிரான்ஸ் | 6.59 |
| | தென் கொரியா | 5.57 |

## ஏ.ஐ. யுக அபாயங்களை எப்படித் தவிர்ப்பது?

### டொனால்டு ட்ரம்ப்

- அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்ப், ஆபாசப் பட நடிகைக்குப் பணம் கொடுத்ததாக அவர்மீது தொடரப்பட்ட வழக்கு உலகையே உலுக்கியது.
- அவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் எனும் சூழலில், திடீரென அவர் கைது செய்யப்படலாம் எனும் சூழலில், திடீரென அவர் கைது செய்யப்பட்டு போலீஸாரால் இழுத்துச் செல்லப்படுவது போன்ற ஒளிப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின.
- பிரபலமான ஊடகங்கள்கூட அந்தப் ஒளிப்படங்களைப் பார்த்து சற்றே தடுமாறின. பின்னர்தான் அவை செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence- AI) கொண்டு உருவாக்கப்பட்ட போலிப்படங்கள் எனத் தெரியவந்தது.
- செயற்கை நுண்ணறிவு மென்பொருளை விமர்சிக்கும் நிபுணர்கள் மத்தியில், இது பெரும் விவாதத்தை உருவாக்கியது.
- டீப்ஃபேக்ஸ் (DeepFakes), ஜெனரெட்டிவ் ஏஐ தொழில்நுட்பங்களால் வருங்காலத்தில் ஜனநாயகத்துக்கு ஏற்படப்போகும் ஆபத்துகளை விவாதிக்க வேண்டும் என அவர்கள் வாதிட்டனர்.

- நவீன ஜிபிடி (OpenAI's GPT-4) ஆய்வுகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.
- சமூகத்திலும் அரசியல் களத்திலும் பெரும் குழப்பங்களை உருவாக்கும் வகையில் ஏற்கெனவே பொய்ச் செய்திகள் பரப்பப்படுகின்றன.
- இந்நிலையில், மேம்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் மூலம், எளிதில் கண்டறிய முடியாத வகையில் துல்லியமாகப் பொய்ச் செய்திகளைப் பரப்ப முடியும் எனும் சூழல் தற்போது உருவாகியிருக்கிறது.
- இது ஜனநாயக அமைப்பில் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது.

## செயற்கை நுண்ணறிவின் ஆபத்துகள்

- மனிதர்களைப் போலவே சிந்திக்கும் கணினிகளை உருவாக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் தொடங்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப ஆய்வுகள் இன்றைக்குப் பெரும் பாய்ச்சலைக் கண்டிருக்கின்றன.
- மனிதர்களைப் போல தர்க்க-நியாயங்களுடன் விரிவாகச் சிந்திக்கும் மென்பொருள்கள் இன்னமும் சாத்தியப்படவில்லை.
- உள்ளீடாக (inputs) மனிதர்கள் வழங்கும் தரவுகளின் அடிப்படையில்தான் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்கள் செயல்படுகின்றன.
- இன்றைய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களின் உப தொழில்நுட்பங்களான 'மெஷின் லேர்னிங்' (Machine Learning) 'டீப் லேர்னிங்'(Deep Learning) போன்றவை புள்ளியியல் அடிப்படையில் மட்டுமே இயங்கக்கூடியவை.
- கற்றலுக்காகக் கொடுக்கப்படும் தரவுகளில் எது அதிகமாகத் திரும்பத் திரும்ப வருகிறதோ அதையே உண்மை என நம்பி கற்றுக்கொள்பவை. அந்தத் தரவின் அடிப்படையில் மட்டுமே இயங்கக்கூடியவை.
- கற்றலுக்காகக் கொடுக்கப்படும் தரவுகளில் எது அதிகமாகத் திரும்பத் திரும்ப வருகிறதோ அதையே உண்மை என நம்பி கற்றுக்கொள்பவை.
- அந்தத் தரவின் அடிப்படையில்தான் அவை இயங்கும், பதில் கொடுக்கும்.
- மைக்ரோசாஃப்ட் நிறுவனம் சோதனைக்காக 'டே' (Tay) எனும் டிவிட்டர் 'பாட்'-ஐ (Bot) அறிமுகப்படுத்தியது.
- இணையத்தில் மக்களுடன் இயங்கிக் கற்றுக்கொண்டு, அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதுதான் அதன் பணி.
- இணையத்தில் இயங்கிவரும் மனிதர்களிடம் கற்றலைத் தொடங்கிய அந்த மென்பொருள், மிகப் பாரபட்சமாக நடந்துகொள்ளத் தொடங்கியது.
- ஹிட்லர் நல்லவர் என்றது; கறுப்பினத்தவர்களை இழிவுபடுத்தும் நகைச்சுவைத் துணுக்குகளைக் கூறியது. ஆபத்தை உணர்ந்த மைக்ரோசாஃப்ட் நிறுவனம் அதை உடனடியாகத் திரும்பப் பெற்றது.

## டீப்ஃபேக்ஸ்

- ரஜினிகாந்த் ஆடும் சிறு காணொளி ஒன்றில் உங்கள் ஒளிப்படத்தைக் கொடுத்தால் ரஜினியின் முகத்தை நீக்கிவிட்டு, உங்கள் முகத்தைக் கனகச்சிதமாகப் பொருத்தி, அதே அசைவுகளுடன் ஒரு புதிய காணொளியை உருவாக்கித் தரும். ஒளிப்படத்தையும் இப்படி மாற்றலாம்.
- நீங்கள் தமிழில் ஒரு வசனத்தைப் பேசி, அதை இந்த மென்பொருளுக்குக் கொடுத்து, ஒபாமாவின் உருவத்தைத் தேர்வு செய்தால், உங்கள் தமிழ் வசனத்தை ஒபாமா பேசுவதுபோலவே காணொளியை உருவாக்கிக் கொடுக்கும்.
- உலகப் பிரபலங்கள் தமிழ்ப்புத்தாண்டுக்குத் தமிழில் வாழ்த்துச் சொல்வதைப் போன்ற காணொளிகள் டீப்ஃபேக் செயலியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவைதாம்.
- இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் போலியான ஒலிப்பதிவுகளை, காணொளிகளைத் துல்லியமாக உருவாக்க முடியும்.
- ஓர் அரசியல்வாதி ஒரு குறிப்பிட்ட சாதியை இழிவுபடுத்திப் பேசுவதாக ஒரு காணொளியை உருவாக்கி வாட்ஸ்அப்பில் வைரலாக்க முடியும்.
- இதுபோன்ற ஆபத்துகளைத்தான் நிபுணர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகிறார்கள்.

## ஜெனரேட்டிவ் ஏ.ஐ

- செயற்கை நுண்ணறிவைக் கொண்டு புதியவற்றை உருவாக்கும் தொழில்நுட்பத்தின் பெயர்தான் ஜெனரேட்டிவ் ஏ.ஐ. 'நிலவைப் பற்றி ஒரு கவிதை எழுது' என்றால், மைக்ரோ நொடியில் கணினி கவிதை எழுதிவிடும். குறும்படத்துக்கு திரைக்கதை எழுதித் தரும்.

- சமீபகாலமாக பரபரப்பாகப் பேசப்படும் 'சாட்ஜிபிடி' (ChatGPT) டால்-இ (DALL-E) ஆகியவை ஜெனரெட்டிவ் ஏ.ஐ. வகையைச் சேர்ந்தவை.
- சாட் ஜிபிடி-இடம் தேர்தல் பிரச்சாரத்துக்காக ஒரு மின்னஞ்சல் எழுது என்று கேட்டால், நீங்கள் கொடுக்கும் உள்ளீடுகளை வைத்து மனிதர்களே தோற்கும் அளவு மிகவும் உணர்வுபூர்வமான மின்னஞ்சல் ஒன்றை எழுதிக் கொடுக்கும்.
- டால்-இ போன்ற மென்பொருள்கள் நீங்கள் சொற்களாக அளிக்கும் உள்ளீடுகளைக் கொண்டு உங்களுக்குத் தேவையான ஒளிப்படங்கள், ஓவியங்கள், காணொளிகளை உருவாக்கிக் கொடுக்கும்.

### செய்ய வேண்டியவை

- மருத்துவ உலகில் விடை காண முடியாமல் தவிக்கும் பல கேள்விகளுக்குச் செயற்கை நுண்ணறிவு விடைதேட உதவிக் கொண்டிருக்கிறது.
- ஆனால், உண்மைதானோ என்று யோசிக்க வைக்கும் அளவுக்குத் துல்லியமான விஷயங்களை உருவாக்கித் தரும் இந்தத் தொழில்நுட்பங்கள் தவறான நோக்கத்துடன் பயன்படுத்தப்படும்போதுதான் சிக்கல் உருவாகிறது.
- சமூக விரோதிகள் இதைப் பயன்படுத்திச் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தவும் குழப்பம் விளைவிக்கவும் முடியும்.
- அரசியல் நோக்கத்துக்காகத் தவறாகப் பயன்படுத்தவும் பலர் தயங்கமாட்டார்கள். மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பல்களும் இந்தத் தொழில்நுட்பங்களைத் துஷ்பிரயோகம் செய்ய முடியும்.
- ஏற்கெனவே சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்துவதில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- இந்தச் சூழலில், இப்படியான அதிநவீனத் தொழில்நுட்பங்கள் அந்த விரிசலைப் பெரும் பிளவுகளாக மாற்றிவிடும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.
- வாட்ஸ் அப்பில் வரும் அனைத்தையும் அப்படியே நம்பிவிடும் அப்பாவிகள் நம்மிடையே ஏராளம். எனவே, முதற்கட்டமாக இப்படியான தொழில்நுட்பங்கள் இன்றைக்குப் புழக்கத்தில் இருக்கின்றன என்றும் விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
- இந்தத் தொழில்நுட்பங்கள் தவறானவர்களிடம் சிக்கினால் குழப்பங்கள் நேரிடலாம் என்றும் விளக்க வேண்டும்.
- மிக முக்கியமாக, இந்தத் தொழில்நுட்பங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான சட்டங்களை, வழிமுறைகளை அரசுகள் உருவாக்க வேண்டும்.
- ஜனநாயக ஆர்வலர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஊடகத்தினர், சமூகப் பொறுப்பு மிக்க அரசியல் தலைவர்கள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்கை நுண்ணறிவு எனும் சமகாலப் பூனைக்கு மணி கட்ட வேண்டும்.

## அணுசக்தி பொறுப்பு சட்டத்தில் உள்ள தெளிவின்மை

### பிரச்சனை

- இந்தியாவின் அணுசக்தி பொறுப்பு சட்டம், உலகின் மிகப்பெரிய அணுசக்தி ஆற்றல் உருவாக்க தளமான 10 ஆண்டு பழமையான 6 அணுசக்தி அற்றல் உலைகள் உள்ள மகாராஷ்டிராவின் ஜய்தாபூர் அணுசக்தி ஆற்றல் திட்டமானது தற்சமயம் பரிசீலனையில் உள்ளது.
- பிரெஞ்ச் ஆற்றல் நிறுவனமான எலக்ட்ரிசைட் டி பிரான்ஸ் (Electricite de France) ஆனது, அதனுடைய தொழில்நுட்ப வணிக சலுகைகளை 9,900 மெகா வாட் திட்டத்தை 2 வருடங்களுக்கு முன் வழங்கியது.

### இந்தியாவில் அணுசக்தி உலை பொறுப்பு தொடர்பான நிர்வாக சட்டம் என்பது என்ன?

- அணுசக்தி விபத்து (அ) பேரழிவினால் ஏற்படும் அணுசக்தி சேதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதை சிவில் அணுசக்தி பொறுப்பு பற்றிய சட்டங்கள் உறுதி செய்து, அந்த சேதங்களுக்கு யார் பொறுப்பேற்பார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.
- சர்வதேச அணுசக்தி பொறுப்பு துறையானது பல்வேறு ஒப்பந்தங்கள் கொண்டது. 1986-ல் செர்னோபில் அணுக்கரு உலை விபத்தில் வலுப்பெற்றது.
- 1997-ல் துணை இழப்பீடுக்கான மாநாடானது, குறைந்தபட்ச தேசிய இழப்பீடு தொகையை உருவாக்கியது.
- பொது நிதியின் மூலம் மேலும் அதிகரிக்க செய்யப்படலாம்.
- இந்தியா இந்த மாநாட்டில், கையெழுத்திட்டிருந்த போதிலும் 2016-ல் தான் பாராளுமன்றம் அங்கீகரித்தது.
- சர்வதேச மாநாட்டிற்கு பின், இந்தியா அணுஉலை சேதத்திற்கான குடிமை (சிவில்) பொறுப்பு சட்டத்தை 2010-ல் இயற்றியது.
- இந்த சட்டமானது, கடுமையான மற்றும் அணுக்கரு உலை ஆப்ரேட்டர் மீது எந்த ஒரு பொறுப்பு ஏற்படுத்தவில்லை. ஆனால் சேதத்திற்கு பொறுப்பாக உள்ளது.

- இந்தியாவில் தற்சமயம் 22 அணுஉலைகள் உள்ளன. 12 மேற்பட்ட திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.
- அனைத்து இயங்கக்கூடிய அணுஉலைகளும் மாநில அரசின் கீழ் அணுக்கரு ஆற்றல் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் (NPCIL).
- இந்தியா முதன்முறையாக அதன் சிவில் அணுசக்தி பொறுப்பு சட்டத்தில் ஆபரேட்டரின் பொறுப்புக்கு மேல் வழங்குபவர் பொறுப்பு என்ற கருத்தை அறிமுகப்படுத்தியது.

### இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

- மத்திய அரசானது CSC உடன் இணைந்து செயல்படுகிறது.
- குறைபாடள்ள உபகரணங்களை வழங்கினால் (அ) உள்நோக்கத்தின் விளைவாக சேதம் ஏற்பட்டது என்பதை நிறுவினால், சப்ளையர் மீது வழக்குத் தொடரலாம் என இச்சட்டம் வலியுறுத்துகிறது.
- செப்டம்பர் மாதத்தில் ஒத்திவைப்பு பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் இந்தியா வருகைக்குமுன் தீர்க்கப்படும்

## மீண்டும் பயன்படுத்தும் வகையிலான ராக்கெட்

- செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த பயன்படும் ராக்கெட்டுகள் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் புதிய ராக்கெட் தயாரிக்க செலவு அதிகரிக்கிறது.

### பலமுறை பயன்படுத்த முடியும்

- இந்நிலையில் ஃபால்கன் வகை ராக்கெட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது செயற்கைக் கோள்கள் மட்டுமல்லாது மனிதர்களையும் விண்ணுக்குக் கொண்டு சென்று மீண்டும் பத்திரமாக தரையிறங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து 220 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சித்ரதுர்கா மாவட்டம் செல்லக்கெரேவில் உள்ள ஏரோ நாட்டிக்கல் டெஸ்ட் ரேஞ்சில் இந்த சோதனையை நடத்தியுள்ளனர்.
- உலகின் முதன்முறையாக, ஹெலிகாப்டர் மூலம் 4.5 கிலோ மீட்டர் உயரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, ஓடுபாதையில் தரையிறங்குவதற்காக ராக்கெட் விடுவிக்கப்பட்டது. அது மிகச்சரியாக தரையிறங்கியது.
- இதற்கு மறுபயன்பாட்டு ராக்கெட் அல்லது மறுபயன்பாட்டுக்குரிய வகையிலான செலுத்து வாகனம் (ஆர்எல்வி) என்று பெயரிடப்பட்டுள்ளது.

## காசநோய்க்கு முற்றுப்புள்ளி...

- இந்தியாவிலிருந்து முற்றிலுமாக காசநோயை அகற்றும் முனைப்புக்கு வழிகோலுகிறது. பிரதமரின் 'டிபி முக்த் பாரத் அபியான்' என்கிற திட்டம்.

### காசநோய்

- காசநோய் என்பது பரவக்கூடிய என்பதாலும், எளிதில் குணப்படுத்த முடியாதது என்பதாலும் மக்கள் மத்தியில் முந்தைய நூற்றாண்டுகளில் மிகப்பெரிய அச்சம் நிலவியது.
- காசநோயாளிகளை ஒதுக்கி வைப்பதற்காக சானிடோரியம் என்கிற தனிமைப் பகுதிகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டன.
- மருத்துவ அறிவியல் வளர்ச்சி இப்போது காசநோயை அச்சத்துடன் பார்க்கும் நிலைமையை முற்றிலுமாக அகற்றி சிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடிய ஒன்றாக மாற்றியிருக்கிறது.

### WHO

- ஐக்கிய நாடுகளின் தடையற்ற வளர்ச்சி இலக்கு, 2023-க்குள் சர்வதேச அளவில் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்திருக்கிறது.
- அதிக வருவாய் உள்ள நாடுகளைப் போல, காசநோயாளிகளின் எண்ணிக்கை ஏனைய நாடுகளிலும் குறைந்து காணப்படும் நிலையை 2030-க்குள் அடைவதுதான் உலக சுகாதார நிறுவனத்தின் 'காசநோய்க்கு முற்றுப்புள்ளி' திட்டத்தின் நோக்கம்.
- உலக சுகாதார நிறுவனத்தின் 2022 அறிக்கையின்படி, ஏனைய பல நாடுகளைவிட காசநோயைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் செயல்பாடு சிறப்பாகவே காணப்படுகிறது.
- அப்படியிருந்தும், உலகளாவிய காசநோயாளிகளின் எண்ணிக்கையில் 28% பேர் இந்தியர்கள்.

# 05 தமிழ் சமூகம் அதன் பண்பாடு மற்றும் பாரம்பரியம்

## சுந்தரனார் : தமிழ் இலக்கிய வரலாற்றின் தலைமகன்

- தமிழிலக்கிய வரலாற்றுக் கப்பலுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் தோன்றியவர்தான் மனோன்மணீயம் சுந்தரனார் (1855).

### ஆங்கிலத்தில் ஆய்வு முடிவுகள்

- தனது ஆய்வு முடிவுகளை ஆங்கிலத்தில் வெளியிட்டதால், ஐரோப்பிய அறிஞர்களின் பாராட்டைப் பெற்றார்; ராயல் ஏசியாடிக் சொசைட்டி ஆஃப் கிரேட் பிரிட்டன் என்ற பன்னாட்டு ஆய்வு நிறுவனத்தின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

### பன்முகப் பேரறிஞர்

- நீராரும் கடலுடுத்த என்று தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் அடையாளம் தந்த மாபெரும் படைப்பாகும்.
- தனது மனோன்மணீயம் நாடகத்தின் முகவுரையில், பழைமையிலும், இலக்கண நுண்மையிலும், விரிவிலும், ஏனைய சிறப்புகளிலும் எந்த மொழியையும்விடச் சிறந்த பெருமையுடையது செந்தமிழ்.
- தத்துவத் துறைப் பேராசிரியரான சுந்தரனார், கல்வெட்டு, செப்பேடுகள், தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம், வரலாறு, வடமொழி, ஆங்கிலம் போன்ற பல்வேறு துறைகளில் மிளிர்ந்து நின்றார்.
- அதனால்தான், திருஞானசம்பந்தரின் காலம் பொ.ஆ.(கி.பி.) ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தையது என அவரால் உறுதியிட்டுக் கூற முடிந்தது.

### தமிழ் இலக்கியத்தின் தொன்மை

- இந்திய இலக்கியம், மொழி வரலாறுகளில் முன்னோடிகளாக விளங்கிய முனைவர் பர்னெல், கால்டுவெல், நெல்சன் ஆகியோர், பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளின் ஆசிரியரும், சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவருமான திருஞானசம்பந்தரின் காலம் பொ.ஆ.13 ஆம் நூற்றாண்டு என்று தவறாகக் கணித்திருந்தது கவனிக்கத்தக்கது.
- பர்னெல் தனது 'Elements of South-Indian Palaeography' (1874) என்கிற நூலில், ஏழாம் நூற்றாண்டில் இங்கு வந்த சுவான் சாங் (யுவான் சுவாங்) என்கிற சீனப் பயணி, தமிழர்கள் இலக்கிய ஆர்வம் குறைந்தவர்களாக இருந்தார்கள் என்று தனது கருத்தைப் பதிவு செய்திருக்கிறார் என்று கூறி, அதன் அடிப்படையில் இந்தத் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் வடமொழி இலக்கியங்களின் தாக்கத்தால் எழுதப்பட்டவை அல்லது அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்டவை என முடிவுக்கு வந்து, தமிழ் இலக்கியங்களின் தரத்தையும், காலத்தையும் குறைவாக மதிப்பிட்டார்.
- திருக்குறளை ஆய்வு செய்த கால்டுவெல், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது இந்தத் திருக்குறள் என்றும், தமிழ்ச் சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்டால், அதன் தலைநகராகக் கருதப்படும் நக்கீரர் காலமும், கரிகால் சோழனின் ஆட்சிக் காலமும் பொ.ஆ.3 ஆம் நூற்றாண்டு எனக் கணக்கிடலாம் என்றார்.

### சுந்தரனாரின் பதில்

- தமிழ் இலக்கியங்களை ஆழமாகப் படிக்கும்போது, தனித்துவம் மிகுந்த சிறந்த புலவர்களையும் படைப்பாளிகளையும் பாடல்களையும் ஆங்காங்கு காண முடியும்.
- அவர்கள் தங்கள் பெயரையும், நிகழ்வு நடந்த இடத்தையும், காலத்தையும் பதிவு செய்வதில் எந்தத் தயக்கமும் காட்டியதில்லை என்றார்.

### ஆதிசங்கரருக்கும் முற்பட்டவர் திருஞானசம்பந்தர்

- வடமொழி இலக்கியமான சௌந்தர்ய லகரி என்னும் நூலில் ஆதிசங்கரர் தனது காலத்துக்கும் முற்பட்ட திருஞானசம்பந்தர் தேவியிடம் ஞானப்பால் உண்ட 'திராவிட சிசு' என்று குறிப்பிடுகிறார்.
- ஆதிசங்கரர் காலம் பொ.ஆ.எட்டாம் நூற்றாண்டு என வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

- எனவே, சம்பந்தரின் காலம் பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று சுந்தரனார் கூறுகிறார்.
- தமிழ் மொழி நலிந்து, மாசடைந்து நின்ற காலத்தில், அதன் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துக்கூறி 'மனோன்மணீயம்' என்கிற நாடகத்தின் வாயிலாக ஒரு மறுமலர்ச்சிக்கும் வித்திட்டார் சுந்தரனார்.

## கீழடி புனை மெய்யாக்க செயலி

- தமிழகம் 15 லட்சம் ஆண்டுகள் மனித குல வரலாற்றுத் தொன்மை கொண்ட நிலப்பரப்பாகும். இதன் தொன்மையைக் கண்டறிய, முறையான அகழாய்வுகள் அவசியம்.

### 8 இடங்களில் அகழாய்வு

- நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி, வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல், வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. சிவகங்கை மாவட்டம் கீழடி மற்றும் அதைச் சுற்றியுள்ள அகரம், கொந்தகையில் உள்ள தொல்லியல் தளங்களில் 9-ம் கட்ட ஆய்வு.
2. அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் 3-ம் கட்டம்
3. விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையில் 2-ம் கட்டம்,
4. திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டியில் 2-ம் கட்டம்
5. திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டியில் முதல் கட்டம்
6. புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டையில் முதல் கட்டம்
7. தருமபுரி மாவட்டம் பூதிநத்தத்தில் முதல் கட்டம்
8. திருவள்ளூர் மாவட்டம் பட்டறைப் பெரும்புதூரில் 3-ம் கட்டமாக ஆய்வுகள் நடத்தப்பட உள்ளன.

- தமிழக தொல்லியல் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து தண்பொருநை (தாமிரபரணி) ஆற்றின் முகத்துவாரத்துக்கு எதிரில் சங்ககாலக் கொற்கைத் துறைமுகத்தின் தொல்லியல் வளத்தைக் கண்டறிய முன்கள புல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

## தமிழர் மரபைக் காக்கத் தவறலாமா?

- உலகளவில் உள்ள மரபுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் அவற்றை அழிவிலிருந்து மீட்டெடுக்கவும் நினைவுச் சின்னங்கள் மற்றும் தலங்களுக்கான சர்வதேச மன்றம் [International Council of Monuments and Sites (COMOS)] அளித்த முன்மொழிவுத் திட்டத்தின்படி, ஐநாவின் யுனெஸ்கோ அமைப்பு, 1983இல் உலக மரபு நாளை (World Heritage Day) அறிவித்தது.
- அதன்படி ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 18 அன்று உலக மரபு நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

### தமிழ் மண்ணின் மரபுச் சின்னங்கள்

- தமிழ்நாட்டில் பல்லவர் காலக் கடற்கரைக் கோயில்கள்,
- சோழர்கால முப்பெரும் கோயில்களான முதலாம் ராஜராஜன் காலத்தில் கட்டப்பட்ட தஞ்சை ராஜராஜேச்சரப் பெருவுடையார் கோயில்
- ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரத்துச் சோழீச்சரம் கோயில்
- இரண்டாம் ராஜராஜனால் கட்டப்பட்ட தாராசுரம் ராஜராஜேச்சரம் கோயில் ஆகிய இடங்களை உலக மரபுச் சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.
- தொன்மைச் சின்னங்களின் பட்டியலில் இடம்பெறும் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த நினைவுக் கட்டிடங்கள், கோயில்கள், நடுகற்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள், நாணயங்கள், காகித ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் போன்ற மரபுச் சின்னங்களும் தமிழ்நாட்டில் பதிவாகியுள்ளன.

### அறுபடாத கண்ணி

- தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள் அனைத்தும் கட்டிடக் கலைப் பொறியியலின் உச்சம் என்றே சொல்லலாம்.
- சிற்பக் கலை, ஓவியக்கலை, நடனக் கலை, இசைக்கலை எனத் தமிழ்நாட்டின் அறிவுக் கலை வளர்ச்சியின் கருவூலமாகக் கோயில்கள் விளங்கின.

- தமிழ்ப் பண்பாட்டின் அடிநாதமாக விளங்குவது நடுகல் மரபு. சமூகத்தின் நலனைக் காக்கும் போரில் உயிரிழந்த வீரர்களைப் போற்றும் விதமாக நடுகல் எடுத்துப் போற்றும் மரபு வழக்கில் இருந்தது.
- நடுகல் கல்வெட்டுகள் சாமானிய மக்களால், சாமானிய வீரர்களின் நினைவாக எடுக்கப்பட்டவை.
- நடுகல் கல்வெட்டுகள் தமிழ் மொழியின் வளர்ச்சியை அறிந்துகொள்ளவும், மக்களின் பேச்சுவழக்கு மொழியை அறிந்து கொள்ளவும் உதவும் பண்பாட்டுச் சின்னங்கள் ஆகும்.
- மரபுச் சின்னங்கள் மக்கள் பண்பாட்டுத் தொடர்ச்சியில் ஓர் அறுபடாத கண்ணியாக விளங்குபவை.
- ஜல்லிக்கட்டு விளையாட்டு தொடர்பான வழக்கில் மாடுபிடி விளையாட்டின் தொன்மையையும், தொடர்ச்சியையும் எடுத்துரைக்கும் வரலாற்றுச் சான்றாகப் பாறை ஓவியங்களும் நடுகற்களும் துணைநின்றன.
- மாடுபிடி விளையாட்டு தொடர்பான பாறை ஓவியங்கள் அணைப்பட்டி, கரிக்கையூர் ஆகிய ஊர்களிலும், மாடுபிடி வீரர்கள் நினைவாக எடுக்கப்பட்ட நடுகற்கள் சேலம், மதுரை, கிருஷ்ணகிரியிலும் பதிவாகியுள்ளன.

## வரலாற்றுச் சான்றாவணங்கள்

- பெண்களின் தியாகங்களைப் போற்றும் நடுகற்கள் வீரமாத்தி அம்மனாக, சீலைக்காரி அம்மனாக, மாலையம்மனாகச் சாமானிய மக்களின் நம்பிக்கையைப் பெற்றுச் சில இடங்களில் வழிபாட்டில் உள்ளன.
- கோழிச்சண்டைப் போட்டியில் இறந்த கோழிக்கும், கள்வர்களிடமிருந்து தனது எஜமானரைக் காக்க முயன்று இறந்த நாய்க்கும் நடுகல் எடுத்துப் போற்றிய மரபு நடுகற்கள் வழியாகத் தெரியவருகிறது.
- கோயில் கல்வெட்டுகளில் நாடு, வளநாடு, கோட்டம், மண்டலம் ஆகிய நிர்வாகப் பிரிவுகள் பயின்றுவரக் காணலாம்.
- இவை அனைத்தும் இன்றுவரை நம் அரசு பின்பற்றும் கிராமம், வட்டம், மாவட்டம் போன்ற நிர்வாகப் பிரிவுகளின் முன்னோடியான நிர்வாகப் பெயர்கள்.
- ஏறக்குறைய 1,500 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு முறையாகத் திட்டமிட்ட அரசு நிர்வாகம் செயல்பட்டதை இவை உணர்த்துகின்றன.
- தமிழ்நாட்டு அரசர்கள் சமூகத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும் அதீத கவனம் செலுத்தினர்.
- குறிப்பாக, நீர்நிலைகளை அமைத்து அதற்குப் பாசன வாய்க்கால்கள் அமைத்து, மடைத்தூம்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, இயல்பாகத் தண்ணீர் போக இயலாத மேடான பகுதிகளுக்கும் நீரைக் கொண்டுசென்று மக்களின் வாழ்க்கை மேம்பட உதவிபுரிந்தனர்.
- தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலிருந்து ஏரிகள் வெட்டப்பட்டு பாசன வாய்க்கால்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
- தமிழ்நாட்டில் ஏராளமான தனித்த பண்பாட்டுச் சிற்பங்கள் கொற்றவை, ஐயனார், தவ்வை போன்ற கடவுளர் சிற்பங்கள் வயல்வெளிகளிலும் நீர்நிலை ஓரங்களிலும் சாமானிய மக்களின் கடவுளராக இருக்கின்றனர்.
- பெருவழிப்பாதைகளில் காணக்கிடைக்கும் வணிகக் கல்வெட்டுகள் பண்டையநாளில் உள்ளூர்ச் சமூகம் வணிகச் சமூகத்துடன் கொண்டிருந்த தொடர்பை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றன.
- நாணயங்களும் செப்பேடுகளும் வரலாற்றில் விடுபட்ட பகுதியை நிரப்பும் சான்றாவணங்கள் ஆகின்றன.
- ஓலைச்சுவடிகள் தமிழின் தொன்மையான இலக்கிய மரபின் அறிவுச் சொத்துக்களைத் தாங்கி நிற்பவை.
- இன்று அச்சு வடிவில் கிடைக்கும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியப் பனுவல்கள் கடந்த நூற்றாண்டில்தான் ஓலைச்சுவடிகளில் இருந்து அச்சுவடிவம் பெற்றன.

## மரபுச் சின்னங்களின் இன்றைய நிலை

- பெரும்பாலானவை உள்ளூர் சமூகங்களால் கூடக் கண்டுகொள்ளப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.
- பேரரசர்களாகக் கொண்டாடப்பட்ட மன்னர்களின் நிவந்தங்களையும் அவர்களது உருவச் சிலைகளையும் தாங்கி நிற்கும் பல கோயில்கள் சிதைந்தும் புதர் மண்டியும் கழிப்பிடத் தேவைக்குப் பயன்படுத்தும் இடங்களாகவும் இருக்கின்றன.
- நடுகற்களின் நிலையோ இன்னும் கவலைக்குரியது. ஏரிகளிலும், காடுகளிலும், குப்பை கொட்டும் இடங்களிலும், உடைந்து சிதைந்த நிலையில் கிடக்கின்றன.
- பல இடங்களில் துவைக்கும் கற்களாக அவை பயன்படுத்தப்படுகின்றன.
- உடைந்த நிலையில் இருக்கும் சிலைகள் ஊருக்கு ஆகாது என்று நம்பும் மூட நம்பிக்கை மற்றொருபுறம்.

### பாதுகாப்பு வழிமுறைகள்

- பள்ளி, கல்லூரிகளில் உள்ளூர்த் தொல்லியல் மற்றும் வரலாறு தொடர்பான பாடங்களை இன்னும் செம்மைப்படுத்தி வழங்கலாம்.
- மரபுச் சின்னங்களை ஒளிப்படங்களாக ஆவணப்படுத்தி வைக்க வேண்டும்.
- உள்ளூர் மக்கள், இளைஞர்கள், மாணவர்களுக்கு மரபுச் சின்னங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும்.
- இப்பணியில் ஆங்காங்கே உள்ள மரபுசார் தன்னார்வக் குழுக்களே ஈடுபடலாம்.
- நுண்வேலைப்பாடுகள் கொண்ட கோயில்கள், கல்வெட்டுகளின் மீது திருப்பணிகள் என்னும் பெயரில் சிமெண்ட் பூசுவது, சாயங்கள் பூசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- மரபுச் சின்னங்கள் பாதுகாப்பற்ற சூழலில் இருப்பதை அறிந்தால், உடனே உள்ளூர் நிர்வாக அலுவலர் வழியாக அரசு அருங்காட்சியகங்கள் துறைக்கும், தொல்லியல் துறைக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.
- கல்வெட்டுகள், பாறை ஓவியங்கள், ஓலைச்சுவடிகளை முப்பரிமாண முறையில் ஆவணப்படுத்தும் தொழில்நுட்பம் இன்றைக்கு இருக்கிறது.
- அதைப் பயன்படுத்தி துல்லியத்தன்மை மாறாமல் மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.
- மரபுச் சின்னங்கள் அந்தந்தக் காலத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கிச் சொல்லும் கால இயந்திரங்கள்.
- அவற்றை இழந்து விட்டோமானால், அக்காலத்தின் மக்கள் வரலாற்றையும் அவர்களது அறிவுசார் செயல்பாடுகளை அறிவதையும் நாம் இழக்கிறோம் என்பதை உணர வேண்டும்.

## கச்சத்தீவுக்கோர் தீர்வு காண்போம்

### தமிழக மீனவர்கள்

- தங்கள் வாழ்வாதாரத்திற்கு ராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் பாக் நீரினை, மன்னார் வளைகுடா, கச்சத்தீவு அருகே மீன்பிடித்து வருகின்றனர்.

### கச்சத்தீவு பிரச்சனை

- இலங்கை கடற்படையினர், எல்லைதாண்டி தங்களின் கடற்பகுதியில் மீன்பிடிப்பதாக கூறி அவ்வப்போது தாக்குதல் நடத்துவது, வலைகளை அறுத்தெறிவது, மீன்களையும் படகுகளையும் பறிமுதல் செய்வதோடு மீன்வர்களை கைது செய்து சிறையில் அடைப்பதும் வாடிக்கையாகி விட்டன.
- கடந்த நாற்பது ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் பலர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

### இந்தியா–இலங்கை ஒப்பந்தம்

- 1974 மற்றும் 1976 ஆண்டுகளில் கையொப்பமான இந்தியா – இலங்கை ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கைக்கு தரப்பட்ட இருநூற்று என்பத்தைந்து ஏக்கர் பரப்பளவு கொண்ட கச்சத்தீவு இலங்கைக்கு தரப்பட்டபோது, தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழுந்தது.
- அதனை சமாளிக்கவே தமிழக மீனவர்கள் கச்சத்தீவில் தங்கள் மீன்பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளவும், இத்தீவில் உள்ள புனித அந்தோணியார் கோயிலில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் திருவிழாவில் பங்கேற்கவும் அனுமதிக்கப்படுவர் என இலங்கையும் இந்தியாவும் அறிவித்தன.

### முறையான பேச்சுவார்த்தை இல்லை

- கச்சத்தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் உரிய விவாதங்கள் நடத்தப்படவில்லை.
- மாநில எல்லைகளை மறுசீரமைப்பு செய்வதற்காக அரசியல் சாசனம் வகுத்துள்ள விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை.

- எனவே கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது சட்டப்படி செல்லாது என அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு 2011-ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது. இவ்வழக்கின் முடிவு தமிழக அரசுக்கு சாதகமாக அமையவில்லை.

## குத்தகை

- கச்சத்தீவினை நம்நாடு குத்தகைக்குப் பெற்றால் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக கூறி இலங்கை கடற்படையினர் அத்துமீறுவது அறவே நடைபெறாது.

## இலங்கை அரசு

- கச்சத்தீவில் இலங்கை கடற்படையினர் வழிபடுவதற்கென்ற காரணத்தை முன்வைத்து சமீபத்தில் புத்தர் சிலையுடன் விகார் ஒன்றை தற்காலிகமாக இலங்கை அரசு நிறுவியுள்ளது.
- இத்தீவில் காலங்காலமாக புனித அந்தோணியார் ஆலயம் ஒன்று மட்டுமே வழிபாட்டுத்தலம் என்று இருந்த நிலை மாறி தற்போது நிறுவப்பட்டுள்ள புத்த விகாரால் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றம் அமைத்து சிங்களமயமாக்குதலை ஏற்படுத்தும் சிங்கள அரசு, தற்போது கச்சத்தீவையும் சிங்களமயமாக்கலின் ஒரு பகுதியாகவே புத்த விகாரை நிறுவியுள்ளதாகவே கருத வேண்டி உள்ளது.

## சீன–இலங்கை

- இலங்கையில் உள்ள பெரிய துறைமுகமான கொழும்புக்கு அடுத்தபடியாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை சீனாவிற்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது இலங்கை அரசு.
- வருங்காலத்தில் இலங்கையில் இருந்தபடி இத்துறைமுகத்தின் மூலம் தென்னிந்தியாவிற்கு ராணுவ ரீதியான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையைப் புறந்தள்ள முடியாது.
- இலங்கையின் தென்முனையான தொன்ட்ரா விரிகுடா பகுதியில் அறிவியல் அகாதெமி விண்வெளி தகவல் ஆராய்ச்சி மையம் மூலம் ரேடார் தளம் ஒன்றை நிறுவ சீனா முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.
- இந்த ரேடார் தளத்தின் மூலம் இந்திய கடற்படைக்கு சொந்தமான போர் கப்பல்கள், படகுகள், ஆகியவற்றின் நடமாட்டத்தை சீனா மிகத் துல்லியமாகக் கண்காணிக்க முடியும்.

## இந்தியா–இலங்கை உறவின் முக்கியத்துவம்

- நம் நாட்டின் பாதுகாப்பை கருதி, இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முற்படும் சீனாவை பின்னுக்கு தள்ளி இலங்கை அரசுடன் நெருக்கமாக உறவை மேற்கொள்ள வேண்டிய நிலை நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது.
- பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு மூன்றரை பில்லியன் டாலர் கடன் வழங்கியுள்ளதோடு அரிசி, பால்பவுடர், மருந்துகள், எரிபொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களை கொடுத்து உதவியுள்ளது.
- இலங்கைக்கு ஆதரவான முதல் நாடாக நம்நாடு சர்வதேச நிதி ஆணையத்திற்கு இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பான சான்றிதழை அளித்துள்ளது.
- இலங்கைக்கும் நம் நாட்டிற்கும் இடையே தற்போது நிலவி வரும் நெருக்கமான நட்புறவைப் பயன்படுத்தி, கச்சத் தீவை திரும்பப் பெற்று அத்தீவின் மீது நம்நாட்டின் இறையாண்மையை நிலை நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.
- இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட்டு நம் நாட்டின் மீதான சீனாவின் ராணுவ அச்சுறுத்தல் தவிர்க்கப்படுவதோடு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதற்கும் நிரந்தர தீர்வு ஏற்படும்.

# 06 தமிழ்நாட்டின் முக்கிய அம்சங்களுடன் இந்தியாவில் புவியியல் அமைப்பு

## கடல் அரிப்பு அச்சுறுத்தல்

### இந்திய தீபகற்பம்

- இந்தியாவின் வட எல்லையில் இமயமலை அரணாக இருப்பது போல மேற்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகள் கடலால் சூழப்பட்டு பாதுகாப்பை ஏற்படுத்துகின்றன.
- அதனால் இந்திய தீபகற்பத்தின் கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பு என்பது எந்த அளவுக்கு அவசியம் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.
- பாதுகாப்புக்காக மட்டுமல்லாமல், கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாகவும், பல்லுயிர்ப் பெருக்கத்தின் மையமாகவும் அவை திகழ்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

### இந்திய கடற்கரை

- இந்தியாவின் 9 மாநிலங்கள், 4 ஒன்றிய பிரதேசங்களிலுள்ள 78 மாவட்டங்கள் கடற்கரையையொட்டி அமைந்துள்ளன.
- இந்திய கடலோரப் பகுதி என்பது 7,500 கி.மீ நீளமுடையது.
- ஏறத்தாழ, 14.2% இந்தியாவின் மக்கள் தொகையினர் அங்கே வாழ்கிறார்கள்.
- மீனவர்கள் வாழும் 3,288 கிராமங்கள் கடற்கரையோரமாக அமைந்திருக்கின்றன.
- மீன்பிடிப்பது மட்டுமல்லாமல், உப்பளங்கள், தென்னந்தோப்புகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடற்கரையையொட்டி வாழ்கின்றன.
- மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், கடல்வாழ் இனங்களுக்கும், பறவை இனங்களுக்கும் நிலத்திலும் நீரிலும் வாழும் ஊர்வனவற்றுக்கும் வாழ்வாதாரமாக அமைகின்றன.
- கடற்கரைகள், சுந்தரவனக்காடுகள், பிச்சாவரம் அலையாத்தி காடுகள் போன்றவை சூழலியலின் முக்கியமான கேந்திரங்கள்.
- சுந்தரவனக் காடுகளும், கஹிர் மாதா சரணாலயமும், 34,000 ச.கி.மீ அளவிலான கடற்கரைப் பகுதியில் அமைந்திருக்கின்றன.
- இந்தியாவின் கிழக்குக் கடற்கரையைத்தான் ஆமைகள் தங்களது இனப்பெருக்கத்துக்கு பயன்படுத்துகின்றன.
- அப்படிப்பட்ட இந்தியாவின் கடற்கரைப் பகுதிகள் சமீப காலமாக நில அரிப்பாலும், சுற்றுச்சூழல் பாதிப்பாலும் கடுமையான அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருப்பதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### கடல் அரிப்பு

- நேஷனல் சென்டர் ஃபார் கோஸ்டல் ரீசாஜ் என்கிற அமைப்பு கடலோர பகுதிகளை ஆய்வு செய்கிறது. கடலோரப் பகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து தேசிய அளவில் ஆய்வுகள் நடத்துகிறது.
- அதன் சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவின் கடற்கரைப் பகுதியில் 33.6% கடல் அரிப்புக்கு ஆளாகிறது என்று தெரிவிக்கிறது.
- இந்திய தீபகற்பத்தின் பல பகுதிகள், பல நிலைகளிலான கடல் அரிப்புக்கு ஆளாகி வருவது மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறக்கூடும் என்று தெரிவிக்கிறது அந்த தேசிய மையத்தின் அறிக்கை.
- இந்தியாவின் 9 மாநிலங்கள் கடலோரமாக அமைந்திருக்கின்றன. அவற்றில் கிழக்குக் கடற்கரையோரமாக அமைந்த மேற்கு வங்கத்தில் 60.5%, தமிழ்நாட்டில் 42.2% புதுச்சேரியில் 56.2% பகுதிகளில் கடல் அரிப்பு அச்சுறுத்தல் வாய்ப்பு காணப்படுவதாக தெரிவிக்கிறது அந்த அறிக்கை.
- இந்தியாவின் மேற்குப் பகுதியில் உள்ள கேரள மாநில கடற்கரையில் 46% பகுதிகள் அடல் அரிப்பு ஆபத்தை எதிர்கொள்கின்றன.
- ஒருபுறம் கடல் அரிப்பு ஏற்படும் அதே நேரத்தில் இன்னொருபுறம் கடற்கரையோரமாக மணல் திட்டுகள் ஏற்படுவதால் நிலப்பரப்பு அதிகரிக்கும் நிலையும் ஏற்படாமல் இல்லை.
- 33.6% பகுதிகள் கடல் அரிப்பை எதிர்கொள்கின்றன என்றால், 27% கடலோரப் பகுதிகளில் நிலப்பரப்பு அதிகரித்திருக்கிறது.

- ஒருபுறம் கடல் அரிப்பு ஏற்படும்போது, இன்னொருபுறம் நிலப்பரப்பு அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாக அந்த அறிக்கை கூறுகிறது.
- கடந்த 26 ஆண்டுகளில் மேற்கு வங்கம் மட்டும் 99 ச.கி.மீ நிலப்பரப்பை கடல் அரிப்பால் இழந்திருக்கிறது.
- கடந்த 100 ஆண்டுகளில் கடல் மட்டம் 40 செ.மீ அதிகரித்திருப்பதும் கடல் அரிப்புக்கு முக்கியமான காரணம்.
- கடற்கரையோரமாக சுற்றுலா வளர்ச்சி, மீன்பிடி தொழில் வளர்ச்சி ஆகியவை குறித்து மட்டுமே கவலைப்படாமல் இந்தியாவின் கடற்கரைகளை பாதுகாப்பதிலும், அதன்மூலம் சூழலியல் சமநிலையை உறுதிப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

## மானாமதுரை மண்பாண்டப் பொருள்களுக்கு புவிசார் குறியீடு

- மானாமதுரையில் மண்பாண்டத்தில் செய்யப்படும் கைவினைப் பொருள்கள் உலக நாடுகளின் வரவேற்பைப் பெற்றுள்ளன.
- இங்கு தயாரிக்கப்படும் மண்பாண்டப் பொருள்கள் உறுதியாக இருப்பதற்கு இந்தப் பகுதி கண்மாய்களில் கிடைக்கும் மண்ணின் தன்மையே முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.
- நவம்பர் 30-ஆம் தேதி மானாமதுரை மண்பாண்டப் பொருள்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுவதாக மத்திய அரசிதழில் அறிவிப்பு வெளியானது.
- இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருவதற்கு 4 மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்பது சட்ட விதியாகும்.
- இதன்படி, மார்ச்30-ஆம் தேதியுடன் 4 மாதங்கள் முடிவடைவதால், மானாமதுரை மண்பாண்டப் பொருள்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- இத்துடன் இதுவரை தமிழகத்தில் 56 பொருள்களுக்குப் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.

### தமிழகத்தில் மேலும் 11 பொருள்களுக்கு புவிசார் குறியீடு கிடைக்க வாய்ப்பு

- தமிழகத்தில் இதுவரை 45 பொருள்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதில், 10 பொருள்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தவை.
- மணப்பாறை முறுக்கு

  தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் வெற்றிலை

  சோழவந்தான் வெற்றிலை

  கம்பம் பன்னீர் திராட்சை

  நெகமம் காட்டன் சேலை

  மயிலாடி கற்சிற்பம்

  சேலம் ஜவ்வரிசி

  மயிலாடுதுறை மாவட்டம் தைக்கால்புரம் பிரம்பு வேலைப்பாடுகள்

  மார்த்தாண்டம் தேன்

  மானாமதுரை மண்பாண்டம்

  ஊட்டி வர்க்கி
- இதில் ஊட்டி வர்க்கி தவிர மற்ற 10 பொருள்களும் எனது மூலமாக விண்ணப்பம் செய்யப்பட்டது.
- இந்த 11 பொருள்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசிதழில் 2022, நவம்பர் 30 ஆம் தேதி வெளியிடப்பட்டது.
- புவிசார் குறியீடுக்காக அரசிதழில் வெளியிடப்பட்ட 4 மாதங்களுக்குள் பொதுமக்கள் ஆட்சேபனைகள் இருந்தால் தெரிவிக்கலாம்.
- ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படாவிட்டால், அப்பொருள்கள் புவிசார் குறியீடு பதிவு பெறுவதற்கு உறுதி செய்யப்படும்.
- தமிழ்நாட்டிலிருந்து விண்ணப்பிக்கப்பட்ட 11 பொருள்கள் குறித்து அரசிதழில் வெளியிடப்பட்டதில் இருந்து ஆட்சேபனை தெரிவிப்பதற்கான 4 மாத கால அவகாசம் மார்ச் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்தது.
- 11 பொருள்களுக்கும் புவிசார் குறியீடு கிடைக்க வாய்ப்பு உள்ளது.
- இதன் மூலம், புவிசார் குறியீடு பட்டியலில் தமிழ்நாடு முதலிடம் பெறக்கூடிய நிலை ஏற்படும்.

# சொர்க்கத்திற்கான திட்டமிடுங்கள் - கிரேட் நிக்கோபார் திட்டம்

- கடந்த 2 ஆண்டுகளில் தொடர்ச்சியான விரைவான அனுமதிகளைப் பெற்ற பிறகு கிரேட் நிக்கோபார் தீவு முழுமையான வளர்ச்சிக்கான ரூ.72,000 கோடி மெகா திட்டம் இப்போது செயல்பாட்டில் உள்ளது.
- பிப்ரவரி 2021-ல் இந்தியாவின் தேசிய கடல் ஆமை செயல்திட்டம் கிரேட் நிக்கோபார் தீவின் தென்கிழக்கு கடற்கரையிலுள்ள கலாத்தியா விரிகுடாவை "இந்தியாவை முக்கியமான கடல் ஆமை வாழ்விடங்களில்" ஒன்றாக குறிப்பிடுகிறது.
- கலாத்தியா ஆற்றின் இருபுறமும் உள்ள கரைகள் உலகின் மிகப்பெரிய கடல் ஆமையான லெதர்பேக் ஆமைகளுக்கு வடஇந்தியப் பெருங்கடலில் உள்ள மிக முக்கியமான வாழ்விடமாகும்.
- கடலோர மேம்பாட்டுத் திட்டங்கள் ஆமைகளின் இனத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக தேசிய கடல் ஆமை செயல்திட்டம் கூறுகிறது.
- வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டங்களின் தென்முனையில் உள்ள கிரேட் நிக்கோபார் தீவு கூட்டத்தின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக ரூ.72 ஆயிரம் கோடி அளவில் நிதி ஆயோக்கால் முன்மொழியப்பட்ட மெகா திட்டமானது கலாத்தியா விரிகுடாவின் எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்டுள்ளது.
- மிகப்பெரிய லெதர்பேக் ஆமை இனம் மட்டுமல்ல சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார ரீதியிலும் 900 ச.கி.மீட்டருக்கு அதிகமாகவும் உள்ள இப்பகுதியில் 850 சதுர கி.மீ. பகுதியானது பழங்குடியின காப்பகமாக அந்தமான் நிக்கோபார் பழங்குடியின பாதுகாப்பு ஒழுங்குமுறை சட்டம் 1956-ன் கீழ் உள்ளது.
- இந்தத் தீவானது தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியின இனமான சோம்பன் மற்றும் நிக்கோபாரிஸ் பழங்குடியினருக்கு வாழ்விடமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் உள்ளது.
- கிரேட் நிக்கோபார் தீவானது 1989-ல் உயிர்க்கோளப் பெட்டகமாக அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் யுனெஸ்கோவின்2013 மனித மற்றும் உயிர்க்கோள திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.
- இது இணையற்ற நுண்ணுயிரிகளின் கட்டமைப்பைக் கொண்டுள்ளது.
- இந்த வாழ்விடங்கள் கடல் விலங்குகள், ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் உட்பட பல உயிரினங்களைப் பெற்றுள்ளது.
- அவற்றில் பெரும்பான்மையானவை நிக்கோபாரி பறவை (மெகாபோட்) இனமானது கிரேட் நிக்கோபார் தீவுக்கு சொந்தமானது மற்றும் உலகில் வேறு எங்கும் காணப்படுவதில்லை.
- இந்த சிறப்பு மிக்க சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்ட முக்கியமான மற்றும் உடனடியாக செயல்படுத்தக்கூடிய திட்டத்தை சுற்றுச்சூழல் காடுகள் மற்றும் பருவநிலை அமைச்சகமானது ஒப்புதல் அளித்துள்ளது. இது சுற்றுச்சூழலியலாளர், மானுடவியலாளர், துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் முன்னாள் குடிமைப் பணியாளர்கள் இந்த மெகா திட்டத்தை சுற்றுச்சூழல் பேரழிவை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளனர்.
- இருந்தபோதிலும் நிதி ஆயோக் அமைப்பானது தீவிலுள்ள முழுவதும் ஆய்வுக்கு உட்படுத்தாத சாத்தியமான கூறுகளை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது எனக் கூறியுள்ளது.
- இந்த திட்டமானது 4 கூறுகளைக் கொண்டுள்ளது.

1. ரூ.35,000 கோடி ரூபாயில் கலாத்தியா விரிகுடாவில் சரக்கு கையாளுகை துறைமுகத்தை ஏற்படுத்துதல்.
2. இராணுவ மற்றும் சிவில் போன் இரட்டைத் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு சர்வதேச விமான நிலையத்தை ஏற்படுத்துதல்.
3. ஆற்றல் நிலையம்
4. 30 வருடத்திற்கு மேல் நிலைக்கக்கூடிய 160 ச.கி.மீ. பரப்பில் குடியிருப்பு பகுதியை ஏற்படுத்துதல். அவற்றில் 130 ச.கி.மீ. பரப்பானது முக்கியமான மலைப்பகுதியாகும்.

- இத்திட்டத்தின் வடக்கு முனையானது உயிர்க்கோள பெட்டகத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் பொருள் பாதுகாக்கப்பட்ட பகுதியானது இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது எனப்படும்.

## அவசர அனுமதி

- மக்கள் தொகைக்கு ஏற்ப சோம்பன் மற்றும் நிக்கோபாரிஸ் பழங்குடியின இனமானது, அரசாங்கம் 1969-80 காலகட்டத்தைச் சேர்ந்த 330 முன்னாள் இராணுவ அதிகாரிகளின் குடும்பங்களை குடியமர்த்துவதற்காக 7 வருவாய் கிராமங்களை ஏற்படுத்துவதற்கு முன் தீவின் தனித்த இனமாக வாழ்ந்து வந்துள்ளனர்.

- கிரேட் நிக்கோபார் தீவுக் கூட்டத்தின் தெற்கு பகுதியானது இந்த மூன்று சமூகத்தை உள்ளடக்கிய 8000 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.
- இந்த மெகா திட்டமானது 4 இலட்சம் மக்களை கிரேட் நிக்கோபார் தீவிற்குள் 30 ஆண்டுகளில் கொண்டுவரும்.
- கிரேட் நிக்கோபார் தீவுக்கூட்டத்தின் வரலாற்றுக்கு முந்தைய மலைக்காடுகளில் இருந்து சுமார் 8.5 லட்சம் மரங்கள் இத்திட்டத்திற்காக வெட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் அளவு மற்றும் காலமானது கிரேட் நிக்கோபார் திட்டத்திற்காக அவசரமாக பல்வேறுகட்ட ஒப்புதலை பெற்றுள்ளது.
- இந்த திட்டமானது முதன்முதலாக 2020 பெருந்தொற்றில் ஏற்படுத்தப்பட்டது மற்றும் இத்திட்டத்தை செயல்படுத்தும் உரிமையை அந்தமான் நிக்கோபார் தீவுகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- 2020 செப்டம்பரில் நிதி ஆயோக்கானது இத்திட்டத்திற்கான மாஸ்டர் பிளானை ஏற்படுத்த கோரிக்கை விடுத்தது.
- மார்ச் 2021-ல் குருகிராமை அடிப்படையாகக் கொண்ட ஏ.இ.காம் என்ற நிறுவனமானது 126 பக்க அறிக்கையினை நிதி ஆயோக்கிடம் வழங்கியது.
- அக்.2022 இந்த அறிக்கையானது முதல்கட்ட காடுகளுக்கான அனுமதியினை பெற்றது மற்றும் சுற்றுச்சூழல் அனுமதியினை 2022 நவம்பர் 11-ம் தேதி வழங்கியது.
- கிரேட் நிக்கோபார் தீவானது வங்காள விரிகுடா மற்றும் அந்தமான் கடலிலுள்ள பூமியின் நிலப்பரப்பிலிருந்து உட்கரு வரையிலான உணர்திறன் மிக்க மண்டலத்திற்கு இடையில் அமைந்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் தீவின் டெக்டானின் நிலையற்ற தன்மை மற்றும் பேரிடர் பாதிப்பு பற்றி தெரிவித்து வருகின்றனர்.
- கடந்த 10 வருடங்களில் இந்த பகுதியானது கிட்டத்தட்ட 444 நிலநடுக்கத்தை கண்டுள்ளது.
- பழங்குடியின சமூகமானது 2004-ல் ஏற்பட்ட சுனாமியின் போது வாழ்விட இழப்பின் தாக்கத்தை தற்பொழுது வரை சந்தித்து வருகிறது.

## 12 பொருள்களுக்கு புவிசார் குறியீடு

- நிகழாண்டில் (2022-23) வெளிநாட்டு பொருள்கள் உள்பட 12 பொருள்களை புவிசார் குறியீடு அங்கீகாரத்துக்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.
- இதில் கேரள மாநிலம் முதலிடத்தில் வகிக்கிறது என்பது புவிசார் குறியீடு பதிவு விவரங்கள் மூலமாக தெரியவந்துள்ளது.

### கேரளம்

- கேரளத்திலிருந்து பீன்ஸ் (அட்டப்பாடி ஆட்டுக்கொம்பு அவரை), எள்ளு (ஓணாட்டு கரா எள்ளு), பூண்டு (காந்தலூர் வட்டவட பூண்டு), முலாம்பழம் (கொடுங்கல்லூர் பட்டு வெள்ளரி), ஆகிய 6 பொருள்கள் புவிசார் குறியீடு அங்கீகாரத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- பீகாரைச் சேர்ந்த நீரில் வளரும் பருப்பு வகை (மிதிலா மக்னா), மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த அலிபாக் வெள்ளை வெங்காயம், தெலங்கானாவின் சிவப்பு துவரம் பருப்பு, லடாக்கின் ஆப்ரிகாட் பழம், அஸ்ஸாமின் கைத்தறி துண்டு (கமோஸா).
- ஸ்பெயினின் பிராண்டி டி செர்ஸ் என்ற மதுபானம், இத்தாலியின் பாலாடைக்காட்டி (சீஸ்) உள்ளிட்ட 2 வெளிநாட்டு பொருட்களும் நிகழாண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

### புவிசார் குறியீடு

- ஓரிடத்தில் விளையக்கூடிய பொருள்கள் அல்லது தயாரிக்கக்கூடிய பொருள்களின் தரம், அந்த இடத்தின் காலநிலை, தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் புவிசார் குறியீடு நிர்ணயிக்கப்படுகின்றது.
- இதற்கென, புவிசார் குறியீடு மற்றும் பாதுகாப்பு சட்டத்தை மத்திய அரசு கடந்த 1999-ஆம் ஆண்டு அறிமுகம் செய்து, 2003-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

## இந்தியாவில் வழக்கமான பருவமழைப் பொழிவு

- தென்மேற்கு பருவமழைக் காலத்தில் இந்தியாவில் வழக்கமான மழைப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## எல்–நினோ

- தென் அமெரிக்காவுக்கு அருகே பசிபிக் கடலில் நீர் வறண்டு போவது எல் நினோ வினோதம் என்று அழைக்கப்படுகிறது.
- இது இந்தியாவில் பருவக்காற்றை வலுவழக்கச் செய்து வறண்ட வானிலையை ஏற்படுத்துகிறது.
- எல் நினோ வினோதம் தற்போது உருவாகி வரும்போதிலும் இந்த ஆண்டு இந்தியாவில் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் இந்தியாவில் வழக்கமான மழைப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஜுன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் இந்தியாவில் மழைப்பொழிவு வழக்கமானதாக இருக்கும்.
- நீண்ட காலமாக சராசரி மழைப்பொழிவாக இருக்கும் 87 சதவீதம் என்பதில் 96 சதவீத மழை பொழியும் என்றார்.
- இந்த ஆண்டு பருவமழைக் காலத்தில் வழக்கத்தைவிட கூடுதலாக மழை பொழிவதற்கு 67 சதவீத வாய்ப்புகள் உள்ளன.
- 2019 தொடங்கி தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக வழக்கம் மற்றும் வழக்கத்தைவிடக் கூடுதலான மழைப்பொழிவை இந்தியா கண்டுள்ளது.
- அதேவேளையில் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் வடமேற்கு இந்தியா, மேற்கு மத்திய, வடகிழக்குப் பிராந்தியம் ஆகியவற்றின் சில பகுதிகளில் வழக்கத்தைவிட குறைவான மழைப்பொழிவு காணப்படும்.
- தீபகற்பப் பகுதி, கிழக்கு மத்தியப் பகுதி, கிழக்கு, வடகிழக்குப் பகுதி ஆகிவற்றின் பெரும்பாலான பகுதிகளிலும் வடமேற்கு இந்தியாவின் சில பகுதிகளிலும் வழக்கமான மழைபொழிவு இருக்கும்.
- பருவமழைக் காலத்தின்போது எல்நினோ வினோதம் உருவாகும். அதன் விளைவுகள் பருவமழைக் காலத்தின் இரண்டாவது பகுதியில் உணரப்படும்.
- எல் நினோ வினோதம் ஏற்படும் ஆண்டுகளில் எல்லாம் பருவமழை குறைவதில்லை. கடந்த காலங்களில் (1951 முதல் 2022) எல் நினோ வினோதம் ஏற்பட்ட ஆண்டுகளில் 40 சதவீத ஆண்டுகள் வழக்கமானது முதல் வழக்கத்தை விடக் கூடுதலான மழைப்பொழிவைக் கண்டுள்ளன என்றார்.

# அத்திக்கடவு - அவிநாசித் திட்டம்

- இத்திட்டத்துக்கு 1960-இல் அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலம் அடிக்கல் நாட்டினார்.
- 60 ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயச் சங்கங்களாலும், மக்களாலும், அரசியல் கட்சிகளாலும் வலியுறுத்தப்பட்டுவந்த நீரேற்றுத் திட்டம், தற்போது சுமார் ரூ.2,000 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு, செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது.

## திட்டத்தின் இலக்குகள்

- பவானி ஆற்றிலிருந்து கிடைக்கும் உபரி நீரை ராட்சதக் குழாய்கள் மூலம் நீரேற்றி, ஆண்டில் 70 நாள்களுக்கு நீரை வெளியேற்றுவதன் மூலம் ஏரி, குளம், குட்டைகளில் ஆண்டுக்கு 1.5 டிஎம்சி நீர் நிரம்பச் செய்வது.
- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களில் நிரந்தரமாக வறட்சி குடிகொண்டிருக்கும் ஒன்றியங்களை பெருந்துறை, சென்னிமலை, நம்பியூர், கோபி, பவானிசாகர், ஊத்துக்குளி, அவிநாசி, திருப்பூர் வடக்கு, அன்னூர், சூலூர், பெரிய நாயக்கன்பாளையம், சர்க்கார் சாமக்குளம், காரமடை ஆகிய 13 ஒன்றியங்களில் 1,045 ஏரி, குளங்களில் நீரை நிரப்பி, நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்குவது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய இலக்குகள்
- இதன் மூலம் 24,968 ஏக்கர் பாசனம் பெறுவதுடன், குடிநீர் மற்றும் ஆழ்குழாய்ப் பாசனத்துக்கான நீர்வளமும் கிடைக்கும்.

## கிடைக்கப்போகும் பலன்கள்

- இதனால் விவசாயம் பெருகுவதுடன், கால்நடை வளர்ப்பு செழிப்படையும். பல லட்சக்கணக்கான மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.
- இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதன் மூலம் மின்சாரப் பயன்பாடு குறையும். பால் உற்பத்தி அதிகரிக்கும்.
- ஒரு காலத்தில் பருத்தி மட்டுமே விளைந்த இந்தப் பகுதியில் தற்போது தென்னை, வாழை, புகையிலை, வேர்க்கடலை, மக்காச்சோளம், கரும்பு, காய்கறிச் சாகுபடி நடைபெற்று வருகிறது.
- பாசன உரிமை பெற்றுள்ள பகுதிகள் எதுவும் இத்திட்டத்தால் பாதிக்கப்படாது என்பது மற்றொரு சிறப்பு.
- பெரிய திட்டம் எதுவாக இருந்தாலும் உலக வங்கியிலோ, ஆசிய வளர்ச்சி வங்கியிலோ கடன் வாங்குவதுதான் வழக்கம்.

- இப்படியான சூழலில், மாநில அரசின் சொந்த நிதியிலிருந்தே திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதும் மிகவும் முக்கியமானது.
- எதிர்காலத்தில் இதுபோன்ற பெரிய திட்டங்களை மாநில அரசு துணிச்சலுடன் முன்னெடுக்க இது ஒரு திறப்பாக அமையும்.

### நீர் வீணாகாது

- மிகவும் வளர்ந்த நவீனத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பு.
- 6 இடங்களில் ஒரே மாதிரியான வடிவமைப்பில் நீரேற்று நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- காளிங்கராயன் அணைக்கு அருகிலுள்ள முதல் நீரேற்று நிலையத்திலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டால் அனைத்து நீரேற்று நிலையங்களிலிருந்தும் சில நிமிடங்களில் தண்ணீர் வெளியேறும்.
- கணினி மூலம் இயக்கப்படும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு குளம், குட்டைக்கும் தண்ணீர் நிரப்பும் குழாய்களுடன் சென்சார் கருவி பொருத்தப்பட்டிருப்பதால், இருந்த இடத்திலிருந்தே அதிகாரிகள் கண்காணிக்க முடியும்.
- நிரம்பியவுடன் தானாகத் தண்ணீர் நின்றுவிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் தண்ணீர் வீணாவது தடுக்கப்படும்.

### மக்களின் எதிர்பார்ப்பு

- ஏரி, குளம், குட்டைகள் பல்லாண்டுகளாகப் பயன்படுத்தப்படாமலும் தூர்வாரப்படாமலும் புதர்கள் மண்டிக்கிடக்கின்றன.
- கரைகளும் சேதமுற்றுப் பலவீனமாக இருக்கின்றன. எனவே, செடி, கொடி முள்புதர்களைச் சுத்தப்படுத்துவதுடன், தூர்வாரி கரைகளைப் பலப்படுத்துவது உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசரப் பணியாகும்.
- இந்தக் குளங்களில் மீன்வளர்ப்புக்குத் திட்டமிடுவதன் மூலம் அரசுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்ட வழி ஏற்படும்.
- நீர்நிலைகள் சுத்தமாகப் பராமரிக்கப்படுவதில் தொடர் கவனம் செலுத்த வேண்டும்.
- தொழிற்சாலைக் கழிவுகள் இதில் கலக்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம்.
- இவற்றையெல்லாம் முழுமையாகச் செய்தால் பிரம்மாண்டமான இத்திட்டம் மண்ணைப் பொன்னாக்கும்.
- மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கச் செய்யும். பல்லாண்டு காலத்துக்கு வரலாற்றில் நிலைத்து நிற்கும் அற்புதமான ஒரு திட்டமாக அத்திக்கடவு-அவிநாசித் திட்டம் விளங்கும்.
- அதேபோல் காவிரியிலிருந்து கிடைக்கும் உபரிநீரைக் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டிய காவிரி-வைகை-குண்டாறு-வைப்பாறு இணைப்புத் திட்டம் குறித்தும் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.
- இது நிறைவேறினால் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள வறட்சியான பகுதிகளில் உள்ள குளங்கள், கண்மாய்களில் தண்ணீர் நிரப்பி வறட்சி போக்கப்படும்.

## பருவமழை பொய்த்தாலும்...

- வானிலை ஆய்வு மையத்தின் முன்னெச்சரிக்கைகளின் அடிப்படையில்தான் இந்தியாவின் விவசாயமும், பொருளாதாரமும் இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதை மறந்துவிடக்கூடாது.

### ஜூன் – செப்டம்பர்

- ஜூன் - செப்டம்பர் பருவமழைக் காலத்தில் 96% சராசரி மழைப்பொழிவு காணப்படும் என்கிறது இந்திய வானிலை ஆய்வு மையம்.
- சாதாரண மழைப்பொழிவு என்பது 96% முதல் 104% வரையிலான அளவு.
- அதனால் வானிலை மையத்தின் அறிவிப்பின்படி, சாதாரண மழைப்பொழிவில் மிகக் குறைந்த சராசரி அளவுதான் இந்த ஆண்டு இருக்கும் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### ஸ்கைமெட்

- 'ஸ்கைமெட்' வழங்கும் முன்னறிவிப்புகள் சமீபகாலமாக முன்னுரிமை பெறுகின்றன. பசிபிக் கடலின் கிழக்குப் பகுதியில் வழக்கத்துக்கு அதிகமான மேல்மட்ட வெப்பம் காணப்படும் எல்நினோ ஆண்டு என்பதால், 'ஸ்கைமெட்' மையத்தின் 94% சராசரி மழைப்பொழிவு என்கிற அறிவிப்பு சற்று கவலையளிக்கிறது.

## விவசாயியின் நிலை

- பருவம் தவறிய மழைப்பொழிவு, நீண்டு நிற்கும் வறட்சி, திடீரென்று குறைந்த கால அளவில் அதிக அளவு மழைப்பொழிவு போன்ற நிகழ்வுகள் கடந்த சில ஆண்டுகளாக நம்மைத் தாக்குகின்றன.
- அதனால், விவசாயிகள் நம்பிக்கையுடன் பயிரிடவும், அறுவடை செய்யவும், மகசூல் பெறவும் இயலாத நிலைமை இந்தியாவில் உருவாகியிருக்கிறது.

## எல்நினோ

- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கருத்துப்படி, வழக்கமான பருவமழைக்கு 35% வாய்ப்பும் வழக்கத்தைவிட குறைவான பருவமழைக்கு 29% வாய்ப்பும் இந்த ஆண்டு காணப்படும்.
- இன்னொரு கருத்தையும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது. அதாவது 'எல்நினோ' நிலைமை காரணமாக ஜுலை மாதம் பருவமழைப் பொழிவு பலவீனப்படும் என்று தெரிவிக்கிறது.
- 'எல்நினோ' வருடங்களிலும் பருவமழை பொய்ப்பதில்லை. அதனால், மே மாத வானிலை நிலைமையைச் சார்ந்துதான் இந்த ஆண்டுக்கான மழைப்பொழிவைத் தீர்மானிக்க முடியும்.

## தென்மேற்கு பருவம்

- இந்தியாவின் 40% உற்பத்தியும், 51% விவசாய நிலப்பரப்பும் பருவமழையை மட்டுமே நம்பி இருப்பவை.
- மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள்.
- இந்தியாவின் மொத்த மழைப்பொழிவில் 70% தென்மேற்குப் பருவமழையால் பெறப்படுகிறது.
- அதனால், வழக்கமான பருவமழைப் பொழிவில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் ஒட்டுமொத்த இந்தியாவின் பொருளாதாரத்தையும், உணவுப் பொருள்களின் விலையையும் பாதிக்கும்.

## பொருளாதாரம்

- இந்த ஆண்டு, மிகப் பெரிய சவால்களை எதிர்கொள்ள இருக்கிறது. உலகளாவிய நிலையில் காணப்படும் பொருளாதார தேக்கமும், பணப்பெருக்கமும் போதாது என்று ரஷிய-உக்ரைன் போர் உணவு உற்பத்தியில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.
- மோசமான பருவமழையை இந்த ஆண்டு இந்தியா எதிர்கொள்ளுமானால், உணவு உற்பத்தி குறைந்து கிராமப்புற வருமானமும் குறைந்தால் ஏற்பட இருக்கும் பாதிப்புகள் அசாதாரணமானவையாக இருக்கும்.

## இந்தியாவில்

- இந்திய வானிலை ஆய்வு மைய அறிக்கையின் புள்ளிவிவரப்படி, கடந்த ஆண்டு ஜுன் முதல் செப்டம்பர் வரையிலான பருவத்தில் வழக்கத்தைவிட 6% அதிகம் மழைப்பொழிவு காணப்பட்டது.
- ஆனால், இந்தியாவின் அரிசி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு உற்பத்தி செய்யும் கங்கை சமவெளி மாநிலங்களான உத்திரப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் ஆகியவை 20% குறைவான மழைப்பொழிவைப் பெற்றன.
- எட்டு மாநிலங்கள் மிகக் கடுமையான கோடையை எதிர்கொண்டன. மழைப்பொழிவு என்பது சராசரியை மட்டுமே வைத்து கணக்கிடப்படுவதல்ல.
- இந்தியா போன்ற வெவ்வேறு தட்பவெப்பநிலை உள்ள நாட்டின் சராசரி என்பது பெயரளவிலான கணக்காக மட்டுமே இருக்கும்.

## முடிவுரை

- இந்திய வானிலை ஆய்வு மையமும் சரி, ஸ்கைமெட் வானிலை சேனலும் சரி வழக்கமான மழைப்பொழிவு இருக்காது என்று தெரிவிக்கின்றன.
- அதனால் வட இந்தியாவில் உள்ள அதிக உணவு தானிய உற்பத்தி செய்யும் பகுதிகள் பாதிக்கப்படலாம்.
- அதை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மூலமும், மாற்றுப் பாசன வசதியை ஏற்படுத்தியும் எதிர்கொள்வதற்கான திட்டங்களை அந்தந்த மாநில அரசுகள் இப்போதே முன்னெடுக்க வேண்டும்.

# நாட்டில் முதல்முறையாக நீர்நிலைகள் கணக்கெடுப்பு

- ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகம் நாடு முழுவதும் உள்ள நீர்நிலைகள் குறித்து கணக்கெடுத்துள்ளது.
- இதில் குளங்கள், ஏரிகள், குட்டைகள், நீர் தேக்கங்கள் என இந்தியாவின் நீர் ஆதாரங்களின் விரிவான பட்டியல் மற்றும் ஆக்கிரமிப்பு குறித்த புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பின் முடிவுகள் வெளியிடப்பட்டது.

## 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு–ஜல் சக்தி துறை தகவல்

| நீர்நிலைகள் | முன்னிலை மாநிலங்கள் |
|---|---|
| அதிகளவு ஏரிகள் | தமிழ்நாடு |
| குளங்கள், நீர்த்தேக்கங்கள் | மேற்கு வங்கம் |
| தொட்டிகள் | ஆந்திரா |
| நீர்நிலை பாதுகாப்பு திட்டங்கள் | மகாராஷ்டிரா |

- மேற்குவங்கம், தமிழ்நாடு, கேரளா, உத்திரப்பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் நகர்ப்புற நீர்நிலைகள் அதிகளவில் உள்ளது.
- நீர்நிலைகளின் எண்ணிக்கையில் மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம், ஆந்திரா, ஒடிசா, அசாம் ஆகிய 5 மாநிலங்களில் நீர் நிலைகள் அதிகளவில் உள்ளன. இவை நாட்டின் மொத்த நீர்நிலைகளில் 63%.

| நீர்நிலைகள் | சதவீதம் |
|---|---|
| குளங்கள் | 59.5% |
| தொட்டிகள் | 15.7% |
| நீர்த்தேக்கங்கள் | 12.1% |
| நீர் பாதுகாப்பு திட்டங்கள், தடுப்பணைகள் | 9.3% |
| ஏரிகள் | 0.9% |
| மற்றவை | 2.5% |


- 55.2% நீர்நிலைகள் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானவை, 44.8% நீர்நிலைகள் பொது உரிமையில் உள்ளன.

## செய்தி :

- கடந்த வாரத்தில் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையானது, இந்தியாவில் எவ்வளவு எண்ணிக்கையில் நீர்நிலைகள் உள்ளது மற்றும் அதன் பயன்பாடு என்ன தொடர்பாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.
- ஜல்சக்தி அமைச்சகமானது, இந்தியாவில் உள்ள நீர்நிலைகள் தொடர்பாக முதல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது 24, 24, 540 நீர்நிலைகளை இந்தியாவில் அடையாளம் கண்டு உள்ளது.
- இந்த நீர்நிலை கணக்கெடுப்பில் எந்த ஒரு இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்நிலைகள், நீர்பாசனம், தொழில், மீன் வளர்ப்பு, வீட்டு பயன், மறுஉருவாக்கம், மதப் பயன்பாடு, நிலத்தடி நீர் அதிகரிப்பு போன்ற பல்வேறு பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகிறது.

## விளக்கப்படம் : 1




- விளக்கப்படம் 1-ல் பல்வேறு நீர்நிலைகளின் சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளன.

குளம் 59.5% = 1,442,993

தொட்டிகள் 15.7% = 3,31,805

நீர்த்தேக்கம் 12.1% = 2,92,280

நீர் பாதுகாப்பு திட்டம் 9.3% = 2,26,217

(வழிந்தோடும் தொட்டி, தடுப்பணைகள்)

ஏரிகள் 0.9% = 22,361

மற்றவை 2.5% = 58,884

மேற்கு வங்கம் = குளம்


ஆந்திர பிரதேஷம் = தொட்டி

தமிழ்நாடு = ஏரி

மகாராஷ்டிரா = நீர் பாதுகாப்பு திட்டம்

- அட்சரேகை, தீர்க்க ரேகை உட்பட அனைத்து நீர்நிலைகள் படங்கள் அடங்கிய அலைபேசி செயலியானது இந்த செயல்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

## விளக்கப்படம் : 2




- அனைத்து நீர்நிலைகளின் இருப்பிடம் கொடுக்கப்பட்டள்ளது.
- ஒவ்வொரு புள்ளியும் கிட்டத்தட்ட 500 நீர்நிலைகளை குறிக்கும்.
- அதிக அளவிலான நீர்நிலைகள் மீன் வளர்ப்பு தொடர்பான செயல்பாடு, நீர்ப்பாசனம், நிலத்தடி நீர் சேகரித்தல், வீட்டு தேவைகள் மற்றும் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது.
- 20,30,40 பயன்படுத்தக்கூடிய நீர்நிலைகளில்

  55.5% = மீன்வளர்ப்பு = 11,26,830


  16.5% = நீர்ப்பாசனம் = 3,35,768

  12.1% = நிலத்தடி நீர் அதிகரிப்பு = 2,44,918

  10.1% = வீட்டு தேவை (ம) குடிநீர் தேவை = 2,05,197

- இதரவை பொழுதுபோக்கு, தொழில், மதம் மற்றும் இதர நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

## விளக்கப்படம் : 3




- மாநிலங்களில் அதிகளவில் எந்த தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# 07 சுற்றுச்சூழல், உயிரினப்பன்மை மற்றும் பேரிடர் மேலாண்மை

## பருவநிலை மாற்றம் தொடர்பாக நாடுகள் மீது வழக்கு தொடரலாமா?

### செய்தி

- காலநிலை பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க சட்டப்பூர்வ கடமைகள் உள்ளதா என்பது குறித்து ஆலோசனை கருத்தை வழங்குமாறு சர்வதேச நீதிமன்றத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏன் கேட்டுள்ளது?
- எந்த நாடு இந்த பிரச்சனையை ஐ.நா.விடம் கொண்டுவந்துள்ளது? அடுத்தது என்ன நடக்கும்?

### இதுவரை

- மார்ச் 29 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த தீர்மானமானது ஹேக்கில் உள்ள நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தை ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு மாநாடு (UN Framework Convention for Climate Change) அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் பருவநிலை மாற்றத்தை குறைப்பதில் நாடுகளுக்கு என்ன வகையான கடமைகள் உள்ளன என்பது குறித்த கருத்தை வழங்குமாறு கோரியது.
- இந்த தீர்மானமானது உலகின் மிகச்சிறிய நாடுகளில் ஒன்றான பசிபிக் தீவான வனுவாடுவால் நிறைவேற்றப்பட்டது என்பது முக்கியமானது.
- இந்த நாடானது 2015-ம் ஆண்டில் ஏற்பட்ட பாம் சூறாவளியால் பேரழிவுக்கு உட்பட்டுள்ளது.
- காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட இந்த பேரழிவினால் 95% பயிர்களானது அழிந்தது மற்றும் மக்கள் தொகையில் 3-ல் 2 பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### இந்த தீர்மானமானது எதை எதிர்பார்க்கிறது?

- இந்த வரைவு தீர்மானமானது (A/77/L.58) ஐ.நா. சாசனத்தின் 96வது பிரிவின் கீழ் 2 கேள்விகளை விவாதிக்க நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டது.

  1. தற்போது மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான காலநிலை அமைப்பின் பாதுகாப்பை உறுதிசெய்ய சர்வதேச சட்டத்தின் கீழ் நாடுகளின் கடமைகள் என்ன?

  2. இந்த விதிகள் மற்றும் சட்டங்களை நீக்கிய நாடுகளுக்கான சட்ட விளைவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தில் எதிர்மறையான பாதிப்பிற்கு காரணமான குறிப்பாக சிறிய தீவுகளுக்கான வளரும் நாடுகள் மற்றும் அதிகளவு பாதிப்புக்குள்ளான நாடுகளுக்கான சட்ட விளைவுகள் என்ன?

- இந்த தீர்மானமானது பல்வேறு சர்வதேச ஒப்பந்தங்கள் அதாவது பாரிஸ் ஒப்பந்தம் (2015), ஐக்கிய நாடுகளின் கடல் சட்டத்திற்கான மாநாடு மற்றும் மனித உரிமைக்கான உலகளாவிய தீர்மானத்தை உள்ளடக்கியது.
- முழு செயல்முறையானது நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் தனது கருத்தை தெரிவிக்க 18 மாதங்கள் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

- பொதுவாக காலநிலை நீதிக்கான தேவையை ஆதரித்தாலும், புவி வெப்பமடைதலுக்கு வளர்ந்த நாடுகளை பொறுப்பேற்க வைத்தாலும் இந்தியா இந்த நடவடிக்கை குறித்து எச்சரிக்கையுடன் அமைதியாக உள்ளது.
- நீதிக்கான சர்வதேச நீதிமன்ற கருத்தின் தாக்கங்கள் மற்றும் சர்வதேச மாற்றங்களை ஆராய்வதற்கான நாட்டிலுள்ள சட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கம் இத்தீர்மானத்தை பரிந்துரைத்துள்ளதாக அறியப்படுகிறது.

- இந்தியா தனது தேசிய அளவிலான உறுதியான பங்களிப்பு (Nationally Determined Contribution) புதுப்பித்துள்ளது. அதாவது 2015 பாரிஸ் மாநாட்டின் தேவை மற்றும் மின்சார ஆற்றல் தேவைக்கான பாதி மூலாதாரத்தை 2030-க்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பெறுவதற்கான தனது வழியில் செயல்படுகிறது.
- இருந்தபோதிலும் முக்கியமானது என்னவெனில், இந்த வரைவுத் தீர்மானத்தை வழங்கும் பெரும்பான்மையான நாடுகளின் கூட்டமைப்பில் இந்தியா இணையவில்லை.
- அண்டை நாடுகளான பங்களாதேஷ், மாலத்தீவு, நேபாளம், ஸ்ரீலங்கா மற்றும் இந்திய கடல் பகுதிகளில் உள்ள தீவுக்கூட்ட நாடுகளான இந்த வரைவினை வழங்குபவர் கூட்டமைப்பில் இணைந்துள்ளது.
- அமெரிக்கா மற்றும் சீனா போன்ற உலக வல்லரசுகள் இந்த தீர்மானத்திற்கு எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதை இந்தியா கவனித்து வருகிறது.
- ஏனெனில் அவர்களின் ஆதரவு இல்லாமல் இத்தீர்மானத்தை செயல்படுத்துவது கடினம்.
- தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது ஒரு நீதித்துறை செயல்முறையை தொடங்குவது பகிரப்பட்ட இலக்குகளை அடைவதற்கான சிறந்த வழியா என்பது குறித்து அமெரிக்க பிரதிநிதி தனது கருத்தினை தெரிவித்துள்ளார்.
- அவர் மேலும் காலநிலை நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிப்பது இராஜதந்திர முயற்சிகள் மூலம் சிறப்பாக அடையப்படுகிறது என்று தெரிவித்துள்ளார் என ஐக்கிய நாடுகளின் செய்திக் குறிப்பானது தெரிவிக்கிறது.
- இந்திய அதிகாரிகள் நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தின் செயல்முறையானது காலநிலை மாற்ற பிரச்சனைகளை மட்டுமே பேசுகிறது என்று தெரிவித்துள்ளனர் மற்றும் பிரச்சனையானது பரந்துள்ளது மற்றும் இது ஒரு பெயரில் குறிப்பிட இயலாது அல்லது எந்த ஒரு நாட்டின் செயல்முறைக்குள்ளும் அடக்கிவிட முடியாது.
- பாரிஸ் ஒப்பந்தத்தை குறிப்பிட்டு கீழிருந்து மேல் நடைமுறையில் இது ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. இதில் காலநிலை மாற்றத்தை கணிக்கும் திறனை நாடுகளே தீர்மானிக்கின்றன. மேலும் மேல்கீழ் முறையில் ஒரு கருத்தை திணிக்கும் எந்த முயற்சியும் எதிர்க்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.
- வரும் காலங்களில் இந்த செயல்முறையின் வேகமானது அதிகரிக்கக்கூடும் என்பதால் பல நாடுகள் தங்கள் கருத்தை தெரிவிக்க வாய்ப்புள்ளது.
- தீர்மானத்தின் ஆதரவாளர்கள் எதனை விரும்புகிறார்கள் அனைத்து 193 ஐ.நா. உறுப்பு நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட மிக உயர்ந்த உலகளாவிய நீதிமன்றமான சர்வதேச நீதிமன்றத்தின் கருத்து UNFCCC-ன் கீழ் அனைத்து நாடுகளும் காலநிலை மாற்றம் புவி வெப்பமடைதலை பரிந்துரைக்கப்பட்ட 1.5 - 2 டிகிரி செல்சியஸ் வரம்பிற்கு தணிக்க வேலை செய்வதை உறுதி செய்யும் முயற்சிகளுக்கு வலு சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- காலநிலை மாற்றத்திற்கான நாடுகளுக்கிடையேயான குழுவின் தற்போதைய தொகுப்பு அறிக்கையின்படி உலகளாவிய காலநிலை அளவானது ஏற்கனவே தொழிற்துறைக்கு முன்பிருந்த அளவைவிட 1.1 டிகிரி அதிகரித்துள்ளது.
- பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறைப்புகளில் ஆழமான குறைப்பானது 2030-க்குள் பாதியாக இருக்க வேண்டும்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்ரேஸ் சர்வதேச நீதிமன்றத்தின் கருத்தானது "அத்தியாவசியமானது" மற்றும் நாடுகளுக்கு இடையில் உள்ள உறவுகளிலும் அதே போல் அவர்களின் மக்களுக்கு வழிகாட்டும் என்று கூறியுள்ளார்.
- வனுவாட்டு மற்றும் அதன் ஆதரவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் வழியானது கடல் சட்டத்திற்கான சர்வதேச தீர்ப்பாயத்திற்கு 2022 டிசம்பரில் சிறிய தீவு நாடுகளால் கோரப்பட்ட ஆலோசனை கருத்துக்கான மற்றும் 2 முயற்சிகளை காட்டிலும் அதிகமாக உள்ளடங்கியதாக தெரிகிறது.
- கொலம்பியா, சிலி ஜனவரி 2023-ல் மனித உரிமைகளுக்கான இன்டர் - அமெரிக்கன் நீதிமன்றத்தில் "காலநிலை அவசர நிலை" தொடர்பான நாடுகளுக்கான மனித உரிமை கடமைகள் குறித்த ஆலோசனை கருத்தை கேட்டது.

## தீர்மானத்திற்கான யோசனையை தூண்டியது ஏன்?

- காலநிலை கடமைகளுக்கான வழக்கை மிக உயர்ந்த நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கான யோசனை பசிபிக் தீவு நாடுகளைச் சேர்ந்த 27 சட்ட மாணவர்கள் அடங்கிய குழுவிடம் இருந்து வந்தது.
- அவர்கள் ஒரு பிரச்சாரத்தை ஏற்படுத்தி அதை பசிபிக் தீவுகள் மன்றத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

- 2019-ம் ஆண்டு முதல் வனுவாட்டு அரசாங்கம் 18 உறுப்பினர்களைக் கொண்ட "முகாந்திரக்குழு" நாடுகளின் ஆதரவுடன் சர்வதேச நீதிமன்றமானது ஆலோசனைக் கருத்துக்கான யோசனையை ஊக்குவித்து வருகிறது.
- சர்வதேச நீதிமன்றமானது 132 நாடுகளால் ஆதரவு அளிக்கப்பட்ட வரைவுத் தீர்மானத்தை உருவாக்கியுள்ளது மற்றும் எந்தவொரு வாக்கெடுப்பு இல்லாமல் ஐ.நா.வில் நிறைவேறியது.
- இருப்பினும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் தங்களுடைய முன்மொழிவினை வெளிப்படுத்தியுள்ளன. எந்தவொரு நாடும் இந்த தீர்மானத்திற்கு எதிராக எதிர்க்கவில்லை.
- வனுவாட்டு நாட்டின் பிரதம அமைச்சர் இஸ்மாயில் கல்சாகூ, இந்த வரைவானது "காலநிலை நீதிக்கான மிகப்பெரிய விகிதாச்சாரத்தின் வெற்றி"என்று அழைத்தார்.

### சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை கருத்து பிணைக்கப்படுகிறதா?

- சர்வதேச நீதிமன்றத்திடம் ஆலோசனை கருத்தானது கேட்கப்படுகிறது.
- ஆனால் இந்த வரையறையானது சட்ட ரீதியாக இதில் இணைக்கப்படவில்லை. இருப்பினும் சர்வதேச நீதிமன்றத்தின் சுற்றுச்சூழல் சட்டங்களை தெளிவுபடுத்துவது செயல்முறையை மேலும் நெறிப்படுத்துகிறது.
- குறிப்பாக, COP செயல்முறை காலநிலை நிதி, காலநிலை நீதி மற்றும் சமீபத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட பல்வேறு சிக்கல்களில் கவனம் செலுத்துகிறது.
- கடந்த ஆண்டு ஷார்ம் எல்ஷேக் கீழ் நடைபெற்ற COP 27-ல் "இழப்பு மற்றும் சேதங்கள்" நிதிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச நீதிமன்றமானது "சட்ட மற்றும் ஒழுக்க அதிகார"த்தினை கொண்டுள்ளது என இந்த வரைவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெரியார் பெயரால் பழங்குடிகள் வஞ்சிக்கப்படலாமா?

- ஈரோடு காட்டுப் பகுதியில், தந்தை பெரியார் பெயரில் 80,567 ஹெக்டேர் பரப்பில் வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட உள்ளதாகத் தமிழ்நாடு அரசு அறிவித்திருப்பது, வனத்தை நம்பி வாழ்ந்துவரும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.
- காடுகளில் வாழ்ந்துவந்த பழங்குடிகளை வெளியேற்றி விலங்குகளை வேட்டையாட, கனிம வளங்களை வெட்டியெடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டதுதான் ஆங்கிலேயர் காலத்து வனச்சட்டம்.
- அதுவேதான் இன்றைக்கு வனவிலங்கு சரணாலயம், தேசியப் பூங்காக்கள், புலிகள் காப்பகம் எனப் பல்வேறு பெயர்களில் கொண்டுவரப்படுகிறது.
- மின்சாரத் திட்டங்கள், அணைக்கட்டுகள், தேயிலை-காபித் தோட்டங்கள், காகிதத் தொழிற்சாலைகள், செயற்கை நூல் ஆலைகள் போன்றவற்றுக்காகக் காட்டுப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகள் பேசப்படுவதில்லை.

### தேசிய வனக்கொள்கை

- உலகம் முழுவதும் காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த இன்றுவரை பழங்குடிகள்தான் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
- ஆனால், பெரும் வாக்கு வங்கியாக அல்லது - குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் அவர்களது குரல்களை அதிகாரவர்க்கம் செவிமடுப்பதில்லை.
- நாட்டின் மொத்தப்பரப்பில், சமவெளியில் மூன்றில் ஒரு பங்கும், மலைப்பகுதியில் மூன்றில் இரண்டு பங்கும் காட்டுப் பகுதிகளாக இருக்க வேண்டும் என்கிறது தேசிய வனக்கொள்கை.

### வன உரிமை அங்கீகார சட்டம்

- காட்டை நம்பி வாழும் மக்களைக் காட்டின் விரோதிகளாக முத்திரை குத்தும் அவலத்தை மாற்றியமைத்ததுதான் 2006இல் கொண்டுவரப்பட்ட வன உரிமை அங்கீகாரச் சட்டம்.
- இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் 'இதுவரை பழங்குடி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி இந்தச் சட்டத்தின் மூலமாகத் துடைத்தெறியப்படுகிறது' என்று அறிவித்தார்.
- ஆனால், 16 ஆண்டுகள் கடந்த பின்பும் அந்தச் சட்டத்தின் பயன்கள் பழங்குடிகளுக்கும் காட்டை நம்பி வாழ்ந்து வருகின்ற மக்களுக்கும் கிடைக்கவில்லை.

- இந்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் புதிய வனவிலங்கு சரணாலயமும் புலிகள் காப்பகமும் திறக்கப்படுகின்றன.
- இவை காட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடிகள் விரட்டியடிக்கப்படவே வழிவகுக்கின்றன.

## புலி உறுமுது

- இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் 40 ஆயிரம் புலிகள் இருந்தன. 1970 களில் 1800 ஆக குறைந்தது.
- 1969-ல் டில்லியில் சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் பொதுக்கூட்டத்தில், புலிகளை வேட்டையாட தடை விதித்து அவற்றை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
- இந்த எண்ணிக்கையை அதிகரிக்க 1973 ஏப்.1-ல் புலிகள் பாதுகாப்பு திட்டம் இந்தியாவில் தொடங்கப்பட்டது.
- முதலில் உத்திரகாண்டில் உள்ள ஜிம் கார்பெட் தேசிய பூங்கா, புலிகள் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது.
- துவக்கத்தில் 9 புலிகள் காப்பகம் இருந்தன. பரப்பளவு 18,278 சதுர கி.மீ. தற்போது 18 மாநிலங்களில் 53 புலிகள் பாதுகாப்பகம் உள்ளன.
- மொத்த பரப்பளவு 75 ஆயிரம் சதுர கி.மீ. இத்திட்டத்திற்கான நிதி ரூ.500 கோடியாக உயர்ந்துள்ளது. 2018, கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 2967 புலிகள் வாழ்கின்றன.

## டாப் புலிகள் சரணாலயங்கள்

- ஜிம் கார்பெட் பூங்கா, உத்திரகாண்ட்
- பந்திப்பூர் தேசிய பூங்கா, கர்நாடகா
- காசிரங்கா தேசிய பூங்கா, அசாம்
- சுந்தரவனக் காடுகள், மேற்கு வங்கம்
- முதுமலை புலிகள் காப்பகம், தமிழகம்
- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புலிகள் கணக்கெடுப்பு பணி நடக்கிறது.

### எதிர்காலம்

- வனப்பகுதிகளை ஒட்டி விரிவுபடுத்தப்படும் சாலை, ரயில்வே திட்டப் பணிகளால் எதிர்காலத்தில் புலிகளை பாதுகாப்பது சவாலாக இருக்கும்.

### காடுகளை காக்க

- இந்தியாவின் தேசிய விலங்கு புலி, இதன் எண்ணிக்கை சீராக இருந்தால்தான் பல்லுயிரி பெருக்கத்தை தக்க வைத்து, வனத்தின் இயல்பு நிலையை பாதுகாக்க முடியும்.

### 70 சதவீதம்

- உலகில் உள்ள புலி எண்ணிக்கையில் 70% இந்தியாவில் உள்ளது. 50 ஆண்டுகளில் உயர்ந்த புலி எண்ணிக்கை

| ஆண்டு | எத்தனை |
|---|---|
| 1972 | 1827 |
| 1979 | 3015 |
| 1984 | 4005 |
| 1989 | 4334 |
| 1993 | 3750 |
| 1997 | 3508 |
| 2002 | 3642 |
| 2006 | 1411 |
| 2010 | 1706 |
| 2014 | 2226 |
| 2018 | 2967 |

## தேவாங்கு பாதுகாப்பு மையம்

- அரிய வகை தேவாங்கு இனம், தமிழ்நாட்டின் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வனப்பகுதியில் வாழ்கின்றது.
- இவை கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகளில் பரவியுள்ளன.
- அழிவின் விளிம்பில் உள்ள இந்த தேவாங்கு இனத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் ஒன்று ரூ.20 கோடியில் அமைக்கப்படும்.
- சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் தஞ்சாவூர் மனோராவில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்படும்.
- பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பாதுகாக்க பள்ளிக் கரணை பாதுகாப்பு மையம் ரூ.20 கோடியில் ஏற்படுத்தப்படும்.
- பறவைகள் சரணாலயமான வேடந்தாங்கல் ஏரியில் சூழல் மறுசீரமைப்பு பணி, அந்த கிராம மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்க ஒருங்கிணைந்த வளர்ச்சிப்பணிகள் ரூ.9 கோடியே 30 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
- கூத்தன்குளம் பறவைகள் சரணாலய வளர்ச்சிப் பணிகள் ரூ.6 கோடியில் மேற்கொள்ளப்படும்.
- பழவேற்காடு பறவைகள் சரணாலயப் பகுதியில் சுற்றுலாத் திறனை மேம்படுத்தும் வளர்ச்சிப் பணிகள் ரூ.3 கோடியே 70 லட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
- அரியலூர் கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் ரூ.1 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

## நாட்டு மரங்களுடன் 1,000 குறுங்காடுகள்

- குறுங்காடுகள் இயற்கையாகவே காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்வதிலும், காலநிலை மாற்ற மேலாண்மை செயல்திட்டங்களிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- இந்த குறுங்காடுகள் திட்டத்தின் கீழ் நாட்டு மரங்கள் கொண்ட 1000 குறுங்காடுகள். தொழிற்சாலைகளால் உருவாக்கப்படும்.
- இது முதல்வரின் பசுமை தமிழ்நாடு திட்டத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை அடைய உதவும் விதமாகச் செயல்படுத்தப்படும்.
- தமிழகத்தில் 38 மாவட்டங்களில் நீர்நிலைகளைச் சிறப்பாக பாதுகாக்கின்ற மற்றும் மேம்படுத்துகின்ற 100 நபர்களுக்கு முதலமைச்சரின் நீர்நிலை பாதுகாவலர் விருது வழங்கப்படும்.
- அதன்படி நபர் ஒருவருக்கு ரூ.1 லட்சம் வீதம் ரூ.1 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- காலநிலை மாற்றத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதற்கும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கேற்ற புதுமைகளைப் புகுத்துவதற்கும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒரு பசுமை நிதி உருவாக்கப்படும்.
- இந்த நிதி மூலம் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சிறந்த திட்டங்கள் மற்றும் தீர்வுகளை பெற்று அப்பணிகளுக்கான நிதியுதவி அளிக்கப்படும்.
- இதனால், வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு குறைவான கார்பன் உமிழ்வை அடையும் என்றார்.

## ஜிம் கார்பெட்

- ஆங்கிலேயரான ஜிம் கார்பெட், இந்தியாவிலுள்ள உத்தரப்பிரதேச மாநிலம் நைனிடாலில், 25.07.1975இல் பிறந்தார்.
- அவருடைய பெற்றோர் கோடைக்காலத்தில் நைனிடாலிலும், குளிர்காலத்தில் தற்போதைய உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள காலதூங்கி என்கிற காடுகளால் சூழ்ந்த கிராமத்திலும் வசித்து வந்தார்கள்.
- அவரின் கூரியக் கண்பார்வை, கேட்கும் திறன், நினைவாற்றல், துணிச்சல், விலங்குகள், பறவைகள் போல ஒலியெழுப்பும் திறன், இரவில் நிலவு வெளிச்சத்திலும், நட்சத்திர ஒளியிலும்கூட சுடும் ஆற்றல், புலி, சிறுத்தை ஆகியவற்றின் காலடித் தடத்தை வைத்து அவற்றின் வயது, பாலினம், ஆரோக்கியம் ஆகிய அம்சங்களைக் கணித்தல் போன்ற திறமைகள் காடுகளின் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' என அவரைப் போற்ற வைத்தது.

### கொண்டாடப்படுவதற்கான காரணங்கள்

- அவர் வாழ்ந்த காலதுங்கியின் அருகிலிருந்த ஹால்த்வானி என்ற 221 ஏக்கர் பரப்பளவுள்ள கைவிடப்பட்ட கிராமத்தை ரூ.1,500/-க்கு வாங்கி புதர்கள், செடிகளை நீக்கி, நிலப் பகுதிகளாகப் பிரித்து, அத்துடன் வீடுகளையும் கட்டி, தண்ணீர் வசதிக்காக சிமெண்ட் கால்வாய்களையும், விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காக்க, ஆறு அடி உயரச் சுற்றுச்சுவரையும் கிராமத்தைச் சுற்றி அமைத்து, அந்த வீடுகளில் மலைவாழ் மக்களைக் குடியமர்த்தினார்.
- அங்கிருந்த வீடுகளுக்கும் நிலங்களுக்கும், அவரே வரிசெலுத்தி வந்தார்.
- காலதுங்கியில் இருந்த அவரின் வீடு, ஒரு சிறிய மருத்துவமனையாகவே செயல்பட்டது.
- அவருடைய தமக்கை மேகி என்பவர் மருத்துவச் செவிலியர் பயிற்சி பெற்றிருந்ததால், ஒவ்வொரு நாளும் அங்கு வரும் நோயாளிகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்யப்பட்டது.
- இந்தியா 1947-ல் சுதந்திரம் பெற்றபோது அவரும், அவருடைய தமக்கையும் கென்யா சென்று அங்கேயே தங்குவது என்று முடிவெடுத்தனர்.
- ஆதலால் ஹால்த்வானி கிராமத்தை அந்த மக்களுக்கே இலவசமாக வழங்கிவிட்டார்.

## புலிகளின் பெயரால் பந்தாடப்படும் பழங்குடிகள்

### பழங்குடிகள் மீதான அழுத்தம்

- புலிக் காப்பகங்கள் வெளிப்பகுதி (Buffer Area), மையப்பகுதி (Core Area) என வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இதில் மையப் பகுதியில் வசிக்கும் மக்கள் தாமாக முன்வந்து வனத்துறையின் உதவியின்றியோ, அவர்களின் உதவியுடனோ புலிக் காப்பகத்தை விட்டு இடம்பெயர்தல் என்கிற திட்டம் செயல்பாட்டில் உள்ளது.
- வனத்துறையின் உதவியின்றி வெளியேறும் ஒரு குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் வழங்கப்பட்டு வந்தது.
- தற்போது அது ரூ.15 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.
- வனத்துறையின் உதவியுடன் வெளியேறுபவர்களுக்கு மாற்று இடத்தில் அதே தொகையில் அவர்களுக்கான விவசாய நிலத்துக்கு 35%, நில உரிமைக்கு 30%, இருப்பிடம் கட்ட 20%, சாலை, குடிநீர் மற்றும் பிற அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்ய 10%, ஊக்கத்தொகையாக 5% என்று முற்றிலும் வனத் துறையால் நிறைவேற்றித் தரப்படும்.
- 'தாமாக முன்வந்து இடம்பெயர்தல்' என்னும் இத்திட்டம் நடைமுறையில் இருந்தாலும், கணிசமான எண்ணிக்கையிலான இடம்பெயர்வு பல புற அழுத்தங்களால் நடைபெறுவதை முற்றிலும் மறுக்க இயலாது.
- உதாரணத்துக்கு, வனச் சோதனைச் சாவடிகள் அமைத்து மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், சாலை, மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு அனுமதி மறுத்தல், விவசாயம் செய்யவும், இடுபொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும் மறைமுக இடர்ப்பாடுகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை கூறலாம்.
- அதுபோல இடம்பெயர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது புலிக் காப்பகங்கள் சிலவற்றில் பழங்குடி மக்களுக்குச் சேர வேண்டிய நிவாரணத் தொகைகளை வன அதிகாரிகளே கையாடல் செய்த நிகழ்வுகளும் நடந்தேறியுள்ளன.
- இதுவரை 18,000க்கும் அதிகமான குடும்பங்கள் புலிக் காப்பகத்திலிருந்து இடம்பெயர்க்கப்பட்டிருக்கின்றன.
- அவர்கள் குடியேற்றப்பட்ட அநேக இடங்களில் அரசு உறுதியளித்த அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படாததாலும், அவ்விடங்களில் அவர்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்வதில் சிக்கல் இருப்பதாலும், இடம்பெயர்ந்த பழங்குடி மக்கள் மறுபடியும் தங்களின் பூர்விக நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என விரும்புகிறார்கள்.
- இத்திட்டத்தால் ஒரே ஒருவர் பாதிக்கப்பட்டாலும்கூட அது சமூகவியல் மற்றும் மானுடவியல் அடிப்படையில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியம்.
- ஆனால், அத்தகு விவாதங்கள் பொதுவெளியில் போதுமான அளவு உருவாகவில்லை.

## தவிர்க்க இயலாத தீமை

- மேற்சொன்ன குறைகளைத் தவிர, பல புலிக் காப்பகங்களில் சுற்றுலா ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் மீறப்படுவதாகவும் கண்டனக் குரல்கள் எழுகின்றன.
- உதாரணத்துக்கு, உத்தராகண்ட்டில் உள்ள ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவில், நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வனத் துறையால் காட்டுக்குள் அனுமதிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் உண்டு.
- புலிகள் பாதுகாப்புக்காக எனச் சொல்லி பழங்குடிகளை வெளியேறச் செய்துவிட்டு, அதிகளவில் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பது முரண் இல்லையா?
- ஒரு வனத்துறை அதிகாரி என்னிடம், புலிக் காப்பகங்களில் சுற்றுலா என்பது தவிர்க்க இயலாத தீமை என்று கூறினார்.
- அத்தகைய தீமையை ஏற்கத் துணிந்த நாம், பழங்குடிகளின் உரிமைகளையும் சேர்த்தே மறுக்கத் துணிகிறோம்.
- நாம் புலிகளின் எண்ணிக்கையை அதிகரித்த வெற்றிக் கொண்டாட்டத்தில் இருக்கும் இவ்வேளையில், அத்திட்டத்தால் பழங்குடி மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, மறுத்தளிப்பது அறிவார்ந்த செயலாக இருக்க முடியாது.
- ஆகவே, புலிப் பாதுகாப்புத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அழுகுரல்களுக்கும் சற்று செவி சாய்ப்போம்.

# பூமியைக் காப்போம்

- நாம் வாழும் இந்த பூமி சூரிய மண்டலத்தின் ஐந்தாவது பெரிய கோள். வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் இவை பூமியைவிடப் பெரியவை.
- சூரிய குடும்பத்தில் மொத்தமுள்ள எட்டு கோள்களில், வேறு எந்த கோளுக்கும் இல்லாத உயிர்கள் வாழக்கூடிய தனிச்சிறப்பு பூமிக்கு மட்டுமே உண்டு.
- சூரிய குடும்பத்திலுள்ள மற்ற கோள்களைப் போலவே, பூமியும் சூரியனைச் சுற்றி வருகிறது.
- பூமியின் விட்டம் 12,742 கி.மீ. அதன் சுற்றளவு 40,075 கி.மீ. இந்த பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ள 23 மணி நேரம் 56 நிமிடம் 4.09 வினாடி எடுத்துக் கொள்கிறது.
- பூமி ஒரு மணி நேரத்திற்கு கிட்டத்தட்ட 1,000 மைல் (சுமார் 1674 கி.மீ) வேகத்தில் சுழல்கிறது.
- ஒரு வினாடிக்கு 30 கி.மீ தொலைவு என பூமி ஒரு முறை சுற்றுப்பாதையை முடிக்க 365 நாட்கள் (ஓர் ஆண்டு) ஆகிறது.
- இது ஒரே திசையில் அதாவது தன்சுழற்சியில் மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறது.
- பூமி கிரகம் சுழலும்போது, சூரியனை எதிர்கொள்ளும் புறம் பகலைப் பெறுகிறது, மற்றொரு புறம் இருளில் உள்ளது.
- பூமியையும், அதன் மீது வாழும் உயிரினங்களையும் காக்கும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதி ‘உலக பூமி தினம்’ கொண்டாடப்படுகிறது.
- அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் கோலார்ட் நெல்சன் என்பவரின் தீவிர முயற்சியால் 1970-ஆம் ஆண்டு உலக பூமி நாள் ‘எர்த் டே நெட்வொர்க்’ எனும் அமைப்பால் தொடங்கப்பட்டது.
- இந்த அமைப்பு, இதுவரை 193 நாடுகளை தன்னுடன் இணைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டு உலக பூமி தினத்திற்கான கருப்பொருள் ‘எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்’ என்பதாகும்.
- மனித குலம் தோன்றுவதற்கு முன்பே பல்வேறு உயிரினங்களை தன் மடியில் தாங்கி கொண்டதுதான் எழில் நிறைந்த இந்த பூமி.
- உலகிலுள்ள 900 கோடி மனிதர்களுக்கும், எண்ணிலடங்கா உயிரினங்களுக்கும், உணவு, உறைவிடத்தை அளித்து பேணிக் காத்து வருவதும் நாம் வாழும் இந்த பூமி தான்.
- ஒருபுறம் மக்கள்தொகை பெருகப்பெருக, மறுபுறம் பூமியின் வளங்கள் குறைந்து கொண்டே வருகின்றன.
- நம்மைச் சுற்றியிருக்கும் இந்த பூமி மனிதர்கள் மட்டுமே வாழ்ந்து வருவதற்கானது அல்ல. பல்வேறு வகையான புள்ளினங்கள், புழுக்கள், பூச்சிகள், தாவரங்கள், விலங்குகள், இந்தப் பூமியை நம்மோடு பகிர்ந்து கொண்டு, நம்மோடு வாழ்ந்து வருகின்றன.

- அவற்றிற்கான வாழ்விடங்களை மனிதர்களின் பேராசையாலும், சுற்றுச்சூழல் பாதிப்பினாலும் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக்கொண்டு வருகின்றனர்.
- வரும் 2050-ஆம் ஆண்டிற்குள் மனிதனின் பேராசையினால் பூமியை அண்டி வாழும் ஐம்பது சதவீத உயிரினங்கள் பூமியை விட்டு விலகி விடும் என்ற அதிர்ச்சி செய்தியை புவியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- இது பூமித் தாய்க்கு நாம் செய்யும் மாபெரும் துரோகமாகும்.
- நம்மை சுமந்து காக்கும் பூமியை, நாம் நல்ல முறையில் காக்க வேண்டும். அது மனித குலத்தின் கடமை.
- நாம் வாழும் நம் பூமியை இப்போது நாம் சேதப்படுத்தினால், வருங்கால சந்ததியினர் வாழ மற்ற கோள்களைத்தான் நாட வேண்டும்.

# அச்சுறுத்தும் வெப்ப அலை

## வெப்ப அலை என்பது...

- குறிப்பிட்ட பகுதியின் அதிகபட்ச வெப்பநிலையானது தொடர்ந்து 2 நாள்களுக்கு 45 டிகிரி செல்சியஸுக்கு அதிகமாக காணப்பட்டால் அப்பகுதி வெப்பஅலை பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படும்.
- அதிகபட்ச வெப்பநிலை 47 டிகிரி செல்சியஸைக் கடந்தால் அதிதீவிர வெப்பஅலை பாதிப்பாக அறிவிக்கப்படும்.
- வெப்பஅலை அறிவிப்புக்கான வரம்பு மலைப்பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸாகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- குறிப்பிட்ட பகுதியில் நிலவும் இயல்பான வெப்பநிலை அதிகரிக்கும் விகிதத்தைக் கொண்டும் வெப்ப அலை பாதிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெப்ப அலை காலம்

- இந்தியாவில் பொதுவாக மார்ச் முதல் ஜூன் வரை வெப்ப அலை வீச அதிக வாய்ப்புள்ளது.
- சில சமயங்களில் அது ஜூலை வரை கூட நீடிக்கலாம். அதிகபட்ச அளவு வெப்ப அலையானது மே மாதத்தில் வீசும்.

## பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகள்

- வடமேற்கு சமவெளி, மத்திய, கிழக்கு, வடக்கு தீபகற்பப் பகுதிகள் ஆகியவை வெப்ப அலையால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

## வெப்ப அலை உருவாவதற்கான காரணிகள்

- வெப்பக் காற்றின் தாக்கம் அதிகரிப்பு மேல் வளிமண்டலத்தில் ஈரப்பதமற்ற நிலை மேகங்கள் இல்லாத சூழல் நிலப்பரப்பின் மீது குறைந்த காற்றழுத்தம்.

## வெப்ப அலை – வானிலை ஆய்வு மைய எச்சரிக்கைகள்

| எச்சரிக்கை நிறம் | எச்சரிக்கை | தாக்கம் |
|---|---|---|
| பச்சை (கிரீன்) | சராசரி அதிகபட்ச வெப்பநிலை | பெரிய அளவில் தாக்கங்கள் இல்லை |
| மஞ்சள் | 2 நாள்களுக்கு வெப்ப அலை வீசும் | குழந்தைகள், முதியோருக்கு உடல் நலம் பாதிக்கப்பட வாய்ப்பு |
| இளஞ்சிவப்பு | 2 நாள்களுக்கு தீவிர வெப்ப அலை அல்லது 4 நாள்களுக்கு வெப்ப அலை வீசும் | வெயிலில் நீண்ட நேரம் பணிபுரிவோர் பாதிக்கப்பட வாய்ப்பு. குழந்தைகள், முதியோருக்கு தீவிர பாதிப்பு வாய்ப்பு. |

SURESH' IAS ACADEMY

# 08 இந்தியப் பொருளாதாரம் - தற்போதைய பொருளாதார போக்குகள் மற்றும் இந்தியாவில் உலக பொருளாதாரத்தின் தாக்கம்

## வெளிநாட்டு வர்த்தக கொள்கை

- புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை (வெ.வ.கொ) ஏப்ரல் 1இலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

### வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை என்றால் என்ன?

- வெளிநாட்டு வர்த்தக மேம்பாடு-ஒழுங்கு முறைச் சட்டம் 1992-இன் கீழ், ஏற்றுமதியை அதிகரித்தல், இறக்குமதியை எளிதாக்குதல், கட்டணச் சமநிலையைப் பராமரித்தல் ஆகியவற்றுடன் வர்த்தகக் கொள்கைகளின் உருவாக்கம், செயல்படுத்துதல், கண்காணிப்பு ஆகியவை அரசாங்கத்தின் முக்கியப் பணிகளாகும்.
- சுதந்திரத்துக்குப் பிந்தைய வர்த்தக நடைமுறைகளை முற்றிலும் கைவிட்டு, உலகப் பொருளாதாரத்துடன் இந்தியாவை ஒன்றிணைக்கும் நடவடிக்கையாக, முதல் (1992), இரண்டாவது (1997-2022) ஐந்தாண்டு ஏற்றுமதி-இறக்குமதி (EXIM) கொள்கைகள் திட்டமிடப்பட்டன.
- இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்துக்கான, விரிவான அணுகுமுறையைக் கைக்கொள்ளும் நோக்கில், 'ஏற்றுமதி-இறக்குமதிக் கொள்கை', 'வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது (2004)

### இலக்கு

- வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில், 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் ஏற்றுமதியை சுமார் ரூ.160 லட்சம் கோடியாக அதிகரித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் ஏற்றுமதியை சுமார் ரூ.160 லட்சம் கோடியாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பொருள்கள் ஏற்றுமதி மதிப்பை சுமார் ரூ.80 லட்சம் கோடியாகவும், சேவைகள் ஏற்றுமதி மதிப்பை சுமார் ரூ.80 லட்சம் கோடியாகவும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- முந்தைய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் 5 ஆண்டு காலத்துக்கு இயற்றப்பட்ட நிலையில், தற்போதைய கொள்கை நிலையான காலத்துக்கு அல்லாமல் தேவைப்படும்போது மாற்றியமைக்கப்படும்.

### ரூபாயில் வர்த்தகம்

- வெளிநாட்டு வர்த்தகத்தை இந்திய ரூபாயில் மேற்கொள்ள முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
- அந்நியச் செலாவணி பற்றாக்குறை உள்ள நாடுகள் மற்றும் அமெரிக்க டாலர் கையிருப்பு போதுமான அளவில் இல்லாத நாடுகளுடன் இந்திய ரூபாயில் வர்த்தகம் மேற்கொள்ளத் தயாராக இருப்பதை அறிவித்துள்ளோம்.
- இதன் மூலம் இந்திய ரூபாய் சர்வதேச செலாவணியாக முன்னிறுத்தப்படும்.

### புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை

- இதற்கு முன் 5 ஆண்டு காலத்துக்கான வர்த்தக கொள்கைகள் வெளியிடப்பட்டு வந்த நிலையில், இனி, கால வரம்பின்றி, தேவைக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.
- இதனால் வர்த்தக கொள்கைகளில் அடிக்கடி மாறுதல்கள் இன்றி, தொடர்ந்து நீடிக்க வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.
- புதிய கொள்கையானது, இந்திய ரூபாயை, உலகளாவிய நாணயமாக மாற்றவும், உள்நாட்டு நாணயத்தில் சர்வதேச வர்த்தகத்தை செயல்படுத்தவும் முயற்சிக்கும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது.
- இந்த புதிய வர்த்தக கொள்கை, 2030ல் நாட்டின் ஏற்றுமதியை 2 டிரில்லியன் டாலராக அதாவது 164 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்க உதவும் வகையில் வகுக்கப்பட்டுள்ளது.

### சிறப்பம்சங்கள்

- வர்த்தக கொள்கை தொடரும் மற்றும் பதிலளிக்கக்கூடிய கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.
- ஊக்கத் தொகையிலிருந்து நிவாரணம் வரை அனைத்தும் அணுகப்படும்.

- ஏற்றுமதி பொருட்கள் மீதான கட்டணங்கள், வரிகள் மற்றும் அரசு தீர்வைகளை நீக்குவதற்கான திட்டத்தை இக்கொள்கை அறிமுகப்படுத்துகிறது.
- வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பான பயன்பாடுகளில், டிஜிட்டல் மயமாக்கல் மேற்கொள்ளப்படும்.
- முன்கூட்டிய அங்கீகாரம் தொடர்பான விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான அவகாசத்தை, ஒரு நாளாக குறைக்கும் முயற்சி
- 'ஸ்டார் டிரேடிங் ஹவுஸ்' என்ற அங்கீகாரத்திற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன.
- வணிக வர்த்தகத்திற்கான வாய்ப்புகளை அறிமுகப்படுத்தும்.
- பால் துறைக்கு சராசரி ஏற்றுமதி பொறுப்பை பராமரிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- பேட்டரி மின்சார வாகனங்கள்; விவசாய உபகரணங்கள் மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஆகியவை, ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலதன பொருட்கள் திட்டத்தின் கீழ், ஏற்றுமதி பொறுப்பு குறைக்கப்பட தகுதியானது ஆகிறது.
- ஆடை மற்றும் ஆடைத்துறைக்கு, சிறப்பு முன்கூட்டியே அங்கீகார திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து வெளிநாட்டு வர்த்தக கொள்கையின் நன்மைகளும் மின்னணு வர்த்தக ஏற்றுமதிகளுக்கு விரிவுபடுத்துகிறது.
- கடனை ஒருமுறை தீர்த்து வைப்பதற்கான பொது மன்னிப்பு திட்டம் அறிமுகம்.
- எதிர்காலத்துக்கு தயார்படுத்தும் வகையில், வர்த்தகத் துறையில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

## வெ.வ.கொ.202இன் காலகட்டம்

- வெ.வ.கொள்கையின் காலகட்டம் ஐந்து ஆண்டுகள் என்கிற வழக்கமான நிலையை இந்த அரசாங்கம் கைவிட்டிருக்கிறது.
- மாறிவரும் சூழ்நிலைக்கேற்பத் தேவைப்படும் மாற்றங்களை மேற்கொண்டு மேம்படுத்தும் வகையில் புதிய கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது.
- மேலும், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து சீரான இடைவெளியில் கருத்துகளைப் பெற்றுக் கொள்கையை மேம்படுத்தவும் சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## வெ..வ.கொ.2023–இன் குறிக்கோளும் இலக்குகளும்

- வணிகப் பொருள்கள் - சேவைத் துறைகளிலிருந்து சமபங்களிப்புடன் இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி மதிப்பை 2030க்குள் 2 டிரில்லியன் டாலராக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.
- 2022 ஜுலையில், ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்திய புதிய கட்டணத்தை தீர்வுக் கட்டமைப்பின உதவியுடன், எல்லை தாண்டிய வர்த்தகத்தில் இந்திய நாணயத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளது.

## வெ.வ.கொ.2023இன் முக்கிய அம்சங்கள்

1. 'ஒரு மாவட்டம், ஒரு பொருள்' திட்டத்தின் மூலம், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு பொருளில் கவனம் செலுத்தப்படும்.
2. புதிய மின்னணு வர்த்தக மையங்களும், ஏற்றுமதி மையங்களும் உருவாக்கப்படும்.
3. ஏற்றுமதியில் போட்டித் தன்மையையும், தரத்தையும் ஊக்குவிக்கச் சலுகைகள்; தனி ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்படும்.
4. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மேம்படுத்தப்பட்டு தொழில்-சேவை வளர்ச்சி மையங்களாக மாற்றப்படும்.
5. சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களால் உள்நாட்டுத் தொழில்கள் பயன்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஏற்றுமதி அதிகரிப்பதோடு சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் பெரிதும் பயன்பெற முடியும்.

## ஸ்டேட்டஸ் ஹோல்டர்

- ஏற்றுமதியில் ஸ்டேட்டஸ் ஹோல்டர் என்கிற சிறப்பு நிலை அங்கீகாரம் பெறுவதற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி அளவு குறைக்கப்பட்டிருப்பது
- சிறு ஏற்றுமதியாளர்கள் உயர்நிலை (higher status) பலன்களை எட்டுவதற்கும், பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைப்பதற்கும் உதவும்.
- ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான மூலதனப் பொருள்கள் திட்டம் (EPCG) உள்ளிட்ட அம்சங்கள் மூலம், சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கான பயனர் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
- எல்லாவிதமான கட்டணங்களும் ரூ.5000-க்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

SURESH' IAS ACADEMY

### இணைய வர்த்தக ஏற்றுமதி

- தற்போது 5-10 பில்லியன் டாலராக உள்ள இணைய வர்த்தக ஏற்றுமதியின் வருடாந்திர அளவு, 2030இல் 200-300 பில்லியன் டாலரை எட்டுவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பதாக அரசு தருகிறது.
- வெ.வ.கொள்கையின் பயன்கள் அனைத்தும் இணைய வர்த்தக ஏற்றுமதிக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.
- இணைய வர்த்தக ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக வருவாய்துறை, அஞ்சல் துறை, வெளிநாட்டு வர்த்தகத்துக்கான இயக்குநரகம் (டிஜிஎஃப்டி) ஆகிய துறைகளின் அதிகாரிகளைக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

### ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் நகரங்கள்

- ரூ.750 கோடி அல்லது அதற்கு மேல் பொருள்களை உற்பத்தி செய்யும் நகரங்கள், ஏற்றுமதியின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில், 'ஏற்றுமதியில் சிறந்த நகரங்கள்' [Towns of Export Excellence (TEE)] எனஅங்கீகரிக்கப்பட முடியும்.
- இருப்பினும், கைத்தறி, கைவினை, விவசாயம், மீன்பிடித் தொழில் ஆகிய துறைகளுக்கான உச்சபட்ச வரம்பு, ரூ.150 கோடியாக உள்ளது.
- நாட்டில் ஏற்கெனவே 39 'ஏற்றுமதியில் சிறந்த நகரங்கள்' இருந்தன; இந்நிலையில் ஃபரிதாபாத் (ஆடைகள்), மொராதாபாத் (கைவினைப் பொருள்கள்), மிர்சாபூர் (கைவினை விரிப்புகள்), வாரணாசி (கைத்தறி, கைவினைப் பொருள்கள்) ஆகிய நான்கு நகரங்கள் வெ.வ.கொ.-2023இல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு வக்கீல்களை இந்தியாவில் அனுமதிப்பது

- வெளிநாடுகளைச் சேர்ந்த வழக்கறிஞர்களும், சட்ட நிறுவனங்களும், இந்திய பார் கவுன்சிலில் முறையாக பதிவு செய்து, இங்கு சட்டப்பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.
- ஆனால், இங்குள்ள நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் அல்லது பிற சட்டப்பூர்வ அல்லது பிற சட்டப்பூர்வ அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளின் முன் ஆஜராக அனுமதி அளிக்கப்படவில்லை.
- கூட்டு வர்த்தகம், நிறுவன இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல்கள், அறிவுசார் சொத்து விவகாரங்கள், ஒப்பந்தங்களின் வரைவு மற்றும் பிற தொடர்புடைய விஷயங்கள் போன்ற பரிவர்த்தனைகள், 'கார்ப்பரேட்' எனப்படும், பெரு நிறுவனங்களின் வேலைகளில் ஆலோசகராக பணியாற்றுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## கடற்பாசி விவசாயம்

### அச்சுறுத்தும் கடற்கரை

- உலகின் கடற்கரையோரங்களில் 25 சதவீதத்தை உள்ளடக்கிய கடற்பாசி காடுகள் மீன்கள், முதுகெலும்பில்லாத கடல் உயிரினங்கள், கடல் பாலூட்டிகள் ஆகியவற்றிற்கு உணவு, தங்குமிடம் ஆகியவற்றை வழங்குகிறது.
- கடல் அரிப்பு, கரிமத் தன்மயமாக்கம் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பணிகளையும் கடற்பாசி காடுகள் செய்கின்றன.
- பழுப்பு கடல் பாசிகளை உள்ளடக்கிய பரந்த கடற்பாசி காடுகள் ஆண்டுதோறும் சுமார் 1.8% குறைந்து வருகிறது
- காலநிலை மாற்றம், நீரின் மிகை ஊட்ட நிலையான கடல் மட்டம் உயர்தல், மனித செயல்பாடுகள் ஆகியவற்றால் கடற்பாசி காடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.
- பிரையோசோவா என்ற முதுகெலும்பில்லா கடல் வாழ் உயிரினம் கடற்பாசியை கடற்பரப்பில் மூழ்கடித்துச் சிதறச் செய்து கடற்பாசி காடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.
- வடகிழக்கு பசிபிக் பெருங்கடலில் தோன்றிய 'தி ப்ளாப்' என்ற கடல் வெப்ப அலை காரணமாக பிரையோசோவாவின் இந்த அச்சுறுத்தல் நிகழ்ந்ததாக அறிவியல் அறிக்கை.

### பயன்கள்

- இந்திய கடல்களில் 434 வகையான சிவப்பு பாசிகள், 194 வகையான பழுப்பு பாசிகள், 216 வகையான பச்சை பாசிகள் உள்பட 844 வகையான கடற்பாசிகள் உள்ளன.

- சிவப்பு பாசிகள், பானங்கள், பால் பொருட்கள், ஆடைகள் தயாரிக்கத் தேவையான கடற்பாசிக்கூழ் (அகர்) தயாரிக்கவும், பழுப்பு பாசிகள், உரம், மருந்துப் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

### காலநிலை மாற்றத்தின் எதிரி

- கடற்பாசிகள் ஆண்டுதோறும் சுமார் 17.5 கோடி டன் கார்பனை சேமித்து வைத்து காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுகிறது.
- நீண்ட கால கார்பன் தேக்கத்திற்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் உதவும் கடற்பாசிகள் தொழிற்துறை பயன்பாடுகளுக்காகவும் வளர்க்கப்படுகின்றன.
- உலக வங்கியின் கூற்றுப்படி, கடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் கடற்பாசிகள் கடல் வள பயன்பாடு, பொருளாதார வளர்ச்சி, வாழ்வாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு எனப் பல வகைகளில் நீலப் பொருளாதாரத்தில் முக்கியப்பங்கு வகிக்கிறது.
- 2% கடல் பரப்பில் செய்யப்படும் கடற்பாசி விவசாயம் 1,200 கோடி உலக மக்களின் உணவிற்கான புரதத்தை வழங்கும் என்று ஐ.நா. சபையின் குளோபல் காம்பாக்ட் என்ற அமைப்பு கூறுகிறது.
- புரதச் சத்து மிகுந்த கடற்பாசியில் வைட்டமின்கள், துத்தநாகம், இரும்புச்சத்து ஆகியவை நிறைந்தும், கொழுப்பும் கார்போஹைட்ரேட்டும் குறைந்தும் இருக்கும்.
- மனித நுகர்வுக்கு ஏற்ற சில வகை கடற்பாசிகள் ஜப்பானில் பல ஆண்டுகளாக உண்ணப்பட்டு வருகின்றன.
- பெரும்பாலான ஜப்பானியர்கள் ஒரு நாளைக்கு மூன்று முறை கடற்பாசி உணவு உண்கின்றனர்.
- கொரியா, சீனா ஆகிய நாடுகளில் உணவுத் தயாரிப்பில் கடற்பாசி பயன்படுத்தப்படுகிறது.
- கால்நடைத் தீவனத்தில் மூலப்பொருளாக கடற்பாசிகள் பயன்படுத்தப்படுவது ஸ்காட்லாந்து, ஐஸ்லாந்து, போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது.
- நிலம், நன்னீர், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றின் தேவையற்ற கடற்பாசிகள் சூரிய ஒளியுடன் உப்பு நீரில் செழித்து வளரும்.
- கால்நடைத் தீவனமாக கடற்பாசிகள் பயன்படுத்தப்படும் போது மீத்தேன் உமிழ்வை 90% குறைக்கும்.
- கடற்பாசி உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காக 'கெல்ப் ப்ளு' என்ற நிறுவனம் நமீபியா நாட்டில் கடல் நீருக்கடியில் சுமார் 70,000 ஹெக்டேர் பரப்புள்ள கடற்பாசி காடுகளை வளர்க்க திட்டமிட்டுள்ளது.
- இந்தக் காடுகள் கடலின் மீன்வளத்தை 20% வரை அதிகரிக்கும். சுமார் 200-க்கும் மேற்பட்ட கடல் வாழ் இனங்களின் வசிப்பிடமாகவும் இருக்கும்.

## நிலக்கரி சுரங்க ஏல ஒப்பந்த நடைமுறை

- காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள சேத்தியாத்தோப்பு, மைக்கேல்பட்டி, வடசேரியில் தனியார் மூலம் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- நாடு முழுவதும் ஏலம் விடப்பட்ட 101 வட்டாரங்களில், சேத்தியாத்தோப்பு கிழக்கு, மைக்கேல்பட்டி, வடசேரி ஆகிய 3 பகுதிகள் தமிழகத்தில் அமைந்துள்ளன.
- அரியலூர் மாவட்டம் உடையார் பாளையம் வட்டத்தில் உள்ள மைக்கேல்பட்டி, கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டத்தில் உள்ள சேத்தியாத்தோப்பு, தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள வடசேரி ஆகிய இந்த 3 பகுதிகளும் தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியில் அமைந்துள்ளன.
- இதில் வடசேரி மற்றும் சேத்தியாத்தோப்பின் கிழக்கு பகுதிகள், தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்துக்குள் வருகின்றன.

### பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்

- "பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தின் இரண்டாவது அட்டவணையில், எந்த புதிய திட்டத்தையும் அல்லது புதிய செயல்பாட்டையும் யாரும் மேற்கொள்ளக்கூடாது" என்று பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவது அட்டவணையில், "நிலக்கரிக் படுகை மீத்தேன், ஷேல் எரிவாயு மற்றும் ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ஆய்வு செய்தல், துளையிடுதல் மற்றும் பிரித்தெடுத்தல்" ஆகியவை அடங்கியுள்ளன.
- தற்போது வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்த நிபந்தனைகளில், நிலக்கரிப் படுகை மீத்தேன் சுரண்டலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தின் தடைக்குள் அடங்கும்.

## இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி

- இந்தியாவின் ஏற்றுமதி 2022 - 23 நிதி ஆண்டில் 6% அதிகரித்து இருக்கிறது.
- 447 பில்லியன் டாலர் மதிப்பில் (ரூ 36.65 லட்சம் கோடி) இந்தியாவிலிருந்து சரக்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியிருக்கிறது.
- இது ஏற்றுமதியில் இந்தியா தொட்டிருக்கும் புதிய உச்சம்.
- அதே சமயம் இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையிலான இடைவெளி கவலையளிக்கும் அளவுக்கு அதிகரித்து இருக்கிறது.
- சென்ற நிதி ஆண்டில் இந்தியாவின் இறக்குமதி 16.5% அதிகரித்து இருக்கிறது.
- 714 பில்லியன் டாலர் மதிப்பில் (ரூ 58.54 லட்சம் கோடி) வெளிநாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

## கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்கும் "ஒபெக் +" : இந்திய பொருளாதார வளர்ச்சியை பாதிக்குமா?

### ஒபெக் முடிவு

- கடந்த ஆண்டு தொடக்கத்தில் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கியது.
- அப்போது கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் கணிசமாக அதிகரித்தது.
- இந்நிலையில் கச்சா எண்ணெய் உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்தினால் அதன் விலை மேலும் வீழ்ச்சியடையும் என்று ஒபெக்+ கூட்டமைப்பு கணித்துள்ளது.
- இந்நிலையில், தேவையை சரிசெய்யவும், சந்தைகளை ஸ்திரப்படுத்தும் எண்ணெய் உற்பத்தியை குறைக்க ஒபெக்+ கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.
- விநியோகத்தை குறைப்பதன் மூலம் கச்சா எண்ணெய் விலையை அதிகமாக நிலைநிறுத்தும் யுக்தியை இந்த கூட்டமைப்பு கையிலெடுத்துள்ளது.

### 36 லட்சம் பீப்பாய் குறைப்பு

- ஒபெக்+ நாடுகள் ஒன்றாக கூடி விவாதித்து கச்சா எண்ணெய் விலை சரிவை தடுக்க நாளொன்றுக்கு அதன் உற்பத்தியை 36.60 லட்சம் பீப்பாய் குறைக்க முடிவு செய்துள்ளன.
- இது உலகளாவிய தேவையில் 3.7 சதவீதத்துக்கு சமம்.

### மே மாதம் முதல்

- ஒபெக்+ கூட்டமைப்பு தாமாக முன்வந்து அறிவித்துள்ள இந்த உற்பத்தி குறைப்பு வரும் மே மாதம் முதல் அமலுக்கு வரவுள்ளது.
- இந்த ஆண்டு இறுதி வரையில் உற்பத்தி குறைப்பை தொடர உறுப்பு நாடுகள் முடிவெடுத்துள்ளன.
- ஒபெக்+ கூட்மைப்பின் இந்த அறிவிப்பால் தற்போது, கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன.

### ஒபெக்

- ஒபெக் என்பது பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பாகும்.
- ஈரான், குவைத், சவுதி அரேபியா, வெனிசுலா உள்ளிட்ட 13 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள இந்த கூட்மைப்பு கடந்த 1960 செப்டம்பரில் பாக்தாத்தில் நடைபெற்ற மாநாட்டின்போது முதன்முதலில் உருவாக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் செயல்பட்டு வருகிறது.
- பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான மற்றும் நிலையான விலை கிடைக்கவும், உறுப்பு நாடுகளுக்கு இடையே பெட்ரோலிய கொள்கைகளை ஒருங்கிணைக்கவும் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
- பெட்ரோலிய நுகர்வு நாடுகளுக்கு தேவையான பெட்ரோலிய விநியோகத்தை உறுதி செய்வதும் இந்த கூட்டமைப்பின் முக்கியப் பணியாகும்.

- சர்வதேச எண்ணெய் சந்தையின் நிலையை மதிப்பாய்வு செய்து, எண்ணெய் சந்தையில் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை இந்த கூட்டமைப்பு ஆண்டுக்கு இருமுறை கூடி முடிவு செய்கிறது.

## ஒபெக்+ கூட்டமைப்பு

- ஒபெக்+ கூட்டமைப்பு 2016 பிற்பகுதியில் உருவாக்கப்பட்டது.
- அமெரிக்க எண்ணெய் உற்பத்தி மிகவும் அதிகரித்ததன் விளைவாக, கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில், கடும் வீழ்ச்சியை சந்தித்தது.
- இது ஒபெக்+ கூட்டமைப்பு உருவாவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.
- ரஷ்யா உட்பட மேலும் 10 முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகள் ஒபெக் குழுவுடன் இணைந்ததையடுத்து இப்புதிய கூட்டணி உருவானது.
- அஜர்பைஜான், பஹ்ரைன், புருனே, கஜகஸ்தான், மலேசியா, மெக்சிகோ, ஓமன், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சூடான் ஆகிய நாடுகள் ஒபெக்+ கூட்டமைப்பில் இணைந்ததையடுத்து மொத்தம் 23 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
- உலகளவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த கச்சா எண்ணெயில் 40 சதவீதம் இக்கூட்டமைப்பு நாடுகளின் பங்களிப்பாக உள்ளது.
- அத்துடன் உலகளாவிய பெட்ரோலிய வர்த்தகத்தில் 60 சதவீத பங்கையும் வைத்துள்ளது.
- ஒபெக்+ உறுப்புநாடுகளிடம் நிரூபணம் செய்யப்பட்ட 82 சதவீத கச்சா எண்ணெய் வளம் இருப்பில் உள்ளது.
- மேலும் ரஷ்யா, மெக்சிகோ மற்றும் கஜகஸ்தான் ஒபெக்+ கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ளதால், ஒபெக் நாடுகளைவிட உலகப் பொருளாதாரத்தில் ஒபெக்+ கூட்டமைப்புக்கு செல்வாக்கு அதிகம்.
- அமெரிக்க எரிசக்தி தகவல் மைய கணிப்பின்படி உலகின் மொத்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 51% அமெரிக்கா, ரஷ்யா, சவுதி அரேபியா, கனடா, ஈராக் ஆகிய 5 நாடுகளிடம் மட்டுமே உள்ளது.

## அமெரிக்கா எதிர்ப்பு

- ஒபெக்+ கூட்டமைப்பின் கச்சா எண்ணெய் உற்பத்தி குறைப்பு அறிவிப்பு சர்வதேச அளவில் அதிர்வலையை ஏற்படுத்தி இருக்கிறது.
- உக்ரைன் – ரஷ்யா போர், கரோனா தொற்று அதிகரிப்பு, அமெரிக்க வங்கி துறை வீழ்ச்சி போன்ற நிகழ்வுகள் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.
- இந்நிலையில், ஒபெக்+ கூட்டமைப்பு கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைப்பதாக அறிவித்துள்ளதை, குறுகிய மனப்பான்மையுடன் கூடிய விவேகமற்ற செயல் என்று அமெரிக்க விமர்சனம் செய்துள்ளது.
- கரோனா பாதிப்பிலிருந்து உலக பொருளாதாரம் மீண்டு வரும் சூழலில் கச்சா எண்ணெய் விலை குறைவாகவே இருக்க வேண்டும் என அமெரிக்கா வாதிட்டுள்ளது.

## உலகளாவிய தாக்கம்

- ஒபெக்+ கூட்டமைப்பின் முடிவு உலக நாடுகளின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சர்வதேச எரிசக்தி முகமை தெரிவித்துள்ளது.
- உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு நிதியளிக்க வினாடிமிர் புதின் அதிக வருவாயைப் பெறுவதைத் தடுப்பதற்கும் கச்சா எண்ணெய் விலை குறைவாக இருப்பது அவசியம்.
- இல்லையெனில், கச்சா எண்ணெய் மூலம் கிடைக்கும் பெரும் லாபத்தை ரஷ்யா உக்ரைன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த பயன்படுத்திக் கொள்ளும் என்பது சர்வதேச அரசியல் பார்வையாளர்களின் கருத்தாக உள்ளது.

## இந்தியாவில் தாக்கம்

- உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் இறக்குமதியாளராக இந்தியா உள்ளது.
- இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 84% இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்கிறது.
- இந்தியா ஆண்டுக்கு 228 மில்லியன் டன் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய 120 பில்லியன் டாலர்களை செலவிட்டு வருகிறது.
- உக்ரைன் மீதான போர் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்தது.
- இதனால் உலக நாடுகள் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க முடியாத சூழல் ஏற்பட்டது.

- இதையடுத்து, கச்சா எண்ணெயை குறைவான விலையில் வழங்க ரஷ்யா முன்வந்தது.
- இதையடுத்து, அமெரிக்காவின் தடையை மீறி ரஷ்யாவிடமிருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது.
- இதனால் இந்தியாவுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணி மிச்சமாகி வருகிறது.
- அதேநேரம், ஒபெக்+ கூட்டமைப்பு நாடுகளின் உற்பத்தி குறைப்பு முடிவால் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 10 டாலர் அதிகரிக்கும் என்று கூறப்படும் நிலையில், அது இந்தியாவின் இறக்குமதி செலவீனத்தை பெருமளவு அதிகரிக்கும்.
- இதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபடுவதுடன், பணவீக்கமும் அதிகரிக்கும்.
- ஏற்கனவே உணவுப் பொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, பெட்ரோல், டீசல் விலை மேலும் அதிகரிப்பது கூடுதல் சுமையை உருவாக்கும்.
- இதுபோன்ற பாதிப்புகளை தவிர்க்க, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கான முயற்சியின் மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கலாம்.
- உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியை மேம்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட கூட்டமைப்புகளுடன் ராஜ்ய ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய கட்டாயத்தில் இந்தியா உள்ளது.
- கச்சா எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கும் ஒபெக் பிளஸ் கூட்டமைப்பின் முடிவால் இந்தியாவின் எரிபொருள் இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.
- எரிபொருள் விலை உயர்வு சர்வதேச பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும்.
- பெட்ரோலியப் பொருள்கள் ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பான ஒபெக் இந்த மாதத் தொடக்கத்தில் கச்சா எண்ணெய் உற்பத்தி குறைப்பை அறிவித்தது.
- அதைத் தொடர்ந்து எண்ணெய் வளநாடுகளின் மற்றொரு கூட்டமைப்பான ஒபெக் பிளஸ் அமைப்பும் உற்பத்தி குறைப்பை அறிவித்தது.
- சர்வதேச அளவில் மீண்டும் பெட்ரோலியப் பொருள்கள் விலை உயரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.
- ஒபெக் பிளஸ் நாடுகள் கூட்டமைப்பில் ரஷியாவும் உள்ளது.
- இந்தியா இப்போது ரஷியாவிடம் இருந்துதான் மலிவு விலையில் கச்சா எண்ணெயை வாங்கி வருகிறது. இந்நிலையில், அதன் உற்பத்தி குறைப்பால் விலை உயரும் சூழல் ஏற்பட்டுள்ளது.
- இந்தியாவிலும், எரிபொருள் இறக்குமதிக்கான செலவு அதிகரிக்கும். ஏனெனில், இந்தியா எரிபொருள் தேவைக்கு இறக்குமதியையே அதிகம் சார்ந்துள்ளது.
- விலை உயர்வால் இறுதிநிலை நுகர்வோருக்கும் அதிகம் பாதிப்பு ஏற்படும்.

## காலணி உற்பத்தி ஆலை

### தைவான் நிறுவனம் – தமிழக அரசு இடையே ஒப்பந்தம்

- உளுந்தூர்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.2,302 கோடியில் புதிய காலணி உற்பத்தி ஆலை அமைப்பது தொடர்பாக தைவானின் ஹைக்ளோரி ஃபுட்வேர் நிறுவனம் மற்றும் தமிழக தொழில் துறை இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்தியாவிலேயே 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கும் தமிழகத்தை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக உயர்த்த வேண்டும்.
- கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் காலணி உற்பத்திக்கான ஆலையை அமைக்கிறது. இதன் மூலம் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

## ஜாம்நகர் முதல் காஞ்சிபுரம் : இந்தியாவின் ஏற்றுமதிக்கான முக்கிய தளங்களை வரைபடமாக்குதல்

- இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய மாவட்டங்களில் குஜராத்தில் உள்ள ஜாம்நகர் முதலிடத்தில் உள்ளது.
- நிதி ஆண்டு 2023 (ஜனவரி மாதம் வரை) இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 24% பங்களிப்பு செய்கிறது.

- குஜராத்தில் உள்ள சூரத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை புறநகர் பகுதியானது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.
- முதல் 10 ஏற்றுமதி நகரங்கள்

| | | |
|---|---|---|
| தக்ஷினா கன்னடா | – | கர்நாடகா |
| தேவபூமி துவாரகா | – | குஜராத் |
| பரூச் | – | குஜராத் |
| கட்ச் | – | குஜராத் |
| மும்பை | – | மகாராஷ்டிரா |
| காஞ்சிபுரம் | – | தமிழ்நாடு |
| கவுதம் புத்தா நகர் | – | உத்திரப்பிரதேஷ் |

- 2023-ம் நிதியாண்டில், மாநில அளவிலான ஏற்றுமதியில் அதிக அளவிலான பங்களிப்பை செலுத்தக்கூடிய மாவட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

  உதாரணம், தமிழ்நாட்டின் ஏற்றுமதியில் காஞ்சிபுரம் 33% பங்கினை அளிக்கிறது. இது மாநிலத்தின் மிக அதிக அளவிலான பங்காகும்.
- சில முன்னணி ஏற்றுமதி மாவட்டங்கள் 20% வரை மட்டுமே பங்களிப்பு செய்கின்றன.

  உதாரணம் : மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர் மற்றும் ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர் தலா 21% மட்டுமே மாநில அளவிலான ஏற்றுமதியில் பங்களிப்பு ஆற்றுகிறது.
- மற்றொரு பக்கத்தில், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மாவட்டங்கள் 90% அளவில் மாநில அளவில் ஏற்றுமதியில் பங்களிப்பு செய்கின்றன.

  உதாரணம் :

| | | |
|---|---|---|
| கோமதி | – | திரிபுரா |
| ரிபோய் | – | மேகாலயா |
| கிழக்கு சிக்கிம் | – | சிக்கிம் |

- தஷ்சினா கன்னடா, கௌதம் புத்தர் நகர் மற்றும் எர்ணாகுளம் போன்ற மாவட்டங்கள் அந்தந்த மாநில ஏற்றுமதியில் 40-50% பங்களிப்பு செய்கின்றனர்.
- இந்தியாவிலிருந்து பெட்ரோலிய பொருட்கள் ஏற்றுமதியில் ஜாம்நகர் மிக அதிக அளவிலான பங்களிப்பை செய்கின்றன.
- அதேநேரத்தில், காஞ்சிபுரத்திலிருந்து அதிக அளவிலான திறன்மிகு கைப்பேசி (Smart phones) ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- மேலும் வரைபடம் 1-ல் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அதிக அளவில் ஏற்றுமதிக்கு பங்களிப்பு அளிக்கக்கூடிய மாவட்டங்கள் எந்த அளவில் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

  உதாரணம் :

| **மாவட்டம்** | **மாநிலம்** | **பொருள்** |
|---|---|---|
| காம்ரூப் | அஸ்ஸாம் | டீ |
| கவுதம் புத்தர் நகர் | உத்திரப் பிரதேசம் | திறன்மிகு கைப்பேசி |
| ராய்ப்பூர் | சட்டீஸ்கர் | புழுங்கல் அரிசி |
| மும்பை புறநகர் | மகாராஷ்டிரா | வைரம் |

  - பெட்ரோலியப் பொருட்கள்
  - விலைமதிப்புள்ள கற்கள் மற்றும் ஆபரணங்கள்
  - அரிசி, கோதுமை மற்றும் இதர தானியங்கள்

- திறன்மிகு கைப்பேசி மற்றும் எலக்ட்ரானிக்ஸ்
- வாகனங்கள்
- பாரா மெடிக்கல் பொருள்கள்

| Commodity | District | State | Share |
|---|---|---|---|
| Petroleum Products | Jamnagar | Gujarat | 67% |
| Precious stones & Jewellery | Surat | Gujarat | 36% |
| Smartphones, Electric parts | Gautam Buddha Nagar | Uttar Pradesh | 26% |
| Vehicles | Kancheepuram | Tamil Nadu | 21% |
| Rice, Wheat & Other cereals | Karnal | Haryana | 17% |
| Pharmaceutical Products | Medical Medchal Malkajgiri | Telangana | 15% |

## இணையவழி பணப் பரிவர்த்தனையில் சென்னை 5 - ஆவது இடம்

- அதிக இணையவழி பணப் பரிவர்த்தனை எண்ணிக்கையில் சென்னை நகரம் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

| நகரம் | பரிவர்த்தனைத் தொகை | பரிவர்த்தனை எண்ணிக்கை |
|---|---|---|
| பெங்களூரு | 2.9 கோடி | 6,500 கோடி |
| தில்லி | 1.96 கோடி | 5,000 கோடி |
| மும்பை | 1.87 கோடி | 4,950 கோடி |
| புனே | 1.5 கோடி | 3,280 கோடி |
| சென்னை | 1.43 கோடி | 3,550 கோடி |

## சரக்கு கையாளுகை குறியீடு : 38-ஆவது இடத்தில் இந்தியா!

- உலகவங்கி வெளியிடும் சரக்கு கையாளுகை (லாஜிஸ்டிக்ஸ்) குறியீட்டில் இந்தியா 38-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
- சர்வதேச பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வகித்து வரும் நாடுகளின் சரக்கு கையாளுகை திறன் குறித்து உலகவங்கி ஆய்வு நடத்தி வருகிறது.
- உலக வங்கி 2014-ஆம் ஆண்டில் வெளியிட்ட சரக்கு கையாளுகை குறியீட்டில் இந்தியா 54-ஆவது இடத்தில் இருந்தது.
- மொத்தம் 139 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவை உலகவங்கி வெளியிட்டுள்ளது. அதில் இந்தியா 38-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

### கடைசி இடங்களில் உள்ள நாடுகள்

| | |
|---|---|
| லிபியா | ஆப்கானிஸ்தான் |
| சோமாலியா | ஹைட்டி |
| கேமரூன் | அங்கோலா |
| யேமன் | கியூபா |
| வெனிசூலா | சிரியா |

## இந்திய அண்டை நாடுகளின் நிலை

| | |
|---|---|
| சீனா | 19 |
| இலங்கை | 73 |
| வங்கதேசம் | 88 |
| பூடான் | 97 |
| மோரீஷஸ் | 97 |

## குறியீட்டுக்கான காரணிகள்

- சுங்க நடவடிக்கைகள்
- கட்டமைப்பு வசதிகள்
- சர்வதேச சரக்குப் போக்குவரத்து
- சரக்கு கையாளுகை திறன்
- சரக்குப் போக்குவரத்து நேரம்
- சரக்கு கண்காணிப்பு

## இந்தியாவின் முக்கிய முன்னெடுப்புகள்

- நாட்டின் சரக்கு கையாளுகை நேரத்தைக் குறைக்கும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

## கதிசக்தி திட்டம்

தொடக்கம் : 2021 அக்டோபர்

நோக்கம் : சரக்கு கையாளுகை நேரத்தைக் குறைத்தல், பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்தல்.

## தேசிய சரக்கு கையாளுகை கொள்கை

வெளியீடு : 2022

நோக்கம் : போக்குவரத்துத் துறை எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காணுதல், சரக்கு கையாளுகை செலவு, நேரத்தைக் குறைத்தல்.

# இந்தியாவிற்கு ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதி மேலும் அதிகரிக்கிறது. வர்த்தக பற்றாக்குறை உயருகிறது.


## சூழல் : செய்தி :

- இதுவரை இந்த மாதம் கடல்வழி விநியோகத்தில் இந்தியா 70% அதிகமாகவும் சீனா 20%மும் பதிவாகி உள்ளது.

## ரஷ்யா


- பிப்ரவரி 2023ல் ரஷ்யாவானது சவுதி அரேபியாவை பின்னுக்கு தள்ளி இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 2023 நிதியாண்டில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.
- நவம்பர் 2022 முதல் பிப்ரவரி 2023 இடைப்பட்ட காலங்களில் ரஷ்யா முக்கிய இடங்களை கைப்பற்றிய அதே வேளையில், சவுதி அரேபியா (ம) ஈராக் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு எண்ணெய் இறக்குமதியானது வேகமாக குறைந்தது.

## விளக்கப்படம் : 1





- கடந்த 4 நிதியாண்டில், இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் இறக்குமதியில் பங்களித்த நாடுகளின் அளவு, கடந்த வருடங்களைக் காட்டிலும் ரஷ்யா அதிக இறக்குமதியின் 2-வது இடத்தில் உள்ள படம்.

## விளக்கப்படம் : 2




- ரஷ்யா இரண்டாவது எண்ணெய் இறக்குமதியாளராக இருத்தலுக்கான காரணம், அதிக எண்ணெய் வரத்து ஆகும். இந்தியா மற்ற தயாரிப்புகளையும் எடுத்துக் கொள்கிறது.
- 2023-ம் நிதியாண்டில் (2023 பிப்ரவரி மட்டும்) இந்தியா 50% அளவில் திட்டத்திற்கான பொருட்கள் இறக்குமதி செய்துள்ளது. உள்கட்டமைப்புக்கான தேவைப்படும் பொருட்கள் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- கிட்டத்தட்ட 30% அளவில் செய்தி அச்சு சுருள், கனிம/ இரசாயன உரங்கள், சூரியகாந்தி/பருத்தி விதை எண்ணெய் ஆகியவை 2023 நிதியாண்டில் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- ஈராக், சவுதி அரேபியாவை இழுத்து தள்ளி குறிப்பிட்ட இடைவெளியில் ரஷ்யா அதிகளவில் இறக்குமதி செய்கிறது.

## விளக்கப்படம் : 3



- வர்த்தகர்கள் மற்றும் ராய்ட்டர்ஸ் கணக்கீட்டின்படி, இந்தியாவும் சீனாவும் ஏப்ரல் மாதத்தில் 2023-ல் ரஷ்ய எண்ணெயின் பெரும்பகுதியை பீப்பாய் ஒன்றுக்கு $60 என மேற்கத்திய விலை உச்சவரம்புக்கு மேல் உள்ளன.
- ரஷ்யாவின் மேற்கு துறைமுகங்களில் இருந்து எண்ணெய் ஏற்றுமதியானது 2019 முதல் அதிகரித்துள்ளது என ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.
- இதன் அளவு ஒரு நாளைக்கு 2.4 மில்லியன் பீப்பாய்க்கு மேல் உள்ளது.
- இது கிரெம்ளின் மாளிகையின் வலுவான வருவாயை மேற்கு பகுதி முயற்சி செய்ததன் மூலம் உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய இராணுவ நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கப்படுகிறது.


## ஜி7 ஆதாரம்

- ஏப்ரல் 17 ரேய்ட்டர்ஸ நிறுவனத்திடம் ஜி7 அளித்த ஆதாரத்தின்படி மேற்கத்திய விலை இடைவெளி குறைப்பதற்கான மாஸ்கோ மீதான போலாந்து போன்ற நாடுகளின் அழுத்தத்தால் மாற்றப்படாமல் அதே நிலையில் உள்ளது.
- இந்தியா, சீனா விலை இடைவெளியை பின்பற்றுவதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் பொருளாதாரத் தடைகளின் அச்சுறுத்தல்அந்த நாடுகளுக்கு எண்ணெய் வாங்க உதவுவதில் இருந்து வர்த்தகர்களைத் தடுக்கலாம் என மேற்கு நாடுகள் நம்புகின்றன.
- யூரல்களுக்கான சராசரி தள்ளுபடிகள் இந்திய துறைமுகங்களில் ஒரு பீப்பாய்க்கு $13 ஆகவும், சீன துறைமுகங்களில் ICE பிரண் $9 டாலராகவும் உள்ளது.

## வர்த்தக பற்றாக்குறை


- எண்ணெய் இறக்குமதியில் உடனடி எழுச்சியானது இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறையானது அதிகரித்துள்ளது.

## விளக்கப்படம் : 4




- இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய மருந்து பொருள், ஒரு வகையான கடல் உயிரி, டீ, காபி மற்றும் இதர பொருட்களானது ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்பு உடையது.

## விளக்கப்படம் : 5




- அதனால் ரஷ்யா உடனான இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறையானது இந்த நிதியாண்டில் அதிகரிக்க உள்ளது.

## நியூடெல்லி – பேச்சு

- புது தில்லியில் ரஷ்யாவுடனான வர்த்தக பற்றாக்குறையை தீர்க்க ஒப்புக்கொண்டன.
- இந்தியாவிலிருந்து 500 பொருட்களை ரஷ்யா இறக்குமதி செய்வதாக ராய்ட்டர்ஸ் நிறுவனம் தெரிவிப்பு.

# உழவர் சந்தை

- பொதுவாகவே விற்பனைச் சங்கிலியில் எந்த அளவிற்கு இடைத்தரகர்களின் ஆதிக்கம் குறைகிறதோ அந்த அளவிற்கு விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும்.
- அப்படிப்பட்ட இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை ஏறக்குறைய கட்டுப்படுத்திய பெருமை உழவர் சந்தைகளுக்கு உண்டு.
- விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை எவ்வாறு சந்தைப்படுத்துகின்றனர் என்பதை அறிய 1998 இல் 'விவசாய உற்பத்திச் சந்தைப்படுத்துதல் வரி மீளாய்வுக்குழு என்ற குழு' ஒன்றை அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த மு.கருணாநிதி அமைத்தார்.
- சண்டிகரில் 'அப்னேமண்டி' என்ற பெயரிலான பகுதியில் விவசாயிகள் தங்களின் வேளாண் பொருட்களை நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதைப் பற்றி அவரின் கவனத்திற்கு அக்குழு கொண்டு சேர்த்தது.

## மதுரை

- 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் மூலம் முதல் உழவர் சந்தை மதுரை அண்ணாநகரில் ஆரம்பிக்கப்பட்டது.
- அந்த உழவர் சந்தை தரமான காய்கறிகள், பழங்களை தொடர்ந்து விற்பனை செய்து வந்தது. அதனால் அண்மையில் எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ-இன் சான்றிதழைப் பெற்றது அந்த உழவர் சந்தை.

## நோக்கம்

- உழவர் சந்தையின் முக்கிய நோக்கமே இடைத்தரகர் இன்றி விவசாயிகள் அவர்களின் விளைபொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்வதே ஆகும்.
- அதற்காக விவசாயிகளுக்கு சுமைக்கட்டணம் ஏதுமின்றி போக்குவரத்து வசதி உருவாக்கப்பட்டு அவர்களுக்கு என்று தனி அடையாள அட்டையும் வழங்கப்பட்டது.
- நுகர்வோருக்கும் நியாயமான விலை, விவசாயிகளுக்கும் போதிய லாபம் என்கிற கோணத்தில் இயங்கி வந்த உழவர் சந்தைகள் ஒரு கட்டத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் தனியார் காய்கறி கடைகளையே ஓரங்கட்டின.
- தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 180 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

# இந்தியாவின் முதல் வாட்டர் மெட்ரோ

- ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் பொருளாதார ஏற்றத்துக்குமான அடித்தளங்களில் போக்குவரத்துக் கட்டமைப்பு முதன்மையானது.
- இந்தியாவின் முதல் 'வாட்டர் மெட்ரோ' போக்குவரத்துச் சேவையைப் பிரதமர் நரேந்திர மோடி கேரளாவின் துறைமுக நகரான கொச்சியில் 2021 பிப்ரவரியில் தொடங்கி வைத்தார்.

## இதுவரை...

- கேரளத்தில் மக்கள்தொகை அதிகமுள்ள மாவட்டங்களில் கொச்சியும் ஒன்று; கேரளத்தின் வணிகத் தலைநகரமாகவும் அது கருதப்படுகிறது.
- கொச்சியில் உள்ள வேம்பநாடு ஏரியின் படகுப் போக்குவரத்து சரக்கு, பயணிகள் போக்குவரத்துக்கு முதன்மையான வழியாக அந்தக் காலத்தில் இருந்தது.
- ஆனால், சில பத்தாண்டுகளாக இந்த நீர்வழிப் போக்குவரத்துச் சேவை வெகுவாகக் குறைந்தது.
- இந்தச் சூழலில்தான், கொச்சியில் 'வாட்டர் மெட்ரோ' போக்குவரத்துச் சேவை தொடங்கப்படுகிறது.

## திட்டத்துக்கான செலவு

- 'வாட்டர் மெட்ரோ' திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2017இல் தொடங்கப்பட்டன. உலகத் தரத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் 'கொச்சி வாட்டர் மெட்ரோ' திட்டத்துக்கு கேரள மாநில அரசும், ஜெர்மனியின் கேஎஃப்.டபிள்யூ எனும் முதலீட்டு நிறுவனமும் இணைந்து ரூ.819 கோடி முதலீடு செய்துள்ளன.

## திட்டத்தின் சிறப்புகள்

- இந்தத் திட்டம் மின்சாரத்தால் இயங்கும் 78 ஹைபிரிட் படகுகளையும், 38 படகு நிலையங்களையும் (ஜெட்டிகள்) கொண்டுள்ளது. ஒவ்வொரு படகிலும் 50 இருக்கைகள் உள்ளன.
- ஒரு படகில் 100 பயணிகள் செல்ல முடியும். குறைந்தபட்ச கட்டணம் ரூ.20 ஆகவும் அதிகபட்ச கட்டணம் ரூ.40 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.
- இதன் படகுகளும் படகு நிலையங்களும் மாற்றுத் திறனாளிகள் பயணிக்க ஏதுவான வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.
- தற்போது கொச்சியில் இருந்து எர்ணாகுளம் செல்வதற்கு 45 நிமிடங்கள் ஆகின்றன. நீர்வழி மெட்ரோ மூலம் 15 நிமிடங்களில் கொச்சியில் இருந்து எர்ணாகுளம் சென்றடையலாம்.
- கண்ணாடி நாரிழை (ஃபைபர்) பொருள்களால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஹைப்ரிட் படகுகள், வெள்ளம் அதிகரிக்கும்போதும், குறையும்போதும் சீராகப் பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- குளிர்சாதன வசதியைக் கொண்டிருக்கும் இந்தப் படகுகளை கொச்சின் ஷிப்யார்டு லிமிடெட் நிறுவனம் தயாரிக்கிறது.
- இந்தப் படகுகள் பேட்டரி மூலம் இயங்குபவை, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் வடிவமைக்கப்பட்டவை.
- 15 நிமிடங்களுக்குள் பேட்டரிகளை சார்ஜ் செய்யும் திறன் கொண்ட பல வேகமான சார்ஜிங் நிலையங்களையும் இந்தத் திட்டம் கொண்டுள்ளது.

## வழித்தடங்கள்

- கொச்சியின் 'வாட்டர் மெட்ரோ' திட்டம் 15 வழித்தடங்களில் இயங்கும்.
- கொச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள 10 தீவுகளை இணைக்கும் வகையில், 76 கி.மீ. தொலைவுக்கு 15 நீர் வழித்தடங்களில் மெட்ரோ சேவைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக, கொச்சி உயர்நீதிமன்றம் படகு நிலையத்திலிருந்து வைப்பின் படகு நிலையத்துக்கு வாட்டர் மெட்ரோ படகு இயக்கப்படுகிறது.
- இந்தப் படகில் இன்று (ஏப்ரல் 26) முதல் மக்கள் பயணிக்கலாம். வைற்றிலா, காக்கநாடு இடையிலான பாதையில் நாளை (ஏப்ரல் 27) முதல் 'வாட்டர் மெட்ரோ' படகு இயக்கப்படும்.

## திருப்பு முனையின் தொடக்கப்புள்ளி

- இந்தியாவில் முதல்முறையாக 'வாட்டர் மெட்ரோ' திட்டம் கேரளத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதுடன் சுற்றுச்சூழல் மாசடைவதையும் கட்டுப்படுத்தும்.
- சாத்தியமுள்ள பிற மாநிலங்களும் கேரள முறையைப் பின்பற்றினால் இது இந்தியாவின் போக்குவரத்துத் துறையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும்.

# பேசுபொருளாகும் சிறுதானியங்கள்

- 2018ஆம் ஆண்டைத் தேசிய சிறுதானிய ஆண்டாக மத்திய அரசு அறிவித்திருந்தது.
- கர்நாடகம், ஒடிசா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள், பொது விநியோகத் திட்டம் மூலம் அரிசி-கோதுமைக்கு மாற்றாகச் சிறுதானியங்களை ஊக்குவித்து வருகின்றன.
- சிறுதானியங்களை 'எதிர்கால உணவு' என்று வரையறுத்து, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உற்பத்தி, நுகர்வை அதிகப்படுத்தவும் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 2023ஆம் ஆண்டை 'சர்வதேசச் சிறுதானிய ஆண்டாக' ஐ.நா. அறிவித்திருக்கிறது.

## மறக்கப்பட்ட சிறுதானியங்கள்

- கடந்த 50 ஆண்டுகளில், இந்தியக் குடும்பங்களில் உணவு நுகர்வானது சிறுதானியங்களிலிருந்து அரிசி-கோதுமையை மையமாகக் கொண்ட உணவு முறைக்கு மாறியுள்ளது.

- ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்துவது என்பது வெறும் வறுமை ஒழிப்பு, பசி பிரச்சனைகளைக் குறைப்பது போன்றவை மட்டும் அல்ல ; ஊட்டச்சத்து நிறைந்த, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதே என்பதைத் தற்போதைய கொள்கை வகுப்பாளர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.
- இதற்காக, அனைத்து வகையான சத்துக்களையும் பெறும் வகையில் சமச்சீரான மாறுபட்ட உணவுப் பழக்கத்தை மக்களிடையே ஊக்குவிப்பதுதான் சாலச்சிறந்தது.

## பற்றாக்குறையும் பாதிப்புகளும்

- அதிகமாக உட்கொள்ளப்படும் அரிசி-கோதுமை போன்றவற்றில் கார்போஹைட்ரேட்டுகளும், ஆற்றலை வழங்கக்கூடிய சத்துக்களும்தான் அதிகம்.
- மற்ற உணவுப் பொருட்களுடன் ஒப்பிடும்போது, இவற்றில் உடலின் ஆரோக்கியமான வளர்சிதை மாற்றச் செயல்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் அறிவாற்றல் பெருக்கத்துக்கும் மிகவும் தேவைப்படுகிற நுண்ணூட்டச் சத்துக்கள், தாதுக்கள், வைட்டமின்கள் குறைவாக உள்ளன என உணவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
- சரியான அளவில் நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்த உணவை உட்கொள்ளாததால், மக்களிடையே ஊட்டச் சத்துக் குறைபாடு காணப்படுகிறது.
- குறிப்பாக, குழந்தைகள் - பெண்கள் அதிகளவு பாதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, ஏறக்குறைய 50% கர்ப்பிணிகள் ரத்தசோகைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ரத்த சோகை பெரும்பாலும் இரும்புச் சத்து, வைட்டமின் பி-12 குறைபாட்டால் ஏற்படுவதாகும்.
- 33% பெண்கள் குறைந்த உடல்-நிறைக் குறியீட்டெண்ணுடன் (BMI) உள்ளன.
- ஐந்து வயதுக்கு உள்பட்ட 38% குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 21% குழந்தைகள் உயரத்துக்கேற்ற சரியான எடையைக் கொண்டிராமலும் (wasting), 35.7% குழந்தைகள் வயதுக்கேற்ற சரியான உயரத்தைக் கொண்டிராமலும் (Stunting) உள்ளனர்.
- மேலும் நீரிழிவு, உடல்பருமன் ஆகியவை அரிசி-கோதுமை அடிப்படையிலான பயிர் உற்பத்தி முறையின் மற்ற பக்கவிளைவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- உடல் பருமன் ஏற்படுவது கடந்த பத்தாண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

## சிறுதானியங்களின் சிறப்புகள்

- உட்கொள்ளும் உணவில் அரிசி-கோதுமையுடன் பலவகையான உணவுப் பொருள்களைச் சேர்ப்பது, தேவைக்கு ஏற்பக் குறைவான அல்லது அதிகப்படியான ஊட்டச்சத்து, அதனுடன் தொடர்புடைய உடல்நலப் பிரச்சினைகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சிறுதானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், காய்கறிகள், உலர் பழங்கள், இறைச்சி அடங்கிய உணவு வகைகள் சீரான - ஆரோக்கியமான ஊட்டச்சத்தைக் கொடுக்கவல்லவை.
- இவற்றில், சிறுதானியங்கள் அதிக ஊட்டச்சத்துக்களைக் கொண்டவை ; இவற்றின் விலையும் மலிவு.
- சத்துக்களைப் பொறுத்தமட்டில், சிறுதானியங்கள் அரிசி-கோதுமைக்கு இணையாக அல்லது அவற்றைவிட மேம்பட்டதாகவே இருக்கின்றன.
- கூடுதலாக, பெரும்பாலான சிறுதானியங்கள் கார்போஹைட்ரேட், ஸ்டார்ச் அல்லாத, பாலிசாக்ரைடுகள் அதிக அளவு இல்லாத உணவு வகைகளாக உள்ளன.
- முக்கியமாகக் குதிரைவாலியில் கார்போஹைட்ரேட் மிகக் குறைவு. கேழ்வரகைத் தவிர்த்து அனைத்துச் சிறுதானியங்களில் அரிசி-கோதுமைக்கு இணையான அளவில் புரதச் சத்துக்கள் உள்ளன.
- சிறுதானியங்கள் நார்ச்சத்து நிறைந்த உணவாகக் கருதப்படுகின்றன. நார்ச்சத்தானது சிறுதானியங்களைக் குறைந்த கிளைசெமிக் (glycaemic) உணவு வகைகளாக ஆக்குவதால், இந்த உணவு வகைகள் நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைக்கின்றன.
- சிறுதானியங்களில் தாதுக்கள் 1.7 - 4.3 கிராம் (100 கிராமுக்கு) வரை இருக்கும், இது கோதுமை (1.5%), அரிசி (0.6%) போன்றவற்றில் இருப்பதைவிடப் பல மடங்கு அதிகம்.
- கோதுமையைவிடக் கேழ்வரகில் கால்சியம் 8 மடங்கு அதிகம். இது எலும்புப் புரை போன்ற நோய்களைத் தடுக்கவல்லது.
- இப்படியான சிறப்புகள் காரணமாகச் சிறுதானியங்கள் 'ஊட்டச்சத்து வங்கிகள்' என்று அழைக்கப்படுகின்றன.

- உணவில் சிறுதானியங்களை அறிமுகப்படுத்தியதன் விளைவாகக் குழந்தைகளின் வளர்ச்சி குன்றிய நிலையிலும், உடல் நிறைக் குறியீட்டெண்ணிலும் முன்னேற்றம் ஏற்பட்டதாகப் புள்ளிவிவரங்கள் எடுத்துரைக்கின்றன.
- பெரும்பாலான சிறுதானியப் பயிர்கள் பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் தன்மை கொண்டவை. வறண்ட காலத்திலும் பயிரிடப்படக்கூடியவை. இவற்றைப் பயிரிடுவதற்கு (60-90 நாள்) போதும். குறைந்த இடுபொருளே போதுமானது.

### மீட்சியும் பலன்களும்

- சிறுதானியங்களின் சாகுபடி புவி வெப்பமாதல், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து விவசாயிகள் மீள்வதற்கு உதவியாக இருக்கும்.
- வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளின் (Sustainable Development Goals - SDGs) முக்கிய இலக்குகளான பட்டினியைக் குறைத்தல், உணவுப் பாதுகாப்பின்மை- சத்துக் குறைபாடு போன்ற பிரச்சினைகளைக் களைதல், ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குதல், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்து மண்ணின் வளத்தை அதிகப்படுத்துதல் போன்ற இலக்குகளை 2030ஆம் ஆண்டுக்குள் அடைவதற்குப் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

## சரக்கு கையாள்வதில் இந்திய துறைமுகங்கள்

- இந்தியாவின் முக்கிய துறைமுகங்கள் கடந்த நிதியாண்டில் 79.5 கோடி டன் சரக்குகளை கையாண்டுள்ளன. இது, அதற்கு முந்தைய நிதியாண்டைவிட 10.4 சதவீதம் அதிகம்.
- கடந்த நிதியாண்டில், நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்கள், தினசரி 17 ஆயிரத்து 239 டன் சரக்குகளை கையாண்டுள்ளன. இது, முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 6 சதவீதம் வளர்ச்சியாகும்.
- 21,846 - கடந்த நிதியாண்டில் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பல்கள் எண்ணிக்கை
- 70% - இந்தியாவின் மொத்த வர்த்தகத்தில், அளவின் அடிப்படையில் 95 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 70 சதவீதமும் கடல் போக்குவரத்து வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது.

### முக்கிய 12 துறைமுகங்கள்

- 1. தீனதயாள் (காண்ட்லா); 2. மும்பை; 3. மோர்முகாவ்; 4. புதிய மங்களூரு; 5. கொச்சி; 6. சென்னை; 7. எண்ணூர் (காமராஜர்); 8. தூத்துக்குடி (வ.உ.சிதம்பரனார்); 9. விசாகப்பட்டினம்; 10. பரதீப்; 11. கோல்கட்டா துறைமுகம்; 12. ஜவகர்லால் நேரு துறைமுகம்.

### ஆதாரம்

- கப்பல் போக்குவரத்து இயக்குனரகம்

## சபரிமலையில் புதிய விமான நிலையம்

- சபரிமலை அருகே எருமேலி செருவள்ளி எஸ்டேட்டில் புதிய விமான நிலையம் அமைக்க மத்திய விமான போக்குவரத்து துறை அனுமதி அளித்துள்ளது.

## முத்ரா

### நோக்கம்

- குறு நிறுவனங்கள் மேம்பாடு மற்றும் மறுநிதி முகமை என்பதன் சுருக்கம்தான் முத்ரா (MUDRA).
- குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சேவை தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு சுலபமாக கடன் கிடைப்பதை உறுதி செய்வதுதான் இந்த திட்டத்தின் நோக்கம்.
- அத்துடன், சிறு வியாபாரம், சுயதொழில் செய்ய விரும்புவோர், புதிதாக தொழில் தொடங்க விரும்புவோருக்கும் முத்ரா திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறது.
- முத்ரா திட்டத்தின் கீழ் வங்கிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், சிறுகடன் நிறுவனங்கள், ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது.
- எவ்வித ஈட்டுப் பிணையமும் இல்லாமல் கடன் வழங்கப்படுவதுதான் இதன் சிறப்பம்சம்.

## கடன்

- முத்ரா திட்டத்தின் கீழ் தருண், கிஷோர் மற்றும் ஷிஷூ என 3 பிரிவுகளில் கடன் வழங்கப்படுகிறது.
- ஷிஷூ பிரிவின் கீழ் ரூ.50 ஆயிரம் வரையிலும்
- கிஷோர் திட்டத்தின் கீழ் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரையிலும்
- தருண் திட்டத்தின்கீழ் ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது.
- இதில் ரூ.50 ஆயிரம் வரையிலான கடனுக்கு எவ்வித நடைமுறை கட்டணமும் கிடையாது.
- ரூ.50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கடன்களுக்கு 0.5% நடைமுறை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
- இந்த திட்டத்தின்கீழ் பெறும் கடனை 1 முதல் 7 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- இதற்கான வட்டி விகிதம் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்படி அவ்வப்போது மாறுபடும். இதுகுறித்து கடன் பெறும் கிளையை அணுகி தெரிந்து கொள்ளலாம்.
- தொடக்கத்தில் உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவை உள்ளிட்டவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டது.
- 2016-17 முதல் கோழி வளர்ப்பு உட்பட வேளாண்மையுடன் தொடர்புடைய தொழில்களுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது.
- 2017-18 முதல் டிராக்டர்கள், பவர் டில்லர்கள் வாங்கவும், 2018-19 முதல் வர்த்தக நோக்கத்துக்காக இருசக்கர வாகனங்கள் வாங்கவும் கடன் வழங்கப்படுகிறது.

## 8 ஆண்டில் ரூ.23.2 லட்சம் கோடி கடன்

## பெண்கள்

- இந்த திட்டத்தின் மிகவும் பாராட்டத்தக்க சாதனை என்னவென்றால் அதிக அளவில் பெண் தொழில் முனைவோர் உருவாகி உள்ளனர்.
- முத்ரா திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களில் 69 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோர் ஆவர்.

## 8 ஆண்டில் வழங்கப்பட்ட முத்ரா கடன்

| கடன் வகை | பயனாளர் எண்ணிக்கை (%) | வழங்கப்பட்ட கடன்தொகை (%) |
|---|---|---|
| ஷிஷூ பிரிவு (Shishu) (ரூ.50 ஆயிரம் வரை) | 83% | 40% |
| கிஷோர் பிரிவு (Kishore) (ரூ. 5 லட்சம் வர) | 15% | 36% |
| தருண் பிரிவு (Tarun) (ரூ.10 லட்சம் வரை) | 2% | 24% |
| மொத்தம் | 100 | 100 |

- குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியிலும் முத்ரா கடன் திட்டம் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.
- குறிப்பாக சிறு வியாபாரிகள் முதல் சிறு தொழில் நிறுவனங்கள் வரையில் கந்துவட்டிக்காரர்கள் பிடியிலிருந்து தப்பிக்க முத்ரா கடன் பெரிதும் உதவி வருகிறது.